
www.tamilarangam.net

# அறிவியலா? அருஞ்செயலா?

'தெய்வீக மோசடி' 150 அருஞ்செயல்களின் விளக்க நூல்



பி.பிரேமானந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# அறிவியலா?
# அருஞ்செயலா?

(150 ‘அருஞ்செயல்’களின் செயல்முறை விளக்கம்)

பி. பிரேமானந்து

*தமிழில் : சிங்கராயர்*

**சூலூர் வெளியீடு**
**8, ‘பால இல்லம்’ நஞ்சப்பா குடியமைப்பு, சூலூர்,**
**கோவை - 641 402.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவியலா? அருஞ்செயலா?

(150 அருஞ்செயல்களின் செயல்முறை விளக்கம்)

***பி. பிரேமானந்து***

***தமிழில் : சிங்கராயர்***

மூலம் : Science Versus Miracles by B. Premanand


- *முதல் பதிப்பு*
  டிசம்பர் 2000

- *பக்கங்கள் :*
  208 + i - vii

- *வெளியீடு :*
  சூலூர் வெளியீடு
  8, பால இல்லம்
  நஞ்சப்பா குடியமைப்பு
  சூலூர், கோவை - 641 402.

- *ஒளியச்சு :*
  தமிழோசை ஒளி அச்சகம்
  கோவை - 641 012.

- *அச்சாக்கம் :*
  மணி ஆஃப்செட்
  சென்னை -5.

- *விலை : ரூ. 50/ -*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளடக்கம்


பதிப்புரை 5

முகவுரை 15

முன்னுரை 25

I. *அறிவியலா? அருஞ்செயலா?* 34

1. சாயிபாபா பாணியில் திருநீறு வருவித்தல் 39
2. தீப்பெட்டியைத் தோன்றவும் மறையவும் செய்தல் 41
3. கடல் பஞ்சுகள் மூலம் 'அஷ்ட'சித்திகள் 42

II. *புலன்கள் காட்டும் பொய்த்தோற்றம்* 44

4. ஒருவர் விடும் பணத்தாளைப் பிடிக்க முடிவதில்லை 44
5. கையின் நடுவில் துவாரத்தைப் பார்த்தல் 46
6. இருபுறமும் நகமுள்ள விரல் மிதக்கக் காணல் 47
7. கடிகாரச் சத்தம் எங்கிருந்து வருகிறது? 49
8. உடல்மேல் படுவது கையா? தூரிகையா? 50
9. சர்க்கரையில் இனிப்பு தெரிவதில்லை 51
10. வழக்கத்துக்கு மாறான சுவைகள் தோன்றுதல் 51
11. நினைத்த சுவையை சுவைக்கும்படி செய்தல் 52
12. நினைத்த மணத்தை முகரும்படி செய்தல் 54
13. ஒரு கோலி இரண்டு கோலிகளாக கைக்குத்தெரிதல் 55
14. தலையில் வைத்த வட்டு மாயமாய் மறைதல் 56
15. நெற்றியில் ஒட்டிய காசை உதறியெறிய முடிவதில்லை 57

III. *கடவுள் கருத்துகளின் பரிணாமம்* 59




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**IV**. *தொடக்ககால அருஞ்செயல்கள்* 64
16. உடம்பில் தீப்பட்டும் புண் ஏற்படுவதில்லை 67
17. தீயை மிதித்தாலும் பாதங்கள் புண்ணாவதில்லை 68
18. கையில் கற்பூரம் கொளுத்தி நெருப்பை வாயிலும் போட்டுக் கொள்ளுதல் 69
19. எரியும் நெருப்பை நாவால் / விரலால் அணைத்தல் 70
20. பழுக்கக் காய்ச்சிய உலோகத்தைக் கைகளில் பிடித்தல் 71
21. உருகிய ஈயத்தில் விரலை முக்குதல் 71
22. கொதிக்கும் எண்ணெயில் கைகளை முக்குதல் 71
23. கொதிக்கும் எண்ணெயில் பூரி சுட்டு கைகளால் எடுத்தல் 72
24. தோலில் எலுமிச்சைகளைக் கொளுவித் தொங்கவிடுதல் 73
25. முதுகில் கொக்கி மாட்டி ஒருவரைத் தொங்கவிடுதல் 74
26. முதுகில் கொக்கி மாட்டிச் சப்பரம் இழுத்தல் 74
27. முதுகில் கொக்கி மாட்டி காரை இழுத்தல் 75
28. ஊசியால் நாக்கை / கன்னத்தைத் துளைத்தல் 75
29. சூலத்தால் நாக்கை / கன்னத்தை துளைத்தல் 76
30. இரு வாள்கள் மேல் வெறும் கால்களுடன் நிற்றல் 77
31. மூக்குத் துளைகளில் ஆணிகளை அடித்து இறக்குதல் 78
32. ஆணிப்படுக்கையில் படுத்தவர்மேல் மனிதர்கள் ஏறி நடத்தல் 79
33. தாங்கலில்லாமல் படுத்திருப்பவர் மேல் கனமான ஆள் ஏறி நிற்றல் 80

**V** . *மதங்கள் கூறும் அருஞ்செயல்கள்* 83
34. பாம்பைத் தடியாகவும் பின் பாம்பாகவும் மாற்றுதல் 84
35. தண்ணீரைத் திராட்சைச் சாறாக மாற்றுதல் 87
36. உணவைப் பலமடங்காகப் பெருக்குதல் 89
37. கன்னிமரி சிலை கண்ணீர் வடித்தல் 91
38. இந்துக் கடவுள் சிலைகள் கண்ணீர் வடித்தல் 91
39. பெரிய எடையை விரல் நுனியில் தாங்குதல் I 93
40. பெரிய எடையை விரல் நுனியில் தாங்குதல் II 93



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**VI.** *பஞ்சலி யோக சூத்திரங்களும் சித்திகளும்* 95
41. தாளில் வரைந்த ஓம் சின்னம் மட்டும் எரிதல் 96
42. நாடித் துடிப்பை நிறுத்திக் காட்டுதல் 101
43. இதயத்துடிப்பை நிறுத்திக் காட்டுதல் 102
44. உடல் வெப்பத்தை அதிகரித்துக் காட்டுதல் 103
45. அந்தரத்தில் மிதத்தல் 105
46. செங்கோட்டை மேல் மிதத்தல் 106
47. யோக சமாதி 107
48. தலையை குழிக்குள் இறக்கித் தலைகீழாக உயிருடன் புதைதல் 108
49. மூக்கின் ஒரு துளையில் செலுத்திய நூலை மறுதுளையில் வெளியில் எடுத்தல் 111
50. கண்ணாடியைத் தின்னல் 111
51. அமிலத்தைக் குடித்தல் 112

**VII**. *கிறித்துவ மதம் இந்தியாவிற்கு வந்தவிதம்* 114
52. நீரை வானத்துக்கு அனுப்புதல் 114
53. காலி பாத்திரத்தில் கங்கை நீரை வரவழைத்தல் 114
54. துப்பாக்கியால் சுடப்படும் குண்டை வாயில் பிடித்தல் 115
55. கையில் / தாடியில் கங்கை நீரை வரவழைத்தல் 115
56. பூமிக்குள் இருந்து சிலைகள் தாமே வெளிப்படச் செய்தல் 116
57. தேவியின் பாத அடையாளத்தைத் துணியில் தோற்றுவித்தல் 117

**VIII** . *சத்திய சாயிபாபாவின் அற்புதங்கள்* 118
58. வெறும் பையிலிருந்து பொருட்களை எடுத்தல் 118
59. பூக்களைக் கீழே கொட்டினால் எழுத்துகளாக வடிவமைத்தல் 119
60. வெற்றிடத்தில் இருந்து சங்கிலியை வரவழைத்தல் 119
61. மோதிரம் போன்ற சிறுபொருள்களை வரவழைத்தல் 120
62. அட்சதை (வண்ண அரிசி) வரவழைத்தல் 120
63. பூவிதழ்களை மிட்டாய்களாக உருமாற்றுதல் 120



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

64. சாயிபாபா படத்தில் இருந்து தேன் வடிதல் 121
65. சாயிபாபா படச்சட்டத்தில் திருநீறு தோன்றுதல் 121
66. மணலுக்குள் இருந்து தங்கச்சிலை எடுத்தல் 122
67. காலி மரப்பாத்திரத்திலிருந்து திருநீறு கொட்டுதல் 122
68. வாயிலிருந்து சிவலிங்கம் கக்குதல் 124
69. கல்லைக் கற்கண்டாக மாற்றுதல் 124
70. சிறிய பாத்திரத்தில் இருந்து நிறைய நீர் எடுத்தல் 125
71. தம்ளர் நீரைக் கவிழ்த்தாலும் கொட்டுவதில்லை 126
72. குப்பிநீரைக் கவிழ்த்தாலும் சிந்துவதில்லை 126

**IX** *மற்ற சாமியார்கள் - மந்திரவாதிகள் தந்திரவாதிகளின் அருஞ்செயல்கள்* 127
73. மண்ணை மஞ்சள் தூளாக்குதல், மஞ்சள் தூளைக் குங்குமம் ஆக்குதல் 128
74. காசுகளில் திருநீறு பூத்தல் 128
75. மன ஆற்றலைக் கொண்டு நெருப்பு உண்டாக்குதல் 130
76. தலையால் மோதி தேங்காய்களை உடைத்தல் 131
77. முற்றிய தேங்காய்களை நெற்றியால் உடைத்தல் 133
78. தண்ணீர் தெளித்து தேங்காய்களை உடைத்தல் 133
79. பாலில் ம்க்கி எடுத்த தாளில் எழுத்துகள் தோன்றுதல் 134
80. மணியின் நாக்கு இல்லாமலே மணி ஒலித்தல் 135
81. முடிச்சு போடாமலேயே இரு கயிறுகள் ஒரே கயிறாதல் 136
82. பூக்கள் உங்களை வணங்கும்படிச் செய்தல் 136
83. பேயைக் கொளுத்துதல் 137
84. தேங்காயை உடைத்தால் பூக்கள் சிதறுதல் 138
85. ஏவலால் குடிசைகள் தாமே தீப்பிடித்தல் 139
86. செய்வினையால் துணிகள் திடீரென தீப்பிடித்தல் 139
87. தீர்த்தம் தெளித்தால் சோளி திரும்புதல் 140
88. செபத்தால் மெழுகுதிரியில் தீப்பொருத்துதல் 140



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

89. மெழுகுதிரியைத் தொடுவதன் மூலம் தீப்பற்றவைத்தல் 141
90. விரல்களில் இருந்து புகை வரல் 141
91. எரித்த துணியைப் பழைய நிலைக்குக் கொண்டுவரல் 141
92. இரவில் பிசாசுகள் நெருப்பு வடிவில் தோன்றுதல் 142
93. காதுகள் வழியாகப் பார்த்தல் 142
94. தாளை நீரில் முக்கினால் அதில் தீர்வு தோன்றுதல் 143
95. தலைமேல் தீப்பற்றவைத்து தேநீர் தயாரித்தல் 144
96. விரும்பும் பழங்களை வருவித்துக் கொடுத்தல் 145
97. குளிர்ந்த நீரில் சோறாக்குதல் 146
98. உலர்ந்த துணியைக் கொளுத்தினாலும் எரிவதில்லை 146
99. நூலை எரித்தாலும் அதில் கட்டிய வளையம் விழுவதில்லை 147
100. மேசை மேல் ஆவி அந்தரத்தில் ஆடுதல் 147
101. இறந்த ஆவி புகைப்படத்தில் காணப்படல் 148
102. ஆவிகளைப் புகைப்படம் எடுத்தல் 149
103. கண்ணாடித் தட்டில் ஊதினால் சாயிபாபா படம் தோன்றுதல் 149
104. மன ஆற்றலால் கரண்டிகளை வளைத்தல் 151
105. நின்றுபோன கடிகாரங்களை ஓடவைத்தல் 153
106. வெட்டி எடுத்துவிட்ட பத்தியில் இருந்த செய்தியைச் சரியாக ஒப்பித்தல் 153
107. ஊனமுற்றோரைக் குணப்படுத்துதல் 155
108. புதிர்க்கதிர் ஆற்றலால் சரியான சீட்டைத் தேர்ந்தெடுத்தல் 155
109. கண்ணைக் கட்டிய நிலையிலும் சரியான சீட்டைக் கண்டுபிடித்தல் 157
110. சீட்டுக் கட்டைக் கொண்டு வசிய ஆற்றலை மெய்ப்பித்தல் 157
111. சீட்டுக்கட்டைக் கொண்டு மனத்தால் பொருளை அசைக்கும் ஆற்றலை மெய்ப்பித்தல் 158
112. குழந்தைப்பேறு வழங்குதல் 159



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

113. மன ஆற்றலால் பொருள்களை அசைத்தல் 164
114. மன ஆற்றலால் பழங்களை அசைத்தல் 164
115. காரமான பச்சை மிளகாய்களை அப்படியே சாப்பிடுதல் 165
116. பலூனைத் துளைக்காமலே வெடிக்கச் செய்தல் 165
117. மன ஆற்றலால் நீரை எரித்தல் 166
118. துப்பினால் தீப்பற்றுதல் 166
119. சாம்பலைப் பூசினால் கடவுள் பெயர் தோன்றுதல் 167
120. மாந்திரிகப் பச்சை குத்தல் 167
121. மனத்தில் நினைத்த எண்ணை / பூவின் பெயரைச் சொல்லுதல் 168
122. திரியில் ஆடும் கடவுளின் ஆவி 169
123. தேங்காய்க்குள் ஆவி 169
124. கோயிலுக்குக் குறித்த நேரத்ததில் கழுகு வரும் தந்திரம் 170
125. கச்சா எண்ணெய் தீப்பிடிக்காமல் எரிவாயு எரிதல் 170
126. சாட்டையால் விளாசியதன் பாதிப்பு உடலில் தெரிவதில்லை 171
127. சூனியத்தின் மூலம் திருடனைப் பிடித்தல் 172
128. கத்தியால் உடலை வெட்டுதல் I 173
129. கத்தியால் உடலை வெட்டுதல் II 173
130. சூடான மின் பற்றவைப்பு இரும்பை கைமேல் வைத்தல் 173
131. மரத்தூள் மேல் துப்பினால் தீ வெடித்தல் 174
132. ஆவேசத்தில் வாயிலிருந்து தீப்பொறி பறத்தல் 174
133. வேறு ஒருவர் நினைத்த எண்ணைச் சொல்லுதல் 174
134. முத்திரையிட்ட உறைக்குள் உள்ள சேதியை வாசித்தல் 175
135. விரலைச் சுட்டு ஏற்பட்ட தீக்கொப்புளம் உடனே மறைதல் 175
136. உடைந்த கண்ணாடி மேல் பாய்தல் 176



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

137. முள் மீது தூங்குதல் 176
138. தாயத்து சூடாகி திருநீறு உண்டாகுதல் 176
139. பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலை நாவால் நக்குதல் 177
140. தேவி இரத்தம் குடித்தல் 177
141. பொம்மையின் கழுத்தைத் திருகினால் மனிதர் இறத்தல் 178
142. ஆன்மீக அறுவை சிகிச்சை 179
143. ஆன்மீக ஆற்றலால் காமாலையைக் குணப்படுத்துதல் 180
144. சகுந்தலா தேவி - மனிதக் கணினியா? 180
145. பார்க்கும் வடிவில் ஊசல் அசைதல் 182
146. மரக்கவை கொண்டு நீரூற்றைக் கண்டுபிடித்தல் 183
147. ஆவி வந்து கேள்விக்கு விடைதரல் 183

**X.** *தேசிய ஒருமைப்பாடும் சமத்துவமும்* 184
148. வண்ண நூல்களைக் கொண்டு ஒருமைப்பாட்டை விளக்குதல் 187
149. வெவ்வேறு நீளக் கயிறுகளைக் கொண்டு சமத்துவத்தை விளங்க வைத்தல் 188

**XI.** *கடவுள் மனிதரைத் தன் சாயலாகவே படைத்தார்* 191
150. 'புரோகிதரின் கைப்பாவையே கடவுள்' என்பதை ஒரு கைக்குட்டையைக் கொண்டு மெய்ப்பித்தல் 193

**XII.** *முடிவுரை* 195
பின்னுரை 200
சவால்! 202



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எதற்காக இந்த நூல்?

ஏமாறுவதற்கு முயற்சியோ, பயிற்சியோ தேவையில்லை. ஏமாற்றுவதற்குத்தான் அவை தேவை!

மத வேடத்துடன் ஏமாற்றினால் ஒரு வசதி! அவர்கள் இங்கே 'தெய்வீக அவதார' ங்களாக உடனே முடிசூட்டிக்கொள்ள முடியும். 'ஏமாறியே தீருவது' என்று தீர்மானித்துள்ளோர் இருக்கும் வரை, தெய்வீக அவதாரங்களுக்குக் கொண்டாட்டம்தான்!

குடும்பச் சிக்கல், வறுமை, கவலை, வருத்தம் - எதுவாக இருந்தால் என்ன! பூசை, அருள்வாக்கு, பிரார்த்தனை, செபம், பரிகாரம் -இவற்றின் மூலமே பலன் கண்டு விடலாம் என்று நம்புவோரில் பாமரர்கள் மட்டுமல்ல, படித்தவர்களும் உண்டு!

தெய்வீக மோசடிக்காரர்களின் 'பாதந்தாங்கி' களாக நிற்கும் 'பட்டந்தாங்கி' களைப் பார்க்கும் போது பரிதாபமாய் இருக்கிறது.

*அறிஞர் அண்ணா சரியாகத்தான் சொன்னார் :*

*"படித்தவர்களிடையே அறிவியல் அறிவு (Scientific Knowledge) வளர்ந்த அளவிற்கு, அறிவியல் மனப்பான்மை (Scientific mentality) வளரவில்லை"*

அறிவியல் மனப்பான்மை வளராத காரணத்தால்தான், பட்டமும் பதவியும் பெற்றவர்கள் கூட - மோசடிகளுக்கு முட்டுக்கொடுத்து நிற்கும் தூண்களாகிவிடுகிறார்கள்.

சமூக ஏற்றத்தாழ்வைக் கட்டிக் காப்பாற்ற விரும்பும் ஆதிக்கவாதிகளோ - 'தெய்வீக மோசடி'களுக்குப் பெயர்ப் பலகையாய் நின்று விளம்பரம் தருகிறார்கள்.

செய்தித்தாள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி - எல்லா ஊடகங்களிலும் இவர்களின் ஆட்சிதான்!

'மூடநம்பிக்கை வியாபாரி'களின் பெருமை பேசும் விளம்பரங்கள் - பணத்தையும் மனத்தையும் குறிவைத்து, எல்லாரையும் வளைத்து விழுங்கப் பார்க்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமெரிக்காவுக்கு இணையாக எயிட்சு நோயில் முன்னேறியுள்ள நம்நாடு, எவரும் தொட முடியாத உயரத்தை ஏமாற்றுக் கலையில் பெறப்பார்க்கிறது. ஏமாற்றுவதில்தான் எத்தனையெத்தனை தொழில் நுணுக்கம்! எத்தனையெத்தனை கண்டுபிடிப்பு!

'குடும்பச் சிக்கலைத் தீர்க்கிறேன். கோடீசுவரன் ஆக்குகிறேன்.
பணத்தை எண்ணி வை. பரிகாரம் சொல்கிறேன்'.

விதவிதமான கவர்ச்சிச் சொற்களுடன் வகைவகையாகக் கடை விரித்து வருகிறார்கள்.

'பெயரை மாற்று! பெயரில் உள்ள எழுத்தை மாற்று!
ஒளிமிக்க எதிர்காலம் உனக்குத்தான்'

இப்படியொரு கூட்டம் தூண்டில் போடுகிறது- **பெயர்ச் சோதிடம் என்ற பெயரில்!**

'மோதிரத்தை மாற்று! மோதிரத்தில் உள்ள கல்லை மாற்று! அபூர்வ சக்திமிக்க கல் இது. காசைக் கொடு! கல்லை எடு!'

இன்னொரு கூட்டம் கல்லோடு வலை வீசுகிறது - **நவரத்தின சோதிடம் என்ற பெயரில்!**

'வீட்டை மாற்று! வாசலை இடி! சுவரை உயர்த்து! அப்புறம்பார். உலகக் கோடீசுவரர் பட்டியலில் உன் பெயர்தான் முதலில் இருக்கும்'

கடப்பாரையைக் கையில் தந்து, வீட்டிற்கே வேட்டுவைக்கப் பார்க்கிறது மற்றொரு கூட்டம்- **வாஸ்து சாஸ்திரம் என்ற பெயரில்!**

இருக்கவே இருக்கிறது - கைரேகை, நாடி, ஓலை, சாதகம், கிளி, எலி, கணினி, எண் சோதிட வகையறாக்கள்!

**மக்களின் கண்ணைக்கட்டிக் காசைச் சுருட்டுவதிலேயே அத்தனைப் பேரும் குறியாய் இருக்கிறார்கள். பெயர்தான் வெவ்வேறு! நோக்கம் ஒன்றுதான்!**

இந்திய வாஸ்து, சீன வாஸ்து, எண் சோதிடம் - எனச் சோதிடங்களுள்ளேயே 'ஒட்டுரக உற்பத்தி' செய்யும் 'வீரிய விளைச்சல் பேர்வழி' களும் இருக்கிறார்கள்.

ஆவிகளோடு கலந்து பேசி உரையாடி, உறவாடி வழிகாட்டும் 'ஆவியுலக ஆராய்ச்சியாளர்'களுக்கும் பஞ்சமில்லை.

நேமாலஜி புரபசர், நியூமராலஜி புரபசர்! வாஸ்து புரபசர்! லக்கின புரபசர்! நட்சத்திர புரபசர்! நவரத்தின புரபசர் - எந்த நாடும் கேள்விப்பட்டிராத இந்த 'புரபசர்'களின் அணிவகுப்போ மிரளவைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காவிகட்டி ஆசிரமம் வைத்து சாமி சிலைக்குப் பூசை போட்டுத்தான் ஏமாற்ற வேண்டும் என்பதில்லை. எந்த வேடம் பயனளிக்குமோ அந்த வேடத்தில் ஏமாற்றலாம்! இப்படியொரு முடிவோடு, ஏமாளிகளைக் குறிவைத்துச் சுற்றிச்சுற்றி வந்து கும்மியடிக்கிறது சோதிடக் கூட்டம்.

★

*அவதாரங்கள், ஸ்வாமிஜிக்கள், ஆச்சாரியார்கள், பாபாக்கள் -என நடமாடும் தெய்வங்களின் நெரிசல் ஒரு பக்கம்! அவர்களின் படங்களை விரலிலும் வீட்டிலும் மாட்டியபடி தலைகவிழ்த்து நிற்கும் பக்தர்கள் கூட்டம் ஒரு பக்கம்! ஏமாறும் கூட்டத்தின் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ள - பஜன்கள், பக்த சமாஜங்கள், சேவா சமிதிகள் ஒரு பக்கம்!*

ஆசிரமம் அமைத்துள்ள சாமியார்கள், ஆங்காங்கே சிற்றரசுகள் போலவே அரசாட்சி நடத்தி வருகிறார்கள்: தெய்வீக ஆற்றலை மெய்ப்பிக்க, சின்னச் சின்ன வித்தைகள் செய்தால் போதும் என்று நம்புகிறார்கள்.

*அவதார மகிமையைத் தவணை முறையில் காட்டியபடி, கையை உயர்த்தி ஆசி வழங்கியவாறு சாமியார்கள் ஊரை உலா வருகிறார்கள்.*

புதுப்புது கவர்ச்சி உத்திகளைக் காட்டிப் பக்தர்களை வளைப்பதற்கு ஆசிரமங்களுக்கிடையே போட்டி! 'சாமியார்களா, சமூக விரோதிகளா' என அவ்வப்போது மக்களிடம் விவாதம் எழத்தான் செய்கிறது.

*நடன சாமியார், நரபலி சாமியார், போதை சாமியார், கஞ்சா சாமியார், ஆயுதக்கடத்தல் சாமியார், அருள்வாக்கு சாமியார், ஆபாச சாமியார் (சாமியாரினிகளும் உண்டு) - என சாமியார்களில் பல வகை!*

அவ்வப்போது இவர்கள் செய்தித்தாள்களில் முகப்புச் செய்தியாகி, மக்களின் கோபத்திற்கு ஆளாவதும் உண்டு. சிறைக்கும் நீதிமன்றத்திற்கும் 'தெய்வீக தரிசனம்' தந்தபடி போய்வந்து கொண்டிருப்பதும் உண்டு.

*'இனி எந்தச் சாமியாரிடம் போய் ஏமாறலாம்?'* என்ற கவலையோடு, சாமியார்களின் காலைத் தேடியபடிக் காணிக்கையோடு அலையும் பக்தர் கூட்டமும் இருக்கிறது. புதிய புதிய ஆசிரமங்களும், சாமியார்களும் உருவாகும் சூழ்நிலையும் உருவானபடி இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோதிடம் தனை இகழ் - எனப் புதிய ஆத்திசூடி பாடிய பாரதியார் உலவிய மண்ணில்தான் இந்தக்காட்சிகள்! மடமையை நாட்டில் மலிவு செய்தால் உடைமையை இலேசாய் உறிஞ்சலாம் - எனப் பாவேந்தர் பாரதிதாசன் தெளிவுபடுத்திய மண்ணில்தான் இந்தக் கூத்துகள்!

உடைமையை உறிஞ்ச விரும்புவோர், மடமையைப் பரப்புவதில் கவனமாக இருக்கிறார்கள். சட்டத்தின் முன் நிறுத்தப்படும் சாமியார்களிலும் சின்னசின்னசாமிகளும் சூத்திரச்சாமிகளுமே அதிகமாய்ச் சிக்குகிறார்கள்!

திமிங்கலச் சாமியார்களும் அவர்களின் ஆசிரமங்களும் -அவ்வளவு எளிதாய்ச் சட்டத்தின் கண்களில் சிக்கிக் கொள்வதில்லை.

ஏமாற்றுவதில் முயற்சியும் பயிற்சியும் அவர்களுக்கு மிகுதி! தெய்வீக மோசடியை ஒரு கலையாகவே அவர்கள் வளர்த்து வைத்திருக்கிறார்கள்!

★

ஏமாற்றுக் கலையின் நுட்பம் அறிந்த எவருக்கும் - இந்தச் சாமியார்களை அம்பலப்படுத்த மனம் வருவதில்லை; மனம் வந்தாலும் துணிச்சல் வருவதில்லை; இரண்டும் இருப்பேரரைப் பேராசை விடுவதில்லை.

'நமது பங்குக்கு நாமும் சிலரின் தலையைத் தடவலாமே' - என்ற நைப்பாசையுடன் வித்தைகளுக்கு அவர்களும் தெய்வீக முலாம் பூசத்தொடங்கி விடுகிறார்கள்.

தன்னல மறுப்பும் மனித நேயமும் சமூக அக்கறையும் உள்ளவர்களிடம் மட்டுமே - மோசடிக்காரர்களின் முகத்திரையைக் கிழித்துக்காட்டும் நேர்மையைக் காண முடிகிறது.

டாக்டர் கோவூர் பி. பிரேமானந்து பேராசிரியர் கே.ஆர். குமார் மதுரை பெரியார் பித்தன் முதலிய சிலர் மட்டுமே இந்த நேர்மையுடன் நூல்கள் எழுதித் தமிழ்நாட்டிற்கு விழிப்புணர்ச்சி ஊட்டி வருகிறார்கள்.

பகுத்தறிவு அமைப்புகள் நடத்திவரும் மந்திர தந்திர மோசடி விளக்க நிகழ்ச்சிகளால் - ஆண்டவன் அவதார அரிதார வேடங்களும் கலையத் தொடங்கியுள்ளன.

அவதார மோசடிகளையும், தெய்வீக ஏமாற்றுகளையும் தோலுரித்துக் காட்டுவதையே வாழ்க்கைப் பணியாக ஏற்று முழுமூச்சாகச் செயல்பட்டவர் - இலங்கை உளவியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிஞர் டாக்டர் ஏ.டி. கோவூர். அவரின் வழியில் அதே வேகத்துடன் செயல்பட்டுவருபவர் பி. பிரேமானந்து. அவரின் நூலைப் பார்த்தபோது வியப்பும் மகிழ்ச்சியும் எங்களைத் தழுவிக் கொண்டன. பெரியார் - அண்ணா பிறந்த நாள் விழா அதற்குக் காரணமாய் அமைந்தது.

★

**சூலூர் பாவேந்தர் பேரவை** சார்பில் **பெரியார் - அண்ணா பிறந்தநாள் விழாவை** ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம்.

கடந்த ஆண்டு 1999 இல் - பெரியார் அண்ணா பிறந்த நாள் விழாவோடு **உடுமலை நாராயணகவி நூற்றாண்டு விழாவும்** சேர்ந்து கொண்டது.

விழா நினைவாக, பேராசிரியர் **பெரியார்தாசன்** அவர்களின் ‘மனிதரைக் காக்கவா மதம்’ நூல் வெளியிட முடிவானது. **பி. பிரேமானந்து** அவர்களின் மந்திர - தந்திர நிகழ்ச்சியை நடத்துவதெனவும் தீர்மானமானது. பிரேமானந்தை அழைத்து வரும் பொறுப்பு சூ.இல. விசயகுமார், சூ.செ. குமரவேல் இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது.

சூலூர் அறிஞர் அண்ணா சீரணிக் கலையரங்கில் 2.10.1999 ஆம் நாள் விழா வெகு சிறப்பாக நடந்தது. பிரேமானந்து அவர்கள் நிகழ்த்திக் காட்டிய மந்திர தந்திர நிகழ்ச்சிகளால் வியந்து போன மக்கள், அவர் நூல்களைப் போட்டி போட்டு வாங்கினர்.

பிரேமானந்து அவர்களுக்கும் பெரிய வியப்பு!

அவரின் நூல்கள் அனைத்தும் ஆங்கில நூல்கள்! இருந்தும், சூலூரில் அவரின் நூல்கள் முழுதும் விற்றுத் தீர்ந்தன.

அவர் நடத்தும் ‘ Indian Skeptic’ ஆங்கில இதழுக்கு ஆண்டு உறுப்பினராகவும் வாழ்நாள் உறுப்பினராகவும் பலர் சேர்ந்தனர்.

விழா முடிந்தபின் சூ.ந.பன்னீர் செல்வம் இல்லத்தில் இரவு உணவு! விழாவை ஏற்பாடு செய்த பாவேந்தர் பேரவைத் தோழர்கள் அனைவரும் அங்கே குழுமினர். திரு. பிரேமானந்து அவர்களின் *Science Vs Miracle* நூலின் ஆழமும் நுட்பமும் எளிமையும் எல்லோராலும் வியந்து பேசப்பட்டது. அந்த நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தேவை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பதிப்புப் பணியைத் தாமே ஏற்பதாக **சூ.இல.விசயகுமார்** மகிழ்ச்சியோடு முன்வந்தார். வெளியீட்டுப் பணிக்கு அவரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணுக்கத் தோழர்கள் **ஆ.சு.மணி ஆனந்து, ந. சுரேசு குமார், சௌ.செயக்குமார், செ. விசயகுமார், வை.பாலசுப்பிரமணியம்** முதலியோர் தோன்றும் துணையாகித் தோள் கொடுக்க முன்வந்தனர். **சூலூர் வெளியீடு** என்ற பெயருடன் பதிப்புப் பணி தொடங்கியது.

மொழிபெயர்ப்பதுதான் முதன்மையான பணி! அந்தத் துறையில் பட்டறிவு மிகுந்த தோழர் **சிங்கராயர்** நினைவுக்கு வந்தார். விடியல் சிவா நெறிப்படுத்த சூ.இல. விசயகுமாரும் பிரேமானந்தும் அவருடன் பேசினர்.

மொழிபெயர்ப்புப் பணி வேகம் பெற்றது. சிங்கராயரின் ஆர்வமும் உழைப்பும் பக்கந்தோறும் பளிச்சிடத் தொடங்கியது. தோழர்கள் குறிஞ்சி, க.விசயகுமார், முருகேசன் கூட்டுழைப்பில் செழித்து வளரும் **கோவை தமிழோசைப் பதிப்பகம்** எழுத்துக் கோப்புப் பணியை ஏற்றுக் கொண்டது.

பதிப்புப் பணிகளுக்கு வழிகாட்ட, வழக்கம்போல் **விடியல் பதிப்பகம்** சிவாவின் தோழமை துணை செய்தது. அட்டை வடிவமைப்பு சென்னை வசந்த குமார் பொறுப்பானது. அச்சிடும் பணி சென்னை **மணி ஆஃப்செட்** அச்சகத்திடம் ஒப்படைக்கப் பட்டது.

தம் நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதற்கு மனம் உவந்து இசைவளித்தார் பிரேமானந்து. அவர் இப்போது **டாக்டர் ஏ.டி.கோவூர் தொகுப்பு நூல் வரிசையை** ஆங்கிலத்தில் வெளியிடத் தொடங்கியுள்ளார்.

கோவூர் நூல்களைத் தமிழில் தருவது, சூலூர் வெளியீட்டின் அடுத்த பணியாக இருக்கும்.

★

**திரு. பிரேமானந்து** அவர்கள் - எழுபது வயது கடந்த நிலையிலும், இளமை நெஞ்சுடன் பகுத்தறிவுப் பணிகளில் தீவிரமாகச் செயல்பட்டு வருபவர்; கேரள மாநிலக் கோழிக்கோட்டில் *1930*இல் பிறந்தவர்; எழுபதாயிரம் நூல்கள் நிரம்பிய அறிவுக் கருவூலத்தை வீட்டுநூலகமாகப் பேணி வருபவர்.

வெண்ணிற தாடியோடும், பன்மொழிப் புலமையோடும் , மாறாத புன்சிரிப்போடும் உலாவரும் இவர் - தாம் கற்ற வித்தைகளைச் 'சாமியார்' வேடத்தில் தந்திருந்தால் இந்நேரம் கோடீசுவரர் ஆகியிருப்பார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தெய்வீக மோசடிகளை அம்பலப்படுத்தியதாலும் சாமியார்களிடம் விலைபோக மறுத்ததாலும் - தனி வாழ்விலும் பொது வாழ்விலும் இவர் பெற்ற இழப்புகள் ஏராளம்; அவமானங்கள் அதிகம்! எதிர்ப்புகளை எளிமையாக ஒதுக்கித் தள்ளும் மனவலிமை அவருக்கு வாய்த்திருக்கிறது.*

ஒருகுறை! தமிழ்நாட்டில் இவ்வளவு காலம் வாழ்ந்த பின்பும் இன்னும் ஆங்கிலத்தில்தான் பேசுகிறார். அவர் பேசுவது இன்னும் அரைகுறைத் தமிழாகவே நிற்கிறது.

அவரோடு உரையாடும் எவருக்கும், சமுதாய முறைகேடுகளை எதிர்க்கும் ஊக்கம் பிறப்பது இயற்கை! எதிர்காலத் திட்டங்களை அவர் விழிகள் விரிய விவரிக்கும்போது 'இதோ இன்னொரு ஆனைமுத்து' என நம்மை வியப்படையச் செய்கிறார்.

*கவலைகளைப் பற்றிக் கவலைப்படாமல் முன்னோக்கிப் பாயும் ஒரே வேகத்துடன் உழைக்கும் **வே. ஆனைமுத்து** (சிந்தனையாளன் - இதழாசிரியர்), **பி. பிரேமானந்து** போன்றோரின் சிந்தனை முதிர்ச்சியும் செயல் வேகமும் - எதிர்காலத் தலைமுறைக்கு வியப்பான செய்திகளாகத்தான் இருக்கும்.*

'*கேள்வி கேட்கும் முறைகளில் மட்டுமே கல்வி வளரும்; அறிவியல் உருவாகும்*' - எனத் தெளிவான ஆதாரங்களுடன் மெய்ப்பித்துக் காட்டுபவர் பிரேமானந்து. அறிவியல் மனப்பான்மையை இளைய தலைமுறையிடம் உருவாக்கும் **'அறிவியல் முறைமைக் கண்காட்சி'** எனும் மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவது இவரின் எதிர்காலத் திட்டம்.

ஆங்கிலத்தில் பிரேமானந்து வழங்கிய **Science Vs Miracles** என்னும் இந்நூல் **'அறிவியலா அருஞ்செயலா?'** என்ற தலைப்புடன் இப்போது தமிழில் வருகிறது.

நூற்றைம்பது தெய்வீக மோசடிகள், செயல்விளக்கக் குறிப்புடன் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இதுபோல 1500 தெய்வீக மோசடிகளை விளக்கிக் காட்டவல்லவர் இவர். எதிர்காலத்தில் அவையும் நூலாக வெளிவரவேண்டும்.

★

'தெய்வீகச் செயல்கள் யாவும் வெறும் வித்தைகளே' என்பதை இந்நூல் எளிதாக விளங்க வைக்கிறது.

★ சாமிபடத்திலிருந்து விபூதி கொட்டுவது கடவுள் செயல்தானே?

'அது பாதரசக் குளோரைடு செயல்' என்பது இந்த நூலைப் படித்த பின்பு புரிகிறது. (பக்கம் 121)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ கடவுள் சக்தி இருந்தால் தானே , கொதிக்கும் எண்ணெயில் கைவைக்க முடியும்?

'எண்ணெயோடு எலுமிச்சைச் சாறு கலந்திருந்தால், கடவுள் சக்தியை எல்லோருமே காட்ட முடியும்' என இந்த நூல் எடுத்துக் கூறுகிறது.(பக்கம் 72)

★ நாடித்துடிப்பை நிறுத்திச் சமாதி அடையும் சாமியார்கள் செயல் சாதாரண செயலா?

'இரண்டு கை அக்குளிலும் எலுமிச்சம்பழத்தை அடக்கிக் கொண்டால், நாடித் துடிப்பை யாரும் அடக்கலாம்' என எளிதாகச் சொல்கிறது இந்த நூல்!(பக்கம் 101)

★ உடல் வெப்பத்தை உயர்த்திக் காட்டும் செயல், ஆண்டவன் அருள் அல்லவா?

'காரமும் அமிலமும் கலந்தால் வெப்பம் வெளிப்படும்' என்பது அறிவியல்.சோப்புத் துண்டைச் சப்பிச் சாப்பிட்டு, சூடான தேநீரைப் பருகினால் உடல் வெப்பம் உயரத்தான் செய்யும்.

ஆண்டவனின் இடத்தில் சோப்பையும் தேநீரையும் வைத்து நம் தோளில் இடிக்கிறது இந்தநூல்! (பக்கம் 103)

அடுக்கடுக்காக இந்நூல் நம்முன் குவித்து வைக்கும் செய்திகளால் - மூடநம்பிக்கை மணல்மேடுகள் கரைந்து போகின்றன; தெய்வீக மோசடிகள் கேலிப் பொருளாகி விடுகின்றன.

★ தீக்குச்சி இல்லாமல் நெருப்புப் பற்ற வைக்கிறார்களே! கடவுள் செயல்தான் காரணமா?

தூவப்பட்டிருப்பது பொட்டாசியம் பர்மாங்கனேட்! நெய் என்று சொல்லி ஊற்றப்படுகிறது கிளிசரின்! இரண்டும் சேர்ந்தால் நெருப்புப் பற்றுவது இயற்கை. எளிமையாய் மாயத் திரையை விலக்கிக் காட்டுகிறது இந்நூல்.

★ குளிர்ந்த நீரை ஊற்றிச் சோறாக மாற்றிக் காட்டுகிறார்களே! அதன் மூலம் 'ஆண்டவன் அவதாரம் நானே' என்று நம்பச் செய்கிறார்களே!

சுட்ட சுண்ணாம்பு கலந்த அரிசி அது! அதனோடு தண்ணீர் கலந்தால் வெப்பம் வெளிப்பட்டுத் தான் தீரும்; அரிசி சோறாகித் தான் தீரும்!(பக்கம் 146)

★ கையில் கத்தியால் வெட்டி இரத்தம் காட்டுகிறார்களே! தெய்வீக சக்திதானா?

உடம்பின் மீது இரும்பு குளோரைடு கரைசலோ, இரும்பு அம்மோனியம் சல்பேட் கரைசலோ தடவியிருப்பார்கள். கத்தியின் மீது சோடியம் சல்போ சயனைடு கரைசலோ, சோடியம் சாலிசிலேட் கரைசலோ பூசியிருப்பார்கள். இரண்டும் பட்டால் இரத்தக் கோடாய்ச் சிவப்பு தோன்றும்! (பக்கம் 173)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'இவ்வளவுதானா' என வியக்க வைத்து, தெய்வீகக் குழப்பங்கள் பலவற்றையும் தெளியவைக்கிறது இந்த நூல்.

★

***அவதார மகிமை, ஆண்டவன் அருள், தெய்வீகச் செயல் என்ற பெயர்களில் செய்யப்படுபவையெல்லாம் வித்தைகளே*** என்பது இந்நூலைப் படித்ததும் புரிந்து விடுகிறது.

அவற்றை நடத்துவோர்க்கும் ஆதரிப்போர்க்கும் இன்னொரு உள்நோக்கமும் உண்டு.

'ஆண்டவன் செயல், 'தெய்வீக அற்புதம்' என மக்களை மலைக்கச் செய்து விட்டால் - அவர்களை அச்சத்தோடு கைகட்டி நிற்க வைத்து விடலாம். பயம் வந்தால் பக்தியும் வந்து விடும்! பெயரே 'பயபக்தி' தானே! பயமும் பக்தியும் உள்ள மனிதர்களை மண்டியிட வைப்பது எளிது!

*மண்டியிடும் மனிதர்கள் மேல் - எந்தச் சுமையையும் ஏற்றிவைத்து விடலாம்; ஆதிக்கவாதிகள் வசதியாகச் சவாரி செய்யலாம்; சாதி ஆதிக்கம், பண ஆதிக்கம், மொழி ஆதிக்கம் - என எல்லா ஆதிக்கத்தையும் குனிந்த முதுகில் சுமத்திவிடலாம்.*

பண்பாட்டு ஆதிக்கம் ஒன்று போதும் ! அதிகாரம் அனைத்தையும் அடுத்தவரின் காலடிக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடும். மக்களை மந்தையாக்கி விட்டால், யார் வேண்டுமானாலும் துரத்தித் துரத்தி மேய்த்துச் செல்லலாம்.

***பண்பாட்டு ஆதிக்கத்தின் அடையாளம்*** தானே வழிபாட்டில் ***சமற்கிருதம்***, படிப்பில் ***ஆங்கிலம்***, அலுவலில் ***இந்தி*** என்பதெல்லாம்!

ரக்ஷாபந்தன், ஹோலிப்பண்டிகை, விநாயகர் ஊர்வலம், சமற்கிருத 'ஓம்' -என்பதெல்லாம் அந்த ஆதிக்கத்திற்கு வாயில் திறந்து வைக்கும் முயற்சிகள்தாம்!

*மக்களை அச்சப்படுத்திவிட்டால் வாயைத் திறக்க மறுப்பார்கள்! அச்சமூட்டும் வழிகள் ஆயிரம் இருந்தாலும் - அவதாரம், தெய்வீகம், அற்புதச் செயல் என்பவை உடனடியாய்ப் பலன் தரக்கூடியவை.*

அதனால்தான், தந்தை பெரியார் தடுமாற்றமின்றி முழங்கினார்:

> **"மனித சக்திக்கு மேம்பட்ட சக்தி தன்னிடம் இருப்பதாக எவன் கூறினாலும், அது பித்தலாட்டம், மோசடி என்பதை மனத்தில் உறுதியாக வைத்துக் கொள்ளுங்கள்"**

*(விடுதலை 20.5.1948)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதையே இலக்கியங்கள் வேறு சொற்களில் பேசியுள்ளன :

**'அச்சமே கீழ்களது ஆசாரம்'** என்றார் வள்ளுவர்.

**'அச்சம் தவிர்'** - என முழங்கினார் பாரதியார்.

**'மடமையே அச்சத்தின் வேராம்'** - என நுட்பமாக விளக்கினார் பாவேந்தர்.

அறியாமையும் வறுமையும் - நம் சமூகத்தோடு இன்றளவும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. அவற்றை ஒழிக்கப்பாடுபடுவதே இன்றைய தேவை!

கல்வி கற்றபின், முட்டாள் - படித்த முட்டாளாகப் புதுப்பெயர் பெற்று விடுகிறார்; அறியாமை அகலுவதில்லை!

நமது கல்வி முறையில், அறிவு மலர்ச்சிக்கும் அறியாமை ஒழிப்பிற்கும் இடம் வழங்கப்படவில்லை.

இந்தச்சூழலில், சமூக விழிப்பும் சமுதாயப் பொறுப்புணர்வும் தரும் நூல்களை அறியநேர்வது - இயக்கம், நட்பு இவற்றின் வழியாகத்தான்.

சரியானவற்றை அறிந்து கொள்வதே, இங்கு 'விபத்தாக' நிகழ்வதுதான் !

அறியாமையை நிலை நிறுத்துவதற்காக ஆசிரமங்கள், மடங்கள், மதத் தலைவர்கள் என ஏராளமான நிறுவனங்கள்! இவர்கள் கையில் கோடிக்கணக்கில் பணவசதி! இவர்களின் 'எடுபிடி'களாய்ப் படித்த கூட்டம்!

வறுமை உருவாகக் காரணமான சுரண்டல்காரர்களும் சமூக விரோதிகளும் - அறியாமையை நிலைநிறுத்தக் கை கொடுக்கிறார்கள்; அச்சத்தை உருவாக்கப் பலவழிகளிலும் முயற்சி செய்கிறார்கள்.

அச்சம் இல்லாத இடத்தில்தான் அறிவு இயல்பாகச் செயல்படும்.

அச்சமற்ற மனிதர்கள் உருவாகும் சூழலை, இந்த நூல் உருவாக்கும்.

அஞ்சாமையும் ஆய்வு மனப்பான்மையும் பரவவேண்டும் என நினைக்கும் அனைவரும், இந்த நூலைப் பரவச் செய்வார்கள்.

'தாயகம்' எசு.வி.எல். நகர் **செந்தலை ந. கவுதமன்**
கோவை - 641 402.
26.11.2000 சூலூர் - பாவேந்தர் பேரவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அகன்று செல்லுங்கள் அவதாரங்களே!
### (நூலாசிரியருடன் ஒரு நேர்முகம்)

நகரின் நடுவில் இருக்கும் வடக்குத் தொடர்வண்டி நிலையம் வலிந்த சலிப்புடன் வாய் பிளந்து நிற்கிறது. வசதியும் வனப்பும் வாய்ந்த பயணிகள் வறுமையும் வியர்வையும் மண்டிய பயணிகளைத் தீண்டாமல் திறமையாகத் தவிர்த்துக் கொள்கிறார்கள்.

வழக்கமான அலட்சியத்துடன் நிலையத்துக்குள் ஊர்ந்து வந்து போகும் தொடர்வண்டிகளைப் பிடிக்கவோ, அவற்றில் வரும் பயணிகளைச் சந்திக்கவோ மக்கள் ஓட்டமும் நடையுமாகப் பரபரத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட மனிதர் மட்டும் அந்த நடைமேடை மேல் நிதானமாக நடந்து வருகிறார். உடனே எல்லாக் கண்களும் அவரையே தொடர்கின்றன. அவரது வெண்தாடி காற்றில் அலைபாய்கிறது. என்னை அடையாளம் கண்டு கொண்டு வரவேற்கும் அவரது குரலில் தன்னம்பிக்கை தொனிக்கிறது. ஆவலாக அவரையே உற்றுப் பார்க்கும் பார்வையை எளிதாக் அளந்து எடைபோட்டுவிட அவரால் முடிகிறது.

உடைந்த ஒரு சிமெண்டுப் பெஞ்சின் மீது வசதியாக அமர்ந்து கொள்ளும், இந்தக் குர்தா அணிந்த சிற்றுருவ மனிதர் ஒரு பெரிய இலட்சியத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். தம்மைத்தாமே கடவுளின் தூதர்கள் என அறிவித்துக்கொண்டு அற்புதங்களை விற்று வரும் கடவுள் வியாபாரிகளைப்பற்றி பொது மக்கள் மனத்தில் ஊறி நிலைத்துப்போயுள்ள அறியாமையை அறவே துடைத் தொழிப்பதே அந்த இலட்சியமாகும்.

பணத்துக்குச் சேவை செய்யும் இறைதூதர்களும் அவர்களின் ஆன்மீக விளக்கங்களும் ஒன்றுசேர்ந்து, பொருள்வகைப் பட்ட தன் முன்னேற்றத்துக்கான பித்தலாட்டங்களில் முழுவிசையுடன் ஈடுபடும் கடவுள் அவதாரங்களை உருவாக்குகின்றன. சிறுகச் சிறுக அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் சேர்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தப் பகுதிமக்கள் தம் போலித் தற்பெருமையையும் மீறி அவரை மருண்டு பார்க்கிறார்கள். வெளியூர்ப் பயணிகள் குளிர்பானம் உறிஞ்சுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்க்கிறார்கள். இவற்றையெல்லாம் அறவே கண்டு கொள்ளாமல் இருக்கும் அவர்தான் பிரேமானந்து.

பி. பிரேமானந்து 1930 இல் கோழிக்கோட்டில் பிரம்மஞான (இறை அறிவு / தியாசபி) சபையைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு மகனாகப் பிறந்தார். அவர் முறையான கல்வி பயின்றவரில்லை. 1942 இல் மாணவர்களின் விடுதலை இயக்கப் போராட்டங்களின் போது பள்ளியில் இருந்து விலக்கப்பட்டார். தன் தந்தையாருடன் நன்றாக வாதம் செய்ய முடிவதற்காக, வீட்டிலிருந்தபடியே பிளாவட்ஸ்கி அம்மையாரின் எழுத்துக்களைப் படிப்பதில் முழுமையாக ஈடுபட்டார்.

மேலும், குரான், கீதை, பைபிள் போன்ற முக்கியமான மத நூல்களைப் படிப்பதிலும் ஈடுபட்டார். "எனக்குத் தெரியாத எந்த ஒரு விசயத்தைக் குறித்தும் நான் வாதம் செய்வதில்லை" என்று கூறுகிறார் அவர். மாயவித்தைக் கலையையும் திறம்படக் கற்றுத் தேர்ந்தார். அதன் பின் எளிய பொதுமக்களிடம் இருந்து பணத்தைக் கறக்கும் சாமியார்களைத் துரத்திப் பிடித்து அவர்களை அலைக்கழிக்கப் பயணம் கிளம்பினார்.

மதத்தின் மீதான அவரது மரியாதையற்ற போக்கு அடிக்கடி சர்ச்சைகளை ஏற்படுத்தியது. கட்டணம் செலுத்தினால் அமைதியை நிலைநாட்டுவதாக வாக்களிக்கும் சுயவிளம்பரச் சாமியார்கள் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில், இந்த மாயவித்தைக்காரர் "காணிக்கை இல்லாமலே" "நிர்வாணம்" என்னும் தன் மாறுபட்ட பாணியினால் எடுப்பாகத் தனித்து தெரிகிறார்.

பள்ளி வகுப்பறைகளில் இருந்து பாமரர் இடத்துக்கு அறிவியலைக் கொண்டுவர வேண்டும் என்பதே அவரது குறிக்கோள்.

"பகுத்தறிவு முறையில் விளக்க முடியாத உரிமை கோரல்களைப் பற்றிய அறிவியல் ஆய்வுக்கான இந்தியக் குழு"* 1959 - இல் தோற்றுவிக்கப்பட்டது. பகுத்தறிவாளர்கள் சூழ்ந்து திரளும் ஒரே கலங்கரை விளக்கமாக அறிவர் ஆபிரகாம் ட்டி.கோவூர் விளங்கினார். "அவதாரங்களே அகன்று போங்கள்!" என்னும் தம் நிலைபாட்டால் கணிசமான சீடர்களைக்

* த கமிட்டி ஃபார் சயன்டிபிக் இன்வஸ்ட்டிகேசன் ஆவ் கிளெயிம்ஸ் ஆவ் த பாராநார்மல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோவூர் ஈர்த்தார். 1976 இல் கோவூருக்கு மிகவும் வயதாகி இருந்தது. அப்போது அவர் நோய்வாய்ப்பட்டும் இருந்தார்.

எனவே, அருஞ் செயல்களுக்குப் பின்னால் உள்ள சூழ்ச்சிகளையும், இயல்பு கடந்த நிகழ்வுகள் குறித்த மூட நம்பிக்கைகளையும் அம்பலப் படுத்து வதற்காக இந்தியாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் தொடர்ந்து பயணம் செய்ய அவரால் முடியவில்லை. அதனால் 1976 இல் அவரிடமிருந்து இந்தப் பணியைப் பிரேமானந்த் ஏற்றுக் கொண்டார்.

பிரேமானந்து 26 புத்தகங்கள் எழுதியுள்ளார். பல்வேறு மாநில அமைப்புகள் ஏற்பாடு செய்யும் அறிவியல் சுற்றுப் பயணங்களுக்குத் (விஞ்ஞான் யாத்ரா) தலைமை தாங்குகிறார். இவற்றின் மூலம் இந்தியாவில் உள்ள ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட சிற்றூர்கள் மற்றும் நகரங்களுக்குச் செல்ல அவருக்கு வாய்ப்பு கிடைத்தது; இரண்டு கோடி பேருக்கும் அதிகமான மக்களிடம் சொற்பொழிவாற்ற முடிந்தது.

பட்டறைகளையும் அவர் நடத்துகிறார். அவற்றில் 150 அருஞ்செயல்களைப் பற்றிய செய்முறை விளக்கங்களை நிகழ்த்திக் காட்டுகிறார். மேலும், கடவுளர்கள் - மதங்கள் - ஒவ்வொரு மதத்திலும் உள்ள மகான்கள் ஆகியோரின் வரலாற்றைப்பற்றிய விழிப்புணர்வைப் பரப்புகிறார். அறியாமை இருளில் தட்டுத்தடுமாறும் பொதுமக்கள் ஏமாற்றப்படும் நிலை இதன் மூலம் மாறுகிறது.

சென்னைக்குப் போவதற்கான ரயிலுக்குக் காத்திருந்த பிரேமானந்து தம்மிடம் கேட்கப்பட்ட எல்லாவிதமான கேள்விகளுக்கும் பதிலளித்தார்:

**கேள்வி :** *அவதாரங்களுக்கு / சாமியார்களுக்கு எதிரான உங்களின் அறப்போர், நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்டதா? அல்லது நிறுவனமயப்படுத்தப்பட்ட மதத்தின் மீதான நம்பிக்கை இழப்பிலிருந்து எழுந்ததா?*

**பதில் :** ஒரு கடவுளை நம்புவதோ நம்பாதிருப்பதோ தனிஆள் சார்ந்த விசயம். தனிஆள் சாராத வெளி சக்திகளால் சுரண்டப்படாதவரை, இவ்வித நம்பிக்கைகள் எவருக்கும் எவ்வித தீங்கும் விளைவிப்பதில்லை.

கடவுள் என்பது ஒரு கருத்து மட்டுமே, மற்றபடி கடவுள் என்று எதுவும் இல்லை என்கிற போது, அப்படிப்பட்ட கடவுளால் எந்தக் கெடுதலும் செய்ய முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடவுளைப்பற்றிய எல்லாவிதமான வரையறைகளும் இன்று முழுத் தோல்வி கண்டுள்ளன. இயற்கையில் எதையுமே ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்கிறபோது கடவுள் எப்படி படைப்புக் கர்த்தர் ஆக முடியும்? கடவுளுக்கான தேவை என்பதே சிலருக்கு இருப்பதில்லை. அந்தச் செய்தியே அவர்களுக்குத் தேவையற்றதாக இருக்கிறது. இந்துக்களையும் முசுலீம்களையும் எந்தக் கடவுளும் காப்பாற்றவில்லை. அவர்கள்தான் கடவுளை காப்பாற்றுவதற்காக பாபர் மசூதியிலும் ராமஜென்மபூமியிலும் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்கிறார்கள்.

இது, தம்மைத் தாமே கடவுளின் தீர்க்கதரிசிகள் என்றும் அவதாரங்கள் என்றும் பீற்றிக் கொள்ளும் இடைத் தரகர்களின் குறும்பு வேலையே ஆகும். மக்கள் முற்றிலுமாக நம்பிக்கை இழந்துவிட்ட நிலையில், மனம் நொந்துபோன நிலையில்தான் இந்த சாமியார்களிடம் போகிறார்கள். இந்த நிலையில் வரும் மக்களை ஏய்த்து சுரண்டுவது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது.

மதம் என்பது நமது பண்பாட்டு மரபின் பகுதியாக இருக்கிறது. குறிப்பிட்ட சில சட்டத் தொகுப்புகளும் தத்துவங்களுமே இங்கு மேலோங்கி விளங்குகின்றன. அவற்றைக் காலம் கடந்தும் தக்க வைத்துக் கொள்ள அவர்கள் முயல்கிறார்கள்.

ஒரு ஊன்றுகோல் தேவைப்படுபவர்களுக்குத் தான் - அந்த ஊன்றுகோல் இல்லாவிட்டால் பைத்தியம் பிடித்து விடக் கூடியவர்களுக்குத் தான் - கடவுள் தேவைப்படுகிறது.

ஆனால் தம்மால் கடைப்பிடிக்க முடிவதை விடவும் அதிகமாய் அதை நம்பிக்கொண்டு மதவெறி பிடித்துத் திரிபவர்கள்மீதே நான் கவனம் செலுத்துகிறேன். எனவே தெளிவாக புலப்படாத ஓர் உருப்படியின் இருப்பைக் குறித்து வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருப்பதை விடவும், **மக்களிடம் அறிவார்வத்தையும் அறிவியல் மனப்பான்மையையும் தூண்டிவிடவே நான் முயல்கிறேன்.**

"ஏன்" என்னும் கேள்வியை ஒருதடவை அவர்கள் கேட்கத் தொடங்கிவிட்டாலே போதும், பின் ஒருபோதும் அவர்கள் அதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள்.

*கே: அறிவர் ஏ.ட்டி. கோவூரின் இயல்பான வாரிசாக நீங்கள் ஆனது எப்படி?*

ப: கடவுள்களையும் குருமார்களையும் பற்றி நான் முதலில் வாசித்த எல்லாவற்றையும் நம்பினேன். கிடைக்கக் கூடிய எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திகளையும் (அற்புத ஆற்றல்களையும்) அடைந்துவிடவே நான் விரும்பினேன். என் 19ஆவது வயதில் ஒரு குருவைத் தேடத் தொடங்கினேன்; அரவிந்தரிடம் போனேன்.

தாகூர் என் தந்தையின் நண்பர். சுவாமி ராம்தாசர் "கடவுளைத் தேடி" என்று ஒரு நூல் எழுதினார். கையில் காசின்றி இந்தியா முழுவதிலும் தான் பயணம் மேற்கொண்டதாகவும், அப்போது தன் தேவைகளை எல்லாம் கடவுளே கவனித்துக் கொண்டதாகவும் அந்நூலில் அவர் எழுதியுள்ளார்.

அவ்விதமே நானும் கையில் சல்லிக்காசு கூட இல்லாமல் இந்தியா முழுவதும் சுற்றத் தொடங்கினேன். ஆனால் எந்தக் கடவுளும் எனக்கு உதவவில்லை. மனிதர்கள்தான் உதவினார்கள்.

குண்டலினி சக்தி எனப்படும் சமாச்சாரத்தை எல்லாம் எனக்குச் சொல்லித் தருவதாக கூறிய ஏராளமான சுவாமிகளை நான் சந்தித்தேன். யோகத்தின் மூலம் உடம்புக்குள் ஒரு வெற்றிடத்தை உருவாக்கினால், சுசும்மா நாடி (நரம்பு) மூலம் குண்டலினி அல்லது காம ஆற்றல் மேலே உந்தித் தள்ளப்படுமாம். அறிவியல் மொழியில் சொன்னால் அப்படி மேலே ஏற்றப்படுவது, விந்துதான். ஆனால் இந்த நாடி எங்கே உள்ளது? 'இது ஒரு மனோநாடி. தியானத்தின் மூலம் மட்டுமே அதைக் கண்டுகொள்ளமுடியும்' என்கிறார்கள். இது சுத்தமான கற்பனையே.

காம ஆற்றலை ஆன்மீக ஆற்றலாக நிலைமாற்றமுடியாது. கற்புநெறியைக் கடைப்பிடித்தால் கேடய (புரோஸ்டேட்) சுரப்பியில் மிகுந்த வலிதான் உண்டாகும். **எல்லா யோகியரும் முனிவர்களும் ஏமாற்றுக்காரர்களே** என்பதை நான் கண்டு கொண்டேன். அதன்பின் எனக்கு அவர்களின் வித்தைகளின் மேல் ஆர்வம் ஏற்பட்டது.

நான் நினைத்திருந்தால் நானும் ஒரு 'சுவாமிகள்' ஆக வேடமிட்டு ஏராளமான பணம் சம்பாதித்திருக்க முடியும். **ஒரு சாமியாருக்கு சுமார் 50 - 60 வித்தைகள் மட்டுமே தெரிந்திருக்கும். நானோ சுமார் 1500 வித்தைகள் தெரிந்து வைத்திருக்கிறேன்.** 1969 முதல், இலங்கையிலிருந்து அறிவர் கோவூர் வந்து அதிசய செயல்களை அம்பலப்படுத்தும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவது வழக்கமாயிருந்தது. சத்திய சாயிபாபாவைப்பற்றி நான் ***"அற்புதங்களின் மாயக் கவர்ச்சி"*** (லியூர் ஆவ் மிராக்கிள்ஸ்)என்னும் நூலை எழுதினேன். அதைக் கையால் தொடவும் மறுத்துவிட்டார்கள் பதிப்பாளர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே அதை நானே பதிப்பித்தேன். என் சார்பில் கோவூர் அதை வெளியிட்டார். அவர் நலக்குறைவாக இருந்ததாலும், அவரைக் கொல்ல விரும்பிய ஆட்கள் நிறைய பேர் இருந்ததாலும் அந்த பிரச்சாரப் பயணத்தில் நானும் அவருடன் கூட இருந்தேன்.

பகுத்தறிவாளர் கழகத்தில் நானும் ஓர் உறுப்பினர் ஆனேன். மிகவும் ஒதுக்குப்புறமான சிற்றூர்களுக்கும் நாங்கள் போவது வழக்கம். அங்கெல்லாம் கூட்டம் சேர்ப்பதற்காக முதலில் நான் என் உடலில் நெருப்பு வைத்துக் கொள்வது வழக்கம். பின் நாங்கள் சொற்பொழிவுகள் ஆற்றுவோம்.

*கே: சாயிபாபாவின் அருஞ்செயல்களை அறிவியலின் துணையுடன் எதிர்க்கும் முயற்சிகள் எப்போதுமே வெற்றிகரமாக அமைந்தனவா?*

ப : சாயிபாபாவின் படங்களை விலைக்கு வாங்க சமிதிக்கு நீங்கள் போனால் முதலில் படத்தின் சட்டத்தைத் துடைப்பதுபோல் அவர்கள் பாவனை செய்வார்கள். உண்மையில் அவர்கள் பாதரச குளோரைடுக் கரைசலைஅதன்மீது பூசுகிறார்கள்.

இந்தபூச்சு பூசப்பட்ட அலுமினிய சட்டத்தின் மேல் (காற்றின்) ஈரப்பதம் படும்போது ஒரு சாம்பல்நிறப் பொடி உதிர்கிறது. இதைத் திருநீறு என்று தவறாக கருதுகிறார்கள்.

கரஞ்சியா தன் 'பிளிட்ஸ்' ஏட்டில் சாயிபாபாவுக்குச் சாதகமான கட்டுரைகளை எழுதிவந்தார். அப்போது 'கரண்ட்'டில் நான் அதற்கு எதிரான கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதினேன். கரஞ்சியாவின் கட்டுரைகள் அனைத்தும் விளம்பரக் கட்டுரைகளே! ஆதரிப்புக் கட்டுரைகளே!

*கே: மன ஆறுதலுக்காகவும் விவரம் தெரிந்து கொள்வதற்காகவும் மெத்தப் படித்தவர்களே சோதிடத்தையும் கைரேகையையும் நாடுகிறபோது நீங்கள் எப்படி அவற்றை ஒதுக்கிவிட முடியும்?*

ப : உங்கள் உடம்பில் மூட்டு இணைப்பு உள்ள இடங்களில் எல்லாம் அதற்கு ஒத்தாசையாக அங்கு தோல் இள்க்கமாக காணப்படும். இந்த இளக்கமான தோல் பகுதியில் இயற்கையிலேயே மடிப்பு அடையாளம் விழுந்துவிடுகிறது.

நீங்கள் மேற்கொள்ளும் வெவ்வேறுவிதமான வேலையின் தன்மைக்கேற்ப இந்த கோடுகளும் தம் திசையை மாற்றிக் கொள்கின்றன. இதெல்லாம் நாம் நம் கைகளை எப்படி பயன்படுத்துகிறோம் என்பதையே பொறுத்திருக்கிறது. எழுத்து வேலை செய்யும் மனிதரின் கட்டைவிரலில் அதிக கோடுகள் விழும்.

ஆனால் கையில்லாதவரின் கதி என்ன? அவர்களின் வருங்காலம் எப்படி இருக்கும்? மூட்டு இணைப்புகள் விரைப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கும் மனிதர்களின் உள்ளங்கைகளில் வரிகள் இருப்பதில்லை.

என் வீட்டில் ஒரு குரங்கு இருக்கிறது. அதன் உள்ளங்கைகளில் உள்ள கோடுகளின்படி அதற்கு வெளிநாட்டுப் பயணம் செய்யவும் அளவற்ற செல்வம் சேர்க்கவும் யோகம் உள்ளது!

ஒருதடவை நான் ரோமுக்குப் போயிருந்தபோது நான் ஓர் இந்தியச் சாமியார் என நினைத்து மக்கள் என்னை சூழ்ந்து கொண்டார்கள். அவர்களின் ரேகைகளைப் பார்த்து ஆருடம் சொல்வதுபோல் நடித்தேன். அவர்கள் எல்லாரும் எனக்கு நன்றி கூறினார்கள். பணம்கூடத் தந்தார்கள்!

நாஸ்ட்ரடாமுசை எடுத்துக் கொள்வோம். அவர் தானாக கூறி உள்ள வருங்காலம் பற்றிய கணிப்புகள் திட்டவட்டம் இல்லாமலே உள்ளன. அவற்றைப் பெயர்த்துரைக்கும் குறிகாரர்கள்தாம் அவற்றுக்கு குறிப்பான பொருள் ஏற்றுகிறார்கள். ஏதாவது ஒன்று நிகழ்ந்த பிறகு மட்டுமே குறிகாரர்கள் வாயைத் திறக்கிறார்கள்; அதுவரை அவர்கள் மூச்சுவிட மாட்டார்கள்.

குறி சொல்பவர்களில் முக்கியமானவராகிய எரிகா சேத்தம், இந்திராகாந்தியின் சாவு முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது என்கிறார். மூல செய்யுள் அடிகளை அதில் வாசித்தால் ஓர் அரசியல் கொலை மட்டுமே முன்கூறப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அது மகாத்மா காந்தியில் இருந்து இந்திரா காந்தி வரை யாராக வேண்டுமானாலும் இருக்க முடியும்.

சோதிட இதழ் ஒன்றை நடத்திவரும் திருமதி காயத்ரி வாசுதேவ், தேர்தல் நேரத்தில் அரசியல் கொலை விழும், ராஜீவின் ஆட்சி கவிழும் என்று முன்னறிவித்திருந்தார். ஆனால் எந்தத் தேர்தலின்போதுதான் கொலை விழாமல் இருந்தது? மேலும் கணிப்பின் இரண்டாம் பகுதி என்னவாயிற்று? அதை அவர் வசதியாக மறந்து விடுகிறார்.

*கே : அரசியலுடன் மதத்தைக் கலக்கும் சமீபத்திய போக்குபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**பதில் :** இந்தக் கலவைதான் பணப்பெட்டியையும் வாக்குப் பெட்டியையும் இன்னமும் கலகலப்பாக வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மதம் இந்துமதம் என்னும் பா.ஜ.க.வின் கோரிக்கை உண்மை அல்ல.

இந்தியாவில் ஒருபோதும் மதம் என்று ஒன்று இருந்ததில்லை. தத்துவங்கள் மட்டுமே இங்கு நிலவின. வேதங்களிலும் உபநிடதங்களிலும் கடவுள் பற்றிய எவ்வித குறிப்பும் கிடையாது. வாதங்களும் விவாதங்களும் மட்டுமே அவற்றில் உள்ளன.

இருக்கு வேதத்தில் **நசதீய சூத்திரம்** என்னும் அத்தியாயம் உள்ளது. நம்மைப் படைத்தது கடவுள்தானா என்பது அதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவாதிக்கப்பட்டுள்ளது. வெப்பத்தில் இருந்தே நாம் படைக்கப்பட்டோம் என அது முடிவாகக் கூறுகிறது. கடவுள் என்பது மனித மனத்தின் படைப்புதான் என்றும் அது கூறுகிறது.

*பகவத் கீதையும்கூட* மூலத்தில் ஒரு கடவுள் மறுப்புத் தத்துவமே. சங்கராச்சாரிதான் அதை ஒரு ஆத்திக தத்துவமாக மாற்றினார். தியான சுலோகம் கூறுகிறது: "தியான வர்த்தித தத்கடன மானச பஷ்யர்த்தியாம் யோகினோ" அதாவது கடவுள் என்பதை உங்கள் மனத்தில் மட்டுமே நீங்கள் தரிசிக்க முடியும் - என்று பொருள். இந்தக் கருத்து சரிதான்: மனத்தின் கற்பனைகளில் மட்டுமே கடவுள் இருக்கிறார்.

**மதம் என்பது ஒரு மாபெரும் வியாபாரம்.** எனவேதான் கீதைக்கு மத ஒப்பனைகள் செய்யப்பட்டு, உழைப்பு மற்றும் உலகாயதம் பற்றிய புத்த தத்துவமாக இருந்த அதன் அசல் தன்மையிலிருந்து அது உருமாற்றப்பட்டது.

'ஓம்' என்பது சிருஷ்டி மந்திரம் (படைப்பின் குறியீடு) என்றால் அது ஒரு காமச்சின்னம் தானே என்று நாக்பூரில் ஒருமுறை என் பேச்சின் இடையில் நான் சொன்னேன் - அப்போது, ஆர் எஸ்எஸ் மாணவர்கள் 200 பேர் அடங்கிய ஒரு கும்பல் கோபாவேசத்துடன் என்னை நோக்கிப் பாய்ந்து வந்தது. நான் அவர்களைச் சமாதானப்படுத்தி, இந்தச் செய்தியைப் பற்றிய விவாதத்துக்கு வருமாறு அவர்களை அழைத்தேன்.

விவாத இடத்தை நான் அடைந்ததும் அவர்கள் என்னைப் பார்த்து ஊளையிடத் தொடங்கினார்கள். நானும் அவர்களைப் போலவே ஊளையிட்டுக் கொண்டும் பைத்தியம் போல் குதியாட்டம் போட்டுக் கொண்டும் மேடையை நோக்கிப் போனேன்.

இது அவர்கள் வாயை மூடிக் கொள்ளச் செய்தது. அதன் பின் நான் 'அன்பு' பற்றி பேசினேன்.

அவர்களைப் பொறுத்த வரை அன்பு என்பது ஒரு தன்னலமான, உடைமை மனோபாவ உணர்ச்சியாக மட்டுமே அதுவரை இருந்து வந்தது அதனை அந்த விவாதத்துக்குப் பிறகு அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். பகுத்தறிவாளர் இயக்கத்தின் ஆதரவாளர் களாகவும் ஆனார்கள்.

***கே: உங்களுடைய இன்றைய ஈடுபாடுகள் எந்த அளவில் உள்ளன?***

**ப :** **'இண்டியன் ஸ்கெப்டிக்'** என்ற ஆங்கில ஏட்டை நான் நடத்தி வருகிறேன். ராகுல்சிங்கும் திருமதி மார்க்கரெட் பாட்டியும் அதன் பதிப்பாசிரியர் குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். இரண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறேன். இந்த மாதம் ஆஸ்திரேலியா செல்கிறேன்.

வெளிநாடுகளில் 70க்கு மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறேன். அங்கு நாங்கள் சுமார் 12 அமைப்புகளுடன் எங்களை இணைத்துக் கொண்டிருக்கிறோம்.

நேசனல் கவுன்சில் ஃபார் சயன்ஸ் அன் டெக்னாலஜி கம்யூனிகேசன் (என்சிஎஸ்ட்டிசி = அறிவியல் தொழில்நுட்ப தொடர்புக்கான தேசிய ஆய்வுக்குழு) என்னை வட இந்தியாவுடன் இணைத்துள்ளது ; எனக்குத் தோழமை உறுப்பினர் தகுதியும் அளித்திருக்கிறது. அதன் பணிகள் வருமாறு:

1) நாளடைவில் இயக்கத்தின் ஆதார சக்தியாக பயன்படக்கூடிய தேர்ந்தெடுத்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சொற்பொழிவு மற்றும் பயிற்சியளிப்பு அமர்வுகள் நடத்துவது.

2) மந்திர தந்திரங்கள், அவற்றைப்பற்றிய விவரமான அறிவியல் விளக்கங்கள் அடங்கிய ஆவணத் தொகுப்பை - தேவையானால் உயிரோவியங்களை (அனிமேசன்) பயன்படுத்தி - உருவாக்கு வதற்காக சில திரைப்பட / தொலைக்காட்சி தயாரிப்பாளர் (கள் ) உடன் சேர்ந்து பணிபுரிவது.

3) வாய்ப்புக்கிடைத்தால் மேற்சொன்ன மூலப் பொருள்களின் துணையுடன் வீடியோ நாடகத் தொடர்களுக்கு கருத்து வடிவம் தரல், திட்டமிடுதல்/ உருவாக்குதல்.

4) இந்த உருவாக்கத்தில் இருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை 2&3 (பிரிவு) வேலைகளுக்கு உறுதுணையாக நூல்வடிவில் வெளியிடுதல்.

மதவெறியர்களை எதிர்கொள்வது என்பது ஒரு சவால்தான். தாயத்துகளையும் பூணூல்களையும் தம் உடம்பிலிருந்து அவர்கள் கழற்றி எறிந்துவிடும்போது அவர்களை நான் சென்றடைந்து விட்டேன் என்பதை அறிந்து கொள்வேன்.

மதமானது பகுத்தறிவு வாதத்தையே எதிர்கொள்கிறது. அதற்கு எதிராக நிற்பது உணர்ச்சி வசப்படும் எதிரிகள் அல்ல.

கே: குருவுடன் தொடர்பு கொள்ளும் (டயல் - அ - குரு) திட்டம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப : நிர்மலா தேவி ஸ்ரீவத்சவாதான் எங்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்கும்படி கேட்டு பிரதமர் மாளிகைமுன் தர்ணா நடத்திய முதல் சாமியாரிணி என்பதை நீங்கள் அறிவீர்கள். மாந்திரிக நிவாரணங்கள் (ஆட்சேபத்துக்குரிய விளம்பரங்கள் ) சட்டத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழும், மருத்துவ தொழில் புரிவோர் சட்டத்தின் கீழும், நாங்கள் அவருக்கு ஓர் அறிவிப்பு அனுப்பி இருந்தோம். மருத்துவம் செய்வதற்கான அனுமதி இல்லாமல் எவரும் சிகிச்சை தரமுடியாது என அதில் கூறியிருந்தோம். அவரை நாங்கள் அம்பலப் படுத்தினோம்.

கொட்டாரக்கராவில் இருக்கும் பிரபாகர் யோகியைச் சந்திக்க நான் போயிருந்தேன். அவர் தன் வயது 800 என கூறிக் கொள்கிறார். கேரளாவின் வயதைவிட இது அதிகம்! என்னைச் சந்திக்க அவர் மறுத்துவிட்டார். தன் சிறுவயதில் எடுத்த புகைப்படம் ஒன்றை அவர் வைத்திருக்கிறார்!

யாழ்ப்பாண சித்தர் என்று தன்னை அழைத்துக் கொண்ட ஒருவர் 1980 இல் இலங்கையில் இருந்து வந்தார். தன் வெறும் மண்டையாலேயே 100 தேங்காய்களை உடைக்கும் ஆற்றலைக் கடவுள் தனக்குத் தந்திருக்கிறார் என்று சொல்லிக் கொண்டார். நாங்கள் அவரை கவனமாக ஆராய்ந்தோம்.

நாம்கூட உடைத்துவிட முடியக்கூடிய இளம்காய்களை மட்டுமே தேர்ந்தெடுத்து அவர் உடைக்கிறார் என்பதைக் கண்டுபிடித்தோம். அவரது தேங்காய் மூட்டைகளில் ஒன்றை எடுத்துவிட்டு, அதனிடத்தில் முற்றிய காய்கள் நிரம்பிய மூட்டை ஒன்றை வைத்துவிட்டோம். கோயிலில் வைத்து அந்த காய்களை உடைக்க அவர் முயன்றார். முடியவில்லை.

அன்று காலையில் ஒரு பெண் ஆடையின்றி குளிப்பதை தான் பார்க்க நேர்ந்ததால்தான் தன் மனஒருமை குலைந்து, காயை உடைக்க முடியவில்லை என்று சொல்லி மானத்தை காப்பாற்றிக் கொள்ள முயன்றார்.

ஆனால், மக்கள் ஏற்கனவே அவரது சூழ்ச்சியைப் புரிந்து கொண்டிருந்தார்கள். இந்த முக்தானந்தாக்கள், அம்ருதானந்த மயிகள் அனைவரும் வெளிப்படையாக நம்மை எதிர்கொள்ள மறுக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், அடிக்கடி அவர்கள் தலைமறைவாகி விடுகிறார்கள்!

*கே: உங்கள் பணியை எப்படி நிறைவேற்ற முடியும் என்று நினைக்கிறீர்கள்?*

ப : ஓர் ஆய்வு மையம் அமைக்கப்பட வேண்டும். எல்லா விதமான அருஞ்செயல்களும் இயற்கைமீறிய நிகழ்வுகளும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். மதம், மாந்திரிகம், அறிவியல் முதலியவை பற்றிய நூலகம் மூலம் அவை விளக்கப்பட வேண்டும். இதுவே என் விருப்பம்.

ஆனால் இதற்கு மிகுந்த பொருள்செலவு பிடிக்கும். காற்றில் கையசைத்து மாயமாய் பணம் வரவழைக்கும் செப்படி வித்தை எனக்குத் தெரியாதே!

***ஷைனி அந்தோனி***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முன்னுரை

நமது பேரண்டத்தின் வயது தோராயமாக 12 ஆயிரம் கோடி ஆண்டுகள் ஆகிறது. நமது பூமிக் கோளுக்கு 450 கோடி வயது ஆகிறது. இந்த பூமியில் மனித உயிர்கள் தோன்றி 10 லட்சம் ஆண்டுகளுக்கும் குறைவான காலமே ஆகிறது.

பதிவு செய்யப்பட்ட நமது வரலாறு 10,000 ஆண்டுகளுக்கும் குறைவான வயதுடையதே.

இசுரேலில் உள்ள எரிக்கோ போன்ற மிகப்பழைய நகரங்களும்கூட 7000 ஆண்டுகளுக்கும் குறைந்த வயதுடையவையே.

இன்று மனிதர்களை இரண்டு செய்திகள் ஆதிக்கம் செய்து கொண்டுள்ளன. அவை மதமும் அறிவியலும் ஆகும். இவற்றில் மதம் மூத்தது; அறிவியல் இளையது.

மனிதர்களிடம் ஏற்பட்ட நுண்ணறிவு வளர்ச்சிதான் மதம், அறிவியல் ஆகிய இரண்டுக்கும் தாய். கேள்வி கேட்கும் திறன் என்பதன் மறுபெயரே நுண்ணறிவு.

எனவே மிகப்பழைய காலத்தில் மனிதருக்கு நுண்ணறிவு ஏற்பட்டபோது அவர்கள் தமக்குத்தாமே கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும் என இதிலிருந்து நாம் ஊகிக்க முடியும். இந்த கேள்விகள் நான்குவிதமானவை.

**முதலாவது:** மனிதர்கள் தம்மைச் சுற்றிலும் கண்ட நீர், காற்று, மண், கனிமங்கள் போன்ற உயிரற்ற பொருள்களைப் பற்றிய கேள்விகள்.

**இரண்டாவது:** அவர்கள் எதிர்கொண்ட ஒளி, வெப்பம், ஒலி, இடி, மின்னல் முதலிய இயற்கை நிகழ்வுகள்பற்றிய கேள்விகள்.

**மூன்றாவது:** சீரான கால இடைவெளியில் தோன்றும் சூரியன், சந்திரன், விண்மீன்கள்; பல்வேறு விண்மீன் கூட்டங்களின் வழியே கடந்து செல்லும் கோள்கள் மற்றும் கிரகணங்கள் போன்ற (மனிதர்கள் கண்டுணர்ந்த) பூமிக்கு அப்பால் காணும் விண்பொருள்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய கேள்விகள்.

**நான்காவது:** அவர்கள் தம்மைச் சுற்றிலும் கண்ட உயிருள்ள பொருள்கள்பற்றிய கேள்விகள். எடுத்துக்காட்டாக, திரும்பத் திரும்ப வரும் பிறப்பு - நோய்நொடி - இறப்பு முதலியவை பற்றிய கேள்விகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நிகழ்வுகள் எல்லாம் இப்போது வேதியியல், இயற்பியல், வானியல், உயிரியல் என்னும் நான்கு அடிப்படையான அறிவியல் பார்வையின் கீழ் வருகின்றன. ஆனால் இவை எல்லாம் உண்மையாகவே ஆதிமனிதர்களின் ஆவலை கிளறிவிட்டிருக்கவே வேண்டும். அப்படியானால் அவர்கள் எப்படி இவற்றுக்கான விடைகளைக் கண்டுபிடிக்க முனைந்தார்கள்?

அறிவியல் முறை என்பது அப்போது வளர்ச்சி பெற்றிருக்க வில்லை. அத்தகைய கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு இன்று நாம் பெற்றிருக்கிற தர்க்கம் முதலான தளவாடங்கள் எதுவும் அப்போது இருக்கவில்லை.

அப்படியானால் ஆதிமனிதன் என்ன செய்தான்? அவன் தன் நுண்ணறிவைப் பயன்படுத்தி சுயமுரண் அற்ற/தற் பொருத்தமுடைய நம்பிக்கை அமைப்புகளை உருவாக்கினான்.

அவற்றின் சில முற்கூற்றுகளை - முற்றிலும் நம்பிக்கையின் அடிப்படையில், கேள்வி எதுவும் கேட்காமல் - ஒருமுறை நீங்கள் ஒப்புக்கொண்டதுமே; குறைந்தபட்சம் அப்போதைக்கு நம்பகமானதாக - சரியானதாக - உண்மை என தோற்றமளிக்கும் பதில்கள் அவற்றிலிருந்து எழுகின்றன. ஒருவேளை இவ்விதமான முயற்சியே, முறைப்படுத்தப்பட்டதும் படாததுமான மதங்களின் வளர்ச்சிக்கு இட்டுச்சென்றிருக்கிறது. (**முறைப்படுத்தப்பட்ட மதங்களில் சில:** இந்துமதம், புத்த மதம், யூதமதம், கிறித்தவ மதம், இசுலாம் மதம் முதலியன).

ஆயினும் மனித அறிவின் மொத்த அளவு விரிவு பெற்றதும், மதத்தின் அடிப்படையான முற்கூற்றுகளின் மீது மனிதன் கேள்வி கேட்கத் தொடங்கிய காலம் வந்தது.

இத்தகைய கேள்விகளில் இருந்தே அறிவியல் முறை என இன்று நாம் முறைப்படி அறிந்துள்ள அறிதல் முறையானது திரட்சி பெற்றது.

மனிதரின் அறிவார்வத்தை முன்பு மதம் திருப்தி செய்து வந்தது. அதை விடவும் அதிகமாய் திருப்தி செய்வதற்கு அறிவியல் முறை ஒரு கருவியாகப் பயன்பட முடியும். அது மட்டுமல்ல. இதுவரை மறைவாயிருந்த - பார்க்க மறுக்கப் பட்டு வந்த - புதிய பிரதேசங்களைக் குறித்த விசாரணைக்கும் அது வழிதிறந்து விட்டுள்ளது என்பதும் விரைவில் புலனாயிற்று.

பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல்கொண்டு இந்த நிலவரம் வளர்ச்சி பெற்று வந்தது. ரோஜர் பேக்கன், லியனார்டோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாவின்சி, கோப்பர்நிகஸ், பிரான்சிஸ் பேக்கன், கலிலியோ, ரெனே தெகார்தே, நியூட்டன் முதலியோர் அறிவியல் முறைக்கு - புதிதாக வளர்ச்சி பெற்ற கேள்விக்கலைக்கு - புதிய பரிமாணங்களைச் சேர்த்தனர்.

இதில் விளைந்த பதில்கள், நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே தம்மை ஒத்துக் கொள்ளும்படி வற்புறுத்தவில்லை. அவற்றைச் சோதிக்கவும் சரிபார்க்கவும் வாய்ப்பளித்தன. ஒரு தனிமனிதர் அல்லது குழுவின் மனம்போன போக்குகளையும் விருப்பு வெறுப்புகளையும் சார்ந்து அவை இருக்கவில்லை.

அறிவியல் விரைவில் மதத்துக்குச் சரிநிகர் போட்டியாளராக ஆயிற்று. அடிக்கடி அதனுடன் நேருக்கு நேர் மோதிக்கொள்ளவும் செய்தது.

பதினாறு, பதினேழாம் நூற்றாண்டுகளில் கோபர்நிகஸ், கலிலியோ போன்றோர் ஒருபுறமும், திருச்சபை (சர்ச்) எதிர்புறமுமாக நின்று மோதிக்கொண்டதை நாம் பார்க்கிறோம்.

சென்ற நூற்றாண்டில்கூட, திருச்சபை இன்னொரு மாபெரும் போரைத் தொடுத்தது. டார்வினின் பரிணாமக் கொள்கையையும், அக்கொள்கையை மிகத் திறமையான முறையில் மனிதரின் பரிணாமம்வரை வளர்த்தெடுத்த தாமசு அக்சுலியையும் அது எதிர்த்துப் போராடியது.

அறிவியல் புதிய புதிய காட்சி வரிசைகளைத் திறந்துவைத்தது. அதன் முன்னேற்றத்துக்கு மதம் ஒரு தடை ஆயிற்று.

அறிவியலாளரை மதம் தண்டிக்கத் தொடங்கியது. சூரியன் பூமியைச் சுற்றிவரவில்லை, பூமியே சூரியனைச் சுற்றி வருகிறது என்று கூறிய கோபர்நிகசு, தம்கூற்றைத் தவறு என திரும்பப்பெற வேண்டியதாயிற்று.

கோபர்நிகசின் வழிவந்த **கலிலியோ**, கோபர்நிகசின் நிலைபாட்டையே விடாப்பிடியாய் ஆதரித்ததால் சிறையிலேயே கிடந்து சாகவேண்டியதாயிற்று.

கலிலியோவுக்கு முன் பகுத்தறிவின் துணை கொண்டு மதத்துடன் மாறுபட்டதற்காக கழுமரத்தில் கட்டப்பட்டு உயிரோடு கொளுத்தப்பட்டார் **புருனோ**.

வெறும் நூறு ஆண்டுகளுக்கு முன்புகூட, டார்வினும் அக்ஸ்லியும் 'கீழ்நிலை' உயிர்களில் இருந்தே மனிதன் உருவெடுத்தான் என்றும், படைப்புச் செயல்மூலமாக பூமிக்குக் கொண்டு வரப்படவில்லை என்றும் சொன்னதற்காக, கவலையில் ஆழ்ந்த சர்ச் அவர்களை எள்ளிநகையாடியது. இருந்தாலும் இவற்றால் எல்லாம் அறிவியலுக்கு நன்மையே விளைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவியலுக்கும் மதத்துக்கும் இடையில் மோதல் ஏற்படும் போதெல்லாம் ஆய்வு முறையைப் பயன்படுத்தி அறிவியல் வழங்கிய விளக்கம் எப்போதுமே பகுத்தறிவுக்கு மிகவும் ஏற்புடையதாகவே காணப்பட்டது.

எனவே அறிவியல் வளர்ந்து சென்றது. மதத்தை எதிர்த்துப் போராடியே அது வளர்ந்தது என்று சொல்லலாம். இன்றும் பல முனைகளில் இப்போர் நீடிக்கிறது.

அத்தகைய ஒரு போரைப் பற்றியதே திரு. பிரேமானந்து அவர்களின் இந்நூல். அறிவியலுக்கும், மதத்திலிருந்து பிரிக்க முடியாத அருஞ் செயல்களுக்கும் இடையிலான போர் அது.

அருஞ்செயல்களோடு தொடர்பு கொண்டிராத கடவுள் அவதாரமோ கடவுளின் தூதுவரோ எவரும் இல்லை. அவர்கள் கிறிஸ்துவானாலும் முகமதுவானாலும், கிருஷ்ணரானாலும் ராமரானாலும், பிரம்மன் - விஷ்ணு - சிவன் இந்திரன் முதலான கடவுளரானாலும் அருஞ் செயல்களோடு தொடர்பு படுத்தப்பட்டே இருக்கிறார்கள். (பெண் கடவுளரோ - நாட்டுப்புற இலக்கியத்திலும்கூட - ஏனோ ஆண்கடவுளரைவிட குறைந்த அற்புதங்களையே செய்கிறார்கள்!) உண்மையில் அருஞ் செயல்களைச் செய்வதற்கான திறன்தான் எப்போதும் கடவுள்நிலைக்கு அத்தியாவசியமான ஒரு சான்றாக கருதப் பட்டிருக்கிறது.

இன்று, அறிவியலும் தொழில்நுட்பமும் நமது வாழ்வின் கட்டமைப்பிலிருந்து பிரிக்க முடியாதபடி பின்னிப்பிணைந்ததாக ஆகியுள்ளது. மேலும் நம் எல்லாருக்குள்ளும் இருக்கும் படைப்பூக்கத்துக்கு உருவம் கொடுப்பதாகவும் அதன் குறியீடாகவும் இந்த அறிவியல் - தொழில்நுட்பம் விளங்குகிறது. இந்த படைப்பூக்கம் என்பது நம் மரபணுக்களுக்குள்ளும் பொதிந்துள்ளது.

இதுதான் நம் மனித இனத்துக்கு அளவுகடந்த மதிப்புடைய சாதகங்களை அளித்துள்ளது. இதுதான், டார்வின் கூறும் பரிணாமத்தின்போதும் உயிர் இனங்களுக்கு இடையிலான போட்டியின் போதும் ஏற்பட்ட அநேக பாதகங்களில் இருந்து உயிர்தப்பி மீள நமக்கு உதவியுள்ளது.

நமது அன்றாட வாழ்வில் அறிவியல் நீக்கமற நுழைந்துவிட்டது. அதன் விளைவாகவே வெவ்வேறு அளவில் அறிவியல் மனோபாவம் வளர்ந்திருக்கிறது. அந்நிய வந்தேறி ஆட்சியின் மறைவுக்கு அது உதவியது; உலகம் முழுவதும் ஆட்சி முறையானது ஒட்டுமொத்தமாக மக்களாட்சி மயப்படுத்தப்பட உதவியது; தனிமனித உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதற்கு உதவியது; உலகின் எல்லா பகுதிகளிலும் சமாதானத்துக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் மதிப்பு அதிகரிப்பதற்கு உதவியது.

எனவே (இனி) அறிவியல் - தொழில்நுட்ப பாதையில் இருந்து நாம் விலகிச் செல்வதற்கு வழி இல்லை.

இன்று இரண்டுவிதமான சிந்தனைப் போக்குகளை மனிதகுலம் சுவீகரித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று மதத்தை அடிப்படையாகக் கொண்டது. மதமோ திருவெளிப்பாட்டையும், அதிகாரத்தை கேள்விக்கிடமற்று வரைமுறை அற்று ஏற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டது. மற்றது, அறிவியலின் அடிப்படையில் அமைந்தது.

கேள்வி கேட்கும் உரிமையையும், ஆதாரத்தின் அடிப்படையில் ஒருவர் தன் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ளும் கடமையையும் அடிப்படையாகக் கொண்டது அறிவியல்.

அறிவியலும் மதமும் ஒன்றுடனொன்று ஒத்துப்போக முடியாது; ஒன்றுக்கொன்று முரண்பட்டே நிற்கும் என ஒரு இடத்தில் (சொசைட்டி அன் சயன்ஸ், 1981, 4(2), 42-50) நான் விவாதித்திருக்கிறேன்.

[மதம் என்னும் பதத்தை இங்கு நான் பயன்படுத்தும்போது, ஒரு மதத்தை மற்றொரு மதத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் மதக் கோட்பாடுகளையே குறிப்பிடுகிறேன்; எல்லா மதங்களுக்கும் பொது அடிப்படையாக உள்ள சமயக் கொள்கையை அல்ல. அந்த அடிப்படைக் கொள்கை நவீன அறிவியலுக்கு ஏற்புடையதே].

ஒவ்வொரு மதத்தின் கோட்பாட்டுத் தொகுப்பிலும் அருஞ்செயல்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. ஆனால் அறிவியலால் விளக்க முடியாதபடி ஒரு செயல் இருந்தால் மட்டுமே அது அருஞ்செயல் எனப்பட முடியும்.

இந்த வரையறைப்படி அருஞ்செயல்கள் என்பவை இயற்கைக்கு அப்பால்பட்ட ஒன்றின் - அறிவியலின் வரம்பையும் சாமானியரின் புரிதலையும் மீறிய ஒன்றின் - வெளிப்பாடு என்றே பொருள்படுகின்றன.

மறுபுறம் அறிவியலின் வரையறையோ, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றின் இருத்தலை மறுக்கிறது. சில நிகழ்ச்சிகளுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட காரணம்தான் இருக்க முடியும், அதாவது அறிவியலின் வரம்பை மீறிய விளக்கம்தான் தரமுடியும் எனக்கூறும் நிகழ்ச்சிகளை அடிக்கடி நாம் பார்க்கவும் கேள்விப்படவும் செய்கிறோம்.

யதார்த்தத்தில், அத்தகைய சம்பவங்கள் அனைத்துக்கும் ஓர் அறிவியல் விளக்கம் - பெரும்பாலும் எளிமையானதும் அறிவார்ந்ததுமான விளக்கம் - இருக்கவே செய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்துக்காட்டாக, ஹூடினி (Houdini) என்ற பிரபல மந்திரவாதி, பூட்டப்பட்டிருக்கும் சிறைக்குள் இருந்து வெளியே வந்துவிடுவார். அவரை ஒரு சாக்கு மூட்டைக்குள் போட்டுக் கட்டி அந்த மூட்டையை ஒரு பெட்டிக்குள் வைத்து, பெட்டியைப் பூட்டி ஆற்றுநீரில் இறக்கிவிட்டால், பத்திரமாக நீந்திக் கரைசேர்ந்துவிட அவரால் முடிந்தது.

அவர் தனக்கு இயற்கைக்கு அப்பால்பட்ட ஆற்றல்கள் இருப்பதாகவும், தான் ஒரு கடவுள் அவதாரம் என்றும், நம் நாட்டுக்கு வந்து சும்மா பீற்றிக் கொள்ளத் தொடங்கியிருப்பாரானால், மாபெரும் சீடர் கூட்டத்தையே சேர்த்துக் கொண்டிருப்பார்!

அதை அவர் எப்படிச் செய்திருக்கலாம் என்பதற்கு ஒரு விளக்கம் இதோ :

சில சிறப்பு உடல்திறன்களை (உதாரணமாக, நாம் விரும்பினால் நம் காதுகளைத் தானாக ஆடச் செய்ய முடிவது மாதிரியான திறமைகளை) பயிற்சியின் மூலம் சிலர் வளர்த்துக் கொள்கிறார்கள்.

தான் விரும்பினால் தன் வயிற்றுக்குள் இருக்கும் பண்டங்களை வாந்தி செய்துவிடும் உடல்திறனை கூடினி வளர்த்துக் கொண்டிருந்தார். அவர் கட்டப்படும் முன் ஒரு கத்தியையும் பூட்டின் சாவியையும் விழுங்கிவிடுவார். எனவே அவர் உடலைச் சோதனை போட்டாலும் இந்த பொருள்களை அவர் ஒளித்து வைத்திருப்பது ஒருபோதும் தெரியவராது. (ஆனால் புதிர்க்கதிர்களைப் பயன்படுத்திச் சோதனையிட யாராவது முடிவு செய்திருந்தால், அவர் ஒளித்து வைத்திருப்பதை அவர்கள் கண்டுபிடித்திருக்க முடியும்!) சிறையிலிருந்து வெளியேவர, அந்தச் சாதனங்களை அவர் வாந்தி எடுத்தாலே போதும். கத்தியால் கயிற்றை அறுத்து, சாவியால் பூட்டை திறந்துவிட வேண்டியதுதான்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளில் (அற்புதங்களிலும்) நம்பிக்கை என்பது, மதக் கோட்பாட்டில் ஒருவருக்குள்ள நம்பிக்கையில் இருந்து பிரிக்க முடியாத பகுதி என்பதில் ஐயமில்லை.

இது, நம் சமுதாயம் முன்னேறாமல் தடுக்கும் தடைகளில் மிக முக்கியமான ஒரு தடை ஆகும். இங்கு மட்டுமல்ல எங்குமே இதுதான் நிலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏனெனில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளிலும் அதிசயங்களிலும் நம்பிக்கை வைப்பது என்பது இந்தியருக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பான பண்பு அல்ல. (நம்மிடையே சாயிபாபாக்கள் இருந்தால் மேற்கில் அருள்திரு மூன்களும் ஜோன்களும் அல்லது மகேஷ்யோகி, ஆச்சாரிய ரஜனீஷ் போன்றோரை நம்புவோரும் ஹரே கிருஷ்ணா இயக்கத்தினரும் இருக்கிறார்கள்.).

'அறிவியல் மனப்பான்மை' என்ற சொல்லை உருவாக்கியபோது பிரதமர் நேரு மேற்படி நிலைமையைத் தெளிவாக உணர்ந்தே இருந்தார். அவர் சொன்னார் :

"இன்று எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயன்பாடு மிகவும் தேவையான தாகவும் தவிர்க்க முடியாததாகவும் ஆகி இருக்கிறது. ஆனால் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதை விடவும் முக்கியமான ஒன்று உள்ளது. அதுதான் அறிவியல் அணுகுமுறையைப் பயன் படுத்துவது என்பதாகும்.

**அறிவியல் அணுகுமுறைக்குத்** தேவையானவை: துணிவுடன் கூடிய திறனாய்வு மனநிலை; உண்மையையும் புதிய அறிவையும் நோக்கிய தேடல்; சோதனையும் தேர்வாய்வும் செய்யாமல் எதையும் ஏற்க மறுத்தல்; புதிய சான்றுகள் கிடைக்கும்போது பழைய முடிவுகளை மாற்றிக் கொள்ளும் எதார்த்தத் தன்மை/திறன்; முன்கூட்டியே கற்பித்துக் கொண்ட கோட்பாட்டை விடுத்து கண்கூடாகத் தெரிகிற நிசத்தையே சார்ந்து நிற்றல்; மனத்தைத் தீவிரமாக நெறிப்படுத்தல் - ஆகியவையாகும். அறிவியலைப் பயன்படுத்த மட்டுமல்ல, வாழ்க்கைச் சிக்கல்களின் தீர்வுக்கேகூட இவையெல்லாம் தேவை."

நாட்டில் இருந்த முன்னணி அறிவாளிகள் குழுவினர் 1981 இல் 'அறிவியல் மனப்பான்மை பற்றிய அறிக்கை' என ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள். அந்த அறிக்கை கூறியது :

"அறிவியல் மனப்பான்மைக்கு ஜவகர்லால் நேரு ஆதரவு தெரிவித்த பின்பும்கூட, மூடநம்பிக்கைகளும் ஆராய்ச்சி எதிர்ப்பு நடைமுறைகளும் பெருமளவாக வளர்ந்தே வருவதை நாம் கண்டு வருகிறோம்.

பலதரப்பட்ட சாமியார்கள் மற்றும் அருஞ்செயல் நிகழ்த்துவோரின் செல்வாக்கு அபாயகரமான அளவில் அதிகரித்து வருகிறது.... இத்தகைய ஒரு சூழலில், இன்றுள்ள சமூக நிலைமை பற்றிய முறையான திறனாய்வு மூலம் தேசத்தின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான மனித திறன்களின் மீதான நம்பிக்கை குலைந்து வருகிறது.

www.tamilarangam.net

எல்லா மட்டங்களிலும் மூடநம்பிக்கை புற்றுநோய் போல பரவி வருகிறது. அறிவுக்குப் பொருந்தாத சடங்குகள், அதிகாரத்தின் ஆதரவுடன் அடிக்கடி நடத்தப்படுகின்றன. அறிவியல் ஆராய்ச்சியே தொழிலாகக் கொண்டோரும்கூட அறிவுக்கு எதிரான - ஆய்வுக்கு எதிரான சமூக பழக்க வழக்கங்களையே பின்பற்றுகிறார்கள்.

ஒத்துப்போதல், கேள்வி கேட்காமை, அதிகாரத்துக்குக் கீழ்ப்படிதல் என்னும் சூழலிலேயே நம் கல்வி அமைப்பு முழுவதும் இயங்கி வருகிறது.

தேடல், விசாரித்தல், சிந்தித்தல் என்பதற்குப் பதிலாக ஏதாவது ஒரு அதிகார பீடத்தை மேற்கோள் காட்டுவதுதான் இங்கு நடைமுறையாக இருக்கிறது."

மேலே நான் சொன்னதில் இருந்து இயல்பாகப் பெறப்படும் முடிவு இதுதான் :

நமது சாமியார்களும் இன்ன பிறரும் செய்யும் **அருஞ்செயல்கள்** என்பவை உண்மையில் அருஞ்செயல்களே அல்ல; **அறிவியல் விதிகளின்படி விளக்கிவிடக் கூடியவையே.** இதனை ஒருவர் நிறுவ முடிந்தால், அது மூடநம்பிக்கையை ஒழிக்கக் கணிசமாக உதவமுடியும்; புறவயத்தன்மை, நடைமுறை சார்பு, பகுத்தறிவுடைமை என்னும் சட்டகத்துக்குள் மக்கள் தம் கருத்துகளை உருவாக்கிக்கொள்ளவும், தம் முடிவுகளை வகுத்துக் கொள்ளவும், தம் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும், ஆயத்தப்படுத்த முடியும்.

இந்த சட்டகமே, ஒரு தேசம் என்னும் அளவில் நம்மிடம் மிகவும் பற்றாக்குறையாக உள்ளது.

அருஞ்செயல்களுக்கு எதிராக திரு. பிரேமானந்தை விடவும் வெற்றிகரமாக, விரிவாக, விவரமாக போராடி வருபவர் எனக்குத் தெரிந்த வரை வேறெங்கும் வேறெவரும் இல்லை. இவருடன் எனக்குப் பல ஆண்டுப் பழக்கம் உள்ளது.

திருடனைப் பிடிக்க திருடனையே அமர்த்து என்பார்கள். அதுபோல, அற்புதங்கள் நிகழ்த்துபவர் எவரும் சாமானிய மனிதரிலும் வேறுபட்டவர் அல்லர் என்பதைப் பொதுமக்கள் உணரும்படி செய்வதற்கு மிகவும் சரியான மனிதர், அத்தகைய அருஞ்செயல்களைத் தானே செய்ய முடிந்தவராகவும், அவை எல்லாம் எப்படி செய்யப்படுகிறது என்பதை மக்களுக்குத் தெரிவித்து விடுபவராகவும் இருக்கக் கூடியவர்தான். அத்தகைய ஒரு மனிதர்தான் திரு. பிரேமானந்த்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனாலும், பயண வசதிகளும் தொடர்பு வசதிகளும் எவ்வளவுதான் அளவுகடந்து அதிகரித்திருந்தாலும், எத்தனை பேரிடம் அவரே நேரடியாகப் போக முடியும்? சொல்லப்படும் சொல்லுக்கு சக்தி அதிகம் என்பார்கள். உலகம் முழுவதிலும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களிடம் அந்த சக்தியை அவர் செயல்படுத்தியிருக்கிறார். ஆனால் கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். இவர்களுடன் எழுத்துமூலமாக மட்டுமே தொடர்பு கொள்ள முடியும்.

இந்நிலையில் ***150 அருஞ்செயல்களின் செயல்முறை விளக்கமாகிய இந்நூலைப்*** பிரேமானந்த் தன் சொந்த பாணியில் எழுதி வெளியிட்டுள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த அருஞ்செயல்களில் பல, வாசகர்களுக்கு ஏதாவது ஒரு நிலையில் திகைப்பு உண்டாக்கக்கூடும். ஒரு சாமியார் செய்வதை நீங்களும் செய்ய முடியும்; அப்படியானால் அவரது காலடியில் நீங்கள் விழுந்து பணிய என்ன தேவை வந்தது?

இந்த அருஞ்செயல்களை உங்களால் செய்துகாட்ட முடியும் என்பதை வைத்து மற்றவர்களை நீங்கள் ஏமாற்றப் போவதில்லை. இயற்கையை மீறிய ஆற்றல்கள் உங்களுக்கு இருப்பதாக மற்றவர்களிடம் நீங்கள் பொய் சொல்லப் போவதில்லை. நீங்கள் சொல்லும்/செய்யும் எதையும் வெறும் நம்பிக்கையின் அடிப்படையில் கேள்வி கேட்காமல் மற்றவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்றும் நீங்கள் சொல்லப் போவதில்லை. இந்த அளவு நேர்மையுடன் கடவுள் அவதாரங்களால் நடந்து கொள்ள முடியாது!

எல்லா வயது வாசகர்களும் இந்நூலைப் படித்துத் தெளிவார்கள் என உறுதியாக நம்புகிறேன். மேலும் எங்காவது ஓர் அருஞ்செயல் தப்பித்தவறி நிகழ்ந்தால் (எப்போதுமே அருஞ்செயல் நிகழ்ந்ததாக பேசத்தான் படுகிறதே தவிர ஒருபோதும் அது நிகழ்வதே இல்லை என்பதை நினைவில் கொள்க) அதற்கு ஓர் இயற்கைக் காரணம் இருந்தாக வேண்டும்.

அருஞ்செயல் ஆற்றியதாகக் கூறும் மனிதர் இயற்கையை மீறிய சிறப்பு ஆற்றல் தம்மிடம் இருப்பதாகக் கூறுவது பொய்யே. இந்நூலைப் படிக்கும் வாசகர்கள் இத்தகைய முடிவுக்கு வருவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்நூலை எழுதி வெளியிட்டதற்காக திரு. பிரேமானந்து அவர்களை வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

CCMB
*ஐதராபாத் - 500 007*
*நாள் : 01 /08 / 1992*

P.M. *பார்கவா*
CSIR சிறப்பு உறுப்பினர்
(முன்னாள் இயக்குநர், CCMB)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1

# அறிவியலா? அருஞ்செயலா?

கடவுளை நம்பவோ நம்பாதிருக்கவோ இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இந்த உரிமைக்கும் ஒரு வரையறை, கட்டுப்பாடு இருக்கிறது:

தனியாளின் நம்பிக்கையும் அதன் அடிப்படையிலான நடவடிக்கையும், மற்றவர்களின் நம்பிக்கைகளுக்கோ நடவடிக்கைகளுக்கோ ஊறுவிளைவிக்கக் கூடாது அதுவே அந்த வரையறை.

கடவுள் - செம்மையானவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், அகிலம் முழுவதும் படைப்பவர் - காப்பவர் - அழிப்பவர் என்று ஒவ்வொரு மதமும் கருதுகிறது.

கடவுள் நம்பிக்கை என்பது வாழ்க்கையைப் பற்றிய ஒரு தத்துவப் பார்வை மட்டுமே. ஆனால் மக்களின் கடவுள் நம்பிக்கையைப் பயன்படுத்தி மதங்கள் மக்களைச் சுரண்டுகின்றன.

உலகிலேயே மிகவும் பண்பட்ட தத்துவங்களில் நான்கு இந்தியாவில் உள்ளன. துவைதம், விசிட்டாத்வைதம், அத்துவைதம், நாத்திகம் என்பவை அவை.

பயந்த சுபாவம் உள்ளவர்களுக்கு **துவைத தத்துவம்** தேவைப்படுகிறது. இவர்களுக்கு, கண்ணுக்கு புலப்படக்கூடிய ஒரு கடவுள் சிலை தேவை. அது தம்மைப் பாதுகாக்கும் என அவர்கள் நம்புகிறார்கள். இவர்களைவிட சற்றே வளர்ச்சி அடைந்த மக்களுக்கானது **விசிட்டாத்துவைதம்**. இவர்களுக்குப் பலமும் துணிவும் தர கண்ணுக்குத் தெரியும்படியான உருவங்கள் தேவையில்லை. ஆபத்துக் காலத்தில் தமக்கு உதவிக்கு வர முடியக்கூடிய இயற்கை கடந்த ஒரு மெய்ப்பொருளை இவர்கள் தம் மனத்தளவில் உருவப்படுத்திக் கொள்ள முடிகிறது.

மூன்றாவது தத்துவமாகிய **அத்துவைதம்**, 'நாமே கடவுளாகத்தான் இருக்கிறோம்' (அகம் பிரம்ம அஸ்மி) - என்னும் உறுதிப்பாட்டினால் துணிவும் அஞ்சாமையும் நிரம்பியவர்களுக்கானது.

இப்படிப்பட்ட கற்பனையான மனநிலையுடன் தன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கும் மத நம்பிக்கையாளர்/ ஆத்திகர், இறுதியாக தமக்கே உரிய வரம்புகளைக் கண்டு கொள்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்ததான நாத்திகம் மற்றும் மனிதநேய தத்துவத்திலோ ஒருவர் தன் வரம்புகளை அறிந்து கொள்கிறார். அதேசமயம், சிக்கல்களைப் பகுத்தறிவு முறையில் அணுகுவதன் மூலமாக மனித முன்னேற்றத்துக்காக உழைக்கிறார்.

கடவுள் நம்பிக்கை மனித இனத்துக்கு ஒரு சிக்கல் அல்ல. மாறாக மதம்தான் மக்களுக்கிடையில் கருத்து வேற்றுமைகளை உருவாக்குகிறது; சமுதாயத்தின் அமைதியையும் இணக்கத்தையும் நாசமாக்குகிறது; மனிதகுல முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது.

கடவுளுடைய அவதாரம் எனத் தம்மைப் பற்றி தாமே உரிமை கோரும் ஒரு சிலர் இருப்பதுதான் தீங்கான செய்தி. தியானம் மூலமோ குண்டலினி யோக நடைமுறைமூலமோ தாம் சித்திகளை (இயற்கை கடந்த ஆற்றல்களை)அடைந்திருப்ப தாகவோ கடவுள்களால் தாம் ஆட்கொள்ளப் பட்டிருப்ப தாகவோ இவர்கள் உரிமை கோருகிறார்கள்.

ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றைப் படைக்கும் அற்புத ஆற்றல்களும் அஷ்ட சித்திகளும் (இயற்கை கடந்த எட்டுயோக ஆற்றல்களும்) தமக்குக் கைவரப் பெற்றிருப்பதாகவும் விளம்பரப் படுத்துகிறார்கள். இதன்மூலம் எளிய மக்களை ஏமாற்றிச் சுரண்டுகிறார்கள்.

'அருஞ்செயல்' (அற்புதம்) என்பது, இயற்கை விதிகளால் விளக்கப்பட முடியாதது. எனவே அது இயற்கை கடந்த மூலத்தைக் கொண்டதாகக் கொள்ளப் படுகின்றது. அல்லது 'கடவுள் செயல்' எனக் கற்பிக்கப்படுகிறது.

'இயற்கை கடந்தது' என்பது உலகுக்கு அப்பால்பட்டு ஒரு இருத்தல் நிலவுவதாக குறிப்பால் உணர்த்துகிறது. இதற்கு இயற்கைச் சக்திகளைக் காரணமாகக் கூறமுடியாது; இறை ஆற்றலின் நேரடிச் செயல்பாட்டையே காரணமென கற்பிக்க முடியும்.

'மறைபொருள்' (புதிர்/ மர்மம்) என்பது இயற்கையில் உள்ள விளக்கமுடியாத நிகழ்வாகும். நமக்கு எவ்வித விளக்கமும் கிடைக்கப் பெற்றிராத நிகழ்வாகும். அற்புதங்கள்/ அதிசயங்கள்/ கடவுளின் செயல் என ஆதியில் மக்கள் எண்ணிய இயற்கை நிகழ்வுகள் பலவும், இப்போது இயற்கை விதிகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுவிட்டன, எனவே அவை அதிசயங்கள் அல்ல, மறைபொருள்கள் அல்ல என்றாகியுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'படைப்பு' என்றால் ஒன்றுமின்மையில் (சூனியம்) இருந்து ஒன்றை உருவாக்குவதாகும்.

'உருவாக்கம்' (உற்பத்தி) என்றால் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி ஒன்றை உருவாக்குவதாகும்.

'ஒன்றுமின்மை' என்று ஒன்று இல்லை 'ஒன்றுமின்மை'யில் இருந்து ஒன்றையும் உருவாக்க முடியாது. எதை உருவாக்கு வதற்கும் அதற்குரிய மூலப்பொருள்கள் வேண்டும்.

பொருள்திணிவும் ஆற்றலும் ஒரே நாணயத்தின் இருபக்கங்கள். அவற்றைப் படைக்கவோ அழிக்கவோ முடியாது.

இப்படித்தான் *'ஆற்றலின் அழியாமை விதி'* கூறுகிறது. ஆனால் ஒன்றுமின்மையிலிருந்து எதையும் படைக்கத் தம்மால் கூடும் எனப் பீற்றிக் கொள்கிறார்கள், இந்த அவதாரங்கள்!

பொருளை ஆற்றலாகவும் ஆற்றலை பொருளாகவும் உருமாற்றமுடியும் எனச் சார்பியல் விதி கூறுகிறது. நாம் காணும் மாற்றங்கள் எல்லாம், இயற்பியல் / வேதியியல் எதிர்வினைகள் மூலம் (பொருளும் ஆற்றலும்) ஒன்று மற்றதாக உருமாறுவதன் விளைவே ஆகும்.

இவை அழித்தலோ படைத்தலோ ஆகாது என அக்கொள்கை போதிக்கிறது. ஆனால் அவதாரங்களும் /சாமியார்களும் தம் மன / ஆன்மீக சக்திகள் மூலம் ஒன்றை மற்றொன்றாக உருமாற்ற முடியுமென உரிமை கொண்டாடுகிறார்கள்.

தம் மனஆற்றல் மூலம், ஒன்றுமின்மையில் இருந்து எதை வேண்டுமானாலும் படைக்க முடியும், ஒன்றை மற்றொன்றாக உருமாற்ற முடியும் எனக்கூறும் இந்த அவதாரங்களின் கூற்றுகள், இயற்கையின் விதிகளுக்கு எதிராகவே உள்ளன.

இந்த சாமியார்களின் உரிமைகோரல்கள் பொய். அப்பாவிப் பொதுமக்களைச் சுரண்டுவதற்காக அவர்களை ஏமாற்றும் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சாமியார்கள் கூறுவது சரி என்றால், ஆற்றல் காப்பு விதி மற்றும் சார்பியல் கொள்கையை மாணவர்களுக்குக் கற்பிப்பதைக் கல்வித்துறை விட்டுவிட வேண்டும்.

சூனியத்தில் இருந்து எதை வேண்டுமானாலும் தம்மால் படைக்க முடியும் எனச் சாமியார்கள் கூறுவதை நெருங்கி ஆராய்வோம் ; இதுவரை அவர்கள் படைத்துக் காட்டிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருள்கள் எல்லாமே ஏற்கனவே நமது உலகத்தில் இருக்கிற பொருள்கள்தாம். மேலும் அவர்கள் தம் கைகளிலோ உடலிலோ ஒளித்து வைத்துக்கொள்ள முடிகிற பொருள்களாகவே அவை உள்ளன.

தம் கைகளிலும் உடலிலும் ஒளித்து வைக்க முடியாத பொருள்களை - காலி பாத்திரங்கள், பெட்டிகள் முதலியவற்றில் இருந்தோ, தம் அங்கிகளுக்கு அடியிலிருந்தோ, பூமிக்குள்ளிருந்தோ மண்ணுக்குள் இருந்தோ எடுத்துக் காட்டுகிறார்கள்.

ஒரு விண்கலம், விமானம், இரயில், மோட்டார் வாகனம், சைக்கிள், கட்டிடம்... இவற்றை அவர்கள் படைத்ததில்லை. ஏனென்றால் இத்தகைய பொருள்களை ஒளித்துவைக்க முடியாது!

அறிவியலின் விளைவுகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டாலும், எந்த அவதாரமும் இதுவரைக்கும் ஒரு குண்டூசியில் இருந்து விண்கலம் வரை எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பையும் செய்ததில்லை.

*அவர்களிடம் முன்வைக்கப்படும் முதல் கேள்வி : சூனியத்தில் இருந்து எதையும் படைக்க முடியுமென்றால், மோசடிக்கு இடமற்ற சூழ்நிலைகளின்கீழ் தம் கோரிக்கைகளை புலனாய்வுக்கு உட்படுத்த அவர்கள் ஏன் முன்வருவதில்லை?*

தம் அருஞ்செயல்கள் மனிதப் புரிதலுக்கு அப்பால்பட்டவை என்றும், அறிவியல்முறைக்கும் அப்பால்பட்டவை என்றும், தம்மைப் பிறர் ஆய்வுசெய்வதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர்கள் பதிலளிக்கிறார்கள்.

நமது உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒருவரான **வி.ஆர். கிருஷ்ண *அய்யர்*** பின்வருமாறு கேட்டார் : "யேசு கிறிஸ்து கடவுளின் மகன்தானா இல்லையா என்று எப்படி நீங்கள் கேட்கமுடியும்?" அவர் கடவுளின் மகன்தான் என்று நீங்கள் நம்பமுடியும் அல்லது ஒதுக்கிவிட முடியும். (ஆனால் கேள்வி கேட்க முடியாது). மதத்திலும் கடவுளின் விசயத்திலும் கேள்விக்கு இடமில்லை. கேள்விக்கிடமற்ற விசுவாசத்துக்கே இடம்".

'விசுவாசம்' என்னும் சொல்லுக்கு தரப்படும் வரையறை இதுதான் : நீங்கள் அனுபவித்திராத ஒன்றை நம்புவதே விசுவாசம்.

இத்தனைக்கும் இந்த சாமியார்கள் மனிதப்பிறவிகள்தாம். நாம் எல்லாரும் பிறக்கும் அதேவிதத்தில்தான் இவர்களும் பிறந்து, வாழ்ந்து சாகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த இயற்கை கடந்த சக்திகள் உண்மையாகவே மனித புரிதலுக்கு அப்பால்பட்டவை என்றால், இவர்கள் மட்டும் இந்த சக்திகளை எப்படி அடைந்தார்கள்? இந்த சக்திகளை இவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்றால், இந்த சக்திகள் இவர்களின் உடன்பிறந்த பண்பு என்றால், எப்படி மனித புரிதலுக்கு அப்பால்பட்டவையாக அவை இருக்க முடியும்?

தம்மைத்தாமே அவதாரங்கள் என்றும் சுவாமிகள் என்றும் அழைத்துக்கொள்ளும் இவர்களிடம் இயற்கை கடந்த சக்திகள் இருக்கலாம் என்பதை ஒருவாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்.

இன்னொரு ஆளும் அவர்களைப்போலவே வெறுமையிலிருந்து பொருள்களைப் படைக்கும் செயலைச் செய்து காட்டும்போது, கை அசைப்பையும், வேதிப்பொருள்கள் - இயந்திர சாதனங்கள் - உடலியல் ஆகியவற்றையும் பயன்படுத்தி அதே விளைவை நிகழ்த்திக்காட்டும் போது, அந்த சாதாரண மந்திரவாதியின் முறையிலிருந்து வேறுபட்டது தமது முறை என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய அறக் கடமை நிச்சயமாக அவர்களுக்கு இருக்கிறது.

தம் கடவுள் நிலை பற்றிய உரிமைகோரலுக்குச் சான்றாக தம்மை அவர்கள் சோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்.

விசாரணைக்குத் தம்மை அவர்கள் உட்படுத்திக் கொண்டபிறகு மட்டுமே, தம் செயல்கள் வெறும் தந்திரங்கள் அல்ல என்பதை ஐயத்துக்கு இடமின்றி மெய்ப்பித்த பிறகு மட்டுமே,அறிவியலுக்கும் மனித புரிதலுக்கும் அப்பால்பட்டவை அவர்களின் ஆற்றல் என்பதை ஏற்க முடியும்.

### விரல் அசைவுகளை மூடிமறைக்கவே கைஅசைப்பு

மிகவும் உயர்ந்த செல்வாக்கைப் பெற்றுள்ள, ‘சத்திய சாயிபாபா’ என்று தன்னை அழைத்துக்கொள்கிற ஒரு சாமியாரின் உடல் அசைவுகளைப் பரிசீலிப்போம். அதிகாரவர்க்கம், சட்ட அமுலாக்க பிரிவுகள், நிதித்துறை, சுங்கத்துறை, நீதித்துறை, மாநில-மத்திய அமைச்சரவைகள், மேட்டுக்குடிகள், செல்வாக்கு படைத்தோர் ஆகியோர் மத்தியில் எல்லாம் இவருக்குச் சீடர்கள் இருக்கிறார்கள்.

சூனியத்தில் இருந்து எதையும் படைக்கவும், ஒருபொருளை இன்னொன்றாக உருமாற்றவும்; குணப்படுத்தவே முடியாத நோய்களைக் குணமாக்கவும், இறந்தோரை உயிர்ப்பிக்கவும் கூட தன்னால் முடியும் என்றும், இதுவரை மனிதர்கள் கற்பனையே செய்திராத அனைத்து சக்திகளும் தனக்கு உள்ளன என்றும் அவர் உரிமை கோருகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவையெல்லாம் தன் பிறவிசக்திகள் என்று அவர் கூறிக் கொள்கிறார். எல்லா கடவுள்களும் ஒன்றிணைந்த ஒரு அவதாரமே தான் என்று தன்னைப் பற்றி சொல்லிக் கொள்கிறார் : அதாவது, **"சர்வ தைவத்ய ஸ்வரூபம்"!**

தன் விருப்பஆற்றலாலேயே உலகத்துக்குள் (இதுவரை இல்லாத புதிய) பொருள்களை கொண்டுவர தன்னால் கூடும் என சத்ய சாயிபாபா கூறிக்கொள்கிறார்.

உண்மையில் அவர் செய்வது என்னவென்றால், ஒரு மந்திரவாதியைப் போலவே கைகளை அசைத்து, திருநீறு, தங்கம், வைரம், காகிதப்பணம், சிலைகள் முதலிய பொருள்களை "தோற்றுவிக்க" மட்டுமே செய்கிறார்.

விபூதியை படைப்பது குறித்து அவர் கேட்கும் கேள்வி : வட்டமாக கை அசைக்கும்போது கீழே பார்த்த நிலையிலிருக்கும் உள்ளங்கையில் இருந்து விபூதியைக் கீழே கொட்டாது நிறுத்த முடியுமா? திருநீறுதான் தூள்வடிவில் உள்ளதே? இதுவே, அதை அவர் மெய்யாகவே படைத்துக் காட்டுகிறார் என்பதற்குப் போதிய சான்று இல்லையா?

## செயல்விளக்கம் - 1

**சாயிபாபா பாணியில் திருநீறு வருவித்துக் காட்டுதல்.**

தன்னைத்தானே அவதாரம் என விளம்பரப்படுத்திக் கொள்ளும் சாயிபாபா செய்வதுபோலவே சாதாரண மந்திரவாதியும் திருநீறு வருவித்துக் காட்டுகிறார்.

அவரது உள்ளங்கை கீழ்நோக்கிஇருக்க, கையை இரண்டு மூன்று முறை வட்டவடிவில் அசைக்கிறார். பின் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் அவரது விரல் நுனிகளில் இருந்து திருநீறு கொட்டுகிறது. இந்த திருநீற்றின் தரமும் மணமும்கூட, சாயிபாபா வழங்கும் திருநீற்றின் தரத்திலேயே உள்ளது. ஏனெனில் இந்த சாமியார் திருநீறு வாங்கும் அதே கடையிலிருந்துதான் இந்த மந்திரவாதியும் திருநீற்றை விலைக்கு வாங்குகிறார்!

**தேவையான பொருள்கள் :** வாசனை விபூதி, அரிசிச் சோறு வடித்ததில் இருந்து பெறப்பட்ட கஞ்சி, விபூதியை வில்லைகளாக் தயாரித்துக்கொள்ள ஒரு தட்டு.

**செய்முறை :** வாசனைத் திருநீற்றை அரிசிச் கஞ்சி நீரில் கலந்து, சிறு வில்லைகளாக செய்து காயவைக்கவும். இந்த வில்லையைக் கட்டை விரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் மறைத்துக் கொள்ளவும். விரைப்பாக வைக்காமல் கையைத் தளர்த்தி வைத்துக்கொள்ள பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விபூதி வில்லையை பார்வைக்குப் படாமல் விரலிடுக்கில் ஒளித்துவைத்திருக்கும் நிலையிலேயே வணக்கம் சொல்லவும், கைகுலுக்கவும், காப்பிகுடிக்கவும், சாப்பிடவும், எழுதவும்கூட விரல்களையும் கைகளையும் பயன்படுத்திக்கொள்ளப் பழகியிருக்க வேண்டும். பின் கைகளைச் சுழற்றுங்கள். உள்ளங்கை கீழேபோகட்டும். விரைந்த அசைவில் விபூதிக் குளிகையை விரல் நுனிகளுக்குக் கொண்டுவாருங்கள். பொடித்தூளாக நுணுக்குங்கள். பக்தரின் கைகளில் உதிருங்கள்.

மந்திரவாதியின் இதே கைசால முறையைச் சாமியார் பயன்படுத்துவதில்லை என்றால் பின் ஏன் அவர் சோதனைக்கு உட்பட மறுக்கிறார்? தனது முறை கைச்சால வித்தை அல்ல என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி அவர் மெய்ப்பிக்க வேண்டாமா? எதைக் குறித்து அவர் அஞ்சுகிறார்? தான் அம்பலப்பட்டு விடுவோம் என்றா?

மோசடிக்கு இடம்தராத நிலைகளின் கீழ், அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி, அவரது சக்திகள் அறிவியலுக்கும் மனித புரிதல்திறனுக்கும் அப்பால் பட்டவை என மெய்ப்பிக்க மட்டுமே கைத்திற முறையைத் தாம் கையாளவில்லை என்பதை அவதாரங்கள் முதலில் மெய்ப்பித்தாக வேண்டும்.

இந்த வித்தையை அம்பலப்படுத்த, மனிதர் தம் கைகளை வட்டமாக ஆட்டி, அதேபோது தூள் செய்வதற்காக வில்லையை விரல்களுக்குக் கொண்டுவரும் நேரம் பார்த்து கையைத் தட்டிவிட்டால் போதும், வில்லை கீழே விழுந்து, அவர் அம்பலப்படுவார்.

## கைச்சால வித்தை

கைச்சாலம் என்றால், தம் செய்முறையைப் பிறர் ஊகிக்க முடியாத அளவுக்கு மிக வேகமாக வித்தைளைச் செய்யும் திறன். இந்த காரணத்துக்காகத்தான் கைகளையும் உடலையும் அசைக்கிறார்கள். பொருள்களைப் படைத்துக் காட்டுதல், பொருள்களைத் தோற்றுவித்தல், மறையவைத்தல், ஒன்றை இன்னொன்றாக உருமாற்றுதல் முதலிய சாலவித்தைச் செயல்பாட்டை, வேடிக்கை பார்ப்போரின் பார்வையிலிருந்து மறைக்க இந்த உடலியக்கம் உதவுகிறது.

❋



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல்விளக்கம் - 2

### தீப்பெட்டியை மறையவும் தோன்றவும் செய்தல்.

**தேவை :** தீப்பெட்டி.

**செய்முறை :** கைகள் மற்றும் விரல்களின் அசைப்பினால் ஒரு பொருளைத் தோற்றுவிக்க, மறைக்க, மற்றொரு பொருளாக மாற்றமுடியும். உள்ளங்கையில் சிறுவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் ஒரு தீப்பெட்டியைப் பிடித்துக் கொள்ளவும். கையைச் செங்குத்தாக அசைத்தபடி, உள்ளங்கையில் தீப்பெட்டி பார்வையாளர் பக்கம் இருக்க, தீப்பெட்டியை விரல் நுனிகளுக்குத் தள்ளவும்.

அதேசமயத்தில் மோதிர விரலையும் நடுவிரலையும் பயன்படுத்தி, கையின் மறுபக்கத்துக்குத் தீப்பெட்டியைத் தள்ளி, சிறுவிரல் மற்றும் சுட்டுவிரல் பக்கவாட்டுகளால் அதைப் பிடித்துக் கொள்ளவும்.

இப்போது தீப்பெட்டியை நீங்கள் மறையச் செய்து விட்டீர்கள். கையின் அசைவு காரணமாக விரல்களின் இயக்கத்தைப் பார்வையாளர்களால் கண்டுபிடிக்க முடிவதில்லை. தீப்பெட்டி என்ன ஆனது என்பதையும் புரிந்துகொள்ள முடிவதில்லை. வெறும் உள்ளங்கையையே இப்போது அவர்கள் பார்க்க முடிகிறது. தீப்பெட்டி மாயமாய் மறைந்துவிட்டது!

***மறுபடியும் தீப்பெட்டியை தோன்றவைக்க :*** கையைச் செங்குத்து வசத்தில் அசைத்தபடி, மோதிரவிரல் மற்றும் நடுவிரல்களின் துணையுடன் தீப்பெட்டியை உள்ளங்கைப் பக்கம் கொண்டு வரவும். அதே நேரத்தில் சிறுவிரல் மற்றும் சுட்டுவிரலின் பக்கவாட்டுகளில் தீப்பெட்டியைப் பிடித்துக்கொள்ள வேண்டும். இப்போது, சாமியார்களும் அவதாரங்களும் பீற்றிக் கொள்வதுபோல, சூனியத்திலிருந்து ஒரு பொருளை (தீப்பெட்டியை) நீங்கள் தோற்றுவித்து விட்டீர்கள்!

அருஞ்செயல்களின் வரலாற்றில் **கை அசைப்பு, உடல் இயக்கம் இல்லாமல் எதையும் ஒருபோதும் சாமியார்கள் உருவாக்கியதில்லை.** மெய்யாகவே ஏதாவது ஒரு பொருளை அவர்கள் தோற்றுவித்துக் காட்டுவதானால் முதலில் தம் உள்ளங்கை வெறுமையாக இருப்பதை அவர்கள் காட்ட வேண்டும். கையையும் உடலையும் ஆட்டக்கூடாது. அசைக்காத அந்த வெறும் கையிலிருந்தே அவர்கள் ஒரு பொருளை தோற்றுவிக்க வேண்டும்.

இம்முறையில் எவரும் எதையும் தம் வெறும் கைக்குள் இருந்து தோற்றுவிக்க முடியாது. இந்நிலையில் மோசடிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழியில்லாத சூழ்நிலைகளின்கீழ் தம் கோரிக்கை சோதிக்கப்படுவதற்கு அவர்கள் சம்மதிக்க வேண்டும்.

## செயல்விளக்கம் - 3

**நோக்கம் :** கடல்பஞ்சுப் பந்துகள் மூலம் அஷ்டசித்திகள் கைவரப் பெறுதல்.

அவதாரங்கள் மற்றும் பகவான்களின் சாகசங்கள் பெரும்பாலானவற்றை நான்கு கடல்பஞ்சுப் பந்துகள்மூலம் செய்துகாட்ட முடியும். அவற்றில் ஒரு சாகசம், அந்த கடல்பஞ்சுப் பந்தை மிகவும் இலேசானதாக்கி வானத்தில் மறைந்து போகச் செய்வதாகும்.

அடுத்து, மறைந்துபோன பந்தை மிகவும் கனமானதாக, ஒரு உதவியாளரின் மூடிய கைக்குள் தோன்றச் செய்வது. ஒரு பந்தை விழுங்கி விட்டு பின் வயிற்றிலிருந்து அதை வெளியில் எடுப்பது. அடுத்து மூடிய கை மூலம் பார்வையாளரின் உடையிலிருக்கும் 'சிவப்பு' நிறத்தை எடுத்து ஒரு பந்தாக உருட்டி உதவியாளரின் மூடிய கைக்குள் பந்தை தோன்றச் செய்வது.

**தேவை :** கடல்பஞ்சுப் பந்துகள் நான்கு.

**செய்முறை :** உதவியாளராகச் செயல்பட ஒருவரை மேடைக்கு அழையுங்கள்.பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் ஒரு பந்தை மறைத்துவிட்டு பார்வையாளர்களுக்கு மூன்று பந்துகளை காட்டுங்கள்.

ஒரு பந்தை எடுத்து ஒளித்திருக்கும் பந்துடன் சேர்த்து அவற்றை ஒன்றாக அமுக்கி உதவியாளரின் கைக்கு மாற்றுங்கள். அவர் தன் கையை மூடியநிலையில், உள்ளங்கை கீழே பார்த்த நிலையில் அதை வைத்திருக்க வேண்டும்.

இன்னொரு பந்தை எடுத்து அது காற்றைவிட இலேசாக ஆவதுபோல் - வானத்தில் மறைந்தே விடுவதுபோல் பாவனை செய்யவும்.உண்மையில் அதை உங்கள் உள்ளங்கைக்குள் கட்டைவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் மறைத்துக் கொள்ளவும். பந்து மென்மெலும் கூடுதலாக கனப்பதுபோலவும் உதவியாளரின் மூடிய கை வழியாக உள்செல்வது போலவும் பாவனை செய்யவும். அவரது கையைத் திறக்க சொல்லவும். அதில் இரண்டு பந்துகளை கண்டு பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த இரண்டு பந்துகளையும் அவர் கையிலிருந்து எடுத்து மூன்றாவது பந்துடன் சேர்த்து அமுக்கி உதவியாளரின் கைக்குள் அவற்றை வைத்து, அப்படியே அவர் கையை - உள்ளங்கை கீழ்நோக்கிய வசத்தில் வைத்து - மூடிவிடவும்.

மூன்றாவது பந்தை எடுத்து, அதைத் தின்பதுபோல் பாவனை செய்து, மேலே சொன்னதுபோல உள்ளங்கைக்குள் ஒளித்துக் கொள்ளவும். மந்திர வார்த்தை போல உச்சரித்து கண்ணுக்குத் தெரியாமல் அதை உங்கள் வயிற்றிலிருந்து அவர் கைக்குக் கடத்தவும். அவர் தன் கையைத் திறக்கும்படி சொல்லவும். அதில் மூன்று பந்துகளைக் கண்டு அவர் திகைப்படைவார்.

பின் இந்த மூன்று பந்துகளையும் அவர் கையிலிருந்து எடுத்து நாலாவது பந்தையும் அவற்றுடன் சேர்த்து அமுக்கி அவர் கைக்குள் வைத்து மறுபடியும் அவர் கையை மூடி உள்ளங்கை கீழ்நோக்கி இருக்கச்செய்யவும்.

சிவப்பு ஆடை அணிந்துள்ள ஒருவரைக் கண்டுபிடிக்கவும். அதிலுள்ள சிவப்பைக் கண்காணாமல் எடுப்பதுபோலவும் அதைக்கொண்டு கண்ணுக்குத் தெரியாத ஒரு பந்தை செய்வதுபோலவும் மூடிய கைக்குள் அதை இடம் மாற்றுவது போலவும் பாவனை செய்யவும்.

பின் அவர் கையைத் திறந்து காட்ட சொல்லவும். நாலாவது பந்தை அங்கே கண்டு பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைவார்கள்! □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2

# புலன்கள் காட்டும் பொய்த்தோற்றம்

அவதாரங்களும் சாமியார்களும் சூனியத்தில் இருந்து பொருள்களைப் படைத்ததைத் தம் கண்ணால் கண்டதாகக் கூறும் பக்தர்கள் இலட்சக் கணக்கில் இருக்கலாம்; படைப்பெனவே தோன்றும் அதற்குச் சாட்சியம் கூறவும் அவர்கள் தயாராக இருக்கலாம். அதற்காக அவர்களின் சாட்சியத்தை அப்படியே உண்மை என எடுத்துக்கொள்ள முடியுமா? முடியாது.

ஏனென்றால் அந்த நிகழ்வை அதன் வேறுபக்கங்களில் இருந்து பார்க்க அவர்களால் முடிவதில்லை. மேலும், கவனமாக ஊகிக்க அவர்கள் தவறிவிடுகிறார்கள்.

ஏனெனில் பொருள்களைப் 'படைக்கும்' செயல், அதுபற்றி அவர்களிடம் முன்கூட்டியே அறிவு - விவரம் இல்லாத நிலையிலேயே நடந்துவிடுகிறது. அந்த செயல் மிகவும் விரைந்த நிலையிலும் திடீரென்றும் நடக்கிறது. பொருள் தோற்றுவிக்கப்பட்டதும்தான் பார்வையாளர் அதைப் பார்க்கிறார்.

மூளையின் உதவியுடன் மட்டுமே நமது புலன்உறுப்புகள் வேலை செய்கின்றன. பார்த்த காட்சி மூளையில் பதியப்படாதவரை ஒரு நிகழ்வைக் கவனிக்க முடிவதில்லை. நமது மூளை உண்மையில் எவ்வளவு விரைவாக வேலை செய்கிறது என்பதையும் நமது புலன்கள் எவ்வாறு பொய்த்தோற்றங்களை உருவாக்குகின்றன என்பதையும் பின்வரும் சோதனைகள் எடுத்துக் காட்டுகின்றன.

## செயல்விளக்கம் - 4

**நோக்கம் :** வேறொரு ஆள் கீழே விழச்செய்யும் பணத்தாளை உங்களால் பிடிக்க முடிவதில்லை.

**தேவை :** புதிய, மொடமொடப்பான, மடிக்கப்படாத, சுருக்கம் - கசங்கல் இல்லாத ஒரு ரூபாய்த்தாள்.

**செய்முறை :** ஒரு உதவியாளரிடம் ஒரு ரூபாய்த்தாளை அதன்முழு நீளமும் கீழே தொங்கும்படி அதன் உச்சியின் நடுவில், அவரது வலது கட்டை விரலையும் நடுவிரலையும் கொண்டு பிடிக்கும்படி சொல்லவும். அவரது இடதுகையின் சுட்டுவிரலையும் கட்டை விரலையும், தாளின் நடுவில் இருபுறமும் அதைத் தொடாதபடி வைத்துக் கொள்ளட்டும். தாளை அவர் விட்டுவிடும்போது, அது தரையில் விழாதபடி மற்ற கையைக்கொண்டு அவரால் எளிதாக அதைப் பிடித்து விட முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் அந்தத் தாளை முன்கூறிய முறையில் (உச்சியில்) நீங்கள் பிடித்துக் கொள்ளுங்கள். (நடுவில் அவர் விரல்கள் இருக்கும்). முன்னறிவிப்பு ஏதுமின்றி திடீரென அதை நீங்கள் கைவிடும்போது அவர் அதைப் பிடித்துவிடவேண்டும். அவரால் அந்த தாளைப் பிடிக்கவே முடியாது!

தானே அச்செயலைச் செய்தபோது அவரால் பிடிக்கமுடிந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால், வலது கைக்கு 'விட்டுவிடு' என்ற கட்டளையை அவரது மூளை அனுப்புகிற அதே கணத்திலேயே, இடது கைக்கு 'அதைப்பிடி' என்ற கட்டளையையும் அனுப்பிவிடுகிறது.

எனவே அந்த தாள் தரையில் விழும் முன்பே அதைப் பற்றிக்கொள்வதில் அவருக்கு எந்த சிரமமும் இருப்பதில்லை.

ஆனால் தாளை வேறொருவர் நழுவவிடும்போது மூளைக்கு அச்செய்தியை முதலில் கண்கள் அனுப்ப வேண்டி உள்ளது. அதன்பிறகுதான் மூளை 'பிடி' என்ற செய்தியை உங்களுக்கு அனுப்புகிறது.

இந்த மிகக் குறுகிய கால இடைவெளியில், அவரது மூளை தன் உத்தரவைக் கைக்கு திருப்பி அனுப்பும் ஒரு நொடியின் சிறுபகுதி நேரத்துக்குள் தாள் தப்பிவிடுகிறது.

இதுபோலவேதான், அற்புதங்களின்போதும் அவை நிகழ்ந்து முடிந்தபிறகுதான் அது நிகழ்ந்துவிட்டதை நீங்கள் அறிகிறீர்கள். எப்படி அது நடந்தது என்பதைக் கவனிக்க உங்களுக்குக் கைகூடுவதில்லை. மனத்தால் கட்டுண்ட நிலையில் இருக்கும் நீங்கள் ஒரு அருஞ்செயல் நிகழ்ந்து விட்டதாகவே நம்புகிறீர்கள்.

காலையில் சூரியன் உதிப்பதையும் மாலையில் அது மறைவதையும் கண்பார்வை உள்ள எவரும் காணமுடியும். இதைக் கண்டோம் என நாம் உறுதியாக சாட்சியம் கூறமுடியும். ஆனால் உண்மையில் சூரியன் பூமியைச் சுற்றி வருவதில்லை. பூமிதான் தன் அச்சில் சுழன்றபடி சூரியனையும் சுற்றிவருகிறது. ஆனால் பார்வைக்குச் சூரியனே பூமியைச் சுற்றி வருவதாக தோன்றுகிறது.

இந்த பார்வை மயக்கத்தை ஓர் எடுத்துக்காட்டால் விளக்க முடியும்.ஒரு ரயில் நிலையத்தில் இரு ரயில்கள் இணைகோட்டில் நின்று கொண்டிருக்கின்றன. ஒரு ரயிலுக்குள் நீங்கள் ஒரு பயணியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் ரயில் நகரும்போது மற்ற ரயில்தான் நகர்வதுபோல் தோன்றுகிறது. மற்றதன் கதையும் அப்படியே.

புலன்கள் எதுவும் தாமாகவே இயங்குவதில்லை. ஒவ்வொரு புலன் உணர்வும் மூளையில் பதிவான பிறகு மட்டுமே புலன்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயங்குகின்றன. எனவே உண்மையில் நம் மனம் காண விரும்புவதை மட்டுமே நாம் காண்கிறோம்.

**காட்சி மயக்கம்**

நாம் பார்க்கும்போது என்ன நிகழ்கிறது? வெளி உலகில் இருந்து தகவல், ஒளி அலைகளின் வடிவில், கருவிழியில் இருக்கும் திறப்பு வழியாக விழித்திரை என்னும் மிகுந்த உணர்வுடைய ஒரு திரையில் வீழ்த்தப்படுகிறது. இந்தத் திரை கண்ணுக்குள்ளே முழுவதுமாக விரிந்து பரவியிருக்கும் உயிரணுக்களின் ஒரு அடுக்காகும். இந்த அணுக்கள் தம்மேல் குவிக்கப்படும் ஒளித் தூண்டல்களை நரம்புத் துலங்கல்களாக மாற்றி, பொருள்விளக்கம் பெறுவதற்காக பார்வை நரம்புகள் மூலம் அவற்றை மூளைக்கு அனுப்புகின்றன.

அதன் பிறகு மட்டுமே 'பார்த்தல்' என்பது உண்மையில் தொடங்க முடியும்; வண்ணம், இயக்கம், வெளி, வடிவம் போன்றவற்றைக் காணப்பெற முடியும்.

மண்டை ஓட்டின் பின்புறத்தில் பின் மண்டைக் கதுப்புகள் எனப்படும் பகுதி உள்ளது. இதுதான் பார்வையைப் பதிவு செய்யும் மூளைப் பகுதியாகும். உங்கள் தலையின் பின்புறம் தாக்கப்பட்டால் பார்வையிழப்பு ஏற்பட முடியும் - கண்கள் பழுதுபடாமல் கச்சிதமாக இருந்தாலும்கூட. பார்வை உணர்ச்சியின் திறவுகோல் இங்கேதான் இருக்கிறது.

பார்வை அனுபவத்தைப்பெற உங்கள் கண்களை நீங்கள் திறக்கக்கூட தேவையில்லை. கண்களைப் பயன்படுத்தாமலேயே மனத்தில் எதையும் உருவப்படுத்த உங்களால் முடியும். நீங்கள் கனவு, பிரம்மை, கற்பனைகளைக் காணும்போது இதுதான் நிகழ்கிறது.

கண்கள் பொய்த்தோற்றங்களை / மாயைகளை உண்மையிலேயே உருவாக்க முடியும் என்பதை பின்வரும் சோதனைகள் மெய்ப்பிக்கின்றன.

✲

**செயல்விளக்கம் : 5**

**நோக்கம் :** உங்கள் கையின் நடுவில் ஒரு துவாரத்தைப் பார்த்தல். இதற்கு இரு கண் பார்வையே - இரு கண்களின் கூட்டு முயற்சியே காரணம்.

**தேவை :** ஒரு பத்திரிக்கை அல்லது அட்டையைக் குழாய்போல் சுற்றி ஒரு ரப்பர் பேண்டால் கட்டிவிட வேண்டும். பேனா அல்லது பென்சில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*செய்முறை :* குழாயை வலது கையால் பிடித்துக்கொண்டு உங்கள் வலதுகண் மீது தொலைநோக்கி போல் பொருத்திக் கொள்ளவும். இப்போது உங்கள் இடதுகையை திறந்த நிலையில்,உள்ளங்கை உங்களைப் பார்த்து இருக்கும்படி நிறுத்தவும். அதன் ஓரம் குழாயைத் தொட்டபடி, உங்கள் திறந்திருக்கும் இடது கண்ணுக்கு நேரே இருக்கட்டும். இடது கண் இடது கையையும் தாண்டி பார்க்கவேண்டும். இரு கண்களின் பார்வையையும் தொலைவில் ஓடவிடுங்கள். இரு பிம்பங்களும் ஒன்றிணையும். ஒரே ஒரு பிம்பத்தை மட்டுமே நீங்கள் பெறுவதாகத் தோன்றும். குழாயின் துவாரம் உங்கள் கையில் இருப்பதாக தெரிகிறது. குழாயை ஒட்டி உங்கள் கையை முன்னும் பின்னுமாக நகர்த்தினால் ஒரு நிலையில் உங்கள் உள்ளங்கையின் நடுவில் துவாரத்தை காண்கிறீர்கள்.

இப்போது குழாயின் துவாரத்தின் வழியாக ஒரு பென்சிலை விடும்படி ஒருவரிடம் சொல்லுங்கள் . அந்த பென்சில் உண்மையாகவே உங்கள் கையின் வழியாக நுழைவதுபோலவே உங்களுக்கு தோன்றும்!

❋

## செயல் விளக்கம் : 6

**நோக்கம் :** நீட்டியிருக்கும் இரு விரல்களின் இடையில், இரு புறமும் நகங்கள் கொண்ட ஒரு விரல் மிதப்பதான மாயத்தோற்றத்தை உருவாக்கல்.

*செய்முறை :* உங்கள் இரு கைகளின் சுட்டு விரல்களையும் கிடைமட்டமாக, உங்கள் மூக்கின் முனைக்கருகில், விரல்கள் ஒன்றை ஒன்று தொடாதபடியும் நகங்கள் மேல்பக்கமாக பார்த்திருக்கும் படியும் இருத்துங்கள்.

இருகண்களாலும் நேராக தூரத்துச் சுவரில் ஒரு புள்ளியைப் பாருங்கள். அதேபோது உங்கள் இரு விரல்களின் நுனிகளையும் தெளிவற்றுப் பார்க்கவும் முடிய வேண்டும். பின் மெதுவாக விரல் நுனிகளை விலக்குங்கள். அப்போது இருபுறம் நகமுள்ள ஒரு விரல், உங்கள் இரு சுட்டு விரல்களுக்கும் இடையில் மிதப்பதைக் காண்பீர்கள்.

இது ஏனென்றால் உங்கள் பார்வை தூரத்தில் குவிந்திருக்கும் போது, அருகிலுள்ள பொருள்களின் வலது விழித்திரை பிம்பம் அதற்கு சரிநிகரான இடது விழித்திரை பிம்பத்துடன் சரியாக பொருந்துவதில்லை. இரு பிம்பங்களும் அல்லாடுவதால், ஒவ்வொரு விரல் நுனியையும் நீங்கள் இருமுறை பார்க்க நேர்கிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செவிப்புல மயக்கம்

ஒலி அலைகளைச் சேகரிக்கும் வகையில் நம் வெளிக்காது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒலி அலைகளை அது ஓர் அங்குல நீளமுள்ள ஒரு வாய்க்கால் வழியாக செலுத்துகிறது. தன்மேல் படும் ஒலி அலைகளுக்கேற்ப அதிரும் மெல்லிய சவ்வான செவிப்பறையை அந்த ஒலி அலைகள் அடைகின்றன.

இந்த அதிர்வுகள் நேரடியாக செவிப்பறையை அடுத்துள்ள நடுக்காதுக்கு போகின்றன. நடுக்காது என்பது மூன்றில் ஒரு அங்குலத்துக்கும் மேற்படாத அகலமும் ஆறில் ஒரு அங்குல ஆழமும் உடைய குழியாகும். அதற்குள் ஒன்றுக்கொன்று கீல் போன்ற அமைப்பினால் பொருத்தப்பட்ட மூன்று சிறு எலும்புகள் அடைத்துக் கொண்டுள்ளன. சுத்தி,பட்டறை, அங்கவடி என்று அவற்றுக்கு விசித்திரமான பெயர்கள் தரப்பட்டுள்ளன.

அவை மூன்றுமே கொல்லுப்பட்டறையில் இருக்கும் சாதனங்களை ஒத்து தோற்றமளிப்பதால் இப்பெயர்கள். மூன்றுக்கும் சேர்த்து சிற்றெலும்பு (ஆசிக்கிள்ஸ்) என்று பெயர்.

இவை செவிப்பறை கடத்தும் அதிர்வுகளை 22 தடவை உருப்பெருக்க வல்லவை. உட்காதில் அவை எதிரொலித்ததும் மூன்று எலும்புகளில் கடைசியான அங்கவடி, அதிர்வுகளை ஒரு திரவப்பாதையின் வழியாக நத்தை எலும்புக்கு கடத்துகிறது.

நத்தை வடிவமுள்ள இவ்வுறுப்பே செவிப்புலனின் தலைமை உறுப்பாகும். இங்கு மிதந்து கொண்டிருக்கும் நரம்பு அணுக்களை ஒலி அலைகள் அதிர்வுறுத்த, அவை நரம்புத் துலங்கல்களாக உருமாறி, மூளையின் கேள்வி மையங்களுடன் தொடர்புறும் போது, புரியக்கூடிய - பொருளுள்ள ஒலியாக ஆகின்றன.

மேலே விவரித்த முறைதான் ஒலியை நாம் கேட்பதற்கான முதன்மையான வழி. ஆனால், இதுதான் ஒரேவழி என்பதல்ல. எலும்புகளின் உராய்வு மூலம் ஒலியை நாம் கேட்க முடியும்.

பற்களைக் கடிக்கும்போது, கறி காய்களைச் சுவைக்கும்போது ஒலிகேட்பதை இதற்கான எளிய எடுத்துக்காட்டுகளாக சொல்ல முடியும்.

இன்னும் கூடுதல் அறிவியல்பூர்வத்துடன் சொல்வதானால், இசைக் கவையின் முனைகளை ஒரு கடினமான பொருள் மீது ஓங்கித்தட்டி, தாமதமின்றி அதன் கைப்பிடியைக் காதுக்குப் பின்புறமுள்ள எலும்பின் மீது அழுத்தமாகப் படச் செய்தாலும் ஒலியை உணரலாம் : ஒரு தொலைதூர ஒலி உங்களுக்கு கேட்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இசைக்கவையால் எந்த எலும்பை நீங்கள் தொடுகிறீர்கள் என்பதைப் பொறுத்து இந்த ஒலியின் அளவு வேறுபடும். உங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு உங்கள் பற்களை நீங்கள் கடித்தால் அதிகபட்ச எதிரொலிப்பு விளைவு கிடைக்கும்.

## செயல் விளக்கம் - 7

**நோக்கம் :** ஒலி அலைகளைக் குவியச் செய்து கேள்வி மயக்கத்தை தோற்றுவித்தல்.

ஒளியை ஒரு சமதளமான கண்ணாடி பிரதிபலிப்பது போலவே ஒலியை ஒரு சுவரோ ஒரு மலையோ ஒரு தடையோ பிரதிபலிக்கும்போது நமக்குக் கேட்கும் ஒலியையே எதிரொலி என்கிறோம்.

அதுபோலவே, குழி ஆடி ஒளிக்கதிர்களை ஒரு புள்ளியில் குவிப்பது போலவே, ஒரு குழி ஒலி ஆடியைக்கொண்டு ஒலி அலைகளை குவியச்செய்து ஒரு செவிப்புல பிரம்மையைத் தோற்றுவிப்பதும் சாத்தியமே.

**தேவை :** ஒரே மாதிரியான இரு சாற்றுத் தட்டுகள், ஒரு சிறு கடிகாரம்.

**செய்முறை :** ஒரே மாதிரியான சாற்றுத் தட்டுகள் இரண்டை எடுத்துக்கொள்ளவும். ஒரு மேசை அருகில் அமர்ந்து கொண்டு ஒரு தட்டை உங்கள் முன் உள்ள மேசைமேல் நிறுத்திப் பிடித்துக் கொள்ளவும். அதன் உள்பக்கத்தின் அடித்தளத்தில் இருந்து ஒன்று அல்லது இரண்டு அங்குலம் தள்ளி கடிகாரத்தை வைக்கவும். மற்ற தட்டை காதருகில் பிடித்துக்கொள்ளவும்.

இந்த மூன்று பொருள்களின் இடங்களையும் முன்னும் பின்னும் கவனமாக மாற்றினால் ஒரு நிலையில் கடிகாரத்தின் டிக் சத்தம் உண்மையில் நீங்கள் காதருகில் பிடித்திருக்கும் தட்டிலிருந்தே வருவதுபோல் கேட்கத் தொடங்குகிறீர்கள்.

கண்களை மட்டும் மூடிக் கொண்டால், எந்த கையில் கடிகாரத்தைப் பிடித்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் காதைக்கொண்டு மட்டுமே சொல்வதற்கு உங்களால் முடியாமல் போகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செயல் விளக்கம் : 8**

**நோக்கம் :** கையால் தொடும்போது புருசால் தேய்க்கும் பிரம்மை தோன்றுதல்.

**தேவை :** மென்மயிர்களைக் கொண்ட தட்டையான துணிபுருசு.

**செய்முறை :** ஒரு உதவியாளரின் பின்புறம் நின்றுகொண்டு உங்களுடைய ஒரு கையின் விரல்களால் அவர் முதுகில் அழுந்த தடவுங்கள். அதே நேரத்தில் அதனோடு ஒருமித்து மற்ற கையால் உங்கள் சட்டைமேல் புருசை தேய்த்து இழுங்கள்.

கடந்த கால அனுபவம், புருசைக் கண்ணால் பார்க்கிற போது ஏற்படும் தவறான அனுமானம் இவற்றின் சேர்க்கையால் குழம்பிப்போகும் அவரது மூளை; புருசை அது பார்க்கும் அக்கணமே - தன் முதுகில் கீழ்நோக்கி தேய்க்கப்படும் உணர்வு, காதுகள் மூலம் கேட்கப்படும் புருசு மயிர்களின் ஒலி ஆகியவற்றிலிருந்து பெறும் தகவலை ஒட்டுச் சேர்த்து, நீங்கள் அவரை உண்மையில் புருசால்தான் மேலிருந்து கீழ்நோக்கி வருடுவதாகவே அவருக்கு தெரிவிக்கின்றன.

இது நிகழ்வது ஏனென்றால், புருசைப் பார்த்ததன் மூலம் ஏற்கனவே அவர் கட்டுண்டுவிட்டார். அவர் முதுகைப் புருசால் தேய்ப்பதாக நீங்கள் சொல்லவும் செய்யும்போது அவரது மூளையில் ஏற்கனவே சேமிக்கப்பட்டிருக்கிற அனுபவம் அவரைத் தவறான முடிவுக்கு வரச் செய்து விடுகிறது.

## சுவை மயக்கம்

நான்கு அடிப்படை சுவை உணர்வுகள் இனிப்பு, புளிப்பு, உப்பு, கசப்பு ஆகியவை ஆகும். சில சுவைமொட்டுகள் நாக்கு, உள்நாக்கு, மேல்தொண்டை ஆகிய இடங்களிலும் அமைந்திருந்தாலும், நாக்குதான் சுவையை அறிவதற்கான மையமான இடமாகும்.

அதன் நுனிப்பாகமே இனிப்பை மற்ற பாகத்தைவிட நன்றாக உணர்கிறது. ஏனென்றால் இனிப்புச்சுவை ஏற்பிகள் மிக அதிக அளவில் அப்பகுதியிலேயே நிரம்ப உள்ளன. உப்பு,புளிப்பு சுவைகள் பக்கவாட்டுகளில் பேரளவில் உணரப்படுகின்றன.

பக்கவாட்டுகளின் ஓரத்தில் உப்புச் சுவையும் சற்று உள்தள்ளி புளிப்புச்சுவையும் நன்கு உறைக்கின்றன. மற்ற எல்லா சுவைகளும், இந்த நான்கு அடிப்படையான சுவை உணரிகளின்மேல் உணவு ஏற்படுத்தும் விளைவுகளின் சேர்க்கையே ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரம் போன்ற சுவை உணர்வுகள்கூட, சாதாரண நரம்பு முனைகளில் அப்போதைக்கு ஏற்படும் சிறிது மாறுபட்ட சுவைகளே ஆகும்.

உமிழ்நீர் இல்லாவிட்டால் எந்த சுவையையும் உணர்தல் இயலாது. பின் வரும் பரிசோதனையால் இவ்வுண்மையை மெய்ப்பிக்க முடியும்.

## செயல் விளக்கம் - 9

**நோக்கம் :** சர்க்கரைக் கட்டிகளோ உப்புப்படிகங்களோ சுவையின்றி தோன்றுதல்.

**தேவை :** சர்க்கரைக் கட்டிகள், உப்புப்படிகங்கள், சுத்தமான துண்டுத்துணி.

**செய்முறை :** முதலில் உங்கள் நாக்கை ஈரமின்றி துடைத்துக் கொள்ளவும். பின் நாக்கில் சர்க்கரைக் கட்டியையோ உப்புப்படிகத்தையோ வைக்கவும். நாக்கில் மீண்டும் நீர் ஊறும்வரை அது சுவையின்றியே காணப்படும். ஐஸ்கிரீம்கூட அது கரையும்வரை சுவையில்லாமலே தெரிகிறது.

## செயல் விளக்கம் - 10

**நோக்கம் :** உங்கள் சுவை அரும்புகளில் வழக்கத்துக்கு மாறான சுவைகள் தோன்றுதல்.

வாய் நிறைந்த இனிப்பினால் சுவை மொட்டுகள் களைத்துப் போகையில் நன்னீர்கூட உப்புக்கரிக்கிறது. வாய் நிறைந்த புளிப்புக் கரைசலால் சுவை அரும்புகள் களைத்த நிலையில் தண்ணீர் இனிக்கிறது.

ஒரேவிதமான காட்சித்தூண்டலுக்கு நீண்ட நேரம் தொடர்ந்து உட்படும் விழித்திரையின் உணர் அணுக்கள் களைத்துப்போவதைப் போலவே, சுவை அறியும் அணுக்களும் அதேவிதமான திரிபுணர்வுக்கு உள்ளாகின்றன.

**தேவை:** பூரித சர்க்கரைக்கரைசல், பூரித புளிக்கரைசல், நல்லநீர்.

**செய்முறை :** கெட்டியான சர்க்கரைக் கரைசலை வாய்க்குள் சில நிமிடங்கள் சுழற்றி, அதன் இனிப்புச்சுவை குறைந்து தெரிந்ததும் விழுங்கிவிடவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்ஒரு தம்ளர் நன்னீரை ருசிபார்க்கவும். நீங்கள் நம்பமுடியாதஅளவுக்கு உப்புச்சுவையுடையதாக அது தோன்றும். என்ன நடந்தது என்றால் இனிப்புசுவை உணரக் காரணமான சுவைமொட்டுகள் தற்காலிகமாக மந்தமாவதால் உப்புச்சுவைஉணரும் மொட்டுகளுக்கு கூடுதல் முனைப்பு கிடைத்து விடுகிறது. இதுபோலவே மிகவும் புளிப்பான நீரை வாய்க்குள் அலம்பிய பின் உடனடியாக உறிஞ்சும் நன்னீர் இனிப்பாக தோன்றுகிறது.

அன்றாட வாழ்வில் இதை நாம் அனுபவிக்கிறோம். இனிப்புகளை உண்டபின் ஒரு கோப்பை தேநீரோ காப்பியோ குடித்தால் அதில் இனிப்பு போதாததுபோல் உணர்கிறீர்கள். நெல்லிக்காயைத் தின்றபின் உடனே ஒரு தம்ளர் நீர் குடித்தால் அது இனிப்பாக இருக்கிறது!

## செயல் விளக்கம் - 11

**நோக்கம் :** ஆழ்ந்து சுவாசித்து விட்டு நீங்கள் மிகவும் விரும்பும் எந்த இனிப்புப் பண்டத்தின் சுவையின்மேல் கவனம் குவித்தாலும், அதன் சுவையை நீங்கள் உணரமுடியும்.

**தேவை :** சாக்கரின், பென்சில், தாள்.

**செய்முறை :** உங்கள் வலது சுட்டுவிரல்மீது ஒரு துளி சாக்கரினைத் தடவவும். பார்வையாளர்களில் இருந்து ஒரு உதவியாளரை அழைத்து, அவர் மிகவும் விரும்பும் பலகாரத்தின் பெயரை ஒரு தாளில் எழுதும்படி சொல்லவும். அந்த எழுத்தைச் சாக்ரின் தடவிய உங்கள் சுட்டுவிரலால் தொடவும்.

அவரைத் தன் கண்களை மூடி, தாளில் அவர் எழுதிய இனிப்புப் பண்டத்தின் சுவையை மனதில் நினைத்தபடி, நாக்கை வெளியில் நீட்டியபடி, ஆழ்ந்த மூச்சு வாங்கச் சொல்லவும். சில விநாடிகள் கழித்து இனிப்பின் பெயர் எழுதிய தாள்பகுதியை அவர் நாக்கின்மீது படச் செய்யவும். அந்தக் குறிப்பிட்ட பண்டத்தின் சுவையையே தான் சுவைக்க முடிவதைக் கண்டு அவர் வியப்படைவார்.

ஒருவர் தான் பெரிதும் விரும்பும் பண்டத்தின் சுவையின்மீது மனத்தைக் குவிக்கிறபோது இது நிகழ்கிறது. நாக்கின்மீது சாக்கரின் சுவை படுகையில் தான் நினைத்துக் கொண்டிருக்கும் இனிப்பின் சுவையையே தான் சுவைப்பதாக அவர் நம்புகிறார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மண மயக்கம்

நாம் முகரும் ஒவ்வொரு பொருளும், வாசனை மூலக்கூறுகளை வெளியிடுகிறது. இவை காற்றில் மிதந்து இரு மூக்குத் துளைகளின் மேற்புறம் அமைந்துள்ள கூருணர்வு கொண்ட நரம்பு முனைகளாக உள்ள சுமார் பத்து மில்லியன் முகர்வு அணுக்களை நோக்கி செல்கின்றன. ஒவ்வொரு மணமும், வெவ்வேறு அளவும் வடிவமும் கொண்ட மூலக்கூறுகளால் ஆனது.

இவை ஒவ்வொன்றும் உணரி / ஏற்பு அணுக்களின் வெவ்வேறு அமைப்பைத் தூண்டுகின்றன. இந்த அணுக்கள் ஒரு மின்னேற்றத்தைப் பயன்படுத்தி மூளையின் முகர்வுக் கதுப்புக்குத் தகவலை கடத்துகின்றன. அங்கு மணம் பதிவு செய்யப்பட்டு உணரப்படுகிறது.

மூக்குத் துளைகள் மூலமோ, தொண்டைக்குப் பின்புறத்தில் நாசித்துவாரத்துக்கு செல்லும் பின்புறப்பாதை மூலமோ ஒவ்வொரு பொருளையும் நாம் முகர்கிறோம். வறுத்த கறி, மீன் அல்லது கோசு முதலியவற்றின் சுவை ஏறக்குறைய முற்றிலும் அவற்றின் மணத்தையே சார்ந்துள்ளது.

அடுத்த தடவை இவற்றில் எதையேனும் நீங்கள் உண்ணும்போது, உணவை உங்கள் வாய்க்கு மிகஅருகில் கொண்டு வருமுன் உங்கள் மூக்கை மூடிக்கொள்ளுங்கள்.

பின் உணவை உங்கள் நாக்கில் வையுங்கள். அது சுவையற்று இருக்கும். உங்கள் மூக்கின் வழியாக காற்றை உள்ளிழுங்கள். இப்போது சுவை திரும்பிவிடும். இது ஏனென்றால் முகர்வுணர்வும், நாவுணர்வும் சேர்ந்தே உணவின் நறுமணமும் சுவையுமாக தெரிகிறது.

மேடைமேல் செய்து காட்டப்படும் ஒரு போலி வசிய வித்தை வருமாறு: வசியம் செய்பவர் தன்னிடம் வசப்பட வருபவரின் கண்களைக் கட்டுமுன் அவரிடம் ஒரு சிவப்பு ஆப்பிளையும், பச்சை ஆப்பிளையும் காட்டுகிறார். பின் அவர் தன் மூக்கையும் பிடித்துக்கொண்டு, அவரிடம் தரப்படும் ஆப்பிளின் சுவையிலிருந்து எந்த ஆப்பிள் தனக்குத் தரப்பட்டது என்பதை ஊகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். உண்மையில் வித்தை காட்டுபவர் ஒரு உருளைக்கிழங்குத் துண்டையே நீட்டுகிறார். வித்தைக்கு ஆட்படுபவர் உண்மையை உணரமுடிவதில்லை. அவரது பிழை அவரது கவனத்துக்கு கொண்டுவரப்படும் முன்பே உருளைக் கிழங்கை (ஆப்பிள் என நினைத்து) உண்மையிலேயே மென்று விழுங்கி விடுகிறார்!

www.tamilarangam.net

வாசனை எவ்வாறு சுவை உணர்வை பாதிக்க முடியும் என்பதற்கு மிகவும் சுவாரசியமான ஒரு எடுத்துக்காட்டு இதோ : ஒரு ஆப்பிளைத் தின்னும்போது, கெட்டுப்போய் நாற்றம் வீசும் பேரிக்காயை உங்கள் மூக்கின் அருகில் பிடித்துக்கொண்டால் ஆப்பிளின் மணத்தை பேரியின் நாற்றம் அமுக்கிவிடும். எந்த அளவுக்கெனில் நீங்கள் தின்னும் ஆப்பிளில் பேரியின் நாற்றம் வீசும்!

❋

## செயல் விளக்கம் - 12

**நோக்கம் :** ஒவ்வொருவரையும் அவரவர் பயன்படுத்தும் சோப்பின் மணத்தையே முகரச் செய்தல்.

**தேவை :** ஏதாவது ஒரு வாசனைத் தைல குப்பி, தாள் துண்டு, பென்சில்.

**செய்முறை :** ஏதாவது ஒரு வாசனைத் தைலத்தை உங்கள் சுட்டு விரலில் லேசாக பூசிக் கொள்ளவும். நீங்கள் ஆழ்ந்து மூச்சு வாங்கினாலும் அந்த மணம் மிக லேசாகவே புலப்படுமளவுக்கு குறைந்த அளவிலேயே அது பூசப்பட வேண்டும்.

ஒரு உதவியாளரை கூப்பிட்டு அவர் எப்போதும் பயன்படுத்தும் சோப்பின் பெயரை எழுதிக்கொள்ள சொல்லவும். அவர் தன் கண்களை மூடிக் கொள்ளும்படி சொல்லவும். அந்த சோப்பின் பெயரை இடைவிடாமல் அவர் தன் மனதுக்குள் உச்சரித்தபடியே ஆழமாக சுவாசிக்க வேண்டும்,சோப்பின் மணத்தின் மீது அவர் தன் மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும்.

ஒரு தாளை எடுத்துக் கொள்ளவும். அதன்மீது வாசனை பூசிய உங்கள் சுட்டுவிரலை வைத்தபடி மெதுமெதுவாக உதவியாளரின் மூக்கின் அருகே அதைக் கொண்டுவரவும். அவர் பயன்படுத்தும் சோப்பின் மணம் வருகிறதா என கேட்கவும்.

உள்மூச்சின் மூலம் உங்கள் விரலில் உள்ள மணத்தை அவர் ஏற்றதுமே, தான் பயன்படுத்தும் சோப்பின் மணமே வருவதாக அவர் கூறுவார்.

இந்த பிரமை தோன்றுவதற்குக் காரணம் என்னவென்றால், ஒவ்வொருவரும் தான் பயன்படுத்தும் சோப்பின் மணத்தின் மீது கவனத்தைக் குவிக்கிறார். அதுதான் எந்த ஒரு லேசான வாசத்தையும், தான் பயன்படுத்தும் சோப்பின் வாசம்தான் என்று அவர் சொல்லிவிட செய்கிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தொடு உணர்வு மயக்கம்

நமது தொடுஉணர்ச்சியில் ஐந்து செயல்முறைக் கூறுகள் உள்ளன. அவை மிக அடிப்படையான மட்டத்தில் வலி, வெப்பம், குளிர்ச்சி, அழுத்தம், புறப்பொருளால் தொடப்படும் உணர்ச்சி ஆகியவற்றைப் பதிவு செய்கின்றன.

உடலின் மேல்பரப்பின் எல்லா பகுதிகளில் இருந்தும் மூளைக்குச் சமிக்கைகளை அனுப்பும் சிக்கலான நரம்புத் தொகுதிகளின் உள்ளார்ந்த வேலை முறையையும், பின் அவற்றை நாம் உணர்வுள்ள உணர்ச்சிகளாகப் பெயர்த்துஅறிந்துகொள்ளும் முறையையும் முற்றாகப் புரிந்துகொள்வது என்பது, பிற புலன் உறுப்புகளைப் பற்றிய முழுமையான புரிதலைப் பெறுவதைப் போலவே, நம்மால் ஆகாத செயலே!

உங்கள் கையின் சுட்டுவிரலையும் நடுவிரலையும் கொண்டு உங்கள் மூக்கைத் தடவுங்கள். இப்போது உங்கள் மூக்கின் முனையை உணர்வீர்கள். சுட்டுவிரலின் உட்பக்கத்திலும் அதைத்தொட்ட நடுவிரலின் பக்கத்திலும் இருக்கும் தொடு உணர்ச்சி (ஏற்பு/ உணர்) நரம்புகளுக்குத் தரப்படும் தகவல் மூளைக்கு அனுப்பப்படுகிறது.

அங்கு அவை ஒன்று சேர்க்கப்பட்டு, நாமறிந்துள்ள மூக்கின் பிம்பத்தை ஒத்த ஒரு மனபிம்பம் உருவாகிறது. இப்போது அதே இருவிரல்களையும் குறுக்குவசத்தில் வைத்து மீண்டும் உங்கள் மூக்கைத் தடவவும்.

இந்தத் தடவை நீங்கள் இரண்டு மூக்குகளை உணர்வீர்கள்! ஏற்கனவே நன்கறிந்த பரிச்சயமான நரம்புத் தூண்டுதல் இப்போது இரண்டு பாதைகளின் வழியாக மூளைக்குப் பயணம் செய்வதாலேயே இந்த விளைவு ஏற்படுகிறது.

இருவிரல்களின் எதிர் பக்கங்களின் - அதாவது அவற்றின் வெளிஓரங்களின் - மீது ஏற்படும் பதிவுகளை நம் மனதில் ஒன்று இணைத்துப் பழகாததால் ஒரே மூக்காக பதிவாவது கடினமாக இருக்கிறது.

❋

### செயல் விளக்கம் - 13

**நோக்கம் :** குறுக்காக வைத்துக் கொண்ட சுட்டுவிரலாலும் நடுவிரலாலும் உருட்டப்படும் கோலிக்குண்டு இரண்டு குண்டுகளாகத் தோன்றுதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேவை :** இரண்டு கோலிக் குண்டுகள்.

**செய்முறை :** ஒரு மேசைமேல் ஒரு பெரிய கோலியை வைத்து, உங்கள் பின்னிய விரல்முனைகளின் இடையில் தொட்டு உருட்டிப் பாருங்கள். இரண்டு கோலிகள் இருப்பதாக உணர்வீர்கள். முதலில் ஒரு விரலையும் பிறகு மறு விரலையும் கோலி தனித்தனியாகத்தொடும் விதத்தில் உருட்டிப் பார்த்தால் அந்த உணர்வு மிக தெளிவாக புலப்படும். அப்போது உங்கள் கண்களை நீங்கள் மூடி இருத்தலும் தேவை.

ஒரு உதவியாளரைக் கொண்டும் இதை முயன்று பார்க்கலாம். அவரிடம் இரண்டு கோலிகளைக் காட்டிவிட்டு அவர் தம் கண்களை மூடிக் கொள்ளும்படி சொல்லவும். பின் அவற்றின் மீது அவரது குறுக்காக வைத்த விரல்களைப் படவைத்து, அவர் விரல் ஒரு குண்டின்மீது பட்டுக்கொண்டிருக்கும்போதே மற்ற குண்டை எடுத்து உங்கள் பைக்குள் போட்டுக் கொள்ளவும்.

எத்தனை குண்டுகள் இருப்பதாக அவருக்கு படுகிறது என கேட்கவும். "இரண்டு" என்பார். பின் அவர் கண்களைத் திறக்க சொல்லவும். ஒரு குண்டுதான் இருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியம் அடைவார்.

இது ஏனென்றால், சுட்டுவிரல் மற்றும் நடுவிரலின் வெளிப்பக்கம் இருக்கும் இரண்டு தனித்தனியான நரம்புகள் ஒரே நேரத்தில் மூளைக்கு தொடு உணர்ச்சியை அனுப்புகின்றன. அதனால் இரண்டு கோலிகள் இருப்பதான உணர்வை மூளை ஏற்படுத்துகிறது.

## செயல் விளக்கம் - 14

**நோக்கம் :** தலைமேல் வைத்த வட்டு எடுக்கப்பட்ட பிறகும் அது அங்கிருப்பது போலவே உணருதல்.

**தேவை :** கனமான அட்டையால் செய்யப்பட்டு, நடுவில் 7 அங்குல விட்டத்தில் துளையுள்ள ஒரு வட்டு, நாற்காலி.

**செய்முறை :** இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்த போலியான ஆவித் தொடர்பாளர்கள், பழிக்கஞ்சாத தம் தந்திரங்களில் "பருப்பொருளை மாயமாய் மறைவிக்கும்" (டி-மெட்டீரியலைசேசன்) தந்திரத்தையும் அடிக்கடி செய்து காட்டினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம் உடம்பிலிருந்து ஒரு பொருள் அகற்றப்பட்டு நீண்ட நேரம் ஆனபின்பும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அதை தொடர்ந்து உணரும் நம் உணர்ச்சியையே இது முற்றிலும் பொருத்துள்ளது.

ஒரு உதவியாளரைக் கூப்பிடுங்கள். அவர் கண்களை மூடிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளவும் அல்லது அவர் எதையும் பார்க்க முடியாதபடி அவர் கண்களைக் கட்டிவிடவும். உங்கள் முன்னால் உள்ள நாற்காலியில் அவரை உட்காருமாறு சொல்லவும்.

வட்டை எடுத்து அவர் தலையில் வைத்து சற்று அழுத்தவும். பின் அவரிடம் தெரிவிக்காமல் உடனடியாக அதை அகற்றிவிடவும். இனி அவர் தன் தலைமேல் அந்த வட்டு இருப்பதாகவே தொடர்ந்தும் உணர்வார். அது அங்கேதான் இருக்கிறது என அவர் எவ்வளவு நேரம் நம்பவேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வளவு நேரம் அவர் அவ்வாறே உணர்வார்.

தொடர்பாளர்கள் வட்டை தம் அங்கிகளுக்குள்ளோ அருகிலுள்ள நாற்காலியின் பஞ்சணைக் கடியிலோ மறைத்து விடுவார்கள். பல நிமிடங்கள் வரை அது மறைக்கப்பட்டுவிட்டதை அவர்களின் கவனத்துக்கு கொண்டுவர மாட்டார்கள். பின் உதவியாளரிடம் தம் தலையில் கைவைத்து வட்டு இருக்கிறதா என தடவிப் பார்க்கச் சொல்வார்கள். (வட்டு "மாயமாய் மறைந்து போயிருக்கும்"!)

❋

## செயல் விளக்கம் - 15

**நோக்கம் :** நெற்றியில் ஒட்டிய காசை அகற்றியபின்பும் அங்கேயே அது இருப்பதாக உணருதல்.

**தேவை :** நாற்காலி, லேசாக ஈரப்படுத்திய காசு.

**செய்முறை :** அமெரிக்காவிலுள்ள ஒரு மதப் பிரிவினரான 'ஷேக்கர்' களின் தீட்சைச் சடங்கில் இந்த முறைதான் பயன்படுத்தப்படுகிறது. ஒருவரை நாற்காலியில் பின்னுக்கு சாய்ந்து உட்காரும்படி கேட்டுக் கொள்கிறார்கள். லேசாக ஈரப்படுத்தப்பட்ட ஒரு நாணயத்தை அவர் நெற்றியின் மத்தியில் அழுத்தி ஒட்டவைக்கிறார்கள். அந்த இடத்துக்கு தன் கண்களை உயர்த்தி அவரால் அதை பார்க்க முடியாது.

முந்திய சோதனையில் சொன்னது போலவே, உடனடியாக அவருக்குத் தெரியாமல் அதை எடுத்து விடுகிறார்கள். இப்போது, நாற்காலியிலிருந்து நகராமல், கையால் நெற்றியைத் தொடாமல், நெற்றியில் இருக்கும் காசை உதறி எறியும்படி அவருக்கு சொல்லப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி உதறிவிட அவர் மேற்கொள்ளும் பயனற்ற முயற்சியானது 'உதறல்' (ஷேக்கிங்) உடலியக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதைக்கொண்டுதான் மூலமுதல் ஷேக்கர்கள் மதப்பரவசத்தில் உதறல் எடுக்கவும் உடல் நடுங்கவும் செய்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது!

**அகநிலை அனுபவங்கள் அற்புதங்களுக்குச் சான்றாகாது**

நமது புலன்கள் மாயத் தோற்றங்களுக்கு / காட்சிகளுக்கு / உணர்வுகளுக்கு உட்படக்கூடியவை என்பதை மேற்சொன்ன சோதனைகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான வேறு சோதனைகளில் இருந்தும் நாம் மெய்ப்பிக்க முடியும்.

எனவே, பக்தர்களின் / ஆத்திகர்களின் அகநிலை அனுபவங்களை, அவதாரங்கள் அல்லது சாமியார்கள் என்போரின் அருஞ் செயல்களுக்கு ஒரு ஆதாரமாக ஏற்றுக்கொள்ள முடியாது.

பக்தர்களின் மனங்கள் ஏற்கனவே சாமியார்களைப் பற்றிய இறை அச்ச உணர்வால் கட்டுண்டு உள்ளன. சாமியார்களின் ஆசிரமங்களில் நடத்தப்படும் சடங்குகள் பக்தர்களின் புலன்களை முற்றிலுமாக கவர்ந்திழுத்து விடுகின்றன. நறுமணப்புகைகளும், பூக்களும் முகர்வு உணர்ச்சிகளை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

அங்கு கூடியுள்ள அழகான ஆண்பெண்களின் மேல் கண்கள் ஈடுபட்டு விடுகின்றன. இனிமையாகப் பாடப்படும் பக்திப் பாடலோ, சந்தம் மாறாமல் ஓயாது ஒலிக்கப்படும் மணி ஓசையோ கேள்விப்புலனை தன்வயப்படுத்தி விடுகிறது. தொடு உணர்வும், மனமும், மனிதர்களை சந்திப்பதிலும் அவர்களுடன் பேசுவதிலும் ஈடுபடுகின்றன. பிரசாதம் என்று வழங்கப்படும் இனிப்பு - கார வகைகளில் சுவை உணர்வு ஈடுபட்டு விடுகிறது.

புலன்களின் இந்த குழப்பத்தில் - அமளியில் - மனம் ஈடுபட்டு விடும் போது, யதார்த்தத்தை உள்ளபடி காணும் அதன்திறன் மிகவும் தாழ்ந்த அளவில் இருக்கும்போது, அருஞ்செயல்கள் நிகழ்த்தப்பட்டு விடுகின்றன.

இத்தகைய சூழ்நிலையிலிருந்து அவர்கள் தரும் ஆதாரம் / சாட்சியம், நிச்சயமாக மிகவும் ஒருசார்பாகவும் திரிபடைந்துமே இருக்கிறது. மேலும் முன்பே அவர்களுக்குள்ள சார்பான கருத்துகளும், சாமியாரின் வசீகரமும் சேர்ந்து அவர்களின் பார்வையை பாதித்து விடுகின்றன.

எனவே, இயற்கைக்கு மீறிய சக்திகள் தமக்கு இருப்பதாக உரிமைகோரும் அவதாரங்களையும், சாமியார்களையும், அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி, ஏமாற்ற வாய்ப்புத்தராத சூழ்நிலைகளில் வைத்து பரிசோதனை செய்ய வேண்டும். அப்போதுதான் இவை மோசடிகள் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி மெய்ப்பிக்க முடியும்.

☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3

# கடவுள் - கருத்துகளின் பரிணாமம்

கடவுள்கள் மற்றும் அவர்களை மையமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட மதங்கள் ஆகியவற்றின் வரலாற்றை நாம் ஆய்ந்து பார்க்கலாம். மனித மனமானது அருஞ்செயல்களையும் விதி நம்பிக்கையையும் ஏற்றுப் பரப்பியதன் மூலமே இந்த கடவுள்களையும் மதங்களையும் படைத்தது என்பதைக் காணலாம்.

ஆளும் வர்க்கங்களும் புரோகித வர்க்கங்களும், அப்பாவி மக்களைத் தம் ஆட்சி அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்துவதற்காக அற்புதங்களையும் தலைவிதியையும் மக்கள் நம்பும்படி செய்தன.

புதிய கடவுள்களையும் புதிய மதங்களையும் பரப்பியவர்கள், பழைய கடவுள்களின் அருஞ்செயல்களை அம்பலப்படுத்தி அவற்றின் மோசடிகளை மெய்ப்பித்தார்கள். அதன் மூலம் ஆயிரக்கணக்கான கடவுள்களும் மதங்களும் மறைந்து ஒழிந்துள்ளன. இந்த உண்மைகளைத் தாண்டியும் ஒரு சில கடவுள்களும், மதங்களும் இன்றும் தப்பிப் பிழைத்துள்ளன.

இதற்குக் காரணம், எல்லாம் வல்ல கடவுள்கள் தம் பக்தர்களைப் பாதுகாக்கின்றனர் என்பதல்ல; பக்தர்களே தம் கடவுள்களையும், மதங்களையும் பாதுகாக்கிறார்கள் என்பதே காரணம்.

இன்று நம்மிடையே உள்ள கடவுள்கள், பழைய, வரலாற்றுக்கு முந்திய அந்த கடவுள்கள் போல் அல்ல. அறிவியல் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது போலவே கடவுள்களும் வளர்ச்சி பெற்று வந்துள்ளனர்.

**ஆதிகால கடவுள்கள்** என்போர் நம் முன்னோர்கள், நம் மூதாதைகள், மூதாட்டிகள், எல்லா இனக்குழுக்களுக்கும் பொதுவான வீரநாயகர்கள் ஆகியோர் ஆவர்.

அதற்குப் பிறகு வந்தவர்கள் **இயற்கைக் கடவுள்கள்** . திடீர் வெள்ளங்கள், எரிமலைக் கொந்தளிப்புகள், நிலச்சரிவுகள், இடிமின்னல், பூகம்பங்கள், சூறாவளிகள், காட்டு நெருப்புகள் , பெருங்கடல் பொங்குதல்கள், வறட்சி, கொள்ளை நோய்கள், சாவு முதலிய இயற்கைப் பேரழிவுகள் - அவற்றை விளைவித்தது கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி என பழங்கால மனிதரை நம்பவைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு இயற்கை நிகழ்வுக்கும் ஒரு குறிப்பிட்ட பெயருடைய கடவுளை அவர்கள் கண்டுபிடித்தார்கள். தம் குலத் தலைவர்களின் சினம் தணிக்க / நன்மதிப்பைப் பெற தாம் கையாண்ட அதே வழிமுறைகளையே இந்த கடவுள்களின் சினம் தணிக்கவும் அவர்கள் கையாண்டார்கள்: தாம் செய்த குற்றங்களுக்கு மன்னிப்பு பெற அவர்கள் அவற்றுக்கு உணவு, மனித - மிருக பலிகள், பெண்கள், அடிமைகள் ஆகியவற்றைப் படைத்தார்கள்.

இயற்கைப் பேரழிவு தணிந்ததும், தாம் தந்த கொடைகளால்தான் கடவுள்கள் சினம்தணிந்து விட்டார்கள் என அவர்கள் நினைத்தார்கள். எனவே, அவர்களின் கருணைக்காக மறுபடியும் அவர்களுக்குப் படையல் வைத்து நன்றி தெரிவித்தார்கள்.

இந்தக் காலகட்டத்தில் மனிதர்கள் இயற்கையை நம்பியே வாழ்ந்து வந்தார்கள். உணவையும் நீரையும் தேடி நாடோடிகளாகத் திரிந்தார்கள். (அன்றைய நிலையில் வேறுவழியிருக்கவில்லை)

தொடக்ககால இயற்கைக் கடவுள்களில் இருந்து கடவுளின் அடுத்த வளர்ச்சி நிலை தாய்த் தெய்வம் ஆகும். இயற்கைப் பேரழிவுகள் மூலமோ காட்டு விலங்குகள் மூலமோ இனக்குழு மோதல்கள் மூலமோ மரணங்கள் தொடர்ந்தன.

இத்தனை தாக்குதல்களையும் தாண்டி ஒரு குலம் மிஞ்ச வேண்டுமானால், அதிக எண்ணிக்கையிலான மனிதர்கள் தேவைப்பட்டது.

குழந்தைகள், பெண்களின் கருப்பத்திலிருந்து ‘அதிசயமான’ முறையில் பிறந்த காரணத்தால் பெண்ணே மூலமுதல் ஆற்றல் (ஆதி பராசக்தி) என அவர்கள் நம்பினர். அதன்பின் பெண்ணை தாய்த் தெய்வம் என்று வழிபடத் தொடங்கினர்.

மற்ற எந்த உயிரினத்தையும் போலவே மனிதர்களும் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்தனர் என்றாலும் வறட்சியும், பஞ்சமும், இயற்கையை ஆராயவும், புரிந்து கொள்ளவும், பயன்படுத்திக் கொள்ளவும் அவர்களை கட்டாயப்படுத்தியது.

மண்ணில் இருந்து செடிகள் எப்படி திடீரென்று வெளிக் கிளம்பி வருகின்றன என்பது பற்றி முதலில் அவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். விதைகளைச் சேகரித்து, பண்படுத்திய நிலத்தில் அவற்றை விதைத்தால் அவை முளைவிட்டு செடிகளாக வளரும் என்பதை நாளடைவில் கண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயிர்களுக்குத் தண்ணீர் விட்டும், உரம் போட்டும், களைகளை அழித்தும், காட்டு மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் முதலியவற்றிடமிருந்து அவற்றைப் பாதுகாத்தும் வந்தால் நல்ல விளைச்சலை அறுவடை செய்ய முடியும் என்பதை அனுபவத்தில் கண்டார்கள்.

நாடோடி வாழக்கையில் இருந்து நிலைமாறி, ஆறுகள், நீர் நிலைகள் அருகில் நிலையாக குடியேறினார்கள்.

வயல்களை உழவும், பாலுக்காகவும், இறைச்சிக்காகவும் விலங்குகளைப் பழக்கவும் வளர்க்கவும் தொடங்கினார்கள். கால்நடை வளர்ப்பில் இருந்தே பிறப்பின் ரகசியத்தை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆண் பெண் கூடலால்தான் குழந்தை குட்டிகள் பிறக்கின்றன என்பதைக் கண்டார்கள்.

இவ்வாறு கடவுள் - கருத்தின் ஒரு முக்கியமான வளர்ச்சி நிலையாக ஆண்- பெண் கூடலின் சின்னம் விளங்கியது. வளப்பெருக்கத்துக்காக லிங்கத்தை (ஆண்குறிச் சின்னம்) மனிதர்கள் வழிபடத் தொடங்கினார்கள்.

புராதன விவசாயச் சமூகங்கள் கூட்டு பாலியல் களியாட்டங்கள் மூலம் (காமன் பண்டிகை மூலம் ) செழிப்பின் கடவுளைத் திருப்தி செய்து வழிபட்டன. இதிலிருந்தே மிகவும் புனிதமான மந்திரமான - படைப்பு மந்திரமான (சிருஷ்டி மந்த்ரா) ஓம் என்பது உருவானது.

பிற்காலத்தில் பெண்கள் மீது ஆண்கள் ஆதிக்கம் பெற்றதும், பிரபஞ்சத்தின் படைப்புக் கர்த்தர்கள் ஆண் கடவுளர்களே என புனையப்பட்டது.

நாம் வாழும் இந்த நூற்றாண்டில் அறிவியல் முன்னேறியதுடன், ஆற்றலின் அழியா கொள்கை, சார்பியல் தத்துவம் முதலியவை உருவாயின. சோதனைச் சாலையில் மீதேன் வாயுவில் இருந்து உயிரின் அடிப்படையான மரபணுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.உயிர் வாழ்வின் மர்மம் மெதுமெதுவாக வெளிப்பட்டு வருகிறது.

இயற்கையில் நிகழும் இயற்பியல் வேதியியல் எதிர்வினைகள் மூலம் சடப்பொருளில் இருந்து உயிர்ப்பொருள் பரிணமித்தது. இதனை இன்று நாம் அறிந்துள்ளோம்.

உலகம் எப்படித் தோன்றியது என்பது அறிவியலாளருக்கும் வியப்பைத் தரும் செய்தியாகவே உள்ளது. பொருளையோ ஆற்றலையோ, ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படியானால் பேரண்டத்தை உருவாக்கியது யார்? எது? எப்போது? பேரண்டத்தைப் படைக்க ஒரு படைப்பாளி தேவை என்றால் அந்த படைப்பாளியைப் படைக்க வேறு ஒருவர் தேவை என்றாகும்.

இதற்கு மதவாதிகள், ஆன்மீகமும் உளம் சார்ந்த தத்துவமும் (மெட்டாபிசிக்ஸ்) அறிவியலுக்கு அப்பாற்பட்டவை என்று பதில் சொல்கிறார்கள்.

உண்மையில் மூலமுதல் காரணத்திற்கும் பின்னால் உள்ள உண்மையை விளக்க அறிவியலால் முடியாத இடத்தில் இருந்தே மதம் தொடங்குகிறது. இருப்பினும், இயற்கையைப் பற்றியும் பேரண்டத்தைப் பற்றியும் இதுவரை விளக்கப்பட்டிருப்பதெல்லாம் அறிவியல் மூலமாக மட்டும்தானே ஒழிய மதம் மூலமாக அல்ல.

மகா பாகவதத்தில் கூறப்படும் பிறப்பு வரிசையை நாம் கவனித்தோமேயானால் ஆரியரின் கடவுளான விஷ்ணுகூட பாற்கடலில் (ஷீரசாகரத்தில்) தானாகத் தோன்றியவரே (சுயம்பு - தான் தோன்றி) என்று கூறப்படுகிறது. எனவே மகாவிஷ்ணு தோன்றுவதற்கும் முன்பே பாற்கடல் இருந்திருக்கிறது! அப்படியே யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் கடவுளான யகோவா விணவெளியில் தோன்றுகிறார். இதன் பொருள், யகோவாவுக்கும் முன்பே வெளிநிலவியது என்றாகும். சடப் பொருள் அங்கு வெளியாக இருந்தது.

எனவே உலகைப் படைத்தவர் கடவுள் என்னும் முதல் வரையறையே பேரண்டத்தைப் பற்றிய விளக்கங்களைக் கண்டுபிடிப்பதில் நாம் அடைந்துள்ள முன்னேற்றங்களினால் பொருளற்றதாக ஆகி உள்ளது.

இருக்கு வேதத்தில் ஒரு அருமையான அத்தியாயம் உள்ளது. அதன் 10ஆவது மண்டலம், 129 ஆவது சூக்தம் (நசதீய சூக்தம்) 1-7 மந்திரங்களில் கடவுளையும் உயிரையும் பற்றி விவாதிக்கப் பட்டுள்ளது. அது வருமாறு :

1) படைப்பு எப்போது தொடங்கியது என்பது யாருக்கும் தெரியாது.

2) கடைசியாக எழுந்த ஒன்று, வெப்ப ஆற்றலால் பிறந்தது.

3) படைப்பு தோன்றிய பிறகே கடவுளர்கள் தோன்றினார்கள்.

4) பேரண்டத்தின் படைப்புக் கர்த்தரும் கூட படைப்பு என்றால் என்ன, அது எப்படி வெளிப்பட்டது என்பதை அறியாதிருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நூற்றாண்டில், முடிவான உண்மை போலவும் உலகளாவிய அன்பு போலவும், கடவுளும் அருவமாகி இருக்கிறார். முடிவான உண்மை என்று எதுவும் இல்லை. ஏனெனில் உண்மை சார்பு நிலையானதே. பூச்சியம் (சூனியம்) மட்டுமே முற்றானது. ஆக கடவுள் என்றால் சூனியம் என்றே பொருளாகும்.

உலகு தழுவிய அன்பைப் பொறுத்தவரை, அன்பு என்று நாம் எதைக் குறிக்கிறோம்? எனக்கு ஐஸ்கிரீம் பிடிக்கும் என்று ஒரு குழந்தை சொல்லும்போது அதை விலைக்கு வாங்கித் தின்று மகிழவே அப்படிச் சொல்கிறது.

ஒரு பெண்ணையோ பையனையோ நேசிக்கிறேன் என்று நாம் சொல்லிக் கொள்ளும்போது, அந்தப் பெண்ணையோ பையனையோ உடைமை கொண்டு அவளை ! அவனை நாமே அடைவதற்கே அவ்வாறு கூறுகிறோம்.

எனவே நாம் விரும்பும் பொருளை உடைமை கொள்வதும் அதை நாமே பயன்படுத்தி மகிழ்வதுமே, அன்பு என்பதன் மூலம் நாம் குறிக்கும் பொருள். அவ்வாறே உலகு தழுவிய அன்பு பற்றி நாம் நினைக்கும்போது, உலகம் முழுவதும் நமக்கே சொந்தமாக வேண்டும், அதை முழுவதுமாக நாமே துய்த்து மகிழவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். இதைத்தான் மதங்களும் சாமியார்களும் செய்கிறார்கள். தம் பக்தர்களை அவர்கள் நமக்குக் கீழ்ப்படுத்தி, தம் சுயநல ஆதாயத்துக்காக அவர்களைச் சுரண்டி வருகிறார்கள்.

உண்மை என்பது இடம் - காலம் - சூழ்நிலை என்னும் மூன்று விசயங்களைப் பார்த்து நிற்கும்.ஒருவருக்கு சூரியன் இருக்கும் திசை கிழக்கு. ஆனால் அவர் சில மீட்டர்கள் பின்னுக்குச் சென்றால் சற்றுமுன்புதான் அவருக்கு மேற்காக இருந்த இடம் இப்போது கிழக்காகி விடுகிறது! இப்படித்தான் அருவமான கடவுள் என்பதும் வரையறை அற்றதாகவே இருக்கிறது.

□

www.tamilarangam.net

4

# தொடக்க கால அருஞ்செயல்கள்

குறி சொல்லுவோராக - சாமியாடிகளாக செயல்பட்ட கணியர் / மந்திர வாதிகளால்தான் தொடக்க கால அருஞ்செயல்கள் என்பவை நிகழ்த்தப்பட்டன.

மந்திர உச்சாடனங்கள் மூலம் தம்மேல் கடவுளின் ஆவியை அவர்கள் வரவழைத்துக் கொண்டார்கள்.

குலத் தலைவரோ ஆட்சியாளர்களோ தமக்கு வழங்கும் தண்டனை எதுவும் தமக்கு எந்த தீங்கும் இழைக்க முடியாது என்பதைக்காட்ட, அசைந்தாடியும் நடனமாடியும் அச்சுறுத்தும் சத்தங்களை எழுப்பியும் காட்டினார்கள்.

தமக்குத் தாமே பின்வரும் விதமான தண்டனைகளை அவர்கள் தந்து கொண்டார்கள் : கசையடி, உடலை கத்திகளாலும், வாள்களாலும் வெட்டி/கீறிக் கொள்ளுதல், வாள்கள் மேல் நிற்றல், தம் முதுகுகளில் கொக்கிகளைச் செருகி அதில் எடைகளை தொங்கவிடல், மூக்குத் துளைகள் வழியாக ஆணிகளைச் செருகி அடித்து இறக்கி மண்டையைத் துளைத்தல், உயிரோடு புதைத்தல் , உடல் மேல் எலுமிச்சம் பழங்களையும் பிற பழங்களையும் தைத்துத் தொங்கவிடல், தம் தோலை ஊசிகளால் துளைத்தல், முதுகில் செருகிய கொக்கியிலிருந்து தொங்குதல், உடலில் நெருப்புப் பற்றவைத்துக் கொள்ளுதல், தீக்குண்டத்தின் மேல் நடத்தல், நாக்கையும் கன்னங்களையும் சூலத்தால் குத்திக் கொள்ளுதல் (அலகு குத்துதல்),வாள்களால் கழுத்தை - நெஞ்சை - உடலை குத்தி ஊடுருவுதல், ஆணி / முள் படுக்கையில் படுத்தல், கொதிக்கும் எண்ணெயில் தம் கைகளை இறக்குதல், விசம் - அமிலங்கள் (திராவகம்) முதலியவற்றைக் குடித்தல், இன்னும் இதுபோல் பல.

தான் வணங்கும் கடவுளை, தன்னை நாடி வருவோரும் நம்பினால், அவர்களும் தம்மைப்போலவே எந்த தீங்குக்கும் உட்பட மாட்டார்கள் - எந்த தண்டனையிலிருந்தும் தப்பித்து விடுவார்கள் என்று மெய்ப்பிப்பதற்காகத் தனக்குத்தானே மேற்சொன்ன துன்பங்களை இழைத்துக் கொள்கிறான் சாமியாடி.

அவர்களுக்குத் தண்டனை தரப்பட்டபோது அதனால் அவர்களுக்குத் துன்பம் நேரவில்லை, அவர்களின் நம்பிக்கையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களை பாதுகாத்தது என்னும் கருத்துக்கு மத நூல்களில் கணக்கற்ற கதைகள் சாட்சியங்களாக உள்ளன.

இராமாயணத்தில் சீதை 'அக்னி பரீட்சை' மூலமாக - செந்தணலில் நடக்க வைக்கப்பட்டதன் மூலமாக - தன் கற்பை நிரூபித்தாள். இந்த செயலை யார் வேண்டுமானாலும் - கற்பில்லாதவரும்கூட - செய்து விட முடியும்!

ஆளும் வர்க்கமும் புரோகிதரும் மட்டுமே அறிவை அடைந்துகொள்ள முடிந்தது. மற்றவர்கள் ஒருபோதும் கல்விகற்க அனுமதிக்கப்படவில்லை. **ராமாயணத்தில் சம்புகன்** என்பவரின் கதை உள்ளது. சூத்திரர்களுக்கு தடுக்கப்பட்டிருந்த தவத்தை அவர் செய்ததால் அவரை ராமன் கொல்கிறான்.

மகாபாரதத்தில் தாழ்த்தப்பட்ட சாதி இளைஞரான **ஏகலைவன்**, ஆளும் வர்க்கத்துப் பையன்களுக்கு வில்வித்தை கற்பிக்கப்படுவதைக் கண்களால் பார்த்தே அதனைப் பழகிவிடுகிறார்.

அவர் அதில் தேர்ச்சி பெற்றதை அறிய வரும் (ஆள்வோரின்) குரு, ஏகலைவனின் கட்டை விரலை வாங்கிவிடுகிறான். குரு தட்சணை என்ற பேரில் இவ்வாறு ஏகலைவனின் கட்டை விரல் வெட்டப்பட்டதும் அதன்பின் அவரால் ஒருபோதும் வில்வித்தை பழகவோ அதில் மேம்படவோ முடியாமல் போகிறது. அதற்காகவே அது கேட்கப்பட்டது.

**ஆய்வு மூலமும் அனுபவம் மூலமும், ஆளும் வகுப்பும் புரோகிதக் கூட்டமும் அடைந்து கொண்ட அறிவு அனைத்துமே, எளிதில் நம்பி ஏமாறும் அப்பாவி மக்களை ஏய்த்துச் சுரண்டுவதற்கான அதிசய செயல்களை செய்து காட்டுவதற்காக தவறாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.**

கேள்வி இதுதான் : எல்லாம் வல்ல கடவுளுக்குத் தன் சக்திகளை வெளிப்படுத்திக்காட்ட மனித உதவி தேவையா? புரோகிதன் மூலம்தான் அவர் தன்னை வெளிப்படுத்த முடியுமா? சாமியாடி அசைவதும் ஆடுவதும் கூச்சல் போடுவதுமான முறையில்தான் கடவுள் தன்னை வெளிப்படுத்த முடியுமென்றால் அந்த கடவுள் ஒரு பைத்தியமா?

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்பு, நான் இளைஞனாக இருந்தபோது, பூசாரிக்கு உண்மையாகவே சாமி வந்து விடுகிறதா என்பதைக் கண்டுபிடிக்க நாங்கள் ஒரு தந்திரம் செய்தோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தினமும் நாங்கள் சந்தியாவந்தன பூசை செய்ய வேண்டி இருந்தது. அந்தப் பூசையில், தூங்கிக் கொண்டிருக்கும் சாமியை நாங்கள் துயில் எழுப்புவோம். அவரைக் குளிப்பாட்டி அவருக்கு வாசனைகள் பூசி சந்தனம் தடவி பூக்களைச் சூடி அதன் பின் அவருக்கு உணவு படைப்போம்.

பூசை முடிந்தபின் மறுபடியும் அவரைத் தூங்கப் பண்ணுவோம். சாமி எப்பவுமே ஏன் காலைக்கடன் முடிப்பதில்லை என நாங்கள் ஆச்சரியப்பட்டோம். பிற குழந்தைகள் போலவே நானும், இந்த அசிங்கமான வேலையை எல்லாம் கடவுள் செய்யமாட்டார் என நம்பினேன்.

எங்கள் வீட்டுக்குப் பின்புறத்தில் ஒரு கோயில் இருந்தது. நவராத்திரி திருவிழாவின் போது பூசாரி நடந்து கொள்ளுவதுபோல ஒரு பெண் கடவுள் நடந்துகொள்ளுமா என நாங்கள் ஆச்சரியப்பட்டோம். ஒரு பெண், அதுவும் தாய்க்கடவுள் அவ்வளவு கோரமாக, ரத்தவெறி கொண்டவளாக, பித்துப்பிடித்தவளாக இருக்க முடியும் என்று எங்களால் கற்பனை செய்யவே முடியவில்லை. பெண் என்றால் அழகு, அன்பு என்றே நாங்கள் கருதினோம்.

அதிகாலையிலேயே பூசாரி மூன்றுநான்கு பாட்டில் நாட்டுச்சாராயத்தை ஏற்றிக்கொள்வதை நாங்கள் கண்டு பிடித்தோம்.

நான்கு பொட்டலம் எப்சம் உப்பை (பேதி மருந்தை) வாங்கி அவனது காலைநேர பானத்தில் கலந்துவிட்டோம். அவன் வெளிக்குப் போவானா என்பதைக் காண்பதே எங்கள் நோக்கம். சிறிது நேரத்திலேயே பேதி மருந்து வேலை செய்யத் தொடங்கியது. ஆனால் தேவியின் சாமியாடியாக நடிப்பதை நிறுத்த அவனால் முடியவில்லை. அவன் ஒரு தந்திரமான ஆள்.

அவல் பிரசாதம் செய்ய வைக்கப்பட்டிருந்த மரபீப்பாய்களில் ஒன்றைக் கொண்டு வர ஏவினான். அதன் மேல் உட்கார்ந்து தலையையும் உடலையும் ஆட்டியவாறே பீப்பாயின் துவாரத்தின் வழியாக வெளிக்குப் போனான். மலம் வெளிவந்த சிலநிமிடங்களில் மயங்கி விழுந்தான்.

அவனை மருத்துவமனையில் சேர்த்தார்கள். நல்ல வேளையாக உயிர் தப்பினான். ஆக அவனைப் பிடித்தது தேவதை அல்ல, பிசாசுதான் என்பதை நாங்கள் தெரிந்துகொண்டோம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறந்தவர்கள், பூதங்கள், பேய்கள், தேவதைகள், கடவுளர் ஆகியோரின் ஆவிகளைத் தேடியதில் நான் சந்தித்த ஒரே ஆவி பாட்டிலில் அடைத்த சாராவி (சாராயம்) தானே தவிர வேறு எந்த ஆவியையும் நான் சந்திக்கவில்லை.

இந்த ஆவியை (ஸ்பிரிட்டை) மட்டும் உட்கொள்ளா விட்டால், ஒரு கடவுள் / தேவியால் தான் ஆட்கொள்ளப் பட்டதாகக் கூறும்போது பூசாரிகள் செய்யும் எந்தக் காரியத்தையும் மற்றபடி அதேவிதமாக அவர்களால் செய்யவே முடியாது.

**உடம்பின் மேல் தீவைத்தல்**

உடலில் தீயை இழுத்துக்காட்டி அதனால் தீக்காயம் படாமல் தப்பிப்பது என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு சாதனையா?

**செயல் விளக்கம் - 16**

**நோக்கம்** : உடம்பின் மீது தீயை இழுத்தால் அதனால் தீக்காயம் ஏற்படுவதில்லை!

**தேவை** : 12" மரக்கோல், பருத்தியாலான பழந்துணி, அதிலும் பின்னல் துணி நல்லது, நூல், மண்எண்ணெய், தீப்பெட்டி.

**செய்முறை** : மரக்கோலின் ஒரு முனையில் 1" அகலத் துணிநாடாவைச் சுற்றி 3" கனமுள்ள பந்தம் செய்து கொள்ளவும். அது இறுக்கமாக இருக்க அதனை ஒரு நூலால் கட்டி முடிந்துகொள்ளவும்.

அதை மண்எண்ணெயில் முக்கி அதிகப்படியான எண்ணெயை உதறிவிட்டு பந்தத்தைக் கொளுத்தி நெருப்பை உங்கள் கைகள் மீதும் உடல் மீதும் இழுத்துக் கொள்ளவும். முடியோ தோலின் மேல்பரப்போ தீயலாமே தவிர தோலே வெந்து புண்ணாகிப் போய்விடாது.

நெருப்பை ஒரே இடத்தில் மூன்று நொடிகளுக்கு மேல் வைத்துக் கொண்டிருக்காதீர்கள். உடல் பரப்பில் அதை நகர்த்தியபடி இருங்கள்.

நீர் நிறைந்த பானையை நெருப்பின்மேல் வைத்தால் பானை அந்த வெப்பத்தை உட்கொண்டு சூடேற சிறிது நேரம் ஆகிறது. அது போலவே வெப்பத்தை ஏற்று வேக, தோலுக்கு சுமார் மூன்று விநாடிகள் ஆகும்.

சாமியாடிகள் நெருப்பை உடலில் ஒரே இடத்தில் மூன்று விநாடிகளுக்கு மேல் பிடித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். தீயை நகர்த்தாமல் ஒரே இடத்தில் வைக்கும்படி கேட்டால் மறுத்து விடுவார்கள். ஏனெனில் குட்டு வெளிப்பட்டு விடும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கனலும் கரிக்கங்குகள் மேல் நடப்பது ஒருவரின் கற்பையும் உறுதி செய்வதில்லை

### செயல் விளக்கம் - 17

**நோக்கம் :** பாதங்களில் தீப்புண் ஆகாமல் தீக்குண்டத்தின் மேல் நடத்தல்.

**தேவை :** ( குறைந்தது ) ஒரு அடி அகலம், எட்டடி நீளம், மூன்று அங்குல ஆழம் கொண்ட குழி, நன்கு காய்ந்த உறுதியான விறகு குறைந்தது நூறுகிலோ, மண் எண்ணெய், தீப்பெட்டி, உலோக நிரவி (லெவலர்), சாம்பலை விசிறி அகற்ற இரண்டு அட்டைகள், ஆறடிநீள மூங்கில் கழி ஒன்று, கல் உப்பு இரண்டு கிலோ, தண்ணீர், முதலுதவிக்காக பர்னால்.

**செய்முறை :** ஒரு அடி அகலம், 8 அடி நீளம், 3 அங்குல ஆழம் கொண்ட குழி தயார் செய்யவும். குழியின் நடுவில் காய்ந்த விறகை அடுக்கவும்.

ஒவ்வொரு கட்டையின் ஊடாகவும் காற்று போய்வர வசதியாக குறுக்கு மறுக்கு வசத்தில் பரப்பவும். விறகில் மண் எண்ணெய் ஊற்றிப் பற்றவைக்கவும். விறகு முற்றிலும் எரிந்து செந்தணலாக ஆக சுமார் 2 மணி நேரமாகும். எரியாத விறகை மூங்கிலைக் கொண்டு அகற்றிவிடவும்.

உலோக நிரவியால் குழியிலிருக்கும் கங்குகளை சமமாகப் பரப்பவும். கரியில் படியும் சாம்பலை அட்டை கொண்டு விசிறி அகற்றவும். கல் உப்பை முக்கியமாக நீங்கள் நடக்கப்போகும் மையப்பகுதியில் தெளிக்கவும். சீராக அடிவைத்து விரைவாக கரிமேல் நடக்கவும். குதிக்கவோ ஓடவோ முயல வேண்டாம். உங்கள் பாதம் வெந்து போவதில்லை என்பதைக் கண்டு வியப்படைவீர்கள்.

காற்று மண்டலத்திலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்ச உப்பு உதவுகிறது; கரிமேல் சாம்பல் படியாமல் தடுக்கவும் அது பயன்படுகிறது. கரிமேல் கற்களோ, உலோகத்துண்டுகளோ, கண்ணாடித் துண்டுகளோ வீசப்பட்டுக் கிடக்கின்றனவா என்பதை கவனித்துக் கொள்ளவும்.

திருட்டுத்தனமாக சாமியாரின் கையாள்கள் பிரச்சனைகளை உருவாக்க அவற்றை வீசி யிருந்தால் அவை ஆபத்தாக முடியும். அல்லது யாராவது உங்களைக் குழியில் தள்ளிவிடலாம் என்பதைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளங்கையில் தீக்காயம் ஆகாமல் கற்பூரம் கொளுத்தி சிலைமுன் ஆரத்தி காட்டுதல்

1977 இல் கேரளாவில் உள்ள திரைப்படக் கலைஞர் ஒருவர் ஒரு கட்டுரையை வெளியிட்டார். உள்ளங்கையில் கற்பூரம் கொளுத்தி கோயில் சிலை முன் அதை ஆரத்தி காட்ட முடியுமா என எங்களுக்கு அவர் சவால் விட்டார்.

தன் சுவாமியாகிய சத்யானந்த சரசுவதி (விசுவ இந்து பரிசத்தின் சர்வதேச தலைவர்) உள்ளங்கையில் கற்பூரம் கொளுத்தி அவரது கோயிலில் உள்ள ராமர் சிலை முன் ஆரத்தி காட்டுவார் என அவர் தெரிவித்தார். இது ஒரு அற்புதம் எனக் கருதப்பட்டது.

இந்த வித்தையை ஐந்து வயது குழந்தை கூடச் செய்ய முடியும் என அவரிடம் சொல்லப்பட்டது. கடைசியில் அதை வாயிலும்கூடப் போட்டுக் கொள்கிறார்கள்! சாமியாருக்கு உண்மையாகவேஇயற்கைக்கு மீறிய சக்திகள் இருந்தால் கற்பூரத்தை தன் தாடியில் வைத்துக் கொளுத்தி தன் தாடி பொசுங்காமல் ஆரத்தி எடுக்கட்டும் என்றும் சொல்லப்பட்டது. இந்த சவாலை சாமியார் ஏற்றுக் கொள்ளவில்லை!

## செயல் விளக்கம் - 18

**நோக்கம் :** உள்ளங்கையில் கற்பூரம் கொளுத்தி பின் அந்த நெருப்பை வாயிலும் போட்டுக்கொள்ளுதல் - தீப்புண் ஆவதில்லை.

**தேவை :** தூயதும் இயற்கையில் கிடைக்கக் கூடியதுமான பெரிய கற்பூர படிகம், தீப்பெட்டி.

**செய்முறை :** இடது கையின் பெருவிரலாலும், சுட்டு விரலாலும் கற்பூரக் கட்டியைப் பிடித்துக் கொண்டு அதில் தீ பொருத்துங்கள். எரியும் கற்பூரத்தை உள்ளங்கையில் வைத்து அந்தச் சுடரை பார்வையாளர்கள் முன் ஆட்டவும்.

உங்கள் கடவுள் உயிருணர்வு உடையது, எனவேதான் ஒரு (உயிரற்ற) சிலை முன் சுடரைக் காட்டுவதற்குப் பதில் அவர்களுக்குக் காட்டுவதாகக் கூறவும்.

கையை ஆட்டும் போது ஒரே இடத்தில் கற்பூரம் நீண்ட நேரம் இராத படியும் இடம் மாறிக் கொண்டே இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளவும். உள்ளங்கை சூடானதும் கற்பூரத்தை இடது கைக்கு மாற்றி ஆட்டவும். பின் இடது கை சூடானதும் மறுபடியும் வலது கைக்கு மாற்றிக் கொள்ளவும்.

பின், இரு கைகளும் போதிய வெப்பத்தை உள்வாங்கி இனி வெந்து விடலாம் என்ற நிலையில் எரியும் கற்பூரத்தை நாக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கவும். நாக்கு சூடாக ஆனதும் (வாயால்) மூச்சை வெளிவிட்டு சுடரை ஊதி அணைத்து விடவும். அல்லது வாயை மூடிக் கொண்டாலே தீ தானே அணைந்துவிடும்.

உள்ளங்கைகளிலோ உடம்பின் மீதோ நெருப்பு படச் செய்வதை விட நெருப்பை விழுங்கிவிடுவது எளிது . காகிதக் கோப்பையில் நீரை சூடாக்கும் சோதனையைப் பள்ளியில் நாம் செய்கிறோம்.

நீர் முழுதும் ஆவியாகாத வரை காகிதக் கோப்பை எரிந்து போவதில்லை. இது போலவே நாக்கில் எரியும் கற்பூரம் இருக்குமட்டும் எச்சிலால் நாக்கைத் தொடர்ந்து ஈரப்படுத்திக் கொண்டால் தீ சுடாது.

நெருப்பு எரிய ஆக்சிஜன் தேவை. நாம் வெளிவிடும் வாயுவோ கார்பன் டை ஆக்சைடு - இது நெருப்பை அணைத்துவிடும். எனவே வாய்க்குள் நீங்கள் வெப்பமாக உணர்கையில் ( வாய் மூலம்) வெளிமூச்சு விடுங்கள். அல்லது வாயை மூடிக் கொண்டாலே உடனடியாக நெருப்பு அணைந்துவிடும். வாயில் நெருப்பு இருக்கும்போது (வாய் வழியாக) உள் மூச்சு வாங்காதீர்.

நெருப்பு தொடர்பான தந்திரங்களும் வித்தைகளும் ஏராளம் உள்ளன. எரியும் சிகரெட்டால் உங்கள் தோல் மேல் தொட்டுப்பாருங்கள். உடனடியாக தோல் வெந்துவிடும். நம் தோலின் மிகவும் உணர்வு நுட்பமுள்ள பகுதிதான் நாக்கு. இப்போது, நாக்கு வேகாமல் அதில் ஒரு எரியும் சிகரெட்டை அழுத்தி அணைக்க உங்களால் முடியுமா?

## செயல் விளக்கம் - 19

**நோக்கம் :** எரியும் நெருப்பை - நாக்கோ விரல்களோ புண்ணாகாமல் - அணைத்தல்.

**தேவை :** சிகரெட், தீப்பெட்டி, பனிக்கட்டித்துண்டு.

**செய்முறை :** எரியும் சிகரெட் அழுத்தப்பட்டால் நம் தோல் உடனடியாக வெந்துவிடும். ஏனென்றால் எரியும் புகையிலை வெளியிடும் வெப்பத்தைத் தோல் உடனடியாக எடுத்துக் கொள்கிறது.

அ) எச்சில் நிறைந்த நாக்கில், எரியும் சிகரெட் முனையை இரண்டு மூன்று தடவைகள் அழுத்தி அழுத்தி எடுத்துவிட வேண்டும். நாக்கு சுடாமல் சிகரெட் அணைந்துவிடும்.

ஆ) உங்கள் பெருவிரலையும் சுட்டுவிரலையும் ஒரு பனிக்கட்டித் துண்டில் நன்கு தோய்த்துக் கொண்டு பின் இவ்விரல்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு எரியும் சிகரெட்டை நசுக்குங்கள். நெருப்பு அணைந்துவிடும். விரல்கள் வெந்து போகாது.

❋

## செயல் விளக்கம் -20

**நோக்கம் :** தீப்புண் ஏற்படாமல், உங்கள் உள்ளங்கையில் பழுக்கக் காய்ச்சிய ஒரு உலோகப் பந்தைப் பிடித்தல்.

**செய்முறை :** உங்கள் உள்ளங்கைகள் மரத்துப் போகும்வரை பனிக்கட்டிப் பாளத்தில் அவற்றை உறையச் செய்யுங்கள். பழுக்கக் காய்ச்சிய உலோகப் பந்தை, இடுக்கியால் எடுத்து உங்கள் உள்ளங்கையில் வைத்து உடனடியாக அதை வாளிநீரில் விட்டு விடுங்கள். சுரீர் என்ற ஒலி எழும். உள்ளங்கையில் தீப்புண் ஏற்படாது. ஏனெனில் உறைந்த நிலையில் இருக்கும் உள்ளங்கை வெப்பத்தை ஏற்க இன்னும் அதிக நேரம் தேவைப்படும்.

❋

## செயல் விளக்கம் - 21

**நோக்கம் :** உருகிய ஈயத்தில், விரலை வேகாமல் முக்கி எடுத்தல்.

**தேவை :** சுத்த ஈயம், புடக் குகை, எரிப்பான் (பர்னர்), கரண்டி.

**செய்முறை :** குகையில் சுத்த ஈயத்தை வைத்து உருக்கவும். கசடைக் கரண்டியால் முற்றிலுமாக வழித்து எறிய வேண்டும். கையும் விரலும் நன்கு உலர்ந்து இருக்க வேண்டும். ஒருவிரலை நேராக உருகிய ஈயத்தில் நுழைத்து வெளியே எடுத்து விடுங்கள். விரைவு தேவையில்லை. நிதானமாகவே எடுக்கலாம்.

ஈயத்தின் வெப்பம் $40^0$ செ.தான் இருக்கும். எனவே விரலை வேகச்செய்ய அதற்கு நேரமிருக்காது. விரலில் ஒட்டவும் செய்யாது. ஏனெனில் உலர்ந்த மேல்பரப்பில் இருந்து அது உருண்டோடிவிடும்.

❋

## செயல் விளக்கம் - 22

**நோக்கம் :** கொதிக்கும் எண்ணெயில் முக்கும் கையில் தீப்புண் ஏற்படுவதில்லை.

**தேவை :** இரண்டு லிட்டர் எண்ணெய் கொள்ளும் வடை சட்டி, சமையல் எண்ணெய் ஒரு லிட்டர், கணப்பு அடுப்பு ( ஸ்டவ்), பெரிய எலுமிச்சம்பழம் ஒன்று.

**செய்முறை :** பாத்திரத்தில் சமையல் எண்ணெயை ஊற்றி, யாருக்கும் தெரியாமல் எண்ணெய்க்குள் எலுமிச்சைச் சாற்றைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழிந்து விடவும். அடுப்பின் மீது வைக்கவும். எண்ணெய் சூடாகி கொதிக்கும் முன் அடியில் தங்கியுள்ள எலுமிச்சை சாறு கொதித்து அதன் நீராவி எண்ணெய்வழியாக குமிழியிட்டு மேலே வருவது, எண்ணெயே கொதிப்பது போல் தோன்றுகிறது.

எண்ணெயில் உங்கள் கையை முக்கி வெளியில் எடுங்கள். எண்ணெய் வெதுவெதுப்பாக இருக்கும், கொதித்து இருக்காது. ஆனால் பார்ப்பவர்களுக்கு அது கொதிக்கும் எண்ணெய் போல் தோன்றும்.

## செயல் விளக்கம் - 23

**நோக்கம் :** கொதிக்கும் எண்ணெயில் பூரி சுட்டு அவற்றை வெறுங்கையால் வெளியில் எடுத்தல்.

**தேவை :** கோதுமை மாவு/ மைதா மாவு, நீர், தட்டு, பூரி செய்வதற்கான சாதனங்கள், சமையல் எண்ணெய், அடுப்பு (ஸ்டவ்).

**செய்முறை :** ஒரு பன்னிரண்டு பூரிகளைத் தேய்த்துக் கொள்ளவும். எண்ணெயைக் கொதிக்க செய்து, எண்ணெய்க்குள் ஒரு பூரியைப் போட்டு அது வெந்ததும் சுட்ட பூரிக்கடியில் சுடாத ஒரு பூரியை வைத்து விரல்களால் எடுத்துவிடலாம். முன்னதாகக் கையில் அதே எண்ணெயைத் தடவிக் கொள்ளவும்.

இந்த சாகசத்தின் பின் உள்ள அறிவியல் அடிப்படை என்னவென்றால் பொரித்த பூரியின் அடியில் பொரிக்காத பூரியை நீங்கள் வைத்ததும், பொரித்ததின் மேலே உள்ள எண்ணெயின் வெப்பத்தை பொரிக்காத பூரி உள்வாங்கிக் கொள்வதால் உங்கள் விரல்கள் வெந்து புண்ணாவதில்லை. மேலும் முக்குமுன் கையில் தடவிய எண்ணெய் கைக்கு கவசம் அளிக்கிறது.

### தன் ஆண்குறியின் நுனித்தோலில்
### 35 கி.கி. கல்லெடையைத் தூக்கிய நாகாபாபா!

சமீபத்தில் நடந்த ஒரு கும்பமேளாவில், ஊர்வலத்தில் அம்மணமாக நடந்து வந்த ஒரு நாகா பாபாவின் ஆண்குறிநுனித் தோலில் ஒரு கொக்கி கொளுவப்பட்டு அதில் 35 கி.கி. எடையுள்ள கல் தொங்கிவிடப்பட்டிருந்தது.

தேசிய தொலைக்காட்சியில் இது காட்டப்பட்டது. பெரும்பாலான நாளிதழ்களும் பிற ஏடுகளும் அவரைப் பேட்டி கண்டபோது இந்தச் சாதனைக்குக் காரணம் தன் யோகசக்தியும் பிரமச்சரியமுமே என்று கூறினார் அவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையில் இதற்கும் பிரமச்சரியம் மற்றும் யோகத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நுனித்தோல் 80 கி.கி. எடைவரை தாங்கும் வலிமையுள்ளது. ஆனால் அப்படிச் செய்ய அஞ்சிய பாபா 35 கி.கி. எடையை மட்டுமே தூக்கினார்!

தென்னிந்திய கோயில்களின் அருகில் பரதேசிகள் தம் தோலில் துளையிட்டு தம் உடல் முழுவதும் எலுமிச்சைகள், பழங்கள், காய்கள் ஆகியவற்றைக் கட்டித் தொங்கவிட்டிருப்பது சாதாரணமாகப் பார்க்கக் கூடிய ஒரு காட்சியாகும்.

கேரளாவில் ஒரு கோயிலில் சாமியாடி தன் முதுகில் இரண்டு கொக்கிகளைச் செருகி அதில் மாட்டிய ஒரு கழியில் இருந்து தொங்குகிறார். இது போலவே தம் முதுகில் கொக்கி மாட்டி அதில் சாமி தேர்களைக் கட்டி இழுத்து வருபவர்களும் இருக்கிறார்கள்.

இன்னும் பலர் தம் நாக்குகளிலும் கன்னங்களிலும் சூலங்களைக் (அலகு) குத்திக் கொள்கிறார்கள். முசுலீம் பாபாக்கள் தம் கழுத்திலும் நெஞ்சிலும் வாள்களால் வெட்டிக் கொள்கிறார்கள்.

அச்சம் தரக்கூடிய இந்த அருஞ்செயல்களைப் பார்க்கும் மக்கள் பயமும் பக்தியும் நிரம்பியவராகின்றனர். ஆனால் இவை அதிசயச் செயல்களா? துணிச்சல் உள்ள எந்த மனிதரும் இதைச் செய்துவிட முடியும். வலி மிகவும் குறைவாகவே இருக்கும்.

## செயல் விளக்கம் - 24

**நோக்கம்** : வலியோ ரத்தமோ வராமல் தோலில் எலுமிச்சைகளைத் தைத்துத் தொங்கவிடுதல்.

**தேவை** : எலுமிச்சைகள், 8 ஆம் எண் ஊசிகள், தையல்நூல், கத்திரி.

**செய்முறை** : ஊசியில் 12 '' நூலைக் கோர்க்கவும். எலுமிச்சையில் ஊசியை ஏற்றி நூல்முனைகளை முடிந்து கொள்ளவும். அப்போதுதான் நூலில் இருந்து எலுமிச்சை உருவி விழுந்து விடாது. ஊசியானது நூலின் நடுவில் இருக்க வேண்டும்.

முதலில் உதவியாளரின் தோலை 2,3 தடவைகள் கிள்ளவும் / பிடித்து நசுக்கவும். அதை இழுக்கவும். வெளித்தோல் வழியாக ஊசியைச் செலுத்தவும். எலுமிச்சைக்குள் ஊசியேற்றவும். இனி தோலைப் பிய்த்து / கிழித்து விடாமல் தோலில் இருந்து தொங்கிக் கொண்டிருக்கும் எலுமிச்சம்பழம்!

முன்பே கூறியது போல, வலி அறிகுறி மூளையில் பதியப்பட்டால் மட்டுமே வலி உணர்ச்சியை அறியமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படித்தான் மயக்கமருந்து மூலம் வலி உணர்ச்சி இல்லாமல் செய்து அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. விரல்களால் தோல் நசுக்க/ கிள்ளப்படும்போது நரம்புகள் மரத்து விடுகின்றன.

எனவே வலி உணர்ச்சி மூளையை சென்று அடைவதில்லை. வெளித்தோல் கிழியாமல் / சிதையாமல் சுமார் 500 கிராம் எடைவரை எளிதாக தாங்கும் இயல்புடையது. (தோலின் மூன்று அடுக்குகளும் சேர்ந்து 80 கிலோ எடைவரை தாங்க முடியும்).

## செயல் விளக்கம் - 25

**நோக்கம் :** ஒருவரை அவரது முதுகில் கொக்கிகளை கொளுவி தொங்கிவிடுதல். அங்கு தோல் கிழிவதோ ரத்தம் வருவதோ இல்லை.

**தேவை :** இரண்டு கொக்கிகள், போதிய நீளமுள்ள பிளாஸ்டிக் கயிறு, தரையில் ஊன்றிய ஒரு கம்பம் - அதன் உச்சியில் பொருத்திய கப்பி, அயோடின் கரைசல் (டிஞ்சர்), பஞ்சு, ஒரு பெரிய பூத்துவாலை (டர்க்கி டவல்).

**செய்முறை :** முதுகில் இணையான இரு இடங்களில் கொக்கிகளைச் செருகி இரு கயிறுகளின் இரு முனைகளை கொக்கிகளின் வெளிமுனையில் கட்டவும். திடமான பெரிய அளவு குளியல் துண்டை மனிதரின் முன்புறமிருந்து பின்புறத்துக்குக் கொண்டு சென்று அதன் முனைகளைக் கயிறுகளில் கட்டிவிடவும்.

ஆளை சற்றே தூக்கி, மேலே தூக்கினால் சமநிலையில் இருப்பாரா என்பதை பார்த்துக் கொள்ளவும். இனி கயிறுகளின் மற்ற இரு முனைகளை இழுத்தால் அந்த மனிதர் கொக்கிகள் மூலம் அந்தரத்தில் தொங்குவார்.

❈

## செயல் விளக்கம் - 26

**நோக்கம் :** முதுகில் கொக்கிகளை கொளுவி அதில் சப்பரம் மாட்டி இழுத்தல் - காயங்களில் இருந்து ரத்தம் வடிவது இல்லை.

**தேவை :** இரண்டு கொக்கிகள், போதிய நீள பிளாஸ்டிக் கயிறு, மூங்கில் குச்சிகளால் செய்து வண்ணத் தாளால் சோடித்த நாட்டு சப்பரம், அயோடின் கரைசல் (டிஞ்சர்), பஞ்சு.

**செய்முறை :** ஒரு ஆளின் முதுகுத் தோலில் கொக்கிகள் கொளுவி அதன் மறுமுனையில் கட்டிய பிளாஸ்டிக் கயிறில் நாட்டுத் தேர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைக்கப்படுகிறது. அவரால் அதை எந்த சிரமமோ, வலியோ, ரத்த ஒழுக்கோ இன்றி இழுத்துச் செல்ல முடியும்.

## செயல் விளக்கம் - 27

**நோக்கம் :** இரண்டு உதவியாளர்களின் உடல்களில் கொளுவிய கொக்கிகளில் ஒரு அம்பாசடர் காரைப் பிணைத்து இழுத்துச் செல்லுதல்.

**தேவை :** 4 கொக்கிகள், பிளாஸ்டிக் கயிறு, அயோடின் கரைசல், பஞ்சு.

**செய்முறை:** இரண்டு உதவியாளர்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முதுகிலும் இரண்டு கொக்கிகள் கொளுவி, அவற்றின் மறுமுனையில் பிளாஸ்டிக் கயிற்றைக் கட்டி, கயிறை அம்பாசடர் காரில் பிணைத்து எவ்வித வலியோ, ரத்தமோ, தோல் பிய்ந்து வந்தலோ இன்றி அக் காரை இழுக்க முடியும். சாலை கூடுமான வரை சமதளமாக இருப்பது நல்லது.

## செயல் விளக்கம் - 28

**நோக்கம் :** கூரிய ஊசி அல்லது சூலத்தால் நாக்கை / கன்னத்தைத் துளைத்தல் - வலியோ ரத்தமோ வருவதில்லை.

**தேவை :** மிகக்கூர்மையான ஊசி / சூலம். அயோடின் கரைசல், பஞ்சு.

**செய்முறை :** அ) நாக்கை வெளியே இழுத்து, இறுக்கமாக பிடித்துக்கொண்டு, ஊசி/ சூலத்தின் கூர்முனையால் ஒரே நேரான, துரிதமான விசையுடன் துளைக்கவும். உதவியாளர் எதையும் உணரவரும் முன்பாகவே அவருடைய நாக்கை நீங்கள் துளைத்து இருப்பீர்கள். வலியோ ரத்தமோ வராது. ஊசியை / சூலத்தை வெளியே உருவி விடவும்.

ஆ) உங்கள் சுட்டுவிரலையும் கட்டைவிரலையும் கொண்டு இருபுறமிருந்தும் வாயைத் திறங்கள். உங்கள் கன்னச் சதையை உதடுகளிலிருந்து தள்ளி இழுத்து நீட்டுங்கள். இது மிகவும் நெகிழ்வுத் தன்மையுள்ள சதைப் பகுதி ஆகும்.

உங்கள் உதடுகள் தொடங்கும் இடத்திலிருந்து சுமார் அரை அங்குலம் தள்ளி ஒரு புள்ளியில் சூலத்தை மெதுவாகவும் மென்மையாகவும் அழுத்திச் செலுத்துங்கள், அவ்வளவுதான். இலேசான சுருக் வலி மட்டுமே தெரியும். மற்ற கன்னத்தின் ஊடாக அதைக் குத்தி ஏற்றுங்கள். அதே விதமாக - உங்கள் விரல்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு கன்னத்தை இழுத்து நீட்டிய நிலையில் - ஊசியை வெளியே எடுங்கள். ரத்தமோ காயமோ ஏற்படாது.

இவையெல்லாம் அற்புதங்கள் என்றால், காது - மூக்கு குத்திக் கொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் சிறுமியும் இயற்கை கடந்த சக்திகளைப் பெற்றவர்களாகவே இருந்தாக வேண்டும்! சூலங்களுக்குப் பதிலாகஅவர்கள் கம்மல், மூக்குத்திகளைக் குத்தி தம்மை அலங்கரித்துக் கொள்கிறார்கள். ஆனால் இதே காரியத்தைச் செய்யும் பாபாக்கள் அதனை அருஞ்செயல் என்று பெருமை பேசுகிறார்கள்!

*1970 களில் பழனிபாபா என் வீட்டுக்கு வந்தார். சூலத்தால் தன் நாக்கைக் குத்திக்கொண்டு சாமிக்கு 250 ரூபாய் கேட்டார்.*

நான் அவரிடம் சொன்னேன் : “கடவுள்தான் நம் எல்லாரையும் இந்த உலகையும் இதிலுள்ள செல்வங்களையும் படைத்தார் என்று நம்புகிறார்கள். அப்படியானால் நாம் **எல்லாரும் கடவுளின் பிள்ளைகள் என்றமுறையில் கடவுளின் சொத்தில் நம் எல்லாருக்கும் சம உரிமை இருக்கிறது.”**

எனவே கடவுளின் பெயரைச் சொல்லி அவர் வசூலித்த பணத்தில் ஒரு பகுதி என்னையும் சேரும் என்றேன். இவ்வாறு சொல்லி அவருடைய தட்டில் இருந்து 300 ரூபாயைப் பறித்து விட்டேன்! “கடவுளே எல்லாம் வல்லவர் என்கிற போது, அவரது குழந்தைகளிடம் இருக்கும் சொற்பத் தொகையை அவருக்குத் தரத் தேவையில்லை. மேலும் நாம் **பணமோ பொருளோ தருவதற்கு கடவுள் ஒரு பிச்சைக்காரரும் அல்ல.**

உண்மையில் கடவுள்தான் இந்த வளங்களை எல்லாம் தன் குழந்தைகளாகிய நமக்காக உருவாக்கி தந்து இருக்கிறார் - நாம் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்காக!” என்றேன்.

**அவருக்குக் கோபம் வந்துவிட்டது! என்னைப் பலவாறு திட்டினார்; சபித்தார்; மறுநாளே நான் இறந்துவிடுவேன் என்றார். ஆயிரக்கணக்கான பாபாக்கள் என்னை இப்படிச் சபித்திருக்கிறார்கள். சாபங்களை நம்பினால் தான் அத்தகைய கொடிய வாசகங்கள் வேலை செய்யும். பிற்பாடு, அவர் தன் 'நாக்கைத் துளைத்த' காரியம் பின்வரும் தந்திரம்தான் என்பதை நான் கண்டேன்.**

## செயல் விளக்கம் - 29

**நோக்கம் :** வலியோ, ரத்தமோ, மரணமோ இல்லாமல் நாக்கை/ கழுத்தை/ நெஞ்சை/கன்னங்களைத் துளைத்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேவை :** நடுவில் U வளைவுள்ள ஒரு சூழ்ச்சியான சூலம், அல்லது அவ்வாறே (நடுவில்) வளைந்த ஒரு வாள்.

**செய்முறை :** வளைவை உங்கள் பெருவிரலால் மறைத்தபடி சூலத்தை பார்வையாளர்களுக்கு காட்டுங்கள். அதை உங்கள் நாக்கில் வைத்து, அது மிகவும் கூர்மையானது என்பதை பார்வையாளர்கள் அறியச் செய்யவும்.

மறுகையால் உங்கள் வாயை மூடிக்கொண்டு, நாக்கை துளைப்பதுபோல் நடிக்கவும். வாய்க்குள் வளைவு இடதுபுறம் இருக்குமாறு U வளைவுக்குள் நாக்கை செருகவும். உங்கள் இடது கையை அகற்றி, சூலத்தால் நாக்கு துளைக்கப்பட்டுள்ளதை காட்டவும். இதுபோலவே இடதுகையால் வாயை மூடிக் கொண்டு, மெதுவாக சூலத்தை உருவிவிடவும்.

U வளைவுடன் கூடிய வாள்களைத் தம் கழுத்திலும் நெஞ்சிலும் பாய்ச்சிக் கொள்ள முசுலீம் பாபாக்கள் கையாளும் முறையும் இதுவே. முதலில் ஒரு உண்மையான வாளைப் பார்வையாளர்களிடம் காட்டுகிறார்கள். பின் ஒரு துணி / திரை மறைவில் சூழ்ச்சிவாள் கழுத்தில் அல்லது உடலில் பொருத்தப்படுகிறது. வளைவை மறைக்க கழுத்தைச் சுற்றி ரத்தம் பூசிய துணி கட்டப்படுகிறது.

தோலில் / உடம்பில் எலும்பில்லாத பகுதிகளில் எவரும் துளையிட முடியும். ஆனால் இதயத்தையோ கழுத்திலிருக்கும் காற்றுக் குழலையோ எவரும் குத்தி ஊடுருவ முடியாது ; அப்படிச் செய்தால் விரைவில் மரணம் தொடரும்.

## செயல் விளக்கம் - 30

**நோக்கம் :** பாதங்கள் வெட்டுப்படாமல் இரு வாள்களின் மேல் நிற்றல்.

**தேவை :** ஒரே அளவுள்ள இரு வாள்கள், ஒரு முக்காலி, கொஞ்சம் பழங்கள்/ காய்கள்.

**செய்முறை :** இரு வாள்களின் கூர்மையைக் காட்ட சில பழங்களையோ, காய்களையோ வெட்டிக் காட்டவும். பின் பலசாலிகளான இரு உதவியாளர்கள் வாள்களைக் கிடை மட்டமாகப் பிடித்துக் கொள்ளட்டும்.

ஒவ்வொருவரும் இருவாள்களின் இருமுனைகளையும் - கூர்முனை மேல்நோக்கி இருக்கும்படி - பிடித்துக்கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது உதவியாளர் முக்காலி மீது ஏறுகிறார். வாள்களின்மேல் அவர் நிற்க நான்காமவர் உதவுகிறார். அவரது பாதங்கள் வாள்மேல் குறுக்கு வசமாக இருக்கும்படி நிற்க வேண்டும். பின் அவற்றில் இருந்து இறங்கித் தன் பாதங்கள் ஊறுபடவில்லை என்பதைப் பார்வையாளர்களுக்கு காட்டவும்.

இரு வாள்களின்மீது குறுக்கு வசத்தில் நிற்பதாலும், இரு வாள்களின் நான்கு புள்ளிகளில் அவரது எடை பகிரப்பட்டு விடுவதாலும் பாதங்களுக்கு ஏதும் நேர்வதில்லை.

மேலும், எந்த ஒரு பொருளையும் வெட்ட வேண்டுமானால் அந்த பொருளின் மீது வாளையோ கத்தியையோ வைத்து அழுத்தி,ரம்பத்தை இழுப்பதுபோல் முன்னும் பின்னுமாக அசைத்தால்தான் வெட்ட முடியும்.

## செயல் விளக்கம் - 31

**நோக்கம் :** இரு ஆணிகளை மூக்குத் துவாரங்களில் நுழைத்து அடித்து இறக்குதல். பின் வெளியில் எடுத்தல். எந்த கெடுதலும் ஏற்படுவதில்லை.

**தேவை :** *1/8 " X 5 "* நீள துருப் பிடிக்காத எஃகு ஆணிகள். உருண்டையாகவும் வளவளப்பாகவும் இருக்க வேண்டும். முனைகள் கூர் இன்றி மொழுக்கென்று சாணை பிடித்ததாக இருக்க வேண்டும்; ஒரு சுத்தி.

**செய்முறை :** ஆணிகளைக் கிடைவசத்தில் நேராக, கூர்முனைகள் முகத்தை நோக்கியபடி பிடித்துக் கொள்ளவும். இரு ஆணிகளையும் மூக்குத் துளைகளுக்குள் சுமார் *1/2 "* நுழைக்கவும். ஆணிகளால் மூக்கை உயர்த்தி மெதுவாக மூக்குத் துளைகளுக்குள் அவற்றை செருகவும்.

மெதுவாக தள்ளினால் ஆணிகள் நெடுக தலைவரை செல்லும். ஆணிகளை செலுத்தும்போது பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையே அவற்றை ஆடாமல் உறுதியாக பிடித்திருக்க வேண்டும்.

ஆணிகளை தலைக்குள் சுத்தி கொண்டு அடித்திறக்குவது போல் பாவனை செய்ய வேண்டும். செய்து காட்டியதும் மெதுவாக ஆணிகளை வெளியில் இழுக்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 32

**நோக்கம் :** ஆணிப்படுக்கையில் படுத்தபடி உங்கள் மேல் மனிதர்களை நடக்கச் செய்தல். எந்த ஊறும் நேர்வதில்லை.

**தேவை :** 1" தடிமன், 16" அகலம், 27" நீளம் உள்ள ஆணிப் படுக்கை. 1/8" விட்டமும் 3" நீளமும் உள்ள ஆணிகள் 1/2" இடைவெளிவிட்டு படுக்கை முழுக்க அறைந்துள்ளது. இன்னொரு ஒட்டுப்பலகைத் தகடு அடியில் ஆணிகளால் முறுக்கிஉள்ளது. 2' X 3 'X 1" அளவுள்ள இன்னொரு ஒட்டுப் பலகை (பிளைவுட்), இரண்டு மரச் சட்டங்களுடன் 2' பக்க முனையில் ஆணிகளால் முறுக்கி இணைக்கப்பட்டுள்ளது. தலையணைகள்.

**செய்முறை :** உங்கள் உடலின் ஒவ்வொரு பாகமும் ஆணிப்படுக்கை மேல் பதியுமாறு பலகை மேல் தட்டையாகப் படுக்கவும். தோள்களில் இருந்து இடுப்புவரை யான உடல்பகுதி மட்டுமே ஆணிகள்மேல் இருக்க வேண்டும்.

இம்முறையில் உடலின் எடை ஆணிகள் மீது சமமாக பகிரப்பட்டுவிடும். கைகளை வெளியே வைக்க வேண்டும். தோள், முழங்கை எல்லாம் தரையில் கிடக்கட்டும்.

ஏனெனில் இதுவே மிகுந்த எடை கொண்டது. முன்கையும் மணிக்கட்டுகளும் தரையில் இருந்து விலகி, மேல்நோக்கி, உடல்மேலுள்ள பலகையைத் தாங்கிக் கொண்டுள்ளன. இந்தப் பலகை மார்பின் குறுக்கே சரிசமனாக வைக்கப்படுகிறது. மணிக்கட்டும் மார்பும் எடையின் ஒரு பகுதியை மட்டுமே தாங்குகின்றன. எடையைச் சமனப்படுத்த இவையெல்லாம் உதவுகின்றன. அந்த எடையை, தரையால் தாங்கப்படும் முழங்கைகள் ஏற்றுக்கொள்கின்றன.

மேல்உள்ள ஒட்டுப்பலகை மீது உதவியாளர் மெதுவாக ஏறவேண்டும். முதலில் ஒரு பாதத்தை வைத்து பின் மற்ற பாதத்தை வைத்து ஏறவேண்டும். தன் உடலின் எடையை சமனப்படுத்திக் கொண்டே ஏறவேண்டும். தலைக்கடியில் போதுமான தலையணைகளை கொடுத்துக் கொள்ளலாம்.

இதே சாகசத்தை வயிறு கீழாக, உள்ளங்கைகளைத் தரையில் மட்டமாக உறுதியாக ஊன்றியபடியும் செய்ய முடியும். இந்நிலையில் ஆளின் எடையை தரையில் தங்கியிருக்கும் முழங்கைகளும் முழங்கால்களும் எடுத்துக் கொள்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இரண்டு நாற்காலிகளுக்கு இடையில்**
**எவ்வித தாங்கலும் இன்றி உதவியாளரைப் படுக்க வைத்து**
**கனமான ஆள் அவர் மேல் ஏறிநிற்றல்.**

வசியம் செய்யப்பட்ட உதவியாளரை, இரண்டு நாற்காலிகளின் மேல், நடுவில் எந்த ஆதாரமும் இல்லாமல் படுக்க வைப்பதுடன், மேடை வசியக் காட்சிகள் நிறைவுறும். பின் அவர்மேல் ஒரு கனத்த மனிதரை ஏறிநிற்கச் செய்கிறார்கள். பின் அவர் விழித்ததும், ஏதேனும் எடையை தன்மேல் அவர் உணர்ந்தாரா என்று கேட்கும்போது இல்லை என பதிலளிக்கிறார் அவர். இது பார்வையாளர்களுக்கு அதிர்ச்சியூட்டுகிறது.

✲

## செயல் விளக்கம் - 33

**நோக்கம் :** நடுவில் எந்த தாங்கலும் இன்றி இரு நாற்காலிகளின் இடையில் ஒருவர் விறைப்பாக படுக்கச் செய்தல், பார்வையாளர்களின் மத்தியில் இருக்கும் மிக கனத்த மனிதரை அவர்மேல் ஏறிநிற்கச் செய்தல். எந்த நிலைகுலைவும் நேர்வதில்லை.

**தேவை :** ஒரே மட்டமான நாற்காலிகள் மூன்று, ஒரு துண்டு.

**செய்முறை :** உதவியாளரின் உயரத்தின் அளவு தூரத்தில் ஒன்றை ஒன்று பார்த்தாற்போல் இரு நாற்காலிகளை போடவும். அவ்விரண்டு நாற்காலிகளில் ஒன்றில் அவர் தலையும் மற்றதில் பாதமுமாக படுக்கச் செய்யவும்.

முதல் நாற்காலியில் அவரது தலையோடு தோள்களும் படிந்திருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். அவர் தன் கண்களை மூடிக்கொண்டு நீங்கள் சொல்லும்வரை திறக்க வேண்டாம் என கேட்டுக் கொள்ளவும். யானையே அவர்மேல் ஏறி நின்றாலும், அவர் தன் கண்களை மூடியே இருந்தால் அவருக்கு ஒன்றுமே நேராது என்று அவரிடம் சொல்லவும். அவர் கண்களைத் திறந்து பார்த்து அதனால் ஏதும் அசம்பாவிதம் நடந்தால் அதற்கு நீங்கள் பொறுப்பல்ல என்று கூறி விடவும். இனி அவர் தன் கண்களைத் திறக்க துணியமாட்டார்! அவர் முதுகைத் தட்டி விறைப் பாக்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குண்டரான இரண்டாவது உதவியாளரை மூன்றாவது நாற்காலியில் ஏறச் சொல்லவும். மூன்றாவது உதவியாளரின் உதவியுடன் ஒரு பாதத்தை முதலில் தொடைகளிலும் மற்றதை வயிற்றிலும் வைத்து, தாங்கும் ஆள்மீது அவர் நிற்கிறார். படுத்திருப்பவர் விறைப்பாக இருக்கிறார் என்பது உங்களுக்கு உறுதியானதும் அவர் முதுகிலிருந்து உங்கள் கையை எடுத்து விடவும். நடுவில் எந்த ஆதாரமும் இல்லாமல் முதலாமவர் இரண்டாமவரின் எடையை எளிதாக தாங்குவது கண்டு பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைகிறார்கள்.

இரண்டாம் ஆள் கீழே இறங்கியதும் முதல் ஆளை கண்களைத் திறக்குமாறும் இரண்டு நாற்காலிகளில் இருந்தும் இறங்கி விடுமாறும் சொல்லவும். அவர் தன் உடல்மேல் ஏதும் (கூடுதல்) கனத்தை உணர்ந்தாரா என்று கேட்கவும். இல்லை என்று அவர் பதிலளிப்பார். சற்றுமுன்புதான் அவர்மேல் ஏறி நின்றவரை நீங்கள் அவருக்குச் சுட்டிக்காட்டினால் தனக்கே தெரியாமல் அவ்வளவு எடையைத் தாங்கியதை குறித்து அவர் அதிர்ச்சி அடைவார்!

இந்த வசத்தில் விறைப்பாக இருக்கும் எவரும், வீழ்ந்துவிடாமல் தன்மேல் சுமார் 250 கிலோ எடையை தாங்கமுடியும்.

கண்களை மூடிக் கொள்ளும்படி அவரிடம் கேட்டுக்கொள்வது ஏனென்றால் தன்மேல் நிற்கப்போகும் ஆளை அவர் பார்த்தால், ஒரு காலை அவர்மேல் வைப்பதற்கும் முன்பே பீதியால் அவர் சரிந்து விடலாம்.

எடையை அவர் உணராததற்கு காரணம், ஒரு விறைப்பான பொருள் இரு நாற்காலிகளால் தாங்கப்படும்போது, அதன் மேல் ஏற்றப்படும் எந்த எடையும், தாங்கும் இரு நாற்காலிகளால் வாங்கிக் கொள்ளப்படுகிறது; அந்தப் பொருள் மேல் அழுத்துவதில்லை.

அற்புதங்களின் வரலாற்றின் ஆரம்ப காலத்தில் நூற்றுக் கணக்கான இத்தகைய சாகசங்கள் செய்து காட்டப்பட்டன.

குறிப்பிட்ட கடவுளை அவர்கள் நம்பினால் ஆளும் வர்க்கம் வழங்கும் தண்டனைகள் அவர்களை ஒன்றும் செய்யாது என்று பொதுமக்களுக்கு மெய்ப்பிக்கவே இவை செய்து காட்டப் பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவை எல்லாவற்றையுமே நாம் விளக்கவும் செய்து காட்டவும் முடியும். இவற்றை நிகழ்த்த துணிச்சலே தேவை; இயற்கைக்கு மீறிய சக்தி எதுவும் தேவையில்லை.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5

# மதங்கள் கூறும் அருஞ்செயல்கள்

மதங்கள் தம் கடவுள்களை இயற்கைக்கு மீறிய ஆற்றல்களைப் பெற்றவர்களாக காட்டியிராவிட்டால் எந்த மதத்தையும் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள்! கடவுள் மேல் மக்கள் நம்பிக்கை கொள்வது அவர் மேல் உள்ள அன்பால் அல்ல, கடவுள் எல்லாம் வல்லவர் என்று அவர்கள் நம்புவதால்தான்; நம்புமாறு செய்யப்பட்டிருப்பதால் தான்!

கடவுள் நம்பிக்கை, மக்களை உலகப் பொருள் நாட்டத்திலிருந்து ஆன்மீக நாட்டம் உடையோராக்குகிறது என்று வாதிடப்பட்டாலும், இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பெறப்படும் பொருள்வகை ஆதாயங்களுக்காகவே அந்த பக்தி இருப்பது வெளிப்படை. ஆன்மீகம் என்ற போர்வையில் செய்யப்படும் பலிகள், தியாகங்கள் உட்பட எல்லாமே, வளமான எதிர்காலத்துக்காகத்தான் செய்யப்படுகின்றன.

மக்களின் மிக உயர்ந்த எதிர்கால இலட்சியம் மோட்சம்! அதாவது ஆத்மா பரமாத்மாவுடன் ஒன்றாவதாகும். அதாவது கடவுளுடன் ஐக்கியமாகி, கடவுளாகவே ஆகிவிடுவதாகும். தானே எல்லாம்வல்லவராக / எல்லாம் அறிந்தவராக/ எங்கும் நிறைந்தவராக ஆகிவிடுவதே மனிதர்களின் ஆகப்பெரிய இலட்சியமாக உள்ளது.

மனிதர்கள் இந்த இலக்கை அடைய மதத்தால் உதவ முடியவில்லை. ஆனால் அவர்களை எப்படி சுரண்டுவது என்பதை அது அறிந்திருக்கிறது.

உலகில் ஒரு மேன்மையான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற மனிதகுலத்தின் விருப்பங்களை நிறைவேற்ற அறிவியலாலும் அறிவியல் மனப்போக்கினாலும் மட்டுமே முடியும்.

இப்போது நாம் இன்றும் உலகில் பிழைத்திருக்கும் ஒவ்வொரு மதத்தின் அற்புதங்களையும் ஆராய்ந்து, அவை அற்புதங்கள் தாமா என்பதைக் கண்டறிவோம்.

## யூத மதம்

பழைய ஏற்பாட்டில் மோயீசன் (மோசே) பல அருஞ்செயல்களை சாதித்ததாகக் கூறப்படுகிறது. அவற்றில் ஒன்று, அவர் தன் தடியை ஒரு பாம்பாகவும் பின் அதை திரும்பவும் தடியாகவும் மாற்றுவதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 34

**நோக்கம் :** ஒரு தடியை பாம்பாக உருமாற்றி பின் அதை மறுபடியும் தடியாக மாற்றுதல்.

**தேவை :** ஒரு பாம்பு.

**செய்முறை:** இந்த சாலவித்தை, மோயீசனுக்கும் மிக முன்காலத்திலேயே செய்யப்பட்டது. ஒரு பாம்பின் வால், தலை ஆகிய இரு முனைகளையும் இரு கைகளாலும் பிடித்து நேராக இருக்கும்படி இழுக்கவும். கட்டைவிரலையும் சுட்டுவிரலையும் கொண்டு பாம்பின் தலையின் இரு புறமும் பிடித்து மத்தியில் பலமாக அழுத்தினால் பாம்பு விறைப்பாகிவிடும்.

அதன்பின் வால்முனையைக் கையிலிருந்து விடுவித்து தரையைப் பார்த்து விட்டுவிட்டாலும் கூட அதனால் அசைய முடியாது. அந்நிலையில் அது ஒரு தடியைப் போலவே தோன்றுகிறது. மீண்டும் அது ஊர்ந்து செல்ல, வால் பகுதியைப் பிடித்திருக்கும் பிடியைத் தளர்த்தி பாம்பை உதறி தரையில் வீசி விட வேண்டியதே! ஒரு சில நிமிடங்களில் மறுபடியும் அது தன் இயங்கும் திறனைப் பெற்று ஊர்ந்து போகும்!

### கிறித்தவம்

**புதிய ஏற்பாடு :**

அமெரிக்காவில் ஒரு வானொலிப் பேட்டியின் போது, என்னை ஒரு கத்தோலிக்கப் பெண் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டார். அமெரிக்க வானொலிப் பேட்டிகள் இங்குள்ளவற்றைப் போலன்றி மிகவும் வேறுவிதமானது.

அங்கே குறிப்பிட்ட தலைப்பில் ஆர்வமுள்ள எவரும் வானொலியின் திருகியைத் திருப்பி நிலையத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு, அத்தலைப்பு குறித்த எந்த கேள்வியை வேண்டுமானாலும் கேட்க முடியும்.

அந்த பேட்டியைத் தம் வீடுகளில் இருந்து கேட்டுக் கொண்டிருக்கும் பிறரும் தொலைபேசி மூலம் எந்த கேள்வியையும் கேட்க முடியும். பேட்டி தரும் ஆள் அதற்கு பதிலளித்தாக வேண்டும். அவரால் பதில்தர முடியாவிட்டால் சிரித்தும் கூச்சலிட்டும் அவரை அப்போதே மட்டம்தட்டி விடுவார்கள்!

எனது பேட்டியின்போது தொலைபேசியில் ஒரு பெண் கேட்டார், “மிஸ்டர் பிரேமானந்த், இந்திய சாமியார்களின் அருஞ்செயல்கள் பற்றி நீங்கள் கூறுவதெல்லாம் உண்மையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களெல்லாம் சரியான மோசடிக்காரர்கள்தான். ஆனால் யேசு கிறிஸ்துவின் அருஞ்செயல்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்பதை இப்போது கூறுங்கள்."

நான் அவரது கேள்வியைத் தட்டிக்கழிக்க முயன்றேன். எனவே, "யேசு உயிருடன் வாழ்ந்ததாக சொல்லப்படும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் நான் வாழ்ந்ததில்லை. தயவு செய்து நிகழ்காலத்தில் நடந்து வருவதைப் பற்றிய கேள்விகளைக் கேளுங்கள்" என்று பதில் சொன்னேன்.

நான் பைபிளைப் படித்திருக்கிறேனா என்று அவர் கேட்டார். நான் 'ஆம்' என்றேன். பைபிளைப் பற்றி பேசவும் விவாதிக்கவும் என்னால் முடியும் என்றும் சொன்னேன்.

அவரது அடுத்த கேள்வி, யேசு கிறிஸ்து செய்ததாகப் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள அருஞ்செயல்கள் பற்றி என் கருத்து என்ன என்பதாகும்.

ஒரு ஒப்பேற்றலான பதிலை அவர் விரும்புகிறாரா அல்லது என் உண்மையான கருத்தை அறிய விரும்புகிறாரா, என் பதிலால் அவர் மனம் குலைந்து போய்விடுவாரா எனக் கேட்டேன்.

கிறித்தவர்கள் தம் ஒரு கன்னத்தில் அறை விழுந்தால் மறு கன்னத்தையும் காட்டுவார்கள் என்றும், என் பதில் அவரை நிலைகுலையச் செய்யாது என்றும் அவர் பதிலுரைத்தார்.

என் பதில் அவரை நிலைகுலையச் செய்யப் போவதில்லை என்பதை உறுதிசெய்து கொண்டபின், பைபிளில் விவரித்துள்ள யேசு கிறிஸ்துவின் அற்புதங்கள் போலியானவை என்பதே என் உண்மையான கருத்து என்றேன்.

உடனடியாகத் தொலைபேசியில் அவர் வெடித்தார் : "இந்த தேவடியா மகனை யார் அமெரிக்காவுக்குள் விட்டது?" அவரது கோபத்தைக் கண்டு நான் அதிர்ச்சி அடைந்தேன்.

நான் என் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. நான் அவருக்குச் சொன்னேன்: தேவடியாள் மகன் என்பது ஒரு தெய்வீக வார்த்தை! மத நூல்களில் மட்டுமே அதைக் காண முடியும். பகுத்தறிவாளரின் அகராதியில் அச்சொல்லை பார்க்க முடியாது.

ஏனெனில், தாம் ஒரு பெற்றோருக்குப் பிறந்தவர்களே என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் பெற்றோர் யார் என்பதற்கு அத்தாட்சி இல்லாமல் போனாலும், ஒரு ஆண் - பெண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடலில், விந்தணு - கருமுட்டை இணைவில்தான் நாம் பிறந்தோம் என்பதை அவர்கள் அறிவார்கள்.

எனவே யாருமே இம்முறைக்குப் புறம்பாகப் பிறந்தவராக இருக்க முடியாது. பெற்றோர் இல்லாமல் பிறந்ததாகச் சொல்லப்படும் ஒரே ஆள் கடவுள்தான். எனவே கடவுள் சம்பந்தப்பட்ட இந்த சொல்லை எனக்கு அவர் பயன்படுத்தக் கூடாது, என்றேன்!

இந்த பதில் அவரை மேலும் வெகுளச் செய்தது. கோபத்தில் காறித் துப்பினார். "முறைகேடாய்ப் பிறந்த இவனைத் தூக்கில் போட வேண்டும்" என்றார்.

நான் நிதானமிழக்காமல் அவருக்குப் பதில் சொன்னேன்: என்னைத் தூக்கில் போடுவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், கழுவில் ஏற்றப்படுமுன் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: கடவுள் - யேசு கிறிஸ்து - புனித ஆவி ஆகியோரை உண்மையாகவே நீங்கள் நம்புகிறீர்களா?

"முழுமையாக நம்புகிறேன்" என்று பதில் சொன்னார்.

புனித வேதாகமத்தில் புனித மத்தேயு சுவிசேசம் பத்தாம் அதிகாரத்தை அவர் வாசித்திருக்கிறாரா என்று கேட்டேன். அதில் யேசு தன் பன்னிரண்டு சீடர்களை மக்களிடம் அனுப்புகிறார். அவர் செய்ததாகக் கூறப்படும் அனைத்து புதுமைகளையும் அவர்களும் செய்யுமாறு சொல்லி அனுப்புகிறார்.

ஆனால் அவர்கள் தம் முயற்சிகளில் தோல்வியுற்று, ஏன் தாங்கள் தோற்றோம் என யேசுவிடம் வினவினார்கள். அதற்கு அவரது பதில், "உங்களுக்கு விசுவாசம் இல்லாததுதான் காரணம். கடுகளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், இங்கிருந்து அங்கே பெயர்ந்து போ என இந்த மலையிடம் நீங்கள் சொன்னால் அது அவ்வாறே பெயரும். உங்களால் செய்ய முடியாதது என்று எதுவுமே இருக்காது". (புனித மத்தேயு அதிகாரம்17, வசனம்19)

திரித்துவத்தில் (கடவுள் மூன்று ஆள்களாக உள்ளார் என்பதில்- மொ-ர்) அவருக்கு முழு நம்பிக்கை உள்ளது என்று அவர் சொல்லிவிட்டதால், லாசரை உயிர்ப்பித்தது போல் என்னையும் அவர் கழுவிலேற்றிக் கொன்று பின் உயிர்பெறச் செய்தால் எனக்கு மகிழ்ச்சியே என்றும், அதன்பின் நான் செய்யும் முதல் வேலை கிறித்தவனாக மாறி யேசுவை விசுவாசிப்பததான் என்றும் சொன்னேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"என்னை நீங்கள் கொல்லும் முன் மருத்துவனைக்குப் போவோம். அங்கே ஒரு சவத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு நீங்கள் உயிர் கொடுங்கள். அதன் மூலம் கடவுள் - யேசு கிறிஸ்து - தூய ஆவி ஆகியோரை நீங்கள் மெய்யாகவே நம்புகிறீர்கள் என்பதைச் செயலில் காட்டுங்கள்" என்றேன். வாயை மூடிக் கொண்டார் அவர். எனக்குப் பாராட்டும் கைத்தட்டலும் கிடைத்தது.

யேசு கிறிஸ்துசாதித்ததாகச் சொல்லப்படும் சில அருஞ் செயல்களை இப்போது பார்ப்போம்.

## செயல் விளக்கம் - 35

**நோக்கம் :** நீரை திராட்சை ரசமாக மாற்றுதல்.

இந்த நிகழ்ச்சி புனித ஜான் நற்செய்தி அத்தியாயம் 2 வரிகள் 1-11இல் விவரிக்கப்பட்டுள்ளது. கலிலேயாவில் உள்ள கானானில் நடைபெற்ற ஒரு திருமண விழாவில் யேசு கலந்து கொண்டார் என்று அதில் சொல்லப்பட்டுள்ளது.

திராட்சைச்சாறு எல்லாருக்கும் போதுமான அளவில் இல்லை. அங்குள்ளவர்களிடம் ஏசு தண்ணீரைக் கொண்டு வருமாறு சொன்னார். அது கொண்டு வரப்பட்டதும் அங்கிருந்த ஆறு கல்சாடிகளில் அதை ஊற்றுமாறு சொன்னார். ஆறு கல்சாடிகளில் ஊற்றப்பட்ட நீர் திராட்சைச் சாறாக மாறிவிட்டது!

அந்த நேரத்தில் நான் அங்கு இருந்திருந்தால் ஏன் ஆறு கல்சாடிகளில் நீரை ஊற்றியாக வேண்டும் என்று கண்டிப்பாகக் கேட்டிருப்பேன். நீரை மெய்யாகவே 'ஒயினாக' மாற்ற அவரால் கூடுமானால், நீரை எடுத்து வந்த பாத்திரத்தில் வைத்தே அதை ஒயினாக மாற்றயிருக்கவும் அவரால் முடிந்திருக்குமே!

**தேவை:** ஒரு நீள தம்ளர். அதற்குள் பொருந்தக்கூடிய ஒரு குட்டைத் தம்ளர். அதன் விளிம்பு லேசாக வெளியே நீட்டியிருக்க வேண்டும். இன்னொரு அலுமினிய தம்ளர். இதை மேற்படி இரு தம்ளர்கள் மேல் கவிழ்த்தினால் குட்டை தம்ளர் அதற்குள் சிக்கிக் கொள்ள வேண்டும்- வெளியில் தெரியக்கூடாது. நீர், திராட்சை மது.

**செய்முறை :** நீள தம்ளரில் மதுவை நிரப்பி குட்டை தம்ளரை அதன் மேல் பொருத்தவும். நீள தம்ளரை இடதுகையால் எடுத்து, அதில் நீரூற்றி அதன்மேல் அலுமினிய தம்ளரை கவிழ்த்தி அழுத்தவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூடிய தம்ளர் மேல் உங்கள் கைகளை அசைக்கவும். அலுமினிய தம்ளர் மூடியை அகற்றி, அடிப்புறம் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி மேசை மேல் மெதுவாக வைக்கவும். மதுவை விநியோகிக்கவும்.

நீண்ட தம்ளரின் மேல் அலுமினிய தம்ளர் வைக்கப்பட்டு அழுத்தப் பட்டதும் நீருள்ள குட்டை தம்ளர் அதில் மாட்டிக் கொள்கிறது. நீளத் தம்ளரிலோ ஏற்கனவே திராட்சை மது இருக்கிறது.

யேசு கிறிஸ்து உட்பட்ட எல்லாக் கடவுளரின் வட்டு அவதாரமென தன்னைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்ளும் சத்திய சாயிபாபா நீரை அமுதமாகவும் பெட்ரோலாகவும் டீசலாகவும் தான் மாற்றி இருப்பதாகக் கூறிக் கொள்கிறார்.

இந்த ஆற்றல்கள் அவருக்கு இருந்தால் இந்த மாற்றத்தை அவர் ஏன் சொந்த பாத்திரத்தை வைத்தே செய்கிறார்?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நான் அங்கு இருந்திருந்தால், கிணற்றிலுள்ள நீரைத் திராட்சை ரசமாக மாற்றிவிடும்படியும் எந்த நேரத்திலும் மக்கள் கிணற்றுக்குச் சென்று மதுவை இறைத்துக் கொள்ளட்டும் என்றும் நிச்சயம் யேசுவிடம் கேட்டிருப்பேன்.

அப்போது மட்டுமே யேசுவுக்கு நிசமாகவே அற்புத சக்தி உண்டு என்பதை ஒருவர் ஏற்க முடியும்.

இதையே இன்றைய அவதாரங்களான சத்திய சாயிபாபாவைப் போன்றவர்களிடம் நான் கேட்கிறேன். தன்சொந்த பாண்டங்களிலும் டப்பாக்களிலும் உள்ள நீரை அமுதமாகவும் பெட்ரோலாகவும் மாற்றிக் காட்டுவதற்குப் பதிலாக ஒரு கிணற்றையோ நீர்த் தேக்கத்தையோ அமுதமாக அல்லது பெட்ரோல்ாக அவர் மாற்றி விடட்டும்.

அப்போது அவரது தெய்வீக ஆற்றல்களை நாம் ஏற்றாக வேண்டி இருக்கும். இயற்கையில்கூட ஒரு எண்ணெய்க் கிணற்றிலிருந்து கச்சா எண்ணெயைத்தான் வெளியெடுக்க முடிகிறது. ஆனால் ஒரு நீர்க்கிணறு நேராக பெட்ரோலையே உற்பத்தி செய்ய முடியுமானால் பெட்ரோ - வேதிக் கட்டுமானங்களை நம் நாடு அமைக்கத் தேவையே இராது. அருஞ்செயல்களின் வரலாற்றில் இதுவரை இதை எந்த அவதாரமும் செய்யாதது பரிதாபத்துக்குரியதே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உணவைப் பெருக்குதல்

ஐந்து ரொட்டித்துண்டுகளை 5000 ஆகவும் ஏழுதுண்டுகளை 7000ஆகவும் யேசு பெருகச் செய்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில் பாண்டவர்களாகிய ஐந்து சகோதரர்களின் மனைவி திரௌபதை இரண்டு சோற்றுப் பருக்கைகளைக் கொண்டு நூற்றுக் கணக்கானவர்களுக்கு உணவளிக்கும் விதத்தில் அவற்றைப் பெருகச் செய்தாள் என்று கூறப்பட்டுள்ளது. சத்தியசாயிபாபா கூட தன் பக்தர்களுக்கு உணவளிக்க உணவைப் பெருகச் செய்வதாகக் கூறப்படுகிறது.

ஒரு கோதுமை மணியை விதைத்தால் ஒரு வேளை 500 கோதுமை மணிகளை அறுவடை செய்ய முடியலாம். ஆனால் தானியம் சமைக்கப்பட்டு விட்ட பின் அது பன்மடங்காகப் பெருகவே முடியாது.

1940களின் ஆரம்பத்தில், சமைத்த உணவும் மெய்யாகவே பெருகமுடியும் என்பதை மெய்ப்பிக்க மக்கள் ரொட்டித் துண்டுகளையோ சப்பாத்தியையோ ஈரத்துணியில் பொதிந்து வைத்தார்கள். ஒரு வாரம் அல்லது ஒரு மாதம் கழித்து அதைத் திறந்து பார்த்தால் அது பெருகியிருப்பது காணப்பட்டது.

இந்த அதிசயத்தைக் கண்ட விசுவாசிகள் திகைத்துப் போனார்கள். ஆனால் ஈரத்துணிக்குள் வைக்கும் ரொட்டி அல்லது சப்பாத்தியில் வளர்ந்திருந்தது காளான்தான்! இதில் இயற்கைக்கு மீறிய காரியம் ஒன்றுமில்லை.

## செயல்விளக்கம் - 36

**நோக்கம் :** சோளப்பொறி (பாப்கான்), பிஸ்கட், மிட்டாய் இவற்றை ஒரு பாத்திரத்தில் போட்டால் பன்மடங்காகப் பெருகுதல்.

**தேவை :** நீளமான உலோகப் பாத்திரம், அதற்குள் பொருந்தி விளிம்பு மட்டும் சற்று வெளியே நீட்டியபடி இருக்கும் குட்டைப் பாத்திரம், நீளமான இறுக்கமான மூடி; சோளப்பொரி/ பிஸ்கட்டுகள்/ மிட்டாய்கள்.

**செய்முறை :** பெரிய கொள்கலத்தில் சோளப் பொரியைத் திணித்து நிரப்பவும். சிறிய கொள்கலத்தை அதற்குள் செருகவும். பாத்திரத்தையும் மூடியையும் பார்வையாளர்களிடம் காட்டவும். அவற்றை ஒரே நேரத்தில் தலை கீழாகத் திருப்பவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்திரத்தின் வாய் உங்களைப் பார்த்தும் மூடியின் வாய் பார்வையாளர்களைப் பார்த்தும் இருக்கட்டும்.

பாத்திரத்தில் ஒரு பொரியைப் போடவும். பெரிய மூடியால் மூடவும். உங்கள் கைகளை மூடியின்மேல் அசைக்கவும். பாத்திரத்துக்குள் இருக்கும் பொரியை வெளியே கொட்டவும்.

உணவை அல்லது ரொட்டியை மிகப் பெருமளவில் பெருகச் செய்ய நீங்கள் விரும்பினால் அவற்றை மேடைக்கடியிலோ மேசைக்கடியிலோ நிரப்பிக் கொள்ள வேண்டும். கைவிட்டு எடுக்குமளவு அதில் ஒரு துவாரம் இருக்க வேண்டும். இதன் மேல் துவாரம் உள்ள ஒரு மேசை விரிப்பு போடப்பட்டு அந்தத் துவாரம் துணியால் மறைக்கப்படுகிறது. மேசையடியிலிருந்து அதை அகற்றிவிட முடிய வேண்டும்.

இந்தத் துளையின் மேல் அடிப்பகுதி இல்லாத ஒரு பாத்திரம் வைக்கப்படுகிறது. பின் அந்த காலிபாத்திரத்தில் ரொட்டியைப் போடவும். பின் அடியில் நீங்கள் சேமித்து வைத்ததிலிருந்து வேண்டிய அளவு ரொட்டிகளை எடுக்கவும். அதை உங்களுக்கு எடுத்துக் கொடுக்க / மேசை அடியில் ஒரு சிறுவன் மறைந்திருக்க வேண்டும்.

ஒரு மணல்குன்றில் ஐந்து ரொட்டிகளை 5000 ரொட்டிகளாக யேசு கிறிஸ்து உருமாற்றினார்.

இதேபோன்ற ஒரு அற்புதம் தேசியத் தொலைக்காட்சியில் ரஜினிதொடரில் ஒளிபரப்பப்பட்டது. பக்தர்கள் எந்தப் பழத்தைக் கேட்டாலும் காலி பாத்திரத்திலிருந்து எடுத்துத் தரும் சாமியார் ஒருவரை நாயகி பிரியா தெண்டுல்கர் அந்தத் தொடரில் அம்பலப் படுத்துகிறார்.

மேடைக்கடியில் எல்லாப்பழங்களும் வைக்கப்பட்டிருக்கும். பாத்திரம் காலியாக இருப்பது காட்டப்படுகிறது. மேடையில், அடியில் ஓட்டை உள்ள குறிப்பிட்ட ஓரிடத்தில் அது வைக்கப் படுகிறது.

பார்வையாளர்கள் கேட்ட பழத்தை திறப்புள்ள அடிப்பாகம் வழியாக எடுத்து நீட்டுகிறான் அடியில் ஒளிந்திருக்கும் ஆள். பிரியா மேடையின் அடிப்பக்கம் சென்று அந்த ஆளைக் கட்டிப்போடுகிறார். தவறான பழத்தை எடுத்து நீட்டுகிறார். சாமியார் அம்பலப்படுகிறான்.

சூரியன் மறைந்த பின் இருக்கும் மங்கல் வெளிச்சத்தில் ஒரு புளிய மரத்திலிருந்து பலவிதமான பழங்களைச் சத்திய சாயிபாபா உருவாக்கித் தந்ததாகக் கூறப்படுகிறது. அவரது சீடர்கள் கேட்கும் எந்தப் பழமானாலும் உண்டாக்கித் தரப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்கூட்டியே சேர்த்து வைத்துக் கொள்ளாமல் ஒரு புளிய மரத்திலிருந்து எவரும் பலவிதமான பழங்களை உண்டாக்கித் தரமுடியாது.

அவரது ஆசிரமத்தில் அதிக பக்தர் கூட்டம் திரள அவர் வாழ்வின் ஆரம்பகட்டத்தில் இந்த வித்தையை அவர் செய்தார். இப்போது இதையும், உணவைப் பெருக்கிக் காட்டும் சாகசத்தையும் அவர் நிறுத்திவிட்டார்.

❋

## செயல் விளக்கம் -37

**நோக்கம் :** கன்னி மேரி கண்ணீர் வடித்தல். அவர் உடம்பின் வியர்வைகூட உப்புக் கரித்தல்.

1988 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் கன்னிமேரியின் சிலைகள் அழத் தொடங்கின! அந்த கண்ணீர் உப்புக் கரித்தது. அது நிசமான கண்ணீர் என்றே நம்பப்பட்டது. கேரளாவிலும் இது நடந்தது.

**தேவை :** சீனாக் களிமண்ணாலோ (பிளாஸ்டர் ஆப் பாரிஸ்) களிமண்ணாலோ செய்த உட்கூடான கன்னிமேரி சிலை. இரு கண்களில் இரு துளைகள். அதற்குள் உப்பும் நீரும் நிரப்பப்பட்டு அடிப்பாகம் பூசி மூடப்படுகிறது.

**செய்முறை :** சிலையின் உட்குழியில் நிரம்பியுள்ள உப்பு ஈரப்பதத்தில் கரைந்து இரு கண்துளைகள் வழியாக கண்ணீர்போல் சொட்டுகிறது. களிமண்ணிலிருக்கும் நுண்துளைகள் வழியாக கசியும் நீர் வியர்வையாகக் கொள்ளப்படுகிறது.

❋

## செயல் விளக்கம் - 38

### கடவுள் சிலைகள் கண்ணீர் வடித்தல்

ஆரம்ப நாட்களில் இந்து சாமிகளும் அழுதுள்ளன! அரசன் ஏதோ தவறு செய்துவிட்டான், தெய்வக்குற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதைக் குறிக்கும் அபசகுனமாக அது கருதப்பட்டது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மைசூர் மகாராசா, மைசூர் அரசுக்கு சர். மீர்சா இசுமாயில் என்னும் முசுலீமைத் திவானாக நியமித்தபோது மைசூரிலிருந்த சாமுண்டீசுவரி தேவி சிலை அழத்தொடங்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்து ராச்சியத்தின் திவானாக ஒரு முசுலீம் நியமிக்கப்படுவதை புரோகிதர்களும் இந்து மத வெறியர்களும் விரும்பவில்லை.

சாமுண்டீசுவரிதான் மைசூர் அரச குடும்பத்தின் குலதேவதை யாகும். பூசாரிகள் மகாராசாவிடம் ஓடிச்சென்று, இந்த நியமனத்தால் தேவி மனம் கசந்து விட்டாள், அழுது கொண்டிருக்கிறாள் என்றார்கள்.

அந்தச் செய்தியை விசாரிக்க ஒரு புலனாய்வு அதிகாரியை திவான் அனுப்பி வைத்தார். அப்போது அந்த சூழ்ச்சி அம்பலமானது.

**தேவை :** முடிசூடிய கடவுள் சிலை. தலையிலிருந்து கழுத்து வரை உட்கூடாக இருக்க வேண்டும். கிரீடத்துக்குள் ஒரு திறப்பும், கண்களில் இரு துளைகளும் இருக்க வேண்டும். நீர், மெழுகு.

**செய்முறை :** சிலையின் கிரீடத்தில் நீர் நிரப்பி, கண் துளைகளை மெழுகால் அடைத்து விடவும். கண்களில் இருந்து மெழுகை எடுத்துவிட்டால் கண் துளைகள் வழியாக நீர் சொட்டும்.

## இசுலாமிய அருஞ்செயல்கள்

கடவுளைத் தவிர வேறு எந்த மனிதப் பிறவியாலும் எந்த அருஞ்செயலையும் சாதிக்க முடியாது என்று கூறும் மிகச் சில மதங்களில் இசுலாம் ஒன்று. ஆனாலும் ஒரு மதம் பிழைக்க வேண்டுமானால் அருஞ்செயல்கள் மிகவும் தேவை ஆகிவிடுகிறது. சில மசூதிகளுக்கும் தர்காக்களுக்கும் நாம் போய்ப்பார்த்தால், அங்கு பல அருஞ்செயல்கள் நடைபெறுவதாக நம்பப்படுவதைக் காண முடியும்.

எல்லாச் சிலைகளையும் சிலை வழிபாட்டையும் தீர்க்கதரிசி முகமதுநபி ஒழித்து விட்டாலும் அவற்றை முற்றிலுமாக ஒழிப்பதில் அவர் தவறிவிட்டார். காபாவில் முசுலீம்கள் வழிபடும் ஒரு கல் மிச்சம் உள்ளது.

நிகழ்காலம் மற்றும் வருங்காலம் பற்றிய பயத்தால் அப்பாவி மக்கள் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதற்கு இதுபோல் ஏதாவது தேவைப்படுகிறது.

சரியான கல்வி மட்டுமே யதார்த்தத்தை எதிர்கொள்ளும் துணிவுள்ளவர்களாக, அச்சமற்றவர்களாக மக்களை ஆக்க முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் மகாராட்டிரத்தில் இருந்தபோது சிவபுரியில் உள்ள ஒரு தர்காவில் 70 கிலோ எடையுள்ள ஒரு கல்லை 11 பக்தர்கள் விரல் நுனியில் தூக்கினார்கள் என்று அறிந்தேன். அது ஒரு அருஞ்செயலாக கருதப்பட்டது. எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த காமராலி தர்வீசு என்னும் முசுலீம் ஞானி புதைக்கப்பட்ட இடம் அது.

பதினொரு விசுவாசிகள் கல்லின் நடுவில் தம் சுட்டு விரல்களைக் கொடுத்து, காமராலி தர்வீசின் நாமத்தைப் பாடியவாறே, அந்த மணல்பாறாங்கல்லை ஒரே நேரத்தில் தம் விரல்களில் தூக்கினார்கள்.

அதே போன்ற 70 கிலோ எடையுள்ள கல்லை நான்கே பேர் தம் சுட்டுவிரல்களில் தூக்க முடிவதை நாம் செய்து காண்பித்தோம்.

## செயல் விளக்கம் - 39

**நோக்கம்:** நான்கு உதவியாளர்கள் சேர்ந்து 70 கிலோ எடையுள்ள கல்லைத் தம் சுட்டு விரல்களில் தூக்குதல். அதன் பாரம் தெரிவதில்லை.

**தேவை :** 70 கிலோ எடையுள்ள உருண்டைக்கல்.

**செய்முறை :** கல்லின் நான்கு புறமும் உங்கள் சுட்டுவிரலை அடிப்பகுதியில் வைத்த படி நிற்கவும். ஒன்று, இரண்டு, மூன்று என்றதும் ஆயத்தமாகிக் கொள்ளவும். தூக்கு என்றதும் விரல் முனைகளைக் கொண்டு ஒரே நேரத்தில் கல்லை உயர்த்தவும்.

உதவியாளர்கள் எந்த பாரத்தையும் உணராமலே கல் உயர்கிறது. ஏனெனில் 70 கிலோ எடை 4 விரல்களுக்கும் பகிர்ந்து விடுகிறது. அப்படியானால் ஒவ்வொரு விரல் மீதும் 17 கிலோ எடை மட்டுமே இருக்கும். தூக்கு என்றவுடன் நான்கு பேரும் ஏககாலத்தில் விசை கொடுத்துத் தூக்குகிறார்கள். மேலும் கல்லைத் தூக்குவதற்காக தரப்படும் முதல் விசையின் உந்தத்தால் விரல்களில் அதன் எடை குறைந்து தெரிகிறது.

## செயல் விளக்கம் - 40

**நோக்கம் :** 70 கிலோவுக்கு மேல் 150 கிலோ வரை எடை உள்ள மனிதரை நான்கு உதவியாளர்கள் தம் விரல் நுனிகளால் எந்த சிரமமும் இன்றி தூக்குதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னைத்தானே ஆவியுலகத் தொடர்புள்ளவராக சொல்லிக் கொள்ளும் யூரி கெல்லர் இந்த வித்தையைச் செய்துகாட்டி இது தனது மாந்திரிக ஆற்றலால்தான் என்று உரிமை பாராட்டுகிறார்.

**தேவை :** ஒரு முக்காலி, 70 கிலோ எடைக்கு மேல்பட்ட ஒரு மனிதர், அவரைத் தூக்க உதவியாளர்கள் நால்வர்.

**செய்முறை :** தூக்கப்பட வேண்டிய ஆள் முக்காலியில் நேராக, கைகளை முழங்கால்கள் மேல் வைத்து, கால்களை நேராக வைத்து உட்கார்கிறார். மற்ற நான்கு உதவியாளர்களும் தம் இரு கைகளையும் இறுக மூடுகிறார்கள். சுட்டு விரல்களைத் தவிர மற்ற எல்லா விரல்களையும் மூடிச் சுட்டுவிரலை ஒன்றை ஒன்று தொட்டவாறு நேராக வைக்கிறார்கள்.

உயரமான இரு உதவியாளர்கள் பின்புறம் நின்று, தூக்கப்படவேண்டிய ஆளின் அக்குளின் அடியில் தம் சுட்டுவிரல்களைக் கொடுக்கிறார்கள். மற்ற இருவர் தம் சுட்டு விரல்களை அவருடைய முழங்கால் இணைப்புகளின் அடியில் கொடுத்துத் தூக்கத் தயாராகிறார்கள். 1, 2, 3 சொன்னதும் தயாராகி 'தூக்கு' என்றதும் தூக்கிப் பின் மெதுவாக இறக்குகிறார்கள்.

ஒரே நேரத்தில் தூக்கும்போது ஆள் மேலே உயர்த்தப் படுகிறார். வழிபாட்டிடங்களில் இதுபோன்ற நூற்றுக்கணக்கான அற்புதங்கள் நடக்கின்றன. ஒவ்வொரு மதத்தின் புனிதநூல்களிலும் அவை விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் இன்னொரு இடத்தில் நாம் பார்ப்போம்.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

6

## பதஞ்சலி யோக சூத்திரங்களும் சித்திகளும்*

காம ஆற்றலை (குண்டலினி சக்தியை) எழுப்பும் முறையை பதஞ்சலி யோகம் விவரிக்கிறது. மூலாதார சக்கரத்தில் இருந்து அதைக் கிளப்பி, சுசும்மா நாடி வழியாகவும் சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை, இறுதியான சகஸ்ராரம் ஆகிய ஆறு சக்கரங்கள் வழியாகவும் அதை உயர்த்தி, சகஸ்ராரத்தில் ஆன்மாவும் பரமான்மாவும் - சிவமும் சக்தியும் - கூடுவது நிகழ்ந்து, கடவுளுடன் ஒன்றாகும் விதத்தை அது விளக்குகிறது.

இதன் போக்கில் 64 சிறு சித்திகளையும் 8 சிறப்பு சித்திகளையும் (அஷ்ட சித்திகள்) ஒருவர் அடைந்து கொள்கிறார். அவையாவன :

1. அணிமா : தான் விரும்புகிறபடி சிற்றுரு எடுக்கும் திறன்.
2. மகிமா : தான் விரும்புகிறபடி பேருருக் கொள்ளும் திறன்.
3. லகிமா : தான் விரும்பும் எந்த அளவுக்கும் எடைக்குறைவாக ஆகும் திறன்.
4. கரிமா : தான் விரும்பும் அளவு எடை மிகுந்தவராக ஆகும் திறன்.
5. பிராப்தி : எவ்வளவு தொலைவில் இருக்கும் பொருளையும் இருக்குமிடத்தில் இருந்தே எட்டிப்பிடித்து விடும் திறன்.
6. பிராகாமியம் : ஒரு பொருளைத் தான் விரும்பும் காலம் வரை தன்னிடமே வைத்திருக்கும் திறன்.
7. இசித்துவம் : பொருள்களை உருவாக்கவும் கட்டுப்படுத்தவும் கூடிய திறன்.
8. வசித்துவம்: எல்லாரையும், எல்லாவற்றையும், மரணத்தையும் கூட வென்று கீழ்ப்படுத்தும் திறன்.

ஒரு காலத்தில் நானும் குண்டலினி யோகத்தை நம்பினேன். சித்திகளில் வல்லமைபெற வேண்டுமென மிகவும் விரும்பினேன். என் 19 வயதில் ஒரு குருவைத் தேடிப் போனேன்.

* சித்திகள் : இயற்கையை மீறிய சக்திகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடு முழுவதும் பயணம் செய்தேன். ரிசிகேசத்தில் ஒரு யோகியைக் கண்டேன். அவர் எனக்குக் குண்டலினி யோகத்தைக் கற்றுத்தர ஒப்புக் கொண்டார். அதற்கு முன்பே வீட்டில் யோகம் பயில அமர்த்தப்பட்டிருந்த யோக ஆசான் மூலம் சுமார் 300 விதமான ஆசனங்களையும் மூச்சுப்பயிற்சியையும் நான் கற்றுத் தேர்ந்திருந்தேன்.

மந்திரங்களின் ஆற்றலைத் தெரியப்படுத்த என்னிடம் ஒரு தாளில் இரட்டை கோடுகளில் சமஸ்கிருதத்தில் 'ஓம்'என்பதை வரையச் சொன்னார் யோகி. பின் அதைத் தன் பூசை அறைக்கு எடுத்துச் சென்று கதவை தாளிட்டுக் கொண்டார்.

சுமார் ஒரு மணிநேரம் கழித்து அவர் வெளியே வந்தார். ஒரு கஞ்சா பீடியை எடுத்து பற்ற வைத்தார். நான் ஓம் வரைந்திருந்த பகுதியைத் தீயால் தொட்டார். ஆச்சரியப்படும்படியாக, ஓம் என எழுதியிருந்த பகுதி மட்டும் மின்னும் ஒளியுடன் எரிந்தது. தாளின் பிற பகுதி ஒன்றும் ஆகவில்லை.

ஓம் எனும் மந்திரத்தின் ஆற்றலைப்பற்றி எனக்கு ஒரு சொற்பொழிவு ஆற்றினார். ஓம் மீது தியானித்தால் எல்லாமே நடக்கும் என்றார். இந்த மந்திரத்தை தியானிக்கும்படி என்னிடம் சொன்னார். அதன் மீது நான் மனத்தைக் குவிக்க முடிந்தால் என்னாலும் ஓமை எரிக்க முடியும் என்றார்.

இந்த நேரத்தில் இன்னொரு ஆளும் குண்டலினி யோகம் கற்க வந்தார். அவரிடம் இரட்டைக் கோடுகளில் ஓமை வரையச் சொன்னார் யோகி. மறுபடியும் யோகி தன் பூசை அறைக்குள் போனதும் நான் ஒரு முக்காலியில் ஏறி காற்றுப்போக்கி வழியாக எட்டிப்பார்த்தேன். எழுத்தின் மேல் ஏதோ ஒரு திரவத்தை யோகி தடவிக் கொண்டிருந்தார். பல தடவைகள் மேலே மேலே பூசினார். ஒவ்வொரு பூச்சும் காயும் வரை காத்திருந்து பின் மறுபடியும் பூசினார். பின்வரும் சோதனை அவரது ரகசியத்தை விளக்குகிறது:

**செயல் விளக்கம் - 41**

**சின்னம் மட்டும் எரிகிறது - தாள் எரிவதில்லை.**

**தேவை :** 25 மி.லி. நீரில் பொட்டாசியம் நைட்ரேட் பூரித கரைசல். அத்துடன் 5மி.லி. கோந்து கலந்து கொள்க. கெட்டியான பத்திரத்தாளில் சமஸ்கிருதத்தில் ஓம் என எழுதிக் கொள்க - எல்லாக் கோடுகளும் இரட்டைக் கோடுகளால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். தாளில் கரைசலைத் தடவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெல்லிய குஞ்சம் உள்ள ஓவிய தூரிகை, சிகரெட், தீப்பெட்டி.

**செய்முறை :** தூரிகை கொண்டு எரிய வேண்டிய எழுத்தின் மீது நான்கு தடவைகள் கரைசலை தடவவும். ஒவ்வொரு பூச்சும் காயும் வரை காத்திருந்து பூசவும். ஒரு சிகரெட்டைப் பொருத்தி சின்னத்தின் தலைப்பை அதனால் தொடவும். பொட்டாசியம் நைட்ரேட் கரைசல் பட்ட இடத்தில் எல்லைக்கோடு வழியாக எழுத்து எரிந்து தாளின் பிறபகுதி எரியாமல் இருக்கும்.

## ஓம் எனும் மந்திரத்தின் பொருள் விளக்கம்

நமது சாத்திரங்களின் படி இரண்டு விதமான மந்திரங்கள் உள்ளன. ஒன்று குறியீட்டு ரீதியானது, மற்றது அடையாள ரீதியானது. அவற்றையும் அவற்றின் ஆற்றல்களையும் உபநிதடங்கள் விளக்குகின்றன. அடையாள மந்திரங்கள் ஓதுவதற்கு உரியன அல்ல, பழகுவதற்கு உரியன என்று சொல்கிறார்கள்.

ஓம் என்பதே இந்துக்களின் மிகப்புனிதமான, மிக சக்தி வாய்ந்த மந்திரம். அதை படைப்பு மந்திரம் (சிருஷ்டி மந்த்ரா) என்கிறார்கள்.

மனிதர்கள் மட்டுமே இயற்கையை (தமக்கேற்ப) பயன்படுத்திக் கொள்ளும் ஒரே உயிரினம். இயற்கையில் இருந்து பெற்ற அறிவின் மூலம் மட்டுமே மனிதரால் அதை (தமக்கேற்ப) பயன்படுத்த முடிகிறது. மற்ற உயிரினங்களோ இயற்கையினால் பிழைத்திருக்கின்றன, அவ்வளவே.

பெயர் தராமல் இயற்கையில் எதையும் வரையறுக்கவோ அடையாளப்படுத்தவோ சோதனை செய்யவோ அதைப் பற்றிய அறிவைப் பெறவோ முடியாது. மனிதர்கள் மட்டுமே மொழியைக் கண்டுபிடித்து அதன் மூலம் இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஒரே உயிரினம்.

மனிதர்கள் உருவாக்கிய முதல் மொழி சித்திர லிபி. அதாவது படக்குறிகளால் ஆனது. பாறைகள் மீது சின்னங்கள்,குறியீடுகள், கோட்டுப்படங்கள் ஆகியவற்றால் மனித வாழ்வுக்கு கேடானவற்றையும் உதவிசெய்பவற்றையும் வரைந்தனர். புராதன மனிதர்கள் தம் குடியிருப்பாக பயன்படுத்திய வரலாற்றுக்கு முந்திய குகைகளில் அத்தகைய குறியீடுகளைக் காணமுடியும்.

வன விலங்குகளின் அச்சுறுத்தல், இயற்கைப் பேரழிவுகளின் அபாயம், கொள்ளை நோய், சாவு முதலியவை; குழந்தைகள் பிறப்பது எப்படி என்பதை மனிதர் சிந்திக்குமாறு செய்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் பயனே படைப்பு மந்திரமான ஓம் என்னும் படைப்புக் குறியீடு. ஓம் - ஐ ஒருவர் பயிற்சி செய்தால் அவரால் மலைகளைத் தரைமட்டமாக்க முடியும், ஆறுகளின் பாதையை மாற்றிவிட முடியும், வானத்தை பூமியாகவும் பூமியை வானமாகவும் புரட்ட முடியும், நரகத்தைச் சொர்க்கமாகவும் சொர்க்கத்தை நரகமாகவும் உருமாற்ற முடியும் என்றெல்லாம் பெருமை பேசப்படுகிறது.

ஓம் என்பது ஆண் - பெண் கூடலின் குறியீடு. அப்போது விந்தணுவும் கருமுட்டையும் ஒன்றுகூடி கருத்தரிப்பு நிகழ்கிறது. ஆனால் மலைகள் சமப்படுத்தப்பட்டதும் அணைகளும் கால்வாய்களும் கட்டி / வெட்டி ஆறுகளின் திசைகள் திருப்பப்பட்டதும், தொழில்நுட்பத்தின் உதவியாலும் மனித சக்தியின் உதவியாலும்தான்.

நரகம் சொர்க்கமாகவும் சொர்க்கம் நரகமாகவும் மாறுவது ஒருவரின் மனப்பான்மையினால்தான்; அணுகுமுறையினால்தான். மனிதர் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றம் அனைத்தும் அவர்களின் சொந்த முயற்சியினால்தான் ஏற்பட்டது. மொழியும் அதற்கு உதவியது. மொழியின் உதவியால்தான் கற்பனை செய்யவும், சோதனைகள் - தர்க்கம் - சீர்தூக்கி / பகுத்துப் பார்த்தல் ஆகியவை மூலம் முடிவுகளைப் பெறவும் மனிதருக்கு ஆற்றல் கிட்டியது.

எனவே ஓமெனும் மந்திரத்தின் (அதாவது படைப்புச் செயலின், அதாவது ஆண் - பெண் சேர்க்கையின்) பலனாக வந்த மனிதர்தான் மிகவும் புனிதமான, மிகவும் சக்தி வாய்ந்த மந்திரமாவார். ஏனெனில் அமைதியையும் முன்னேற்றத்தையும் கொண்டு வருவதோ அழிவையும் கேட்டையும் கொண்டுவருவதோ நமக்குள்தான் உள்ளது.

மாறாக ஓம் மந்திரத்தை ஒருவன் வெறுமனே ஓதிக்கொண்டிருந்தால் ஒரு புல்லின் இதழ்கூட அசையாது! நீரின் குறியீடு $H_2O$ என நாம் அமைத்துள்ளோம். ஆனால் அதனை ஒருவன் கோடி தடவை உச்சரித்தாலும் அதனால் துளி தண்ணீரைக்கூட உண்டாக்க முடியாது. நீர்வாயுவின் (H) 2 மூலக்கூறுகளையும் உயிர்வாயுவின் (O) ஒரு மூலக்கூறையும் எடுத்து பிணைத்துதான் நீரை உண்டாக்க முடியும்.

பின்னர் நான் சுவாமி சிவானந்தர் நிறுவிய தெய்வ நெறிக் கழகத்தின் (டிவைன் லைப் சொசைட்டி) உறுப்பினரானபோது, அவர் மேற்பார்வையின்கீழ் நிசமான ஆர்வத்துடன் குண்டலினி யோகத்தைப் பயில ஆரம்பித்தேன். பயிற்சியுடன் கூடவே சுவாமிஜி அவர்கள் இயற்றியிருந்த குண்டலினி யோகம் பற்றிய ஆய்வு நூலையும் நான் கற்க வேண்டியிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குண்டலினி ஆற்றல் எழுப்பப்பட்டதும் ஒரு மனிதர் உடல் நலம் மிக்கவராகவும் எல்லா நோய்களிலிருந்தும் விடுபட்டராகவும் இருக்கிறார் என்று அந்நூலில் சொல்லப்பட்டிருந்தது. சுவாமி சிவானந்தருக்கு ஆஸ்துமா, சர்க்கரை, இதயநோய், வாதம், ஊளைச்சதை, கண்நோய் ஆகியவை இருந்தன. ஒரு குரு என்ற முறையில் அவர் தன் குண்டலினியைச் சகஸ்ராரம் வரை எழுப்பித் தன்னைத்தானே குணப்படுத்தி இருக்க வேண்டும். அவர் ஏன் நோயாளியாக இருந்தார் என நான் வியந்தேன்.

அதற்கு அவரது பதில், இவை அவரது முன்பிறவி கருமங்களின் விளைவு, அவற்றைத் துடைத்தெறிய அவர் விரும்பவில்லை என்பதாகும். இந்த பதில் எனக்கு நிறைவைத் தருவதாய் இருந்தது.

என்னை வாதித்த இரண்டாவது கேள்வி, நிர்விகல்ப சமாதியை அடைந்தவர்கள் அதன்மூலம் மரணத்தை வென்றுவிட்ட பின்பும் ஏன் சாகிறார்கள் என்பது.

மேலும் காம ஆற்றல் சுசும்மா நாடி வழியாகவே ஏறுகிறது, இது ஒரு மனோநாடி ; கண்ணால் பார்க்கவோ உடம்புக்குள் தேடிக் கண்டுபிடிக்கவோ முடியாதது; தியானத்தின்போது இதை மனத்தில் உருவகித்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் பதஞ்சலி யோகத்தில் கூறுப்பட்டுள்ளது.

யோக ஆய்வு நூலின் ஆசிரியரான பதஞ்சலி மகரிசி தொடங்கி, குண்டலினி சக்தியைச் சகஸ்ராரத்துக்கு ஏற்றியதாகச் சொல்லிக் கொண்ட எல்லாருமே இறந்துதான் போயுள்ளனர்.

இவர்களில் சீரடி சாயிபாபா, உபசானி பாபா, ராமகிருஷ்ணர், விவேகானந்தர், யோகானந்தர், தயானந்த சரசுவதி, ராமதீர்த்தர், அரவிந்தர், அம்மா, ரமண மகரிசி, சுவாமி சிவானந்தர், சுவாமி ராமதாசர், சுவா மி நித்தியானந்தர், தத்தா பால், முக்தானந்தா, பிரபுபாதர், ரஜனீசு, (சமீபத்தில்) பண்டித கோபிகிருஷ்ணா, ஆனந்த மூர்த்தி ஆகியோரும் அடக்கம்.

இதன் பொருள், அவர்கள் ஒருபோதும் நிர்விகல்ப சமாதியை அடைந்ததே இல்லை என்பதா? இந்த ஞானிகள், குணப்படுத்த முடியாத பல நோய்களால் அவதிப்பட்டவர்கள் என்பதையும் நாம் அறிவோம்.

அடுத்து, காம ஆற்றலை அதாவது விந்தை ஒரு மனநாடி மூலம் ஏற்றுவது எப்படி முடியும்? இக்கேள்விகளை நான் கேட்டபோது, கேள்வி கேட்பதை நிறுத்து, நம்பிக்கை வை, பயிற்சி செய் என்று எனக்குச் சொல்லப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த ஞானிகளின் சாவைப் பொறுத்தவரை, அவர்கள் சாகவில்லை, அவர்களின் ஆன்மா இப்பவும் உயிரோடுதான் உள்ளது என்று சொல்லப்பட்டது. ஒருவர் தன் சட்டையை களைவதுபோல் தம் உடலை அவர்கள் களைந்து விட்டார்கள், அவ்வளவுதான், என்றார்கள்.

அது அப்படியானால் , ஆன்மாக்கள் எல்லாமே அமரத்துவம் பெற்றவைதான் எனப்படுவதால், அதற்காக தனியாக குண்டலினி யோகம் பயில தேவையில்லையே. பயனற்ற கற்பனைகளின் பின்னால் என் வாழ்வை வீணடிக்க நான் விரும்பவில்லை.

எனவே அதில் நம்பிக்கை இழந்தேன். இந்த காலகட்டத்தில் பாபாக்கள் நீர்மேல்நடப்பதையும், முள் / கண்ணாடி / ஆணிப்படுக்கையில் உறங்குவதையும், நெருப்பில் நடப்பதையும், ஒற்றைக்கால் தவம் செய்வதையும், தம் உடம்புகளில் சூலாயுதங்களால் குத்திக்கொள்வதையும் இன்ன பலவற்றையும் நான் பார்த்திருந்தேன். ஆனால் அவையெல்லாம் வெறும் வித்தைகளே.

தியானம், பிராணாயாமம், குண்டலினி யோகம் ஆகியவற்றை பயிலுவதை நிறுத்தினேன். இவையெல்லாம் தன்-வசியமே தவிர வேறில்லை எனக் கண்டேன். பிராணாயாமம் செய்து தியானிப்பதும் வாயால் ஓம் என ஓதுவதும், உடலை கரியமிலவாயுவால் நிரப்பி உடலில் உயிர்க் காற்றின் அளவைக் குறைக்கிறது. இதுவே சமாதி எனக் கருதப்படுகிறது.

அப்படிப்பட்ட மயக்க நிலையில் ஒருவர் தன் காம ஆற்றலானது மனோநாடியான சுசும்மா நாடி வழியாக மேலேறி சகஸ்ராரத்தை அடைகிறது என கற்பனை செய்து கொள்கிறார்.

சமாதி நிலை என்பது ஒரு வசிய உறக்கநிலை தவிர வேறில்லை. வசிய நிலையில் ஒருவர் கடவுளைக் காணவும் சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ அல்லது வேறெங்கோ போகவும் கூட முடியும்.

முன்பிறவிகளை நினைவுகூற வைக்கவும் வேறுபல பிரமைகளை கிளப்பவும் முடியும். இவையெல்லாம் நமது நம்பிக்கைகளைத் தவிர வேறில்லை; நம் உள்மனத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கடந்தகால தகவல்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

ராமகிருஷ்ணரின் சீடர் 'ம' - என்பவர் எழுதியுள்ள ராமகிருஷ்ணரின் வாழ்க்கைக் கதையை நாம் வாசித்தால், காளியை அவர் பார்த்ததாக கூறியபோது அவர் இருந்த மனநிலையை நாம் உய்த்துணர முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவருக்குத் தோன்றிய மாயக்காட்சிகள் எத்தகையதாக இருந்தன என்றால் இயற்கை உபாதைகளைக் கூட அவரால் கவனிக்க முடியவில்லை. அப்படியே, உண்ணவோ உறங்கவோ கூட முடியவில்லை.

இந்த நிலைமையை அத்வைதியான தோடாபுரி என்பவரிடம் ராமகிருஷ்ணர் விவரித்தபோது தோடாபுரி அவரிடம் ஒரு வாளைத் தந்தார். தியானத்தில் காளி தோன்றும்போது அவளது தலையை வெட்டி எறியுமாறு சொன்னார்.

தன் வசியத்தின் மெய்மறந்த நிலையில் காளி தோன்றியபோது அவளைக் கொன்றார் ராமகிருஷ்ணர். அதுமுதல் அத்தகைய மருட்சிகளில் இருந்து அவர் விடுபட்டவரானார். ராமகிருஷ்ணர் காளியைக் கண்டது நிசம் என்றால், அவரைச் சூழ்ந்து இருந்தவர்களும், அவர்களுக்குக் கண்பார்வை இருக்கிறதால், அவளைக் கண்டிருக்க வேண்டும்.

ஆனால் அவரது காளிதரிசனம் அவரது தியானத்தில் மட்டுமே, ஆறாவது புலன் உணர்வு எனப்படும் அவரது மனத்தளவிலேயே ஏற்பட்டது.

இனி சில யோக சித்திகளை ஆராய்வோம்.

## சித்திகள்

### செயல் விளக்கம் - 42

**நோக்கம் :** நாடித்துடிப்பை ( இதயத் துடிப்பை) நிறுத்துதல்.

தாம் சமாதியில் இருக்கும்போது தம் உடலின் செயல்பாடுகள் அனைத்தும் - நாடித் துடிப்பு, இதயத் துடிப்பு எல்லாமே - நின்றுவிடும் என்று சாமியார்கள் உரிமை கொண்டாடுகிறார்கள். தன் நாடியைப் பரிசோதிக்கும்படி மருத்துவரிடம் யோகி கேட்டுக் கொள்கிறார்.

பின் அவர் சமாதிக்குள் ஆழ்கிறார். அவரது ரத்தநாளத்தில் துடிப்பே இல்லாததைக் கண்டு மருத்துவர் அதிர்ச்சி அடைகிறார்.

**தேவை :** இரண்டு எலுமிச்சைகள் அல்லது இரண்டு கைக் குட்டைகள், ஒரு மருத்துவர்.

**செய்முறை :** இரண்டு அக்குள்களிலும் ஒவ்வொரு எலுமிச்சையை வைத்துக் கொள்ளவும். அல்லது கைக்குட்டைகளில் பெரிய முடிச்சு போட்டு அவை அக்குள்களுக்கடியில் இருக்குமாறு தோள்பட்டையில் கட்டவும். மருத்துவர் நாடியைச் சோதித்த பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் தியானம் செய்வதுபோலவும் சமாதிக்குள் ஆழ்வது போலவும் நடிக்கவும்.

அவ்வாறு நீங்கள் செய்யும்போதே அக்குளுக்கு அடியில் உள்ள எலுமிச்சைகளையோ கைக்குட்டை முடிச்சுகளையோ அழுத்தவும். நாடித்துடிப்பு குறைந்து கொண்டே வந்து கடைசியாக அது நின்றே விடுவதை மருத்துவர் காண்கிறார்.

நாடித் துடிப்பு என்பது தமனியில் ரத்தம் ஓடும் இயக்கமே. அக்குள் அடியில் எலுமிச்சையையோ முடிச்சையோ வைத்து அழுத்தினால் ரத்த ஓட்டமும் குறைந்து கொண்டே வந்து பின் நின்று விடுகிறது.

கேரளாவில் கோழிக்கோட்டில் நடந்த அனைத்திந்திய யோகா போட்டியில் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவிக்கு முதல் பரிசு கிடைத்தது. என் நண்பர்களில் சிலர் அவரது புகைப்படத்துடன் இந்த செய்தியை எனக்கு அனுப்பி வைத்தனர்.

அவர் தன் கைகளை வெறுமனே தன் மார்புச்சதைமேல் அழுத்தியே நாடித்துடிப்பை நிறுத்தி யோகா தேர்வர்களை ஏமாற்றிவிட்டார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. முன்பு ஒருமுறை என் சொற்பொழிவுகளில் ஒன்றில் கலந்து கொண்டவர் அவர் என்பதும் பிற்பாடு தெரிந்தது.

## செயல் விளக்கம் - 43

### இதயத் துடிப்பை நிறுத்துதல்

யோகியானவர் பதுமாசனத்தில் அமர்கிறார். அவரது இதயத் துடிப்பை மருத்துவர் பரிசோதிக்கிறார். பின் யோகி ஆழமான மூச்சு விடுகிறார், மூச்சைக் கட்டுப்படுத்தி சமாதிக்குள் போகிறார். அவரது இதயத் துடிப்பு வேகமாகிக் கொண்டே போய் பின் மெதுவாகி வந்து கடைசியில் முற்றிலுமாக நின்றுவிடுகிறது.

**தேவை :** துடிப்புமானி (ஸ்டெதாஸ்கோப்) வைத்திருக்கும் ஒரு மருத்துவர்.

**செய்முறை :** நுரையீரல் நிறைய இயன்ற அளவு காற்றை உள்வாங்கி, அடிவயிறு மற்றும் நெஞ்சுக்குள் அழுத்தமாக மூச்சை உள்நிறுத்திக் கொள்ளவும். இவ்வாறு ஒரு காற்று மெத்தை உண்டாக்கப்பட்டு இதயத் துடிப்புகளை அது இழுத்துக் கொள்கிறது. எனவே மருத்துவர் தம் துடிப்பு மானியைக் கொண்டு அதைக் கண்டறிய முடிவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 44

### உடல் வெப்பத்தை அதிகரித்தல்

யோகி மருத்துவரிடம் தன் உடல் வெப்ப அளவை சோதிக்க சொல்கிறார். அது இயல்பாகவே இருக்கிறது. தியானத்தில் அமரும் அவர் ஒவ்வொரு ஐந்து நிமிடம் கழித்தும் தன் உடல் வெப்பத்தை சோதிக்குமாறு மருத்துவரிடம் கூறுகிறார். 15 -20 நிமிடங்களுக்குள் அவரது வெப்பநிலை 104 பா. வரை உயர்ந்து விடுவதை மருத்துவர் காண்கிறார்.

1990 இல் புது தில்லியிலும் பெங்களூரிலும் நடந்த மறைஞான மாநாடுகளில், தியானத்தின் மூலம் திபெத்திய துறவியால் குளிரைத் தாங்கிக் கொள்ள முடியும் என தலாய்லாமா கூறியதாகப் பத்திரிக்கைகளில் செய்தி வந்தது.

அதிலும் தம் உடல் அம்மண நிலையிலும்கூட அவர்கள் குளிரை உணர்வதில்லை. உடல் வெப்பத்தை அதிகரிப்பதன் மூலம் குளிர்கால குளிரை அவர்கள் கட்டுப்படுத்தும் விதம் - அந்த சாகசம் - மாநாட்டில் செய்து காட்டப்பட்டது.

நடப்பில், இயல்பான உடல் வெப்ப நிலையான 97.6 ° பா. அளவுக்கு மேல் ஒருவரின் வெப்பநிலை உயர்ந்தால் அவர் நோய்வாய்ப்படுவார், காய்ச்சலால் வருந்துவார். 102 °பா. அல்லது அதற்கு மேல் வெப்பநிலை கூடினால் வெப்பமான உடல்நிலையின் போதும் அவர் குளிரால் நடுங்குவார் . ஆக உடல் வெப்ப நிலையை அதிகரிப்பதன் மூலம் குளிரைக் கட்டுப்படுத்த முடியாது.

தோலில் குளிர்ச்சி பட்டு, தோல் துளைகள் வழியாக அது மூளைக்குச் சென்று பதிவானதும்தான் குளிர் உணரப்படுகிறது. எனவேதான் குளிரைத் தடுக்க நாம் வெதுவெதுப்பான ஆடைகளை அணிகிறோம். இவை குளிரை ஈர்ப்பதில்லை.

இவ்வாறு உடல் தன் இயல்பான வெப்பநிலையைத் தக்கவைத்துக் கொள்ள அவை உடலுக்கு உதவுகின்றன. உண்மையில் திபெத்தியருக்கு உதவுவது தியானமல்ல, அவர்கள் தம் உடல்முழுதும் பூசிக் கொள்ளும் யாக் எருமைக் கொழுப்புதான். உடல் தன் வெப்பத்தை விடாது வைத்திருக்க அதுவே உதவுகிறது. தோல்மேல் குளிர் நேரடியாக படாமலும் அது தடுக்கிறது.

**தேவை :** *50 பைசா அளவும் விட்டமும் 8 -10pH* மதிப்பும்*

* வேதியியலில் ஒரு பொருளின் அமில / காரத் தன்மையின் அளவுpH மதிப்பீட்டில் கூறப்படுகிறது- மொ.ர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட சோப்புத்துண்டு; 3 தேக்கரண்டி தேயிலை போட்டு மிக குழம்பாக தயாரித்த ஒரு கோப்பை சூடான தேநீர்; ஒரு மருத்துவர், வெப்பமானி.

**செய்முறை :** உடல் வெப்பத்தைப் பரிசோதிக்கும்படி மருத்துவரிடம் கூறவும். சோப்பை சப்பி சாப்பிட்டு விடவும். வெப்பநிலை இயல்பாக இருப்பதாகவே அவர் காண்பார். இப்போது சூடான தேநீரைக் குடிக்கவும். பிராணாயாமம் செய்வது போல (மூச்சை அடக்குவது போல) நடிக்கவும். ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கு பிறகும் உங்கள் வெப்பநிலையை பரிசோதிக்குமாறு மருத்துவரிடம் கூறவும். ஒவ்வொரு ஐந்து நிமிடத்திலும் அது $1^0$ -$2^0$ பா. ஏறிச்சென்று சுமார் $104^0$ பா. வரை போவதை அவர் காண்பார்.

இது ஒரு வேதி எதிர்வினையே. காரமும் (ஆல்கலி) அமிலமும் ஒன்று சேர்ந்தால் வெப்பம் வெளியிடப் படுகிறது. சோப்பில் காரம் உள்ளது. தேநீரில் 35 % டானிக் அமிலம் உள்ளது. இரண்டும் வயிற்றில் ஒன்றுசேரும்போது எதிர்வினை நடந்து வெப்பத்தை வெளியிடுகிறது. வேதி வினை முடியும்வரை இது நடக்கும்.

சோதனை முடிந்தபின் எவ்வளவு குளிர் நீர் குடிக்க முடியுமோ குடித்து வெப்பத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து விடவும்.

## அந்தரத்தில் மிதத்தல்

இந்த நூற்றாண்டைச் சேர்ந்த அவதாரமான மகரிசி மகேசு யோகி அந்தரத்தில் மிதக்கக் கற்றுக்கொடுப்பதாகக் கூறி ஆயிரக்கணக்கான தன் சீடர்களைச் சுரண்டி இருக்கிறார். 1978இல் புதுதில்லியில் தன் சீடர்களின் முதல் மிதப்பு நிகழ்ச்சியை நடத்தினார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ண ஐயரே கூட சுவிட்சர்லாந்தில் மகேசு யோகியின் மாணவர்கள் மிதந்து காட்டியதை தான் பார்த்ததாக ஒரு கட்டுரையில் எழுதி இருந்தார்.

அவர்கள் 12" கனமுள்ள நுரை மெத்தைகளின் மேல் அமர்ந்து தவளைகள் போல் மேலும் கீழும் தத்திக் குதித்தார்கள். இதுதான் பறத்தலின் முதல் கட்டம் என்கிறார் மகேசு யோகி. 20 ஆண்டுகளாக "ஆழ்நிலைத் தியானம்" பழகிவந்த பின்பும் கூட அவர்கள் இந்த தாவிக்குதிக்கும் கட்டத்தைத் தாண்ட முடியவில்லை!

மற்றவர்களுக்கு அந்தரத்தில் பறப்பதைக் கற்பிக்கும் குரு என்னும் முறையில் முதலில் அவருக்கே பறக்க முடியவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே மிதத்தல் சாத்தியமே என்பதை மெய்ப்பிக்க புதுதில்லியிலிருந்து பழைய தில்லி வரை பறந்து காட்டுமாறு நாங்கள் அவரிடம் கேட்டோம்.

நாங்கள் 10000 ரூபாய் கொண்டுவந்தால், மிதத்தல் சாத்தியம் என்பதை மெய்ப்பிப்பதாக அவர் ஒத்துக் கொண்டார். மறுநாள் காலை இந்தத் தொகையுடன் அவர் வீட்டுவாசலில் தயாராக நின்றோம். அப்போது அவர் தந்த பதில், அந்தரத்தில் மிதக்கும் அவரது யோக சித்தி மற்றவர்களுக்குச் செய்து காட்ட அல்ல என்பதாகும்.

தான் நினைத்த மாத்திரத்தில் பறக்க முடிகிற ஒரு ஆள், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போக அவருக்கு எதற்கு அரை டசன் ஹெலிகாப்டர்கள்? பிறகு ஏன் பறக்கும் நிகழ்ச்சிகளை அவர் நடத்துகிறார்? என நாங்கள் அதிசயித்தோம்.

## செயல் விளக்கம் - 45

### அந்தரத்தில் மிதத்தல்

தன் யோக தண்டத்தை (தடியை) ஒரு அக்குளில் தாங்கி ஒரு முக்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்போல் காட்சியளிக்கிறார் யோகி. அவர் சமாதிக்குள் ஆழ்ந்ததும், அவரது உதவியாளர் முக்காலியை அகற்றியதும், யோகி அந்தரத்தில் அப்படியே இருப்பதுபோல் தோன்றுகிறது.

**தேவை :** 3 அடி சதுரமும் 6" உயரமும் கொண்ட மேடை, அதன் நடுவில் ஒரு துவாரம். அதன் வழியாகத்தான் யோகதண்டம் பிடித்துக் கொள்ளப்பட்டு இருக்கும். ஒரு முக்காலி, யோகியின் அடிப் பாகத்துடன் பொருந்தும் ஒரு உலோக அடிப்பாகம், அதிலிருந்து அவரது அக்குள்வரை வரும் ஒரு தண்டு, ஒரு யோக தண்டம்.

**செய்முறை :** நடுவில் மேடை அதனுடன் இணைக்கப்பட்ட யோகதண்டத்துடன் உள்ளது. தன்கையை யோக தண்டத்தின் மேல் வைத்தபடி முக்காலிமேல் அமர்கிறார் யோகி. அவருடைய நீண்ட உடைக்குள் இருக்கிறது உலோக அடி. அதனுடனுள்ள தண்டு வலதுபுறமாக, ஆடையின் உட்புறமாக அக்குள் வரை வந்து யோகதண்டத்தின் நடுவில் பொருத்தப்பட்டுள்ளது.

அவர் சமாதிநிலையை அடைந்ததும் அவரது உதவியாளர் முக்காலியை அகற்றிவிட, அவர் அந்தரத்தில் இருக்கிறார். உலோக அடித்தளம் யோக தண்டத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால், யோக தண்டத்திலிருந்து அவர் தொங்குகிறார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் -46

**நோக்கம் :** புதுதில்லியில் உள்ள செங்கோட்டையில் அந்தரத்தில் மிதத்தல்.

நான் பார்த்த மிதத்தல் வித்தைகளிலேயே மிகத்திறமையானது புதுதில்லியில் செங்கோட்டைக்கருகில் எவ்வித துணைக் கருவிகளும் இன்றி ஒருவர் மிதந்து காட்டியதாகும். தரையில் ஒரு படுக்கை உள்ளது. ஒருவர் வந்து அதில் படுக்கிறார். கொசுவலை போலவும், பார்ப்பதற்காக தலைப்பக்கம் ஓட்டை உள்ளதும் ஆன மிகப்பெரிய ஒரு போர்வையால் அவரை மூடிவிடுகிறார்கள்.

பின் அவர் மெதுவாக ஒரு அடி உயரம், பின் இரண்டு அடி உயரம், பின் போர்வைக்குள் அவரது உயரத்துக்கே எழும்பி மிதக்கிறார்.

**தேவை :** பைசாமாவுக்குள் மறைக்கப்பட்ட இரண்டு ஆக்கி மட்டைகள், கெட்டித்துணியால் இரட்டைக்கொசு வலைபோல தைக்கப்பட்ட ஒரு பெரிய போர்வை, பார்ப்பதற்காக அதன் தலைப்பாகம் ஒரு துவாரம், ஒரு படுக்கை, தலையணைகள்.

**செய்முறை :** மறைத்துள்ள எதுவும் வெளியில் தெரியாதபடி படுக்கைவரை நடந்து செல்கிறார் ஒருவர். படுக்கையில் படுக்கிறார். அவர் உடம்பில் சில தலையணைகளை வைத்தபின் போர்வையால் மூடப்படுகிறார். தலை மட்டும் துவாரம் வழியாக வெளியே நீட்டியிருக்கிறது.

இசையும் கொட்டுகளும் முழங்கும்போது அவர் தன் பைசாமாவுக்குள் இருக்கும் ஆக்கி மட்டைகளைத் தன் கைகளில் எடுத்துக்கொள்கிறார். தலையை உயர்த்தியபடியே போர்வைக் குள்ளிருந்தபடி ஆக்கி மட்டையையும் மெதுவாக உயர்த்துகிறார்.

பின் தன்னுடன் சேர்ந்து ஆக்கி மட்டைகளும் உயர, மெதுவாக குந்துகிறார். பின் மண்டி போடுகிறார். பின் இரு கைகளிலும் ஆக்கி மட்டைகளுடன், அவரது தலைமட்டும் ஓட்டை வழியாக பார்க்கும்படி தெரிய, போர்வைக்குள் நேராக நிற்கிறார். அவர் தன் முழு உயரத்துக்கும் 'மிதந்து' விடுகிறார்!

பின் குத்தவைத்து அமர்கிறார், பின் படுத்துக் கொள்கிறார். ஆக்கி மட்டைகள் மறைக்கப்படுகின்றன. போர்வை அகற்றப்படுகிறது. வெளிவந்து கை அசைக்கிறார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யோக சமாதி நிலையில் ஒரு குழிக்குள் உயிரோடு புதைக்கப்படுதல்

தில்லி பைலட் பாபா, உயிரோடு புதைக்கப்படுவதில் கைதேர்ந்தவர். 1988 இல் நாக்பூரில் 10' X 10' X 10' குழிக்குள் பூமிக்கடியில் 7 நாட்கள் அவர் சமாதிநிலையில் இருப்பதாக இருந்தது. சமாதிக்குப் பிறகு அவரது உடல் இயக்கங்கள் எல்லாம் நின்று விடும் என்றால் அவருக்கு அவ்வளவு பெரிய குழி எதற்கு என அவருக்கு சவால் விடப்பட்டது.

அதன் பின் தன் உடல் சரியாக பொருந்துமளவு இடமே உள்ள கண்ணாடி அறைக்குள் இந்த சாகசத்தைச் செய்துகாட்ட அவர் சம்மதித்தார். அதற்குள் இருக்கும் காற்று வெளியேற்றப்பட்டு (மீண்டும்) காற்றுப் புகமுடியாதவாறு அடைக்கப்படும். ஆனால் தன் யோக சக்திகளை வெளிப்படுத்த அவர் தலைகாட்டவே இல்லை!

இதற்கு முன் 1980 அக்டோபரில் ஒரு ஆள் அமருமளவுக்கு மட்டுமே இடமிருந்த ஒரு சிறு குழிக்குள் ஒரு ஆளைப் புதைக்கும் சவாலுக்கு அவர் சம்மதித்திருந்தார். 3.5' சதுரமும் 10' ஆழமும் கொண்ட சிமிட்டி பூசிய குழிக்குள் சுரேசுவாரி பாபா என்ற குருட்டு - செவிட்டு - ஊமை மனிதரை அவர் வைத்தார். குழி மூடப்பட்டது. தனக்குச் செய்யப்படுவது என்ன என்பதை அறிய முடியாத அந்த அப்பாவி பாபா குழிக்குள்ளேயே இறந்து விட்டார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அவரை வெளியில் எடுத்தபோது அவரின் உடல் அழுகி புழுக்கள் வைத்திருந்தது. உயிர்வாயு உள்ளே செல்ல ஒரு சிறப்பு சமாளிப்புக் கருவியைப் பைலட் பாபா பொருத்தி இருந்தாலும் காற்று வெளியேறும் வழி வைக்க மறந்து விட்டார். எனவே குழிக்குள் காற்றழுத்தம் உயர்ந்து அந்த அப்பாவி பலியானார்.

### செயல் விளக்கம் - 47

### யோக சமாதி

6க்கு 3 அடி குழி ஒன்றின் அருகில் யோகி தரையில் படுத்து உறங்குகிறார். சமாதி நிலைக்குச் சென்று கட்டையாக விறைத்து விடுகிறார். அவரது நாடி பரிசோதிக்கப்படுகிறது- நாடித்துடிப்பு இருப்பதில்லை. அந்த விறைப்பான நிலையிலேயே அவரது உடல் குழிக்குள் இறக்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் குழி, மரப்பலகைகளாலோ உலோக தகடுகளாலோ மூடப்பட்டு அதன்மேல் மண் கொட்டப்பட்டு மூடப்படுகிறது. நான்கு மணிநேரம் கழித்து அவர் குழியிலிருந்து வெளிவருகிறார்.

**தேவை :** *6' X 3' X 3'* குழி. ஒரு பாய், ஒரு பூத்துவாலை, குழியை மூட 4 அல்லது 8 மரப்பலகைகள் அல்லது உலோகத் தகடுகள்; பலகைமேல் மண்ணை பரப்பி குழியை மூட ஒருவாரி.

**செய்முறை :** உதவியாளர் படுத்துக் கொள்கிறார். சமாதியில் விறைப்பாக ஆகிறார். நாடி இருப்பதில்லை. இந்த விறைப்பான நிலையிலேயே குழிக்குள் இறக்கப்பட்டு அடியில் விரிக்கப்பட்ட பாய்மேல் கிடத்தப்படுகிறார்.

பலகை மேல் மண் பரப்பப்படும்போது அவர் கண்களிலும் மூக்கிலும் போய்விடாமல் இருப்பதற்காக பூத்துவாலையால் அவர் முகம் மூடப்படுகிறது. பலகைகளாலோ தகர தகடுகளாலோ குழி மூடப்பட்டு அதன்மேல் மண்கொட்டப்பட்டு பரப்பப்படுகிறது. குழி முற்றிலுமாக அடைக்கப்படுகிறது.

நான்கு மணி நேரம் கழித்து குழி திறக்கப்படுகிறது. விறைத்த நிலையிலேயே அவர் உடல் மேலே தூக்கப்படுகிறது. சற்றுப் பொறுத்து அவருக்கு 'உயிர் திரும்புகிறது'.

குழிக்குள் இருக்கும் காற்று ஒருவர் ஒன்பது மணிநேரம் எவ்வித சிக்கலும் இல்லாமல் அதற்குள் அடைபட்டிருக்கப் போதுமானது.

மேலும் குழி சிமெண்டால் முற்றிலுமாக பூசி அடைக்கப் படாததால் நிலத்திலிருக்கும் காற்றுத் துளைகள் வழியாகவும் காற்று நுழைகிறது. 100 கன அடி காற்று 24 மணி நேரம் மூச்சுவிடப் போதுமானது. குழியின் கன அளவிலிருந்து உடலின் கன அளவைக் கழித்து இது கணக்கிடப் பட வேண்டும்.

## செயல் விளக்கம் - 48

**நோக்கம் :** சிரசாசன நிலையில் ( தலை கீழ் நிலையில்) தலையை குழிக்குள் உயிருடன் புதைத்தல். சாமியாரின் தலை பொருந்தும் அளவு சிறிய குழி - அதற்குள் தலைகீழ் நிலையில் நிற்கிறார். அவரது உதவியாளர் குழியை மணலால் நிரப்புகிறார். அதற்குள் எவ்வளவு மணிநேரம் வேண்டுமானாலும் அவர் அப்படியே இருக்கிறார்.

**தேவை :** 12" X 12" X 12" குழி, மெல்லிய துணி ஒன்று, பஞ்சு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்முறை : மூக்குத் துளைகளுக்குள் இளக்கமாக பஞ்சு செருகப்படுகிறது. அவரது மூக்கு, வாய், கண்களுக்குள் மணல் போய்விடாதபடி தலை துணியால் கட்டப்படுகிறது. மணலும் இளக்கமான முறையில் நிரப்பப்படுகிறது. இதனால் (தரைக்குள் தலை இருக்கும் நிலையில் அவர் தலைகீழாக நிற்கிற போது) மணலில் போதிய நுண் இடைவெளிகள் இருப்பதால் அதன் வழியாக வாயால் மூச்சுவிட போதிய காற்று அவருக்கு கிடைத்து விடுகிறது. யாராவது மண்ணை ஓங்கி மிதிக்க முயன்றால், சாமியாருக்கு மூச்சு திணறி குதித்து வெளியே வந்து விடுவார்!

## நீர் மேல் நடத்தல்

யேசுகிறிஸ்துவின் அருஞ்செயல்களின் வரலாற்றில் அவர் எவ்வித துணைக்கருவிகளும் இல்லாமல் நீர்மேல் நடந்ததாக சொல்லப்படுகிறது.

1968 இல் அடயோகி எல். எஸ். ராவ், பிளிட்சு வார இதழின் மறைமுக ஆதரவுடன், எளிதில் ஏமாறும் பொதுமக்களை ஏமாற்றக் கிளம்பினார். வாராவாரம் ஆர். கே. கரஞ்சியா வெளியிட்ட கட்டுரைகள் இந்த அடயோகியின் இயற்கையை மீறிய ஆற்றல்களைப் பற்றித் தெரிவித்தன.

இறுதியாகத் தன் பாதங்கள் நனையாமல் அவர் நீர்மேல் நடப்பார் என அறிவிக்கப்பட்டது. இது விலைமதிக்க முடியாத ஒரு யோக தந்திரம் என விளம்பரப்படுத்தப்பட்டது. இந்த சாகசத்தை பார்ப்பதற்கான சீட்டுகள் பம்பாயில் ஒரு நாள் மாலை அநியாய விலைக்கு திருட்டுத்தனமாக விற்கப்பட்டன.

இந்த யோக நடையைப் பதிவு செய்ய உலகம் முழுவதும் இருந்து படப்பிடிப்புக் குழுக்கள் வர ஐம்பது சிறப்பு விமானங்கள் ஒதுக்கப்பட்டன. அப்போதைய அனைத்து இந்திய சாது சமாச தலைவராகவும் இந்திராகாந்தி அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராகவும் இருந்த குல்சாரிலால் நந்தா அந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

ஒரு நூலை மூக்கின் ஒரு துளையில் விட்டு மறு துளையில் எடுப்பது, கண்ணாடியைத் தின்பது, தீமேல் நடப்பது, திராவகத்தை குடிப்பது முதலிய சில வித்தைகளை அடயோகி செய்து காட்டினார். தொட்டி மீது பாய்ச்சப்பட்டிருந்த பிரகாசமான விளக்குகளின் வெளிச்சத்தில் அது காலியாக இருப்பது காட்டப்பட்டது.

அதை நீரால் நிரப்பிய பின் அடயோகி ஒரு கஞ்சா பீடியை பற்றவைத்துக் கொண்டார். தொட்டியை நெருங்கினார். தொட்டிக்குள் ஒரு காலை வைத்தபடியே பிரார்த்தனை செய்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது காலையும் நீரில் வைத்ததும் ஒரு கல்லைப் போல் மூழ்கிவிட்டார்! அவரை வெளியில் இழுத்து விட்டார்கள். தன் தோல்விக்கு பார்வையாளர்களிடம் விளக்கம் தந்தார்: "நேற்று இரவு கழிப்பறையில் விழுந்து விட்டேன், கால் சுளுக்கி விட்டது. எனவேதான் நீர்மேல் நடக்க முடியவில்லை. நிலவை அடைவதில் நம் விஞ்ஞானிகள் ஆயிரக்கணக்கான தடவைகள் தவறிப் போயிருக்கிறார்கள். நானோ இந்த ஒரு தடவை மட்டுமே தோற்றுவிட்டேன். இந்த சுளுக்கு குணமானதும் நான் நீர்மேல் நடந்து காட்டுவேன்".

உண்மையில் நடந்தது என்னவென்றால் தானே கொண்டு வரும் நாகப்பாம்பு நஞ்சை குடித்துக்காட்ட முடியுமா என சத்தியசாயிபாபாவிடம் அவர் சவால் விட்டிருந்தார்.

ஏனெனில் சத்ய சாயிபாபா சிவனின் அவதாரமென தன்னை சொல்லிக் கொண்டார். அவர்கள் இருவருக்கும் இடையே போட்டி நிலவியது - அடயோகத்தில் அல்ல, கள்ளக்கடத்தல் தொழிலில்! அடயோகி சிமெண்டால் கட்டியிருந்த நீர்த்தொட்டியை, நிகழ்ச்சிக்கு மூன்று நாட்களுக்கு முன் தன் குண்டர்களை அனுப்பி இடித்து விட்டார் சத்தியசாயிபாபா. தொட்டியை மறுபடியும் கட்ட நேரம் இருக்கவில்லை.

எனவே ஒரு உலோகத் தொட்டி வெளியிலிருந்து செய்து வாங்கப்பட்டது. ஆனால் தன் சாகசத்தின் செய்முறையை அடயோகியால் பலரறிய வெளிப்படுத்த முடியவில்லை. எனவே "தொட்டியைப் பலப்படுத்துவதற்காக" நீளவசத்தில் இரு இணையான இரும்புச் சட்டங்களைப் பொருத்தும்படி மட்டும் உலோகத் தொட்டியைச் செய்து தந்தோரிடம் அவர் சொல்லி இருந்தார். ஆனால் அவர்கள் குறுக்கு வசத்திலும் இரும்புச் சட்டங்களைப் பொருத்தி விட்டார்கள்! இதனால் தொட்டிக்குள் நீரை நிரப்பியதும் மேலே வரவேண்டிய தளம் இயங்கவில்லை. நிகழ்ச்சியை நிறுத்தி விடுவதற்குப் பதில் நீருக்குள் காலை வைத்தார். உள்ளே போய்விட்டார். பொதுமக்கள் மிகுந்த ஆத்திரம் அடைந்தார்கள். கட்டணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டார்கள்.

அந்த பணத்தைச் செலுத்த அடயோகி பம்பாயில் இருந்த தன் சொத்துகளை எல்லாம் விற்க வேண்டியதாயிற்று. பின் அவர் பெங்களூரில் குடியேறினார். 1977 - இல் முனைவர் ஏ.ட்டி. கோவூர் பெங்களூருக்கு வருகை தந்தபோது, அடயோகி தன் (நீர்மேல் நடக்கும்) வித்தையைக் கோவூருக்குச் செய்து காட்ட ஏற்பாடு செய்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர்மேல் நடக்க முடியக்கூடிய மனிதருக்கு ஏன் ஒரு சிறப்பு தொட்டி கட்டப்பட வேண்டும் என்பதே கேள்வி. சௌபாத்தி கடற்கரையில் நேரடியாக கடல்மீதே அவர் நடந்து காட்டியிருக்க வேண்டும்.

பம்பாயில் உள்ள காயல்களிலோ அல்லது அந்த பகுதியில் உள்ள எந்த ஒரு ஆற்றிலோ குளத்திலோ அவர் நடந்திருக்க முடியும். ஆனால் ஒரு பாலத்தால் தாங்கப்படாமல் எந்த மனிதரும் நீர்மேல் நடக்கமுடியாது. அதை அருஞ்செயலாக காட்ட பாலத்தை கண்ணில் காட்டக்கூடாது.

*1949 இல் ஒரு சாமியார் கங்கைமேல் நீரடியில் இருந்த, வெளியில் கண்ணுக்கு தெரியாத, இரண்டு உலோகக் கம்பிகள் மீது நடந்ததை நான் பார்த்தேன். ஆக, தொட்டி நிரப்பப்பட்டதும் மேலே உயர்ந்து வரும் ஒரு கண்ணாடித் தகட்டின் மேல் நடந்து காட்டுவதே அடயோகியின் திட்டம்.*

*ஆனால் சத்ய சாயிபாபாவின் அடியாட்கள், நிகழ்ச்சிக்கு வெறும் மூன்று நாள்களே இருக்கும்போது சிமெண்டுத் தொட்டியை நொறுக்கி விட்டார்கள். எனவே புதுத் தொட்டி கட்டுமாறு நிறுவனத்தாரிடம் கூறப்பட்டது. அது கட்டிய விதத்தால், தொட்டியில் நீர் நிரப்பியதும் கண்ணாடித் தகடு மேலே வர முடியாமல் போய்விட்டது!*

## ஹடயோகியின் பிற வித்தைகள்

### செயல் விளக்கம் - 49

**நோக்கம் : *மூக்கில் ஒரு துளைக்குள் நூலைச் செலுத்தி மறு துளையில் வெளியில் எடுத்தல்.***

**தேவை : *12" நீள முறுக்கு நூல்.***

**செய்முறை :** இரு மூக்குத் துவாரங்களுக்கும் உள்ளுக்குள் இணைப்பு உள்ளது. நூலை மூக்கில் விடும்போது தும்மல் வராமல் இருக்க பயிற்சி செய்து கொள்ள வேண்டும். நூலின் தொடக்க முனையைச் சற்றே வளையுங்கள். மூக்குத் துளைக்குள் விட்டு பலமாக வெளிமூச்சு விடுங்கள்- அவ்வளவுதான்! நூல் மறுதுளை வழியாக வெளியே வந்துவிடும். அதை மெதுவாக வெளியே உருவவும்.

### செயல் விளக்கம் - 50

**நோக்கம் : *கண்ணாடியைத் தின்னல்.***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழைப்பழம் தின்ன உங்களுக்குத் தெரிந்திருந்தால் கண்ணாடியை தின்னவும் உங்களால் முடியும்! எரியாத சுத்தமான மின்குமிழ் ஒன்றை எடுத்துக் கொள்க. அதை ஒரு துண்டுத் துணியில் பொதிந்து தரையில் மோதி நொறுக்குக.

அதில் ஒரு உடைந்த கண்ணாடித் துண்டை எடுத்து, நாக்கில் வைத்து, கடவாய்ப் பற்களுக்கு அதைத் தள்ளி மெல்லிய பொடியாக அரைக்கவும். வாயில் நீரை நிரப்பி, கொப்பளித்து கண்ணாடித் தூளுடன் நீரை விழுங்கிவிடவும்.

**தேவை :** எரியாத, சுத்தமான குமிழ் ஒன்று, ஒரு கைக்குட்டை, ஒரு குவளை நீர்,வெற்று க்ண்ணாடி தம்ளர், 2 வாழைப்பழங்கள்.

**செய்முறை :** பார்வையாளர்களில் இருந்து கிராமத்தவனான ஒரு சிறுவனை அழைக்கவும். அவனிடம் ஒரு வாழைப்பழத்தைத் தந்து அதை அவனால் தின்ன முடியுமா என்று கேட்கவும். பெரும்பாலான கிராமத்து சிறுவர்கள் பழத்திலிருந்து தோலை உரித்து வீசிவிட்டு உரித்த பழத்தைக் கைகளால் பிடித்துக் கொண்டுஉண்பார்கள்.

தான் உரித்த பழத்தை உண்ணப் போகையில் அவனைத் தடுத்து, வாழைப் பழத்தை தின்னும் முறை அதுவல்ல எனக் கூறவும். கைகளை சுத்தமாகக் கழுவாமல் உணவுப் பொருளைத் தொடக்கூடாது; எனவே தோலை உரித்து பழத்தைத் தோலுக்குள்ளேயே வைத்துப் பிடித்துக் கொண்டே உண்ண வேண்டும் என்று கூறி ஒரு வாழைப்பழத்தை நீங்களே சாப்பிட்டுக் காட்டவும்.

இனி கண்ணாடியைத் தின்பது ஒரு வித்தையே அல்ல. கண்ணாடித் துண்டுகளை கடைவாய்ப்பற்களால் நன்றாக அரைக்க வேண்டும். இந்த தூள் வாழைப்பழத்தில் படிந்து மறுநாள் சீரண மண்டலத்தில் இருந்து வெளியேறி விடும்.

இன்னும் சிலர் தண்ணீரைக் குடிக்கும்போது அரைத்த கண்ணாடியை தம்ளருக்குள் உமிழ்ந்து விடுகிறார்கள். கண்ணாடித்தூள் நீருக்குள் இருப்பது கண்ணுக்குத் தெரிவதில்லை.

## செயல் விளக்கம் - 51

**நோக்கம் :** நைட்ரிக் அமிலத்தைக் குடித்தல்.

நைட்ரிக் அமிலத்தையோ வேறெந்த அமிலத்தையோ, பொட்டாசியம் சயனைடையோ நாகப்பாம்பின் நஞ்சையோ தன்னால் குடிக்க முடியும் என்பதை செய்து காட்டுகிறார் அடயோகி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவை : பெருந்துளையுடன் கூடிய கண்ணாடியாலான தந்துகிக்குழாய், (சோதனைச்சாலைத் தரமுள்ள) அடர் நைட்ரிக் அமிலம் ஒரு குப்பி, அதே அளவுள்ள இன்னொரு காலி குப்பி, ஒரு பீங்கான் தட்டு, ஒரு செம்புத் துண்டு, குடிநீர், வெட்டி எடுத்த பாலீதீன் வட்டு, வாசலைன்.

செய்முறை : நிகழ்ச்சிக்கு முன் நைட்ரிக் அமிலத்தைச் சம அளவுள்ள வேறு ஒரு குப்பிக்கு மாற்றி விடவும். அமில புட்டியைச் சுத்தம் செய்து அமிலம் இருந்தஅதே அளவுக்கு நன்னீரை நிரப்பி விடவும். தந்துகிக் குழாயை நைட்ரிக் அமிலத்தில் முக்கி, குழாய் வாயை உங்கள் விரலால் மூடிக்கொண்டு நீர் உள்ள பாட்டிலுக்குள் தாழ்த்தி, மூடிய விரலைஎடுத்துவிடவும். திரவம் தனக்குரிய மட்டத்தை அடையும்.

பின் குழாய்வாயில் சிறிது வாசலைன் பூசி பாலிதீன் வட்டை அதன்மேல் பொருத்தவும். அதை மேசைமேல் தள்ளி வைக்கவும். நீர்க்குப்பிக்குள் சிகரெட் புகையை ஊதி புது நைட்ரிக் அமிலக் குப்பி போலவே அதை மூடி முத்திரையிடவும்.

பரிசோதனையில் கலந்து கொள்ள பார்வையாளர்களில் இருந்து இரண்டு உதவியாளர்களை அழைக்கவும். நீர்க்குப்பியின் மூடியை நீக்கிவிட்டு அதற்குள் குழாயை வைக்கவும். அதே போது குழாய் மீது இருக்கும் பாலிதீன் வட்டை உள்ளங்கையால் மறைத்துக் கொள்ளவும். பாட்டிலில் இருந்து குழாயை வெளியில் எடுத்து குழாயில் இருப்பதைத் தட்டில் ஊற்றவும். தட்டில் செப்புத் துண்டைப் போடும்படி உதவியாளரிடம் கூறவும். அப்போது வேதிவினை நிகழும். அது நிசமாகவே நைட்ரிக் அமிலம் தான் என்று அவர்கள் ஏற்பதை உறுதி செய்து கொள்ளவும்.

உடனடியாக நீர்க்குப்பியை எடுத்து மடக் மடக்கென குடித்து முடிக்கவும். உங்களுக்கு ஒன்றும் நேரிடாததைக் கண்டு பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைகிறார்கள்.

உலோகத்தாலான கொள்கலம் ஒன்றில் பொட்டாசியம் / சோடியம் சயனைடோ பாம்பு விசமோ ஊற்றப்படுகிறது. நஞ்சை உறிஞ்சுவது போல் பாவனை செய்யவும். உண்மையில் கலத்தின் மறுபகுதிக்கு அது போய் விடும். வெற்று கலத்தை அவையோரிடம் காண்பிக்கவும்.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7

# கிறித்தவ மதம் இந்தியாவுக்கு வந்த விதம்

சுமார் ஆயிரத்து தொளாயிரத்து சொச்சம் ஆண்டுகளுக்கு முன் புனித தோமா கேரளாவுக்கு வருகை தந்தார். அப்போது கேரள பார்ப்பனர்கள் (நம்பூதிரி பார்ப்பனர்கள்) சிரார்த்த சடங்கு செய்து கொண்டிருப்பதை பார்த்தார். நீரை மேலே வீசி எறிந்து அவர்கள் செய்து கொண்டிருந்தது என்ன என்று அவர்களைக் கேட்டார். இறந்துபோன தம் முன்னோர்களாகிய மூதாதையருக்குத் (பிதிருகளுக்கு) தண்ணீர் அனுப்புகிறோம் என்றார்கள்!

புனித தோமா புன்னகைத்தபடியே, அவர்களின் கடவுள்கள் சக்தி அற்றவர்கள், ஏனெனில் அவர்கள் மேலே அனுப்பும் நீர் தரைக்குத் திரும்பி விடுகிறதே என்றாராம். பின் அவர் தன் பாத்திரத்தில் கொஞ்சம் நீர் ஊற்றி அது இறந்தோரை அடைவதாக! என செபித்து, பின் தன் பாத்திரம் காலியாக இருப்பதை காட்டினாராம்.

இந்த அருஞ்செயலைக் கண்டதும் அந்த பார்ப்பனர் அனைவரும் கிறித்தவர்கள் ஆனார்களாம்!

## செயல் விளக்கம் - 52

### நீரை வானத்துக்கு அனுப்புதல்

பாத்திரத்தில் நீர் ஊற்றுகிறீர்கள். நீரைச் சொர்க்கத்துக்கு அனுப்புவதுபோல் பாத்திரத்தை உயர்த்துகிறீர்கள். பின் பாத்திரம் வெறுமையாக இருப்பதைக் காட்டுகிறீர்கள்.

**தேவை :** வித்தைப் பாத்திரம், கூசாவில் நீர்.

**செய்முறை :** இடதுபுறமாக சரித்தால் நீர் இரண்டாவது அறைக்குள் போய்விடும்படி வித்தைப் பாத்திரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. வலதுபுறம் சரித்தால் மீண்டும் நீர் தோன்றுகிறது.

## செயல் விளக்கம் - 53

**நோக்கம் :** காலிப் பாத்திரத்தில் கங்கை நீரை வரவழைத்தல்.

**தேவை :** அதே சூழ்ச்சிக் கலம், ஏற்கனவே நீர் நிரப்பி இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செய்முறை :** பாத்திரத்தை இடதுபுறம் சரித்து அது காலியாக இருப்பதைக் காட்டவும். கங்கா தேவியைத் துதித்து, உங்கள் முடிமூலமாக கண்ணுக்குத் தெரியாமல் பாத்திரத்தில் கங்கை நீர் நிரம்புவதுபோல் நடிக்கவும். பின் பாத்திரத்தை வலதுபுறம் சரிக்க, நீர் வெளிப்படும்.சிவனின் அவதாரங்களாகத் தம்மை அழைத்துக் கொள்ளும் இந்திய சாமியார்கள் கங்கை நீரை வரவழைத்துக் காட்ட இதே விதமான பாத்திரத்தைத்தான் வைத்துள்ளார்கள் என்றாலும் அதே விதமான பாத்திரத்தைத் தான் புனித தோமாவும் வைத்திருந்தார் என்பதை அம்பலப்படுத்த அவர்களால் முடிவதில்லை!

## ஆப்பிரிக்கர்கள் கிறித்தவர்களான விதம்

ஆப்பிரிக்காவின் சூனிய மந்திரவாதிகள், வந்தேறி ஐரோப்பியரின் துப்பாக்கி ரவைகளில் இருந்து தம் இனக் குழுவினரின் உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை. உடலில் பூச ஒரு களிம்பு மட்டுமே அவர்கள் தயாரித்தார்கள்.

கிறித்தவ மத பரப்புனர்கள் தம்முடன் ஒரு மந்திரவாதியை கூட்டி வந்தார்கள். கிறிஸ்துவின் மேல் ஒருவர் முழு நம்பிக்கை வைத்தால் அவரை ரவைகள் ஒன்றும் செய்யாது என்று செய்து காட்டினார்கள்.

❋

### செயல் விளக்கம் - 54

**நோக்கம் :** துப்பாக்கியால் சுடப்பட்டால் ரவையை வாய்க்குள் பிடித்துக் கொள்ளுதல்.

**தேவை :** ஒரு துப்பாக்கி, ஒரு ரவை, வேதிப் பொருள்கள்.

**செய்முறை :** சுடப்பட்டால் சத்தம் மட்டுமே கேட்கத்தக்க வேதிப் பொருள்களை துப்பாக்கிக்குள் நிரப்பிக் கொள்க. ஆனால் தாக்கப்பட்டவர் குண்டை தான் விழுங்கி விட்டவர் போல் நடித்து, வாய்க்குள் இருந்து அதை வெளியில் எடுக்கவும்.

❋

## இந்து அற்புதங்கள்

### செயல் விளக்கம் - 55

**நோக்கம் :** கைகளிலோ தாடியிலோ கங்கை நீரை வரவழைத்துக் காட்டுதல்.

**தேவை :** நீரில் தோய்த்த துணி / கடல் பஞ்சு .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செய்முறை :** நீங்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தில் துணியை / பஞ்சை மறைத்துக் கொள்க. உங்கள் கைகள் வெறுமையாக இருப்பதைக் காட்டி பின் கைக்குள் துணியை / பஞ்சை மறைத்துக் கொள்க. கைகளைச் சேர்த்து அல்லது தாடியுடன் சேர்த்து அமுக்கவும். பஞ்சு / துணியில் இருக்கும் நீர் பிழியப்பட்டு கொட்டும்.

## செயல் விளக்கம் - 56

**நோக்கம் :** பூமியில் இருந்து சிலைகள் சுயம்புவாக (தான் தோன்றியாக) தாமே வெளிப்பட்டுத் தோன்றுதல்.

ஒருவர் ஒரு கோயில் கட்ட விரும்பினால், சாமியாருக்கோ பூசாரிக்கோ கனவு வந்துவிடும்! மண்ணில் குறிப்பிட்ட இடத்தில் கடவுள் சிலை தோன்றும் என்ற தகவல் கனவில் தரப்படும். அந்த இடத்தில் பூசை நடத்துவார்கள்.

கனவில் வந்த அதே இடத்தில் மறுநாள் பூசை தொடங்குகிறான் பூசாரி / சாமியார். எளிதில் நம்பி ஏமாறும் அப்பாவி மக்களை அங்கு திரட்டிக் கொள்கிறான். இடத்தைக் குறியிட்டு இடைவிடாமல் மந்திரம் சபித்து அவ்விடத்தைத் தீர்த்தத்தால் மந்திரிக்கிறான். இரண்டு மூன்று நாட்களில் கடவுள் சிலை அதே இடத்தில் தானே மேல் வந்து நிற்கிறது. திகைத்துப் போகும் பக்தர்கள் பாபாவின் உண்டியலில் பணத்தைக் கொட்டுகிறார்கள். அவன் விரைவில் பணக்காரன் ஆகி விடுகிறான்.

**தேவை :** சிலையின் எடை அளவு அல்லது குறைந்தது 2 கிலோ உளுந்து. சிலைக்குச் சரியான அளவுள்ள, ஆனால் சிலையை விட 12''ஆழமுள்ள குழி.

**செய்முறை :** யாருக்கும் தெரியாமல் ஒரு குழி தோண்டவும். அதில் உளுந்தைக் கொட்டி அதன்மீது சிலையைத் தரைமட்டத்துக்கும் சுமார் 2'' தாழ்வாக இருக்கும்படி வைத்துவிடவும். குழியை மண்ணால் மூடி நிரவி இயற்கையாகத் தோற்றமளிக்கச் செய்யவும். அவ்விடத்தை குறியிட்டு விடவும்.

மறுநாள் உங்கள் கனவை வெளிப்படுத்தவும். அலங்காரங்களும் தோரணங்களும் கட்டி பூசைகளும் இடைவிடாத பஜனைகளும் நடத்தவும். குறியிட்ட இடத்தில் அவ்வப்போது நீர் தெளித்து வரவும். உளுந்து ஊதி, முளை விடவே, சிலையை பூமிக்கு மேலே தள்ளிவிடுகிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 57

**நோக்கம் :** தேவியின் சிவப்புப் பாத அடையாளம் துணியில் ஏற்படுதல்.

தன்னைக் காளிதேவி ஆட்கொண்டுள்ளாள் என்பதை மெய்ப்பிக்க சாமியாடி / குறிகாரன் தன் கால்களை அலம்பிவிட்டு ஒரு துணிமேல் நடக்கிறான். தேவியின் சிவப்பு பாத அச்சுகள் துணி மேல் தோன்றுகின்றன.

**தேவை :** மஞ்சள் தூள், நீற்றிய சுண்ணாம்பு, நீர், வெள்ளைத் துணி.

**செய்முறை :** ஒரு வெள்ளைத் துணியை மஞ்சள் கரைசலில் முக்கி அது மஞ்சள் நிறமாகி விடவேண்டும். பின் அதைக் காயவைத்து துணியில் ஒட்டியிருக்கும் மஞ்சள் பொடியை உதறிவிட வேண்டும்.

நீர் என்ற பேரில் ஒரு பாத்திரத்தில் நீற்றிய சுண்ணாம்பின் தெளிநீர் வைத்திருக்க வேண்டும். தேவியால் தான் ஆட்கொள்ளப்பட்டதாக சாமியாடி பாவனை செய்கிறான். இந்த நீரில் கால் அலம்பி துணிமேல் நடக்கிறான். மஞ்சள் தூளில் நீற்றிய சுண்ணாம்பு வினை புரிந்து சிவப்பு பாத அடையாளங்கள் தோன்றுகின்றன!

☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8

## சத்திய சாயிபாபாவின் அற்புதங்கள்

சத்திய சாயிபாபாவின் சித்தப்பா சின்ன வெங்கப்ப ராஜு ஒரு மந்திரவாதி. அவர்தான் சாயிபாபாவுக்கு மந்திர தந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தார்.

பள்ளியில் படிக்கும்போது சாயிபாபா செய்த முதல் வித்தை, வெற்றுப் பெட்டியில் இருந்து பென்சில், ரப்பர், மிட்டாய்கள் முதலியவற்றை எடுத்துக் காட்டி தன் சக மாணவர்களையும் ஆசிரியர்களையும் வியப்பில் ஆழ்த்தியதாகும். அப்போது அவருக்கு தன்னைக் கடவுளின் அவதாரம் என்று நடிக்கும் கருத்து இருக்கவில்லை.

ஆதலால் இவை இயற்கை சக்திகளின் வேலையே என பிற மந்திரவாதிகள் போலேவே அவரும் விளக்கம் தந்தார். பொருள்களை வரவழைத்துக் காட்ட ஒரு பை தேவைப்படுகிறது என்னும் விசயமே, அது ஒரு தந்திரப் பை என்பதால்தான் ஆகும்.

மேலும் இப்படி வருவித்த பொருள்களுக்கு தன் சகாக்களிடமிருந்து இரட்டிப்புக் கட்டணம்வேறு வசூலித்துக் கொண்டார் அவர்.

### செயல் விளக்கம் - 58

### வெற்றுப் பையில் இருந்து பொருள்களை எடுத்தல்

**தேவை :** தந்திரப் பையும், நீங்கள் வருவிக்க விரும்பும் பொருள்களும்.

**செய்முறை :** நீங்கள் வருவிக்க விரும்பும் பொருள்களைப் பையின் இரண்டாவது பகுதியில் மறைத்து மூடிவிடவும். பின் பையின் உள் பக்கத்தை வெளியே எடுத்துக் காட்டி அதில் ஒன்றும் இல்லை என்பதை பார்வையாளர்களுக்கு மெய்ப்பிக்கவும்.

பின் மந்திரம் போட்டு - அதே சமயத்தில் நடுவிலுள்ள தடுப்பை மறுபடியும் இழுத்து விட்டு - பொருள்களை எடுத்து எடுத்துக் காட்டவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 59

### பூக்களைக் கீழே கொட்டினால் அவை எழுத்துக்களாக உருவமைதல்

சத்திய சாயிபாபா செய்து காட்டிய அடுத்த வித்தை, ஒரு கூடை மல்லிகைப் பூக்களைத் தரையில் கொட்டினால் அவை தெலுங்கு எழுத்துகளில் 'சாயிபாபா' என அமைந்தது. சீரடி சாயிபாபாவின் அவதாரமே தான் என்று காட்டிக் கொள்ள இதை அவர் செய்தார்.

இதிலுள்ள நகைச்சுவை என்னவென்றால் சீரடி சாயிபாபாவுக்கு மராத்தியும் இந்தியும் மட்டுமே தெரியும். சத்திய சாயிபாபாவுக்குத் தெலுங்கு மட்டுமே தெரியும். எனவே அவரால் தெலுங்கில் மட்டுமே செய்து காட்ட முடிந்தது!

**தேவை :** வண்ணமற்ற பசை, புருசு, மல்லிகைப் பூக்கள், மின்விசிறி.

**செய்முறை :** காட்சிக்கு முன் பசை கொண்டு தரையிலோ சமக்காளத்திலோ எழுத்துக்களை வரைந்து விடவும். விசிறியைச் சுழல விடவும்.

அந்த இடத்தில் மல்லிகைப் பூக்களைக் கொட்டவும். பசையில் பூக்கள் ஒட்டி அந்த எழுத்துகளாக அமைகின்றன. பிற பூக்கள் விசிறிக் காற்றால் பறந்து போய் விடுகின்றன.

## செயல் விளக்கம் - 60

### வெற்றிடத்தில் கழுத்து சங்கிலியை வரவழைத்தல்

சத்திய சாயிபாபா தன் வெற்று கைகளை அசைத்து , கழுத்தணிகளை வரவழைக்கிறார்.

**தேவை :** ஒரு ஆரம் (நெக்லேஸ்)

**செய்முறை :** அங்கிக்குள் அக்குள் அடியில் ஆரத்தை வைத்துக் கொள்ளவும். கையில் ஒன்றும் இல்லை என்பதைக் காட்டவும். கைகளை வட்டமாக இரண்டு மூன்று முறை ஆட்டவும். விரல்களை உள்ளங்கையை நோக்கிப் பிடித்தபடி அக்குளில் இருந்து ஆரத்தை விடுவிக்கவும். அது உங்கள் உள்ளங்கையில் விழும். அதை எல்லோருக்கும் காட்ட முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 61

**நோக்கம் :** பதக்கங்கள், தாயத்துகள், சிறு பேழைகள், மோதிரங்கள் முதலியவற்றை வரவழைத்தல்.

**தேவை :** பதக்கங்கள், தாயத்துகள், பேழைகள், மோதிரங்கள் முதலியவை. உள்ளங்கைக்குள் அதை நீங்கள் மறைத்துக் கொள்ள முடியவேண்டும்.

**செய்முறை :** ஏற்கனவே பொருளை கையில் மறைத்துக் கொள்ளவும். கைகளை வட்டமாக அசைக்கவும். திருநீறு வருவிப்பது போலவே அவற்றையும் வெளிப்படுத்திக் காட்டவும்.

## செயல் விளக்கம் - 62

**நோக்கம் :** அட்சதை ( வண்ண அரிசி) வரவழைத்தல்.

சத்திய சாயிபாபா வட்டமாக கைகளை அசைத்து பக்தனின் தலையில் அரிசி தெளிக்கிறார்.

**தேவை :** வண்ண அரிசி, பெருவிரல் முனை, பாரபின் மெழுகு.

**செய்முறை :** உங்கள் கட்டைவிரல் நுனியில் அரிசியை வைத்துக் கொள்க. கைகளை இரண்டு மூன்று தடவை அசைத்து, கட்டைவிரல் நுனியில் இருந்து உள்ளங்கைக்குள் கொட்டி பார்வையாளரின் தலை மேல் தெளிக்கவும்.

**இன்னொரு முறை :** பாரபின் மெழுகை உருக்கி அதில் அரிசியைப் போட்டு எடுத்துக் காய வைக்கவும். இதை ஒரு பந்து போல் உருட்டிக் கொள்ளவும். மெழுகுப் பூச்சினால் அது உதிராது ஒட்டியிருக்கும்.

கையில் அதை மறைத்துக் கொண்டு கைகளை இரண்டு மூன்று தடவை ஆட்டிய பின் உருண்டையை விரல்களுக்கு கொண்டு வந்து நசுக்கி பார்வையாளனின் தலைமேல் உதிர்க்கவும்.

## செயல் விளக்கம் - 63

**நோக்கம் :** பூ இதழ்கள் பதக்கங்களாக, மிட்டாய்களாக ... உருமாறல்.

**தேவை :** பூ இதழ்கள், பதக்கங்கள், மிட்டாய்கள் முதலியவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செய்முறை :** வரவழைக்க வேண்டிய பொருள்களை பூ இதழ்களால் மூடிவிடவும். பூ இதழ்களை வீசுவதுபோல் அவற்றோடு சேர்த்து, மறைத்து வைத்துள்ள பொருள்களையும் வீசவும்.

❈

## செயல் விளக்கம் - 64

**நோக்கம் :** சத்திய சாயிபாபாவின் பக்தர்களின் வீடுகளில் அவரது புகைப்படங்களில் இருந்து தேன், எண்ணெய் முதலியவை வடிதல்.

**தேவை :** தேவையான திரவத்துடன் ஒரு புட்டி, சட்டமிடப்பட்ட புகைப்படம் ஒன்று, விளக்கு மாடம், புட்டியை சட்டத்துடன் இணைக்கும் ஒரு குழாய் - திருகு மூடியுடன்.

**செய்முறை :** தேன், இனிப்பு பானம் அல்லது எண்ணெய் முதலிய ஏதாவது நிரம்பிய புட்டி, சட்டத்திலோ, விளக்கு மாடத்திலோ மறைக்கப்பட்டு, சட்டமிட்ட படத்தின் பின்புறமுள்ள குழாய் வழியாக முன்புறக் கண்ணாடிக்குப் போய்விடுகிறது. குழாய் திறக்கப்பட்டதும் அது கண்ணாடியிலிருந்து வழிகிறது.

இந்த அதிசயத்தை அம்பலப்படுத்த, புகைப்படத்தின் கீழே ஒரு தட்டு வைத்து அதில் எவ்வளவு தேன் உருவாகி வடிகிறது என கவனமாகப் பார்க்கவும். கண்ணாடி மேல் ஊற்றப்படும் கொஞ்சம் தேன் (முதலியவை) மட்டும்தானா அது எனக் கண்டு பிடிக்கவும். புகைப்படத்திலிருந்து தேன் வடிந்தால், படத்தின் இடத்தை மாற்றி எங்கிருந்து தேன் வருகிறது என்பதை கண்டுகொள்ள முடியும்.

❈

## செயல் விளக்கம் - 65

**நோக்கம் :** சத்திய சாயிபாபாவின் பக்தர்களின் வீட்டில் அவரது புகைப்படத்திலிருந்து திருநீறு உண்டாதல். சட்டமிட்ட படங்களில் விபூதி அரும்பியிருத்தல்.

**தேவை :** வாசனைத் திருநீறு, சட்டமிடப்பட்ட படம், அரிசிக்கஞ்சி நீர், நன்னீர், ஒரு தட்டு.

**செய்முறை :** கஞ்சி நீரில் திருநீற்றைக் கலந்து களி போலாக்கி படத்தின் கண்ணாடி மேல் தெளித்துக் காயவிடவும்.

பின் திருநீறை களிபோல் கலந்து மறுபடியும் படத்தின்மேல் தெளித்துக் காயவிடவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மின்விசிறியை ஓடவிட்டால் நீருடன் கலந்து படத்தில் தெளித்த சாம்பல் காற்றில் பறக்கும். படத்திலிருந்து திருநீறு உருவாகி பரவுவதாக மக்களை இது நம்பச் செய்யும்.

படத்தின் கீழ் கொஞ்சம் உலர்ந்த விபூதியையும் கொட்டி வைக்கவும். படத்திலிருந்துதான் சாம்பல் உருவாகி கீழே விழுந்துள்ளது என மக்களை நம்ப வைக்கவே இது.

சட்டமிட்ட படத்தின் கண்ணாடியிலிருந்துதான் நிசமாகவே நீறு உருவாகிறதா என சோதிக்க, படத்தில் ஏற்கனவே படிந்துள்ள சாம்பல் பகுதியை துடைத்து விடவும். துடைத்த பகுதியில் மறுபடியும் அது உருவாவதில்லை என்பதை நீங்கள் காணலாம்.

## செயல் விளக்கம் - 66

**நோக்கம் :** பெரிய பொருள்களை மணலிலிருந்து வருவித்தல்.

கிருஷ்ணனின் 18 '' தங்க சிலையையும், பகவத் கீதை நூலையும் மணலிலிருந்து வருவித்துள்ளார் சத்திய சாயிபாபா. ஆற்றங்கரைக்குப் போகிறார். ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார். அங்கு அமர்கிறார். அவரது பக்தர்கள் அவரைச் சுற்றி அமர்கிறார்கள். மணலை மேடு கட்டி அதனுள் கைவிட்டு, உள்ளங்கைக்குள் ஒளித்துவைக்க முடியாத அளவு பெரிய பொருள்களை அதிலிருந்து எடுக்கிறார்.

**தேவை :** நீங்கள் வருவித்துக் காட்ட விரும்பும் பொருள்.

**செய்முறை :** குறிப்பிட்ட பொருளை முன்பே மணலில் ஒளித்து மறைத்து அவ்விடத்தை குறித்துக் கொள்ளவும். உட்கார இடம் தேடுவது போல அங்குமிங்கும் உலாவி இறுதியில் குறித்த இடத்தைத் தேர்ந்து அமரவும். மணலைச் சிறு மலைபோல் குவித்து அதற்குள் கைவிட்டு மறைத்துவைத்த பொருளை வெளியில் எடுத்து நீங்கள் உருவாக்கியதுபோல் காட்டவும்.

## செயல் விளக்கம் - 67

**நோக்கம் :** வெற்று மரப்பாத்திரத்தில் இருந்து திருநீறு.

சிவராத்திரி நாள் அன்று சத்திய சாயிபாபா திருநீறு உள்ள ஒரு மரக்கலத்தை எடுத்து சீரடி சாயிபாபா சிலையின் தலைமேல் அதை கொட்டி காலி செய்கிறார். அது காலியாகிவிட்டது என்பதைக் காட்டியபின் கலத்துக்குள் கைவிடுகிறார், இதோ, பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிமிடங்களுக்கு திருநீறு வந்து கொண்டே இருக்கிறது! முதலில் வலது கையால் எடுக்கிறார், பின் இடது கை, பின் மறுபடியும் வலது கையை பயன்படுத்துகிறார்.

**தேவை :** பெரிய வயிறும் கை எளிதில் போய்வரக்கூடிய சிறிய கழுத்தும் உள்ள ஒரு கலம், திருநீறு, நீர், கலத்துக்குள் நுழையக்கூடிய ஒரு புட்டி, இரட்டைக்கை வைத்த அங்கி, நூல் / ரப்பர் வளையங்கள்.

**செய்முறை :** திருநீற்றை நீரில் கலந்து பசையாக்கி கலத்தில் நிரப்பவும். ஒரு புட்டியால் அதை அழுத்தி பசை பாத்திரத்தின் பக்கங்களில் ஒட்டி நடுபாகம் காலியாகும்படி செய்யவும். காயவிடவும். நடுபகுதியில் உலர்ந்த விபூதியை நிரப்பிக் கொள்ளவும். அங்கியை அணிந்து அதன் உள்கைகள் இரண்டிலும் விபூதியை நிரப்பி அது கொட்டி விடாதிருக்க நூலாலோ ரப்பர் வளையத்தாலோ முடிந்து கொள்ளவும்.

திருநீறுள்ள கலத்தைக் காட்டவும். அதை தலைகீழாகக் கவிழ்த்து சிலைமேல் அதை கொட்டவும். அது வெறுமையாக இருப்பதைக் காட்டவும். இப்போது வாய்ப்புறம் மேலே இருக்கும்படியாக பாத்திரத்தைப் பிடித்துக்கொண்டு அதற்குள் உங்கள் வலதுகையை விட்டு சட்டைக்கையில் உள்ள திருநீறு பாத்திரத்துக்குள் விழச் செய்யவும்.

பாத்திரத்தை மெதுவாக சரித்து உங்கள் கை வழியாக விபூதி கொட்டச் செய்யவும். விபூதி வருவது நின்றதும் கையை வெளியில் எடுத்து பாத்திரத்தில் ஒன்றுமில்லை என்பதைக் காட்டவும்.

இப்போது வாயை மேல்புறமாக பிடித்து இடதுகையை உள்ளே விட்டு, இடது சட்டைக்கையில் மறைத்துள்ள விபூதியை விடுவிக்கவும். பின் பாத்திரத்தை சரித்து உங்கள் இடது கை வழியாக விபூதியை கொட்டி காலியாக்கவும்.

இப்போது இடது கையை வெளியே எடுத்து விட்டு வலது கையை நுழைத்து பாத்திரத்தின் பக்கவாட்டுகளில் அப்பியிருக்கும் விபூதியை மெதுவாக சுரண்டவும். இதன்மூலம் அந்த பாத்திரம் கொள்ளக்கூடியதாக தோன்றும் அளவைவிட அதிகமான விபூதியை உங்களால் வரவழைக்க முடிகிறது!

இந்த வித்தையை அம்பலப்படுத்துவது மிக எளிது என்பதால் ஒரு கலத்தில் இருந்து விபூதி வரவழைக்கும் இந்த வித்தையை 1978 முதல் சத்தியசாயிபாபா நிறுத்திவிட்டார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 68

**நோக்கம் :** வாயிலிருந்து சிவலிங்கம் எடுத்தல்.

சிவராத்திரி இரவில் பக்தர்கள் பஜனை பாடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது சத்தியசாயிபாபாவுக்குப் பிள்ளைப்பேற்று வலி ஏற்படுகிறது. அவர் புரண்டு நெளிகிறார்.

அவரது வலது கை வயிற்றின் மேலும் நெஞ்சின் மேலும் கழுத்தின் மேலும் இருக்கிறது. கண்ணீர், வேர்வை, எச்சில் இவற்றை துண்டால் துடைத்தபடியே, தன் வாயிலிருந்து முட்டைவடிவ தங்க / கல் லிங்கத்தை திடீரென "பிரசவிக்கிறார்".

**தேவை :** முட்டை வடிவ கல் , நிறைய கஞ்சி போட்ட குளியல் துண்டு ஒன்று, பூத்தொட்டி.

**செய்முறை :** முட்டைவடிவ கல் துண்டுக்குள் மறைக்கப்பட்டு அலங்காரத்துக்காக வைத்துள்ள பூச்சாடி அருகில் வைக்கப் பட்டுள்ளது. முக்கல் முனகலுடன், வலதுகையை உங்கள் உடல்மேல் அழுத்திக் கொண்டே, துண்டை எடுத்து வியர்வையையும் கண்ணீரையும் துடைக்கத் தொடங்குகிறீர்கள். கை கழுத்தின் பக்கம் வந்ததும் வாயிலிருந்து எச்சில் ஒழுகவிடுகிறீர்கள்.

அதைத் துடைக்கும் சாக்கில் வாயருகில் துண்டை வைக்கிறீர்கள். கல்லின் பாதியை வாய்க்குள் பிடித்துக் கொள்கிறீர்கள். துண்டைத் தாழ்த்தியதும் முட்டைக்கல் உங்கள் வாயிலிருந்து வெளிவருவது போலவே தோன்றுகிறது.

அனந்தபூரில் நாம் இந்த வித்தையை செய்து காட்டி, தால் புரூக் என்பவர் தன் 'லாடு ஆவ் த ஏயர்' நூலில் விவரித்துள்ள பாபாவின் ஓரினச் சேர்க்கை குறித்து அவரை எள்ளி நகையாடியதும், இந்த வித்தையையும் அவர் கைவிட்டுவிட்டார்.

## செயல் விளக்கம் - 69

**நோக்கம் :** கல் துண்டைக் கற்கண்டாக மாற்றுதல்.

சித்திரவதி ஆற்றங்கரையில் தான் நடந்து போகும்போது சத்தியசாயிபாபா, இயற்பியல் விஞ்ஞானியான முனைவர் பகவந்தத்திடம் ஒரு கல்லை எடுத்துத் தருமாறு சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவியல்காரரும் அப்படியே செய்தார். அதை அவரது வாய்க்குள் வைத்த சத்தியசாயிபாபா, அதைத் தின்னுமாறு அவரிடம் சொன்னார். அது கற்கண்டாக இருந்தது.

**தேவை :** வெள்ளைக்கல், கற்கண்டு.

**செய்முறை :** ஒரு கற்கண்டை கையில் மறைத்துக் கொள்ளவும். நீங்கள் சுட்டிக்காட்டும் ஒரு கல்லை எடுத்துத் தருமாறு ஒருவரிடம் சொல்லவும். உங்கள் விரல்களால் அக்கல்லை வாங்கி, அசைக்கும்போது கற்கண்டை விரல்களுக்குக் கொண்டு வந்து கல்லை மறைத்து விடவும். அதை உதவியாளரின் வாய்க்குள் போட்டு தின்னச் சொல்லவும். அது கல்கண்டாகத் தானே இருக்கும்!

❋

## செயல் விளக்கம் - 70

**நோக்கம் :** சிறு பாத்திரத்தில் இருந்து ஏராளமான நீர் கொட்டச் செய்தல்.

சத்தியசாயிபாபாவின் காலைக் கழுவிய நீர் ஒரு தங்கப் பாத்திரத்தில் நிரப்பப்பட்டு ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு பகிர்ந்து தரப்படுகிறது. அந்த கலத்தில் இருந்து அளவற்ற நீர் வருவது போல் தோன்றுகிறது.

**தேவை :** தனிவிதமான பாத்திரம், நீர்.

**செய்முறை :** பாத்திரத்தில் நீரை நிரப்பவும். உங்கள் பெருவிரலால் கலத்தின் கழுத்து துவாரத்தை மூடிக்கொண்டு நீர் தீரும்வரை மெதுவாக வெளியில் ஊற்றவும். வாய்பாகம் மேலே வரும்படி கீழே வைத்து பெருவிரலை எடுக்கவும். வெளிப்பானை நீர் உள்பானைக்குள் நிரம்புகிறது.

மீண்டும் கலத்தின் வாயில் பெருவிரலை வைத்தபடி கவிழ்க்கவும். நீர் வெளிவருகிறது. இம்முறையில் சிறுசிறு அளவாக - பாத்திரத்தில் உள்ள நீர் ஏறக்குறைய தீரும் வரை - திரும்பத் திரும்ப நீங்கள் நீர் எடுக்கலாம்.

பின்வரும் இரு அறிவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி இந்த பாத்திரம் வடிவமைக்கப்படுகிறது.

❋



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 71

**நோக்கம் :** ஒரு தம்ளரில் உள்ள நீர் அதை லேசான அட்டையால் மூடி தலைகீழாகக் கவிழ்த்தாலும் கொட்டுவதில்லை.

**தேவை :** ஒரு கண்ணாடி தம்ளர், அதன் வாயை மூட கெட்டியான தாள், நீர்.

**செய்முறை :** நீர் நிரம்பிய தம்ளர் கெட்டித்தாளால் மூடப்படுகிறது. அதை தலைகீழாகத் திருப்பிப் பிடித்தால் தாளும் விழுவதில்லை, நீரும் கொட்டுவதில்லை. தாளை மேல் நோக்கி அழுத்தும் காற்று மண்டல அழுத்தமே இதற்குக் காரணம்.

## செயல் விளக்கம் - 72

**நோக்கம் :** குறுகிய கழுத்துள்ள குப்பியைக் கவிழ்த்தால் அதில் உள்ள நீர் சிந்துவதில்லை.

**தேவை :** குளிர்பான புட்டி, அதன் கழுத்தைக் குறுகலாக்க செருகுவதற்கு ஒரு பிளாஸ்டிக் கட்டை.

**செய்முறை :** நீர் நிரம்பிய குளிர்பான புட்டியைச் சரித்து நீர் கொட்டுவதை காட்டவும். பிறகு புட்டியின் கழுத்தின் மேல் உங்கள் கையை அசைத்தபடி, மறைவாக அதன் கழுத்தில் பிளாஸ்டிக் கட்டையை செருகி பின் கவிழ்க்கவும். நீர் கொட்டாது. பின் ஒரு தீக்குச்சியை பிளாஸ்டிக் கட்டையின் துளை வழியாக உள்ளே விட்டால் நீரில் அது மிதக்கும்.

இது, குறிப்பிட்ட அளவு நீரை இடம் பெயரச்செய்ய அதே அளவு காற்று அவ்விடத்தை அடைந்தாக வேண்டும் என்னும் அறிவியல் விதியின் அடிப்படையில் அமைந்தது.

குறுகிய திறப்பை நீர் அடைத்துக் கொள்வதால் அதை வெளியேற்றத் தேவையான காற்று புட்டிக்குள் நுழைய முடிவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

9

# மற்ற சாமியார்கள் - மந்திரவாதிகள் - தந்திரவாதிகளின் அருஞ்செயல்கள்

நான் பம்பாயில் இருந்தபோது என்னை இளைஞர் ஒருவர் உதவி வேண்டி அணுகினார். அவர் அம்மா ஒரு கைம்பெண். தம் மகளை மணமுடித்துத் தர அவரால் வரதட்சணை தரமுடியவில்லை. எனவே தன்னை ஆசீர்வதிக்குமாறு பல சாமியார்களை அவர் அணுகியிருக்கிறார்.

அப்போது ஒரு சாமியார் பூசை நடத்த அவர்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். அவரை அம்பலப்படுத்த என் உதவியை வேண்டினார் அந்த இளைஞர்.

பிரார்த்தனைக்குப் பின் மகளிடம் சிறிது மண்ணை எடுத்து வருமாறு பாபா சொன்னார். அதை ஒரு தாளில் பொதிந்து கொண்டான். சில மந்திரங்களை ஓதியபின் அதைத் திறந்து பார்க்குமாறு அப்பெண்ணிடம் அவர் தந்தார். என்ன ஆச்சரியம்! அந்த மண் மஞ்சள் தூளாக உருமாறியிருந்தது. கடவுள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளார், ஏனெனில் மஞ்சள் வந்துள்ளது மங்கலத்தின் - நற்பேறின் அறிகுறி என்று அவர் அறிவித்தார்.

மறுபடியும் அதை தொட்டார், அது குங்குமமாக மாறிவிட்டது! இது திருமணத்துக்கு அடையாளம், இரண்டுமாதங்களுக்குள் அவளுக்கு திருமணம் நடக்கும் என சோதிடம் கூறி அவளுக்கு ஆசி கூறி ஐநூறு ரூபாயை வாங்கி ஃபையில் போட்டுக் கொண்டு நடையைக் கட்டிவிட்டார்.

அப்போது அந்த ஆளை கண்டனம் செய்ய நான் விரும்பவில்லை. ஆனால் அவர் ஒரு மோசடிப் பேர்வழி என்பதை இளைஞரின் அம்மாவே உணருவதற்காக இரண்டு மாதங்கள் வரை நாம் பொறுத்திருக்க வேண்டும் என்று அவரிடம் நான் சொன்னேன். அதன்பின் அந்தத் தாயிடம் நான் பேசுவதாக சொன்னேன்.

அதன் பின், இன்னொரு தடவை நான் பம்பாய் சென்றபோது அந்த இளைஞர் என்னைச் சந்தித்தார். அவரது வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். இன்னும் மகளுக்குத் திருமணம் ஆகவில்லை. பாபாவின் அதே வித்தையை நானும் செய்து காட்டி அதை அவர் எப்படி செய்தார் என்பதை விளக்கியும் சொன்னேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 73

### மண்ணை மஞ்சள் தூளாகவும் மஞ்சள் தூளை குங்குமமாகவும் உருமாற்றுதல்

**தேவை :** ஒரே அளவும் விதமுமான இரு தாள் துண்டுகள். ஒன்றில் சிறிது மஞ்சள்தூள் பொதிந்து வைக்கவும். நீற்றிய சுண்ணாம்பு டப்பியை உங்கள் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளவும்.

**செய்முறை :** ஓர் ஆளிடம் கொஞ்சம் மண் அள்ளி வரச் சொல்லவும். மஞ்சள் தூளைப் பொதிந்த அதே முறையில் மற்ற தாளில் அதைப் பொதிந்து உங்கள் முகத்தின் அருகில் கொண்டு வரவும். மந்திரம் முணுமுணுத்து மண் பொட்டலத்தைக் கையில் மறைத்துவிட்டு மஞ்சள் தூள் பொட்டலத்தை முன்னுக்குக் கொண்டு வந்து அந்த ஆளிடம் தந்து திறந்து பார்க்கும்படி சொல்லவும். அதில் மஞ்சள் தூளைக் கண்டு அவர் அதிர்ச்சி அடைவார்.

மக்களின் கவனம் மஞ்சள் தூள் மேல் இருக்கும்போதே உங்கள் பைக்குள் கைவிட்டு உங்கள் சுட்டு விரலில் சுண்ணாம்பைத் தொட்டுக் கொள்ளவும். மஞ்சள் தூளை சுட்டுவிரலால் கலக்கவும். அது சிவப்பாக, குங்குமம் போல் மாறும்.

பூசைகள் - பிரார்த்தனைகள் ஒருவருக்கும் உதவி செய்யாது என்று அவரிடம் விளக்கினேன். நம் ஆறங்குல வயிற்றை நிரப்ப நாம் எல்லாரும் போராடியாக வேண்டும். எந்த பூசையும் அதை ஒருபோதும்நிரப்ப முடியாது. மதத்தையோ சாதியையோ பற்றி கவலைப்பட வேண்டாம் என அவரிடம் நான் கேட்டுக் கொண்டேன். தனக்கான துணைவனைத் தானே தேர்ந்து மணந்து கொள்ள அந்தப் பெண்ணுக்கு அனுமதி தருமாறும் அவரிடம் வேண்டிக் கொண்டேன். அதன்பின் அவள் ஒருவரைக் கண்டுபிடித்து மணந்து கொண்டாள்.

## செயல் விளக்கம் - 74

### காசுகளில் இருந்து சாம்பல்

1981 இல் மகாராட்டிரத்தில் விஞ்ஞான் யாத்ரா (அறிவியல் அறிவொளிப் பயணம்) மேற்கொண்டிருந்தபோது, பெல்ட்டனைச் சேர்ந்த விலாசு பாபா என்ற சாமியார், தமது அருஞ்செயலைப் பொய்யென்று நாங்கள் மெய்ப்பித்து விட்டால் எங்களுக்கு ஐந்து லட்சம் ரூபாய் தருவதாக சவால் விட்டார். மராட்டியத்தில் உள்ள பல மராட்டி தினசரிகளில் அவரது சவால் வெளியாயிற்று.

அவரது சவாலை ஏற்றுக் கொண்டு அதற்கு ஒரு நாள் குறித்தோம். அதற்கு அவர் தந்த பதிலில் அன்று முதல் மகாராட்டிராவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் பயணம் முடியும் நாள்வரை தான் சமாதி நிலையில் இருக்கப் போவதாகவும் அப்போது அவரது ஆன்மா இமயமலையில் திரிந்து கொண்டிருக்கும் ஆதலால் அந்தத் தேதி அவருக்கு ஒத்து வராது என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே அவரது அற்புதங்களை ஆராய மறுநாளையே குறித்து அவரிடம் தெரிவித்தேன். அதே நாளில் பெல்ட்டனில் எனது சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. எனக்கும் பாபாவுக்கும் இடையில் நடக்கப் போவதைக் காண பெல்ட்டனையும் அதன் சுற்று வட்டத்தையும் சேர்ந்த மக்கள் பெருந்திரளாக வந்திருந்தார்கள். ஒரு மணிநேரம் அவருக்காக நாங்கள் காத்திருந்தோம். ஆனால் அவர் வரவில்லை.

எங்கள் ஆட்கள் அவருடைய ஆசிரமத்திற்குப் போனார்கள். அது பூட்டப்பட்டிருந்தது. அங்கு யாரும் இல்லை. இதுநாள் வரை அந்த சிற்றூருக்கு அவர் திரும்பவில்லை.

1982 இல் நான் மத்திய பிரதேசத்துக்குப் போயிருந்தபோது அவர் ஒரு பணக்கார வணிகரிடமிருந்து 5000 ரூபாய் வசூலித்தார் என்பதை அறிந்தேன். ஒரு ஆண்குழந்தையை வேண்டி அப்பணத்தை வியாபாரி தந்திருந்தார். பூசை அறையில் வைத்திருக்கும்படி அவரிடம் ஒரு நாணயத்தை தந்திருந்தார் பாபா.

தா ன் ஏழைகளின் பாபா என்று அவர் சொல்லிக் கொண்டார். தொடக்கத்தில் 5 பைசா 10 பைசா காசுகளை மட்டுமே கேட்டார். காசை எடுத்து வாயருகே கொண்டு வந்து ஏதோ மந்திரம் ஓதி தந்தவரிடமே திருப்பிக் கொடுத்து உள்ளங்கைக்குள் இறுக மூடி வைத்துக் கொள்ளச் சொல்வார். சில நிமிடங்களில் அது சூடாகும். கையைத் திறந்தால் அதிலிருந்து விபூதி வெளிப்படும். காசைக் கழுவிய பின்பும் விபூதி பூக்கும்.

அவரது இயற்கைக்கு மீறிய சக்தியைக் கண்டு நிறைவடையும் அப்பாவி மக்கள் தம் சிக்கல்களைத் தீர்க்க அவரை அணுகுவர். அவர் அவர்களின் பணப்பைக்கேற்ப சுரண்டுவார். ஒருவருக்கு ஆண் குழந்தை பிறக்கச் செய்ய ஐயாயிரம் முதல் பத்தாயிரம் ரூபாய் வரை அவர் வசூல் செய்தார் என்று என்னிடம் தெரிவித்தார்கள்.

**தேவை :** நீரில் கரைந்த அடர் பாதரச குளோரைடு கரைசல் ஒரு சிறு பாத்திரத்தில்; தட்டில் ஒரு அலுமினிய நாணயம்.

**செய்முறை :** உங்கள் சுட்டுவிரலையும் பெருவிரலையும் பிறர் அறியாமல் பாதரச குளோரைடு கரைசலில் தோயுங்கள். உதவியாளர் ஒருவரை அழைத்து ஐந்து அல்லது பத்து பைசா நாணயம் ஒன்றை வாங்குங்கள். அதை உங்கள் சுட்டு விரலாலும் பெருவிரலாலும் இருபுறமும் தடவியபடி மந்திர உச்சாடனம் செய்யுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் அதை உதவியாளரின் உள்ளங்கையில் வைத்து அவர் கையை மூடிக்கொள்ளும்படி சொல்லுங்கள். கரைசலும் அலுமினியமும் கூடி வினைபுரிந்து வெப்பம் உண்டாகிறது. விபூதி போல் தோற்றமளிக்கும் சாம்பல் நிறப்பொடி காசின் மேல் பூக்கிறது. கரைசலில் காசைக் கழுவினால் வினை திரும்பவும் தொடங்குகிறது.

தட்டை எடுத்து கரைசலில் முக்கிய துண்டுத் துணியால் அதைத் தேய்த்தாலும் இதே வேதிவினை நிகழும்.

## செயல்விளக்கம் - 75

### மன ஆற்றலால் நெருப்பு உண்டாக்குதல்

1980 இல் நமது பிரதமர் இந்திரா காந்தியின் நீண்ட ஆயுளுக்கா க ஏராளமான யாகங்கள் நடத்தப்பட்டன. ஆனால் இந்த யாகங்கள் அவர் உயிரைக் காப்பாற்றவில்லை. 1984 இல் அவர் அரசியல் கொலை செய்யப்பட்டார்.

தில்லியில் யாகம் நடத்தியவர் பெயர் சடாச்சாரி சாயிபாபா; கரும்தாடியும் நெடுமுடியும் கொண்ட இளைஞர். லட்சக்கணக்கான மக்கள் அந்த யாகத்தை நேரில் கண்டனர். இந்த யாகத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால், இரண்டு மூன்று தேக்கரண்டி நெய்யை விறகின் மேல் ஊற்றித் தன் மன ஆற்றலை அதன் மேல் அவர் குவித்தபோது அது தானே தீப் பிடித்து எரியத் தொடங்கியதுதான்.

மூன்று நாள் யாகத்தில் இந்த பாபா சுமார் 86 லட்சம் ரூபாய்கள் சம்பாதித்துக் கொண்டார். சிங்கப்பூரில் குணப்படுத்த முடியாத நோயை குணப்படுத்துவதற்காக யாகம் நடத்த பணம் வசூல் செய்தார். அப்போது அவர் அம்பலப்பட்டு அந்த அரசாங்கத்தால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் அவரது சுமையைச் சோதனை போட முயன்றபோது அவர் கலவரம் அடைந்தார். அவரது கைப்பை கீழே விழுந்து தீப் பிடித்தது. தன் கைப்பையில் வெடிபொருள்களை வைத்திருந்ததற்காக அவர் மேல் குற்றப்பதிவு செய்யப்பட்டது.

இதன் பின் பம்பாயில் தன் சீடர்களின் குண்டலினி சக்தியை உயர்த்த முயன்ற போதும் அவர் அம்பலமானார். ஒருவரின் தலையைத் தொடும்போது அவருக்கு மின் அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடிய மின்னணு கருவி ஒன்றை அவர் வைத்திருந்தார். அந்த அதிர்ச்சி ஏற்படுவதே காம ஆற்றல் சகஸ்ராரத்துக்கு எழுச்சி பெறுவதன் அறிகுறி என்று விளக்கினார்.

இப்போது அவர் தன் முதல் மனைவியைக் கொலை செய்ததற்காக அவர்மேல் சட்டபூர்வநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரக்கணக்கான காதலிகளை வைத்திருந்த கண்ணனின் அவதாரமே தாங்கள்தாம் என இந்த சாமியார்கள் உரிமை கோருகின்றனர். குணப்படுத்த முடியாத நோய்களை யாகத்தின் மூலம் (ஓம சிகிச்சை) குணப்படுத்துவதே இவர்கள் பாணியாகும்.

எல்லாவற்றையும் தாங்கள் தியாகம் செய்துவிட்டதாக இந்த சாமியார்கள் / பாபாக்கள் பீற்றிக் கொள்ளும்போது, அவர்கள் பணம், புகழ், பெண்பித்து பிடித்து அலைவதைக் காணுகையில் அதிர்ச்சியே ஏற்படுகிறது. அவர்மேல் கடைசியாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, தன் ஆசிரமத்தில் அவர் ஒரு விபச்சாரக் கூடத்தை நடத்திக் கொண்டிருந்தார் என்பது. குண்டலினியை எழுப்புதல் என்னும் திரைமறைவில், தன் கூடத்துக்கு வரும் பணக்காரர்களுக்கு ஆசை காட்டி அவர்களை விலைப்பெண்களுடன் சந்தேகப் ப டத்தக்க நெருக்கமான நிலைகளில் படம் பிடித்து, பின் அவர்களை மிரட்டிப் பணம் பறிப்பது அவர் வழக்கமாக இருந்தது.

### நெருப்பை பாபா உண்டாக்கியது எப்படி?

**தேவை :** உலர்ந்த மரச்சீவல்கள் அல்லது துண்டுக் காகிதங்கள், உலோகத்தட்டு, பொட்டாசியம் பர்மாங்கனேட், கிளிசரின்.

**செய்முறை :** ஓர் உலோகத்தட்டில் உலர்ந்த மரச்சீவல் அல்லது காகிதத்துண்டுகளை கொஞ்சம் எடுத்துக் கொள்ளவும். மத்தியில் தூள் செய்யப்பட்ட பொட்டாசியம் பர்மாங்கனேட்டை கொஞ்சம் வைக்கவும். நெய் விடும் சாக்கில் இரண்டு மூன்று துளி கிளிசரினை ஒரு கரண்டி கொண்டு பொட்டாசியம் பர்மாங்கனேட் மீது விடவும்.

பின் உங்கள் கண்கள் மற்றும் விரல்கள் வழியாக மனோசக்தியை அனுப்புவதுபோல் நடிக்கவும். பொட்டாசியம் பர்மாங்கனேட் மீது கிளிசரின் பட்டதும் வேதிவினை நடந்து, முதலில் புகை வருகிறது. பின் தான் தீப்பிடித்து குபீர் என எரிகிறது.

## செயல் விளக்கம் - 76

### தலையாலேயே தேங்காய்களை உடைத்தல்

1980 களில் இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்திலிருந்து கேரளாவுக்கு ஒரு சாமியார் வந்தார். தன் தலையாலேயே 101 தேங்காய்களை உடைத்தார். அதன் நீரை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கினார். தேங்காய் நீரை (இளநீரை) மட்டுமே உண்டு தான் உயிர் வாழ்வதாக அவர் சொல்லிக் கொண்டார்.

மாத்ருபூமி வார இதழ் இந்த சாமியாரின் படங்களுடன் இவரைப் பற்றிய அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டது. இதை வந்து ஆராய்ந்து அருஞ்செயல்களில் நம்பிக்கை கொள்ளுமாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம் குழுவினருக்கு சவால் விட்டது. 'கடவுள் உண்டு, அருஞ்செயல்கள் நடைபெறவே செய்கின்றன' என்பதை நிருபிக்கவே யாழ்ப்பாணச் சித்தர் (அப்படித்தான் அவர் அழைக்கப் பட்டார்) இந்த அருஞ்செயலைச் செய்து காட்டுகிறார் என்று கூறினார்கள். மேலும் அவர் ஒருபோதும் பணம் வாங்குவதில்லை என்றும் கூறினார்கள்.

தலையில் தேங்காயை மோதி உடைப்பதற்கும்கடவுள் இருப்பதற்கும் என்ன உறவு என்றே எனக்குப் புரியவில்லை! இது எப்படி ஒரு அதிசயமாக முடியும் என்றும் விளங்கவில்லை!! பிற்பாடு, நம் தேசியத் தொலைக் காட்சி அவர் தேங்காய்களை உடைப்பதைக் காட்டியது. அவரைக் கூர்ந்து கவனிக்கும்படி என் நண்பர்களில் சிலரிடம் கூறிவைத்தோம்.

முற்றிய காய்களை அவர் உடைப்பதில்லை, இளம் காய்களை மட்டுமே உடைக்கிறார் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. ஓடு கடினமாயிராத காய்களை மட்டுமே அவர் உடைத்தார்.

கையில் இருந்து கீழே விழுந்தாலே உடைந்து விடக்கூடிய மிகவும் லேசான காய்களாகவே அவை இருந்தன. இந்த 'சாதனைக்காக' அவரே மரம் ஏறி தேங்காய்களைப் பார்த்துப் பார்த்து பறித்துக் கொண்டார்.

அவரது இந்த ரகசியத்தைக் கண்டு பிடித்ததும் என் நண்பர்கள் அவரது தேங்காய் மூட்டைக்குப் பதிலாக முற்றிய கடினமான தேங்காய்கள் உள்ள மூட்டையை மாற்றி வைத்து விட்டார்கள்!

முதல்மூட்டை அவருடையது. அதை அவர் தன் தலையால் உடைத்து விட்டார். இரண்டாவது மூட்டை எங்களுடையது. ஒரு காயை எடுத்து தன் தலையில் மோதினார். அது உடையவில்லை! இன்னொன்றை எடுத்து உடைத்தார். அதுவும் உடையவில்லை. இப்படியே அரை டசன் காய்களை எடுத்து மோதிப் பார்த்தார். ஆனால் அவை உடையவில்லை.

ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்பதை அறிந்தார். காலை பூசையின் போதே சில சகுனத் தடைகள் நேர்ந்தன, அதனால்தான் இப்போது அருஞ்செயல் நிகழ்த்த முடியவில்லை என பக்தர் கூட்டத்திடம் அறிவித்தார்! மறுநாள் திரும்பவும் வருவதாகச் சொன்னார். ஆனால் வரவில்லை! அதற்கு மறுநாளும் அவர் வரவில்லை.

ஏனெனில் அவரது சூழ்ச்சியை எங்கள் குழு அம்பலப்படுத்தி விட்டதைச் செய்தித்தாள்களின் மூலம் அவர் தெரிந்து கொண்டு விட்டார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேங்காய்களை தம் தலையால் மோதி உடைக்க ஆறு பேருக்கு நான் பயிற்சி தந்தேன். கேரளாவின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த சாகசத்தை நாங்கள் செய்து காட்டினோம். இந்நிகழ்ச்சி எங்கள் பெயர்கள் நாடு முழுவதும் தெரியும்படி செய்தது. ஏனெனில் இந்த அம்பலத்தை எல்லா நாளிதழ்களும் வெளியிட்டன.சிலர் எங்களைக் கேலி கூட செய்தனர். சாமியார் தேங்காய் உடைப்பது அவரது பிழைப்புக்காக, நாங்கள் அவரை அம்பலப்படுத்துவது பெருமைக்காக என்று எழுதியது மாத்ருபூமி. இதற்குள் அவர் பல லட்சம் ரூபாய்களைச் சுருட்டிவிட்டார்.

**தேவை :** நார் உரிக்கப்படாத இளநீர்க் காய்கள்.

**செய்முறை :** இது ஒரு தந்திரமே அல்ல. தேங்காயில் முக்கண் உள்ள பகுதியை உங்கள் தலைமேல் மோதுங்கள். அது உடைந்து விடும்.

❋

## செயல் விளக்கம் - 77

**நோக்கம் : நார் அகற்றிய முற்றிய தேங்காய்களை உடைத்தல்.**

நாரில்லாத முற்றிய தேங்காயை சாமியாடி தன் நெற்றியில் இடித்து உடைக்கிறார்.

**தேவை :** நார் அகற்றிய தேங்காய் ஒன்று, மரம் வெட்டும் கத்தி.

**செய்முறை :** முன்னதாக தேங்காயைச் சுத்தம் செய்து குடுமியைத் தவிர மீத நார் முழுவதையும் நீக்கிடுக. பிறகு கத்தியால் அதை லேசாக சுற்றிலும் தட்டி ஓட்டில் தூர் ஏற்படுத்துக. ஆனால் பிளந்து விடக்கூடாது. மூன்று நாள்கள் அதை வெயிலில் உலர்த்துக - பருப்பு ஓட்டிலிருந்து கழன்றுவிடும். இப்போது நீங்கள் அணியமாகி விட்டீர்கள்! தேங்காயில் உள்ள தூரை மறைக்க சந்தனம், குங்குமம் பூசிவிடுங்கள். பின் உங்கள் நெற்றியில் முட்டுங்கள். அது இரண்டாக பிளந்துவிடும்!

❋

## செயல் விளக்கம் - 78

**நோக்கம் : நீர் தெளிப்பதன் மூலம் தேங்காய் உடைத்தல்**

மந்திரம் செபித்தபடி ஒரு தேங்காய் மேல் நீர் தெளிக்கிறார் சாமியாடி. தேங்காய் பிளவுறுகிறது. ஒரு ஆவி தோன்றி மறைகிறது.

**தேவை :** நார் உரித்து சுத்தம் செய்யப்பட்ட முற்றிய தேங்காய்.

**செய்முறை :** சுண்ணாம்பு காளவாயில் தேங்காயை வைத்து காளவாய் திறந்ததும் அதை எடுத்து விடுக. அதன்மேல் நீர் பட்டால் காய் பிளவுபடுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 79

**நோக்கம் : பாலில் தோய்த்தெடுத்த தாளில் உங்கள் கேள்விகள் தோன்றுதல்**

*1984 இல் தில்லியில் சர்வதேச மாயமந்திர மாநாடு நடத்தப்பட்டது. அப்போது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர் தலைமை தாங்கினார். மாநாட்டுக்கு வந்திருந்த பார்வையாளர்களிடம் பால்டி பாபா என்பவர் ஆளுக்கொரு கேள்வியை எழுதச் சொல்லித் தாளைத் தம் பைக்குள்ளேயே வைத்துக் கொள்ளச் சொன்னார்.*

*பின் அதே மாதிரியான தாள் துண்டுகளைப் பால்டிபாபா ஒரு பால் வாளிக்குள் முக்கி எடுத்தார். உடனே அவர்களின் கேள்விகள் அந்த வெற்றுத் தாள்களில் தெரிந்தன. பின் அவற்றுக்கு அவர் விடை அளித்தார். சாமியாரை மிகவும் புகழ்ந்தார் நீதிபதி.*

**தேவை :** துளைகளிட்ட தாள்கள் இரண்டு, வரைபலகை, பந்துமுனைப் பேனா(பால் பென்).

**செய்முறை :** வரைபலகையில் ஒரு துளை தாளை (பெர்ஃபோரேட்டட்) கண்பார்வைக்குப் புலப்படாமல் மறைத்து மேல்தாள் மேல் தம் கேள்விகளை எழுதுமாறு நான்கு பேரிடம் கூறவும்.

கேள்விகளை எழுதியபின் துளைக்கு நேராக தாள்களைக் கிழித்து யாருக்கும் காட்டாமல் அதைத் தம் பைகளுக்குள் மறைத்து வைத்துக் கொள்ளுமாறு கூறவும். பெரிய எழுத்துகளில் எழுதுமாறு கூறி, எழுத ஒரு பந்து முனை பேனாவை தரவும். வரைபலகையை உங்கள் உதவியாளரிடமிருந்து வாங்கவும்.

அவர் வரைபலகையில் உள்புறமுள்ள துளைத் தாளை மறைவாக அகற்றி மேசைமேல் வைக்கிறார். துளைக்கு நேராக நான்கு துண்டுகளாக அதை கிழிக்கவும். எழுதாத பக்கமே பார்வையாளர்களுக்குத் தெரியும்படியாக எழுதிய பக்கம் உங்கள் பக்கம் இருக்குமாறு பிடித்துக் கொண்டு கிழிக்கவும்.

தாள்களைப் பாலில் முக்கவும். மந்திரம் செபிக்கவும். ஒவ்வொன்றாக எடுத்து கேள்விகளை வாசித்து பதில் கூறவும். எப்படியென்றால், (பாலில் முக்கியதும்) தாளில் அச்சு அடையாளம் தோன்றுகிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செயல்விளக்கம் - 80**

## மணியின் நாக்கு இல்லாமலே மணி ஒலித்தல்

சென்னையில் பன்றிமலை சுவாமிகள் என்று ஒருவர் இருந்தார். (இப்போது இறந்து விட்டார்). இவர் 1976 இல் கணக்கில் காட்டப்படாத பணமாக 76 லட்சம் ரூபாய்கள் வைத்திருந்தார் என்பதற்காகப் பிடிபட்டார்.

முதலில் பதிவாளர் அலுவலகத்தில் எழுத்தராக இருந்தார். பிறகு, சோதிடராகவும் மாந்திரிகராகவும் இருப்பது அதிக ஆதாயமானது என்று கண்டதும் எழுத்தர் வேலையில் இருந்து விலகினார்.

சிக்கல் இல்லாவிட்டால் யாரும் இவர்களிடம் போவதில்லை. மக்கள் தன்னை அணுகியதும் இவர் அவர்களுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது, அவர்களின் கிரகங்கள் மிகவும் மோசமான இடத்தில் உள்ளன என்பார். நவகிரகங்களை சாந்தி செய்யாதவரை அவர்கள் துன்பம் நீங்காது என்பார்.

தன் சோதிடம் சரிதானா என்று பார்க்க நா இல்லாத மணி ஒன்றை அவர்களிடம் அவர் தருவார். இறை அருள் இருந்தால் அது ஒலிக்கும்; இல்லாவிட்டால் மணி ஒலிக்காது என்பதை அவர்கள் காண்பார்கள்.

பரிகார பூசைக்கு 50 ரூபாய் வசூலிப்பார். பூசை முடிந்த பின் அவர் மணியை அசைத்தால் அது ஒலிக்கும். மறுபடியும், வந்தவனிடம் அந்த மணியை தந்து அந்த ஆள் அசைத்தால்அது ஒலிக்காது!

நட்சத்திரங்கள் மிகவும் கடுமையான தீய பலன்களை கொண்டுள்ளதே இதற்கு காரணம் என்பார்! எனவே, இன்னொரு ஆற்றல் வாய்ந்த பூசையை நடத்தியாக வேண்டும், அதற்கு 5000 ரூபாய் செலவாகும் என்பார். கவலையோடு அம்மனிதன் வீடுதிரும்பி ஓரிடத்தில் கடன் வாங்கி வருவான். இனி நம் வாழ்க்கை வளம் பெறும் என நம்புவான்.

நட்சத்திரங்களுக்கான விரிவான பூசை நடத்துவார் பாபா. அந்த ஆளின் கையைப் பிடித்துக் கொண்டு மணியை அசைப்பார். என்ன ஆச்சரியம் - மணி ஒலிக்கும்! சில மாதங்களுக்குள் எல்லாம் நேராகும் என்று சொல்லி அவனை ஆசீர்வதிப்பார். ஒன்றும் நேராகாது; தன் சிக்கலுக்கு எந்த தீர்வும் கிட்டவில்லை என்பதைக் காண்பான். இந்த சாமியாரிடம் வந்தவர்கள் பெரும்பாலோர் தம் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேவை :** நாவில்லாத மணி ஒன்று, மாட்டுக் கழுத்து மணி ஒன்று.

**செய்முறை :** மாட்டுக் கழுத்தில் கட்டும் மணியை அக்குளில் கட்டிக் கொள்ளவும். அக்குளை தளர்த்தி மணியை அசைக்கையில், ஒலி கேட்கிறது. அக்குளை அழுத்திக் கொண்டு கையில் உள்ள மணியை அசைக்கையில் ஒலி கேட்பதில்லை.

❈

## செயல்விளக்கம் - 81

### முடிச்சில்லாமல் இரு சணல் கயிறுகளை இணைத்தல்

மணவிலக்கு ஏற்படும் நிலையில் இருக்கும்- ஒருவருக் கொருவர் பூசலிட்டுக் கொண்டிருக்கும் - கணவன் மனைவியரை ஒன்று சேர்த்து வைப்பதாக மந்திரவாதி வாக்களிக்கிறான். பெரும்பாலான இந்திய மனைவிகள் பொருளாதாரத்துக்குத் தம் கணவர்களையே சார்ந்திருப்பதால், தம் திருமணத்தை முறியாமல் காப்பதற்கு ஏதாவது ஒரு மந்திரவாதியிடமோ சாமியாரிடமோ விரைகின்றனர். அவர்களை ஒன்று சேர்க்கும் ஆற்றல் தனக்கு உள்ளது என்பதை மெய்ப்பிக்க இரு சணல் கயிற்றுத் துண்டுகளை எடுத்து மந்திரம் கூறி முடிச்சில்லாமலேயே அவற்றை ஒரே கயிறாக்கி காட்டுகிறான்.

**தேவை :** 4 - 6 புரி உள்ள சணல் கயிற்றின் 12'' நீளத்துண்டு ஒன்று.

**செய்முறை :** நூலின் மத்தியில் புரிகளை இரு சம பிரிவுகளாகப் பிரித்து தனித்தனியாக அவற்றைத் திரித்துக் கொள்ளவும். நூல் இப்போது இரண்டு நூல்கள் போலத் தோன்றும். திரித்த பகுதியை உள்ளங்கைக்குள் மறைத்துக் கொள்ளவும். மற்ற இருமுனைகளை இழுக்குமாறு இரண்டு பேரிடம் கூறவும். அது முடிச்சேதும் இல்லாத ஒரே நூலாக ஆகிறது.

திருமணத்தை பாதுகாக்க சாமியார்களால் முடியாது. அதைக் காப்பாற்ற மனத்தை அமைதியாக வைத்துக் கொண்டு விமர்சனரீதியாக சிந்திக்க வேண்டும். நீங்கள் மூன்றாவது ஆளாக இருந்தால் என்ன செய்வீர்கள் என்பதைக் காண ஒவ்வொரு சிறு சிக்கலையும் விமர்சனத் தன்மையுடன் ஆராய வேண்டும். இது மட்டுமே உங்களுக்கு தெளிவான தீர்வை தரும். அதுவே ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கான பகுத்தறிவுடைய பதிலாக இருக்கும்.

❈

## செயல் விளக்கம் - 82

### பூக்கள் வணங்கும்படி செய்தல்

கோலாப்பூரில் இருந்து வந்த தத்தாபால் எனும் சாமியார், தான் சிவனின் அவதாரம் என்பதால் செடிகளும் பூக்களும் கூட தனக்குத் தலைவணங்கும் எனப் பெருமையாக பேசினார். மேலும் தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு அறிவியல் பட்டதாரி என்பதால் மிகவும் அறிவியல் பூர்வமான அவதாரம்தான் என்றும் தன்னைப்பற்றி அவர் சொல்லிக் கொண்டார். இளம் வயதிலேயே இவர் மஞ்சள் காமாலைக்குப் பலியானார்.

**தேவை :** எத்தில் குளோரைடு தெளிப்புக் கலவை (ஸ்ப்ரே), பூக்களுடன் கூடிய மெல்லிய செடிகள்.

**செய்முறை :** மெல்லிய செடிகள் மற்றும் பூக்களின் மேல் எத்தில் குளோரைடு தெளிக்கவும். செடிகள் மயக்க மருந்துக்கு கட்டுப்படக் கூடியவை. அவை அப்படியே தொங்கி விடுகின்றன.

❋

## செயல் விளக்கம் - 83

### பேயைக் கொளுத்துதல்

'பேய் பிடித்தல்' என்னும் நோயின் அறிகுறிகள் அனைத்தும் (பொசசன் சிண்ரோம்) இளம் பெண்கள், மணமான பெண்கள், வயதான பெண்கள் முதலியோரிடமே 95% உள்ளது. ஆண்களிடம் இது 5% மட்டுமே உள்ளது.

இந்த ஆவேச நோய்க்குறித் தொகுதி (பொசசன் சிண்ரோம்) என்பது வீட்டில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளின் விளைவாகும். குடும்பத்தில் அவர்களுக்குப் போதிய கவனிப்பும் அன்பும் கிடைப்பதில்லை. திருமணமான பெண்களுக்கு நிறைவில்லாத காதல் வாழ்க்கை என்பது முதன்மையான சிக்கலாக உள்ளது.

கணவரிடமிருந்தும் மக்களிடமிருந்தும் போதிய கவனிப்பு கிடைக்கப் பெறாமையால் வயதான பெண்கள் பொறாமை கொள்கிறார்கள். சிக்கலின் காரணத்தை ஊடுருவிப் பார்ப்பதற்குப் பதில், அவர்கள் நிவாரணம்பெற மந்திரவாதிகளிடம் போகிறார்கள்.

இந்த மந்திரவாதிகள் அவர்களின் சிக்கல்களைக் கேட்கிறார்கள். அவர்களைச் சுரண்ட, பாதிக்கப்பட்டவருக்கு சில ஏவல் வித்தைகளைக் கற்பிக்கிறார்கள். அல்லது இறந்து போன ஆவியை/பேயை மந்திரித்து ஓட்டும் சாக்கில் அவர்கள் சில சடங்குகளைச் செய்கிறார்கள். அதில் தீ உண்டாக்கப்பட்டு விலங்குகள் / பறவைகள் போன்றவை பலியிடப்படுகின்றன.

ஆவியால் பீடிக்கப்பட்ட பெண்ணை அடித்து அவரை பீடித்துள்ள இறந்தவர் யாரென ஏதாவது ஒரு பெயரை சொல்லும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். அல்லது மந்திரவாதியே ஒரு இறந்தவரின் பெயரை எடுத்துக் கொடுக்கிறான். நோய் சிக்கலானதாக இருந்தால் அவள் மேல் ஒரு பொடியை தூவுகிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியர்வையும் கலக்க, அவள் உடல் எரிகிறது. குட்டிச்சாத்தான் வேலையை அவள் நிறுத்தா விட்டால் அந்த பொடியை அவளுடைய கண்களிலும் தூவி விடுவதாக அச்சுறுத்துகிறான். அவன் தூவும் பொடி மிளகாய்ப்பொடிதான். சில நேரங்களில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை அவள் உடல் மீதும் தொடைகள் மீதும் அழுத்துகிறார்கள். வலியாலும் பயத்தாலும், அவள் குணமாகிவிடச் சம்மதிக்கிறாள்.

அவளை ஆட்டிப்படைக்கும் பேய் அந்த தேங்காயில் புகுந்து கொள்கிறது. அவள் அந்த தேங்காயை தன் இரு கரங்களாலும் பிடித்துக் கொள்கிறாள். அவன் தேங்காய் மேல் தீர்த்தம் தெளிக்கிறான். அதிலிருந்து தீ வெடித்துக் கிளம்புகிறது. பின் தேங்காயைத் தரையில் வீசி உடைக்கிறார்கள். அதிலிருந்து இரத்தம் வழிகிறது. பேயைத் தான் எரித்துவிட்டதாகவும் அதன் இரத்தம் வெளிவந்து விட்டதென்றும் விளக்குகிறான்.

**தேவை :** குடுமி வைத்த தேங்காய் ஒன்று, சோடியம் உலோகம், பெரிய ஊசிக்குழல், பொட்டாசியம் பெர்மாங்கனேட், நீர், மெழுகு.

**செய்முறை :** தேங்காயின் உச்சியில் மூன்று கண்கள் உள்ளன. அவற்றில் ஒன்று மெலிதாக உள்ளது. பொட்டாசியம் பெர்மாங்கனேட்டை நீரில் கலந்து கெட்டியான கரைசல் தயாரித்து அந்த மெலிதான கண் வழியாக தேங்காய்க்குள் ஊசி மூலம் செலுத்தி துளையை மெழுகால் மூடிவிடவும்.

காட்சிக்குமுன் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் ஏற்றிய தேங்காயின் குடுமிக்குள் சோடியம் உலோகத்தின் சிறு துண்டு ஒன்றை மறைக்கவும்.

ஒரு உதவியாளரை அழைத்து அவர் உடம்பிலிருந்து தள்ளி நேராக இரு கைகளாலும் தேங்காயை பிடிக்குமாறு கூறவும். மந்திரம் கூறி தேங்காய் மேல் நீர் தெளிக்கவும். திடீரென தீ வெடிக்கிறது. பின் காயை உடைக்கவும். தேங்காய்த் தண்ணீருடன் கலந்த பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசல் வெளியில் வழிவது, பார்க்க ரத்தம் போலவே இருக்கும்.

நீருடன் சோடியம் வினை புரிந்து தீயுடன் வெடிக்கிறது.

## செயல் விளக்கம் - 84

### தேங்காயை உடைத்தால் பூக்கள் வெளிப்படுதல்

'கடவுளுக்கு மகிழ்ச்சியே' என்று காட்ட மாந்திரிகன் ஒரு தேங்காயை உடைக்கிறான், மலர்ந்த மல்லிகைப் பூக்கள் அதிலிருந்து வெளிப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேவை :** ஒரு தேங்காய், மல்லிகை மொட்டுகள், கூரிய கெட்டியான ஊசி, மெழுகு.

**செய்முறை :** தேங்காயின் மெல்லிய கண்ணை நீக்கி தேங்காய் நீரை உறிஞ்சிவிட்டு ஒன்றொன்றாக அதற்குள் முழு மல்லிகை மொட்டுகளைப் போட்டு நிரப்பவும். பின் கொஞ்சம் மெழுகைக் கொண்டு துளையை அடைத்து அதன்மேல் உச்சிக் குடுமியைப் பொருத்தி மூடவும். இதனை முந்திய நாள் இரவில் செய்து வைக்கவும்.

பார்வையாளர்களில் இருந்து ஒரு உதவியாளரை மேடைக்கு அழைக்கவும். அவரிடம் தேங்காயைத் தந்து தரையில் மோதி உடைக்குமாறு சொல்லவும். அதிலிருந்து மல்லிகைப் பூக்கள் சிதறுவதைக் கண்டு அவர் அதிர்ச்சியடைவார்.

## செயல் விளக்கம் - 85

**நோக்கம் :** ஏவல் விவகாரம். குடிசைகள் திடீரென தீப்பிடித்தல்.

பல சிற்றூர்களில் குடிசைகள் திடீரென தீப்பிடிக்கின்றன, அழிந்து போகின்றன. இது பில்லி சூனியத்தின் கைவேலை என்று கூறப்படுகிறது.

**தேவை :** பச்சை பசுச் சாணி, மஞ்சள் பாசுவரம்.

**செய்முறை :** இந்திய கிராமங்களில் மக்கள் மாட்டுச் சாணியால் வறட்டிதட்டி ஓலைக் கூரையில் காயவைத்து எரிபொருளாக பயன் படுத்துகிறார்கள். ஈர வறட்டியில் கொஞ்சம் மஞ்சள் பாசுவரத்தை கலந்து விடவும். வெயிலில் அது காய்ந்ததும் தீப்பற்றி ஓலைக்கூரையில் தீப் பிடிக்கிறது.

## செயல் விளக்கம் - 86

**நோக்கம் :** அலமாரியில் வைத்திருக்கும் துணிகள் அல்லது கொடியில் காயப்போட்டிருக்கும் துணிகள் திடீரென தீப்பிடிக்கின்றன. இது செய்வினை என்கிறார்கள்.

**தேவை :** மஞ்சள் / வெள்ளை பாசுவரம் + கார்பன் டை சல்பைடு கரைசல் 1: 6 என்ற விகிதத்தில்.

**செய்முறை :** இந்த கரைசலில் கொஞ்சத்தைத் துணிமேல் ஊற்றவும். சிறிது நேரத்தில் அது காய்ந்ததும், தீப்பிடிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 87

### தீர்த்தம் தெளித்ததும் குச்சிமேலுள்ள சோலி திரும்புதல்

ஒரு பொருள் திருட்டுப் போய்விட்டால் திருடனைக் கண்டுபிடிக்க மக்கள் ஒரு மந்திரவாதியை அணுகுகிறார்கள். ஆவிச்சடங்கு நடத்தப்படுகிறது. அதில், ஒரு காய்ந்த சுள்ளி மண்ணில் நடப்பட்டு அதன் முனையில் ஒரு கடல் சோலி மாட்டப்படுகிறது. அவன் கொஞ்சம் நீரெடுத்து, மந்திரம் ஓதியபின் குச்சிமேலும் சோலி மேலும் அதைத் தெளிக்கிறான். திடீரென சோலி மெதுவாக திரும்பத் தொடங்குகிறது. அது நகருவதை நிறுத்தியதும், திருடப்பட்ட பொருள் மூன்று நாள்களுக்குள் கிடைக்காவிட்டால் திருடனுக்கு மோசமான சாவுதான் கிடைக்கும் என்கிறான் மந்திரவாதி.

பின் அக்குச்சியை அவன் இரண்டாக ஒடித்துப் போடுகிறான். மூன்று நாட்களுக்குள், சோலி திரும்பிய திசையில் இருந்து திருடப்பட்ட பொருள் கிடைத்து விடுகிறது.

**தேவை :** 6" நீளமுள்ள காய்ந்த சுள்ளி, கடல் சோலி, பாத்திரத்தில் நீர்.

**செய்முறை :** பிறர் அறியாமல் குச்சியின் இரு முனைகளையும் இரு கைகளாலும் பிடித்துக் கூடுமானவரை முறுக்கவும். மண்ணில் அதை நட்டு அதன் மேல் சோலியை வைக்கவும். மந்திரம் ஓதும்போது குச்சிமேல் நீர் தெளிக்கவும். உடனே சோலி மாட்டிய குச்சி முறுக்கு அவிழத் தொடங்குகிறது!

## செயல் விளக்கம் - 88

### பிரார்த்தனை மூலம் மெழுகுதிரியில் தீப்பொருத்துதல்

"சென்னை தொலைக் காட்சியில் சி.எஸ்.ஐ. மதப்பிரச்சாரகரான பாஸ்ட்டர் தினகரன் தன் செபத்தாலேயே மெழுகு திரிகளை கொளுத்தினார்."

**தேவை :** கார்பன் டை சல்பைடு 1 பங்கு: மஞ்சள் / வெள்ளை பாசுவரம் 1 பங்கு கரைசல், புதிய பெரிய மெழுகுதிரி.

**செய்முறை :** (மெழுகு) திரியை பாசுவர கரைசலில் தோய்த்து மெழுகுதிரி தாங்கி மேல் நிறுத்தவும். செபம் செய்யவும். கரைசல் ஆவியானதும் மெழுகுதிரி தீப்பிடிக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 89

### மெழுகுதிரியை தொடுவதன் மூலமே தீப்பற்ற வைத்தல்

**தேவை :** 2 மெழுகுதிரிகள், குரோமிக் அமிலப் படிகங்கள், தூய மெதில்/ எத்தில் ஆல்ககால்.

**செய்முறை :** ஒரு மெழுகுதிரியின் திரியைச் சுற்றிலும் வட்டமாக இலேசாக பள்ளம் தோண்டி அதில் குரோமிக் அமிலப் படிகங்கள்சிலவற்றை இடவும். மற்ற மெழுகுதிரியின் திரியை ஆல்ககாலில் தோய்க்கவும். ஆல்ககாலில் தோய்த்த திரியால் குரோமிக் அமில படிகம் இட்ட திரியைத் தொடவும். இரண்டும் தீப்பற்றும்.

## செயல் விளக்கம் - 90

### விரல்களில் இருந்து புகைவரல்

தாம் தம் மனத்தை குவித்தால் தம் உடம்பில் இருந்து வெப்பம் வெளிப்படும் என்று நிரூபிக்க ஆன்மீக மனிதர்கள் தம் பெருவிரலையும் சுட்டு விரலையும் உரசியதும் அதிலிருந்து புகை வருகிறது.

**தேவை :** மஞ்சள் பாசுவரமும் கார்பன் டை சல்பைடும் 1:6 விகிதத்தில்.

**செய்முறை :** மேற்படி கரைசலில் ஒரு துளியைச் சுட்டுவிரல் மற்றும் பெருவிரலில் விட்டு விறைப்பாக தேய்த்தால் புகை உண்டாகும். எவ்வளவு அதிகமாய் உரசுவீர்களோ அவ்வளவு அதிகமாய் விரல்களில் இருந்து புகைவரும். விரல்களை தேய்க்கையில் நீங்கள் உங்கள் மனோ சக்தியைப் பயன்படுத்திக் கொண்டிருப்பது போல் அவற்றையே கூர்ந்து நோக்கவும்!

## செயல் விளக்கம் - 91

### துணியை எரித்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரல்

ஒரு ஆளின் வேட்டியை அல்லது துணியை வித்தைக்காரர் பற்றிப் பிடித்து மூடியகை மூலமாக அதன் ஒரு துண்டை எடுக்கிறார். அத்துண்டை அவர் எரித்து விடுகிறார். கையை வேட்டி / துணியிலிருந்து அவர் விலக்கியதும் அது எரியாமல் பழைய நிலைக்கே திரும்பி இருக்கிறது.

**தேவை :** பொதுவாக பயன்படுத்தும் வேட்டித் துணியுடன் பொருந்துவதான ஒரு பருத்தி வேட்டித்துணியில் 3" துண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*செய்முறை :* துண்டுத் துணியின் நடுபாகம் பெருவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் இருக்கும்படி அதை மறைத்துக் கொள்ளவும். துண்டுத்துணியானது உதவியாளரின் வேட்டியுடன் பொருந்துவதாக இருக்க வேண்டும். வேட்டியின் ஒரு பாகத்தை உங்கள் இடதுகையால் பிடித்துக் கொண்டு, மறைத்த துணியை அங்கிருந்து வெளியில் எடுக்கவும்.

அதற்குத் தீவைத்து அது எரிவதைக் காட்டவும். வலது உள்ளங்கையால் அந்த நெருப்பை அணைக்கும் அதே சமயம் அதை இடது உள்ளங்கைக்குள் தள்ளவும். கையை அகற்றி எரிந்த துணியை மறைத்து விட்டு வேட்டி எரியாதிருப்பதைக் காட்டவும்!

## செயல் விளக்கம் - 92

### இரவில் பிசாசுகள் நெருப்பு வடிவில் தோன்றுதல்

இரவில் வயல்வெளிகளில் நடக்கும்போது திடீரென 12 அடி உயர நெருப்பை காணுதல். இது பிசாசுகள் தொடர்பானது என கருதப்படுகிறது.

**தேவை :** மண்ணெண்ணெய், குச்சியில் சுற்றிய துணித் துடைப்பம், தீப்பெட்டி.

**செய்முறை :** வாயிலிருந்து மெல்லிய திவலையாக நீரை வெளியில் பீய்ச்சப் பழகவும். பின் ஒரு குழிக்குள் இருந்தபடி வாயை மண்ணெண்ணெயால் நிரப்பி தீக்குச்சியைப் பொருத்தி அதன்மேல் மண்ணெண்ணையைப் பீய்ச்சவும். தீ 12 அடி உயரம் வரை எழும்.

மிரண்டு போய் ஓடிவிடுவதற்குப் பதில் நெருப்பு காணப்படும் அவ்விடத்தை யாராவது நெருங்கினால் அந்த ஆளைப் பிடித்து விடமுடியும். ஏதாவது சட்டவிரோத காரியம் நடைபெறும் இடத்துக்கு ஆட்கள் வரவிடாமல் பயப்படுத்தி விரட்ட கடத்தல்காரர்கள் இந்த தந்திரத்தைக் கையாள்கிறார்கள்.

## செயல் விளக்கம் - 93

### காதுகள் வழியாக கேள்விகளை அனுமானித்தல்

கர்ண பிச்சாசினி தேவி, பார்த்தல் - ருசித்தல் - முகர்தல் - கேட்டல் - தொடுதல் ஆகிய எல்லா உணர்ச்சிகளையும் தன் காதுகள் மூலமாகவே உணர்கிறாள் என நம்பப்படுகிறது. அவள் எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கிறவள்; மக்களின் மனங்களையும்கூட புகுந்து காண்பவள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாமியாடி மேல் கர்ண பிச்சாசினி தேவி ஏறிவிடுகிறாள். பூசாரி இரண்டுமுறை மடித்து பங்கித்தரும் தாள்துண்டுகளில் பக்தர்கள் தம்சொந்த பிரச்சனைகளை எழுதுகிறார்கள். மடித்த தாள்களைச் சேகரித்த பின் அவற்றை ஒவ்வொன்றாக தன் காதருகில் வைக்கும் சாமியாடி, கேள்வியைக் கூறி அதற்கான பதிலையும் தருகிறான்.

**தேவை :** ஒரே தரமான, *3 " X 3 "* தாள்துண்டுகள், பேனா, பக்தர்கள் மத்தியில் ஒரு உதவி ஆள்.

**செய்முறை :** பார்வையாளர்களிடம் இருந்து மடித்த தாள்களைச் சேகரிக்கவும். அவர்களில் ஒருவர் உங்கள் உதவியாள் ஆக இருக்க வேண்டும். முன்பே பேசிவைத்துக் கொண்ட ஒரு கேள்வியை ஒருதாளில் அவர் எழுத வேண்டும். அதைக் கேள்வித்தாள் கட்டின் அடியில் வைக்க வேண்டும். கட்டின் மேலே உள்ள தாளை எடுத்து அதை உங்கள் காதருகில் வைத்து உங்கள் உடந்தையின் கேள்வியைச் சொல்லிவிட்டு அது சரிதானா என்று பார்ப்பது போல் அத்தாளைத் திறந்து பார்த்துவிட்டு, (உதவியாளின் / கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு) அடுத்த தாளை உங்கள் காதருகில் வைக்கும் போது முதல் தாளில் கண்ட கேள்விக்கு பதில் கூறவும். இந்த முறை "ஓரடி முன்னால்" எனப்படுகிறது. கேள்விகளுக்கு நகைச்சுவையான முறையில் பதிலளிக்கவும்.

செயல் விளக்கம் - 94

## தாளை நீரில் முக்கினால் உங்கள் கேள்விக்கு அதில் பதில் தெரிதல்

தந்திரக்காரர் தன் வாடிக்கையாளரிடம், ஒருதாளில் அவர்தன் சொந்த பிரச்சனையை எழுதி யாருக்கும் காட்டாமல் பத்திரமாக தன் பைக்குள் வைத்துக் கொள்ளுமாறு கூறுகிறார்.

இன்னொரு வெற்றுத் தாளை எடுத்து நீரில் முக்கி சிலநிமிடங்கள் மந்திரங்கள் ஓதுகிறார். பின் தாளை நீரில் இருந்து வெளியில் எடுத்தால் சிக்கலைத் தீர்க்கும் வழி அத்தாளில் வெளிப்பட்டுத் தெரிகிறது.

**தேவை :** *3 " X 3 "* கெட்டி பத்திரத்தாள் 3 துண்டுகள், கண்ணாடித்தம்ளரில் நீர், பந்துமுனை பேனா,

**செய்முறை :** ஒரு தாள் துண்டை ஐந்து நிமிடங்கள் நீரில் நனைக்கவும். அதை ஒரு கடினமான பிளாஸ்டிக் (ஃபார்மிக்கா) மேல்பரப்புள்ள மேசைமேல் அல்லது ஒரு கண்ணாடித் தகடுமேல் வைக்கவும். அதன்மீது ஈரமில்லாத ஒரு தாள் துண்டை வைக்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த சொந்த பிரச்சனைக்கும் இரண்டு பதில்கள் மட்டுமே உள்ளன. ஒன்று எதிர்மறையானது. மற்றது உடன்பாடானது. எதிர்மறையான, பதில்களைச் சொன்னால்தான், கிரகங்களையும் கடவுளரையும் சாந்தப்படுத்துவதற்கான சடங்குகள் செய்தாக வேண்டும். எனச் சொல்லி, மக்களைச் சுரண்ட முடியும் என்பதற்காக, குறி சொல்வோரும் சாமியார்களும் அத்தகைய பதில்களை மட்டுமே தருகின்றனர். பகுத்தறிவாளர்களோ உடன்பாடான - நம்பிக்கையூட்டும் பதில்களையே தருகிறார்கள்.

ஈரத்தாள் மேல் வைத்திருக்கும் உலர்ந்த தாளில் பெரிய எழுத்துகளில் பந்துமுனைப் பேனா கொண்டு பதிலை எழுதவும். அது ஈரத்தாளில் ஒரு நீர்த்தட வடிவில் விழும். ஒவ்வொரு சிக்கலுக்கும் நான் தரும் பதில் இதுதான் :

**பிரார்த்தனை, செபம் உதவாது. பயப்படாதீர்கள். துணிவுடன் இருங்கள். அறிவுபூர்வமாக சிந்தியுங்கள். சிக்கலின் காரணத்தைக் கண்டு பிடியுங்கள். அதுவே நீங்கள் தீர்வைக் கண்டு கொள்ள உதவும். பின் கடினமாக உழையுங்கள். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள்.**

பின் ஈரத்தாளை உலர்த்திக் கொள்க. அதில் பார்வைக்கு எதுவும் புலப்படாது.

பார்வையாளர்களில் இருந்து ஒருவரை அழைக்கவும். மறைவாகத் தன் சொந்த சிக்கலை ஒரு தாளில் எழுதி பைக்குள் வைத்துக் கொள்ளும்படி அவரிடம் கூறவும். பின் ஏற்கனவே ஆயத்தமாக உள்ள தாளை நீரில் முக்கி 2 - 3 நிமிடம் மந்திரம் சொல்லவும்.

ஏற்கனவே எழுதிய பதிலின் நீர்த்தடம் புலப்பட்டதும் நீரில் இருந்து தாளை வெளியில் எடுக்கவும். தாளில் தெரியும் பதிலைப் படிக்குமாறு அவரிடம் கூறவும். பின் அவரது சிக்கல் என்னவென்று கேட்டு அதற்கு பொருந்துமாறு இந்த பதிலுக்கு விளக்க உரை அளிக்கவும்.

## செயல் விளக்கம் - 95

**நோக்கம் :** தலைமேல் தீ வைத்து அதில் தேநீர் தயாரித்தல்.

யாரும் நெருப்பால் சுடப்பட்டு விடாமல் தடுக்கும் சக்தி தனக்கு உண்டு என்று தந்திரகாரர் அடித்துக் கூறுகிறார். நிறைய கூந்தலுடைய ஒரு பெண்ணின் தலையில் ஒரு துணித்துண்டை வைக்கிறார். பின் அதன் மேல் தீ உண்டாக்கி அதன் மேல் நீரைக் கொதிக்க வைத்து தேநீர் தயாரிக்கிறார். தீ அகற்றப்பட்டதும் துணியோ ஒரு முடியோகூட கருகியதாக தெரிவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேவை :** கைப்பிடி உள்ள தேநீர் பாத்திரம், நீர், பூந்துவாலை, உலோக வளையத்தின் மேல் திரி. மண்ணெண்ணெய், தீப்பெட்டி, தேயிலை, பால், சர்க்கரை.

**செய்முறை :** பூந்துவாலையை நீரில் நனைத்து அதிகப்படி நீரை பிழிந்து விடவும். துண்டை மடித்து பெண்ணின் தலையில் வைக்கவும். துண்டின் மேல் திரி வளையத்தை மண்ணெண்ணெயில் முக்கி வைத்து தீ பொருத்தவும். நீருள்ள பாத்திரத்தைத் தீமேல் பிடித்து நீரை கொதிக்க வைக்கவும்.

பின் தேயிலை, பால், சர்க்கரை கலந்து அப்பெண்ணுக்குக் குடிக்க தரவும். தேநீர் தயாரானதும் தீயையும் துண்டையும் எடுத்துவிடவும். பெண்ணின் தலைக்கோ முடிக்கோ எதுவும் நேரவில்லை என்பது கண்டு பார்வையாளர்கள் அதிசயிப்பார்கள்.

தாள் கோப்பையில் நீரைக் கொதிக்க வைக்கும் உத்தியே இங்கும் கையாளப்படுகிறது. ஈரத்துண்டில் உள்ள நீர் ஆவியாகும் வரை துண்டோ முடியோ தலையோ வெந்துவிடாது.

## செயல் விளக்கம் - 96

**நோக்கம் :** மக்கள் கேட்கும் பழங்களை வருவித்தல்.

சாமியார் ஒரு வெற்று பாத்திரத்தைக் காட்டுகிறார். ஒரு மேசை மேல் அதை வைத்து, பக்தர்களிடம் அவர்கள் விரும்பும் எந்தப் பழத்தையும் ஒவ்வொருவராக கேட்கும்படி கேட்டுக் கொள்கிறார். வெற்றுப் பாத்திரத்தில் கைவிட்டு கேட்கிற பழத்தை எடுத்துக் கொடுக்கிறார்.

**தேவை :** மூன்று பக்கமும் அடைத்து ஒரு பக்கம் ஒரு கதவுள்ள மேசை. மேசையின் மேல் பக்கம், வேண்டும்போது திறந்துவிடத்தக்க மூடியுடன் கூடிய திறப்பு - எல்லாவிதமான பழமும் நுழையுமளவுள்ள திறப்பு; மேசை அடியில் எல்லாவிதமான பழங்களும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். மேசைக்கடியில் ஒரு உதவியாள். பழம் நுழையுமளவு பெரிய, திறந்து மூடும் அடியுடைய பாத்திரம்.

**செய்முறை:** பாத்திரம் வெறுமையாக இருப்பதைக் காண்பிக்கவும். மேசையின் திறப்புப் பகுதிமேல் அதை வைக்கவும். மேசைக்கடியில் இருக்கும் உதவியாள் மேசையின் மற்றும் பாத்திரத்தின் கழற்றிவிடக்கூடிய பகுதியை எடுத்து விடுகிறார்.

பார்வையாளர்களை ஒவ்வொருவராக அழைத்து எந்தப் பழம் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும் என்று கேட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாத்திரத்துக்குள் கைவிடவும். அந்தப் பழத்தைத் திறப்பு வழியாக உதவியாள் எடுத்துத் தருவார். பாத்திரத்தில் இருந்து அதை வெளியில் எடுத்து பழத்தை கேட்டவரிடம் தரவும்!

## செயல் விளக்கம் - 97

### குளிர்ந்த நீரில் சோறு சமைத்தல்

மாயாசாலக்காரர் தன் மனோசக்தி மூலமாக குளிர்ந்த நீரிலும் சோறு சமைக்க தன்னால் முடியும் என்று கூறிக் கொள்கிறார். ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டு நீர் ஊற்றி மூடிவைத்து மந்திரம் செபிக்கிறார். மூடியை அவர் அகற்றியதும் அரிசி வெந்திருக்கிறது, நீராவி சூடாக வெளிவருவதாக தோன்றுகிறது.

**தேவை :** அலுமினிய பானையும் மூடியும், காளவாயிலிருந்து கொண்டு வந்த கிளிஞ்சல் சுண்ணாம்பு (சுட்டசுண்ணாம்பு), நீர்.

**செய்முறை :** முன்பே அரிசி : சுண்ணாம்பு = 1:1 என்ற விகிதத்தில் கலந்து கொள்ளவும். அரிசி அரிசியாக உள்ளதா சமைத்துள்ளதா என்பதை சோதிப்பதற்காக அரிசியை எடுத்துக் காட்டவும்.

பாத்திரத்துக்குள் அரிசியை கொட்டி அரிசிக்கு மேல் 2 அங்குலம் வருமளவு நீர் ஊற்றவும். மூடியால் மூடிவிடவும். சில நிமிடங்கள் மந்திரம் ஓதவும்.

சுட்ட சுண்ணாம்பில் நீர் பட்டதும் வெப்பம் உற்பத்தியாகும். அது அரிசியை வேக வைத்துவிடுகிறது. மூடியை அகற்றி சாதம் வெந்து சூடாகி இருப்பதைக் காட்டவும்!

## செயல் விளக்கம் - 98

### துணியைக் கொளுத்தினால் எரிவதில்லை

கைக்குட்டை அல்லது துண்டுத் துணி, எண்ணெயில் நனைத்து தீக் கொளுத்தப்படுகிறது. தீயைப் பார்க்க முடிந்தாலும் துணி எரிவதில்லை.

**தேவை :** கார்பன் - டை - சல்பைடு, கார்பன் - டெட்ரா - குளோரைடு, துணி, தீப்பெட்டி.

**செய்முறை :** இரண்டு வேதிப்பொருளிலும் சமபங்கு எடுத்துக் கலக்கவும். துணியை இந்தக் கரைசலில் தோய்த்து உடனடியாக தீப்பொருத்தவும். தீயை மேலே பிடிக்கவும். கரைசல் எரிந்தவுடன் அல்லது ஆவியானவுடன் தீயை அணைத்துவிடவும். துணி எரிந்து போவதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது போலவே ரூபாய்த்தாள்களை இக்கரைசலில் நனைத்து எரிந்து போகமல் தீவைக்க முடியும். முதலில் வெறும் தாளில் பழகவும். (ரூபாயை நீங்கள் இழந்து விடக்கூடாது என்பதால்). சரியாக எந்தக் கணத்தில் தீயை நீங்கள் அணைத்துவிட வேண்டும் என்பதை அதன் மூலம் அறிந்து கொள்க. எரியும் தீக்குச்சியை ரூபாய்த் தாளுக்கு மிக அருகில் கொண்டு வரக்கூடாது.

❊

## செயல் விளக்கம் - 99

### நூலை எரித்த பின்பும் அதிலிருந்து உலோக வளையம் தொங்குதல்

ஒரு நூல் காட்டப்படுகிறது. அதன் கீழ் முனையில் ஒரு வளையம் முடியப்படுகிறது. பின் நூல் தீவைத்து எரிக்கப்படுகிறது. ஆனால் வளையம் விழுவதில்லை.

**தேவை :** ஆலம் அல்லது உப்பின் பூரித கரைசல், பொட்டாசியம் நைட்ரேட்டின் பூரித கரைசல், நூல், எடைக் குறைவான அலுமினிய வளையம், வண்ண தூரிகை.

**செய்முறை :** முன்னதாக நூலை ஆலம் அல்லது உப்புக் கரைசலில் முக்கிக் காயவைத்துக் கொள்ளவும். இப்படி மூன்று நான்கு தடவை செய்யவும். பின் அதன்மேல் தூரிகை கொண்டு பொட்டாசியம் நைட்ரேட் கரைசலைப் பூசவும். காயவிடவும். இப்படி இரண்டு மூன்று தடவை செய்யவும்.

இந்த நூலில் ஒரு முனையில் எடையற்ற வளையம் ஒன்றைக் கட்டவும். மறுமுனையை இடது கையால் பிடித்துக் கொள்ளவும். தீவைத்து எரிக்கவும். ஆனால் வளையம் கீழே விழாது. ஆலம் அல்லது உப்பு, எரிந்த கயிறுக்கு மேலும் வலுவூட்டுகிறது. எனவே வளையம் கீழே விழுவதில்லை.

❊

## செயல் விளக்கம் - 100

### ஆவி நிகழ்வுகள்

**நோக்கம் :** மேசை மேல் ஆவி அந்தரத்தில் ஆடுதல்.

ஆவித்தொடர்பு காட்சிக்குழுவில் (சியான்ஸ்) நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் இருட்டில் உள்ள ஒரு மேசையைச் சுற்றி உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களின் சிறு விரல்கள் இருபுறமும் இருப்பவர்களின் சிறுவிரல்களைத் தொட்டுக் கொண்டுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறந்துபோன ஆவி ஒன்றின் மீது அந்த உதவியாளர்கள் அனைவரும் கவனம் குவிக்கிறார்கள். அது எழுந்து அல்லது அசைந்து தன் இருப்பை நிரூபிக்கும். திடீரென மேசை நடுங்குகிறது, அசைகிறது, எழும்புகிறது.

**தேவை :** எடைக்குறைவான சதுர பெஞ்சு, நான்கு நாற்காலிகள், நான்கு உதவியாளர்கள்.

**செய்முறை :** மூடுமந்திரமான அல்லது ஆவி தொடர்பான எல்லா நிகழ்ச்சிகளும் முழு இருட்டிலேயே நிகழ்கின்றன. விளக்குகளை அணைக்கவும். பெஞ்சின் நான்கு புறமும் போடப்பட்டுள்ள நாற்காலிகளில் உதவியாளர்கள் அமர்ந்து இளைப்பாறுமாறு கூறவும். அவர்கள் தம் கைகளை, உள்ளங்கைகள் மேசைமேல் படுமாறும், ஒவ்வொருவரும் தம் இருபுறமும் அமர்ந்திருக்கும் இரு உதவியாளர்களின் சிறுவிரல்களை தம் சிறுவிரல்களால் தொடுமாறும் வைக்கும்படி கூறவும்.

ஆவிகளின் மேல் அவர்கள் தம் கவனத்தைக் குவிக்குமாறும், பெஞ்சை அசைத்தோ உயர்த்தியோ அவை தம் இருப்புக்கு ஆதாரம் காட்டும்படி வேண்டிக் கொள்ளுமாறும் கூறவும். பெஞ்சு நகரும் நிகழ்வை அனுபவிப்பதற்கான கவனக் குவிப்பு முழுமை பெற்றதும், பெஞ்சின் காலடியில் ஒரு பாதத்தை வைத்து சற்றே உயர்த்தி தாழ்த்தவும். ஒரு காலால் பெஞ்சை உயர்த்தும் போது, மற்ற உதவியாளர்கள் தம் கைகளைப் பெஞ்சின்மேல் வைத்திருப்பதால், பெஞ்சு தானே சமநிலை அடைந்துகொள்ளும்.

## செயல் விளக்கம் - 101

### இறந்த ஆவியை புகைப்படம் எடுத்தல்

முழு இருட்டில் பார்வையாளர்கள் அரைவட்டமாக அமர்கிறார்கள். உங்களிடம் ஒரு புகைப்படக்கருவி இருக்க வேண்டும். நீங்கள் சுட்டிக்காட்டும் இருட்டான இடத்தை ஒருவர் படம் பிடிக்கிறார். மூலப்படி (நெகடிவ்) கழுவப்பட்டதும் (படத்தில்) ஒரு ஆவி தென்படுகிறது.

**தேவை :** நல்ல படக்கருவி, படத்தகடு (பிலிம்), சிகரெட், தீப்பெட்டி.

**செய்முறை :** கும்மிருட்டில் பார்வையாளர்களை அரைவட்டமாக அமரும்படி கேட்டுக் கொள்ளவும். அவர்கள் முன், அவர்களுக்கு எதிரே உள்ள சுவருக்கு அருகில் நீங்கள் நிற்கவும். பற்றவைக்கப்பட்ட ஒரு சிகரெட்டை உங்கள் உள்ளங்கையில் மறைத்துக் கொள்ளவும். வாய்ப்பான தருணத்தில் சிகரெட்டை புகைப்படம் எடுக்கும்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படம் எடுப்பவரிடம் சொல்லவும். உடனடியாக சிகரெட்டை மறைத்துவிட்டு விளக்கை போடவும்.

படக்கருவியின் கிளிக் சத்தத்தைப் பார்வையாளர்கள் கேட்பார்கள். படச்சில்லை உருவிளக்கப்படுத்தி ஒரு படி எடுங்கள். அதில், எரியும் தலையுடன் கூடிய ஒரு ஆவி புகையிலிருந்து தோன்றுவதைக் காண்பீர்கள். நீண்ட அங்கி அணிந்த ஒரு ஆவிபோல் எரியும் சிகரெட் காட்சி அளிக்கிறது! எரியும் முனை அதன் தலைபோலவும், புகையிலிருந்து அந்த ஆவி உருப்பெற்றது போலவும் தோன்றுகிறது!

## செயல் விளக்கம் - 102

### ஆவிகளின் புகைப்படங்கள் எடுத்தல்;இறந்தவரின் புகைப்படம் புகைப்படத்தாளில் தோன்றுதல்

**தேவை :** வடிநீர் (டிஸ்ட்டில்டு வாட்டர்), பாதரச குளோரைடு கரைசல், ஹைப்போ கரைசல் (சோடியம் தயோ சல்பேட்டை நீரில் கரைத்த கரைசல்), நிழல்பட அச்சு(சோலியோ)த்தாளில் கருப்பு வெள்ளை புகைப்படம்.

**செய்முறை:** நிழல்பட அச்சுத் தாளில் (பிரிண்ட்- அவுட் பேப்பர் / சோலியோ பேப்பர்) இறந்த ஆள் ஒருவரின் படத்தை உருவிளக்கப்படுத்திய பின், அதை வடிநீரில் கழுவி பின் பாதரச குளோரைடு கரைசலில் முக்கி வெளிறச் செய்யவும். பின் கழுவி உலர்த்தவும். ஒரு இருட்டான இடத்தில், வித்தைக்கு ஆயத்தமாக வைக்கவும்.

படத்தை மறு உருவிளக்கப்படுத்த (ரி-டெவலப்) ஹைப்போ கரைசலில் இட்டால் மூலப்படம் மீண்டும் தோன்றும்.

## செயல் விளக்கம் - 103

**நோக்கம் : மோதிரம் / பதக்கம்/ கண்ணாடித்தட்டின் மேல் ஊதினால் சத்திய சாயிபாபா படம் தோன்றுதல்.**

**தேவை :** கண்ணாடித்தட்டு, ஹைட்ரோ ஃபுளோரிக் அமிலம், புதிய எஃகு பேனா, வடிநீர்.

**செய்முறை :** கண்ணாடித் தட்டை சுத்தமாக கழுவி உலர்த்தவும். அதன் மேல் ஹைட்ரோ குளோரிக் அமிலத்தைப் பயன்படுத்தி புதிய எஃகு பேனாவால் ஒரு படம் வரையவும்.

அமிலம் கண்ணாடிமேல் 8-10 நிமிடங்கள் இருக்கவிடவும். பின் வடிநீரால் கழுவவும். கண்ணாடியைத் தூய மெல்லிய துணியால் ஒற்றவும். கண்ணாடியில் எதுவும் இருப்பதாக தெரியாது. அதன்மேல் நீங்கள் மூச்சு விட்டால் படம் புலப்படும். உலர்ந்தால் மீண்டும் மங்கி மறையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யூரி கெல்லர் எனும் மனஆற்றல் மனிதர்

மனஆற்றல்கள் என்பவை உள்ளன என்பதற்கு அறுதி சான்றாக யூரி கெல்லர் உள்ளார் என புலன் கடந்த உளவியலார் நம்பினார்கள். இவரைப்பற்றி மிகுந்த ஆய்வுகளும் நிறைய நூல்களும் வெளிவந்துள்ளன. யூரி கெல்லரின் மீது நடத்தப்பட்ட ஆய்வுகளை அவை விளக்குகின்றன. அவர் சாதனைகளை செய்து காட்டியது மெய்யாகவே மனஆற்றலைப் பயன்படுத்தித்தான் என்பதற்கு அவை சாட்சியம் கூறுகின்றன. உலகப்புகழ்பெற்ற நாயகன் ஆனார் யூரி கெல்லர். அவரது ஆற்றல்களை வெளிப்படுத்திக்காட்ட ஒவ்வொரு நாடும் அவரை வரவேற்றது. இதனால் மிக விரைவிலேயே கோடீசுவரன் ஆனார்.

1974 இல் ஸ்டான் ஃபோர்டு ஆய்வு நிறுவனத்தின் வரவேற்பை ஏற்று அமெரிக்காவில் போய் இறங்கினார். முனைவர் ஜே.பி. ரைன் நடத்திய சோதனை முடிவுகள் தவறான சோதனைகளின் விளைவு, அவரது சக பணியாளர்களின் - குறிப்பாக, முனைவர் லெவியின் - சூழ்ச்சிகளின் விளைவு என்பது மெய்ப்பிக்கப்பட்டதும் புலன்கடந்த உளவியல் (பாராசைக்காலஜி) துறையை டியூக் பல்கலைக்கழகம் மூடிவிட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது வுல்ப் கேங் என்ற ருசிய உளவாளி, தனக்கு இருப்பதாக சொல்லிக் கொண்ட மனோ சக்தியால் நாசிகளின் விசித்திர எந்திரங்களின் சங்கேத சொற்களைப் புரிந்துகொள்ளத் தொடங்கியபோதுதான் அமெரிக்காவில் புலன்கடந்த உளவியல் மீது ஆர்வம் வளர்ந்தது.

வுல்ப் கேங் உண்மையாகவே மனோ சக்தி உடையவர் என முழு உலகமும் நம்பியது. ருசியாவுக்குப் பின்னடைய விரும்பாத அமெரிக்கா டியூக் பல்கலையில் புலன் கடந்த உளவியல் ஆய்வைத் தொடங்கியது.

முதல் சோதனை மனோசக்தியுடைய ஒரு குதிரை மீது நடத்தப்பட்டது. அரிச்சுவடியில் உள்ள எழுத்துகளைத் தொட்டு கேள்விகளுக்குப் பதில் தர அக்குதிரையால் முடிந்தது! சான் சுகான் என்ற மந்திரவாதிதான் குதிரையின் மனோ சக்திகள் பற்றிய உண்மையை அம்பலப்படுத்தினார்.

குதிரைகளின் கண்கள் அவற்றின் தலைக்குப் பக்கவாட்டில் இருப்பதால் அவற்றால் நேராக பார்க்க முடியாது. இந்த விவரத்தைப் பயன்படுத்தி, உடைமைக்கார சீமாட்டி தன் கையில் உள்ள சாட்டையை அசைத்ததும் குறிப்பிட்ட எழுத்துகளைத் தொடுமாறு அதனைப் பழக்கி இருந்தாள். பின் இந்த எழுத்துக்கள் சொற்களாகவும் வாக்கியங்களாகவும் கோர்த்துக் கொள்ளப்பட்டன!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடைசி சோதனை அமெரிக்காவில் நடந்த ஒரு மன ஆற்றல் அமர்வு பற்றியதாகும். அங்கிருந்து ஆயிரக்கணக்காண மைல்களுக்கு அப்பால் கடலடியில் இருந்த நீர்மூழ்கிக்கப்பலின் தலைவருக்குச் செய்திகள் அனுப்பியது பற்றியதாகும்.

தொலை உணர்வு முறையில், தான் பெற்ற செய்திகளை அவர் எழுதிக் கொள்ள வேண்டும். இந்த சோதனை உலகம் முழுவதிலும் தொலை உணர்வுக்கு (டெலிபதி) ஒரு சான்றாக வெளியிடப்பட்டது. அது உண்மையா அல்லவா என்பதை ஆராய்ந்து கண்டுபிடிக்க யாரும் அக்கறை கொள்ளவில்லை.

ஆனால், ஐயுறவாளர்கள் (ஸ்கெப்ட்டிக்ஸ்) இந்த வழக்கை ஆராய்ந்தார்கள். ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளிக் கடலடியில் நீர்மூழ்கி இருப்பதாக சொல்லப்பட்ட தேதியில், அது ஒரு கப்பல்துறையில் பழுது பார்ப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்தது என்பது விசாரணையில் தெரியவந்தது.

நீர்மூழ்கியில் இருந்து கொண்டு தொலையுணர்வு சேதிகளை வாங்கி எழுதிக் கொண்டிருந்ததாக சொல்லப்பட்ட மீகாமர் உண்மையில் அப்போது விடுமுறையில் இருந்தார்!

யூரி கெல்லர் அமெரிக்காவில் இருந்தபோது தன் கோரிக்கைகளை CSICOP தீர விசாரிப்பதை விடாப்பிடியாக எதிர்த்தார் . எதிர்மறையான அதிர்வுகளின் முன்னிலையில் தன் மன ஆற்றல்கள் வேலை செய்யாது என்றார் அவர்.

ஆனால் , அவருக்குத் தெரியாமலேயே மறைத்துவைக்கப்பட்ட ஒளிப்பதிவு படக்கருவிகள் (வீடியோ காமிராக்கள்) எல்லாப்புறமிருந்தும் அவரது 'மனஆற்றலின்' தில்லுமுல்லுகளை படம் பிடித்துவிட்டன. அவர் அம்பலமானார்.

❊

## செயல் விளக்கம் - 104

**நோக்கம் : மனஆற்றலால் கரண்டிகளை வளைத்தல், முறுக்குதல், உடைத்தல்.**

பார்வையாளர்களிடம் தேக்கரண்டிகளை கொண்டுவருமாறு யூரி கெல்லர் சொல்வார். மேசை மேல் அவை குவிக்கப்படும். குவியலில் இருந்து சில கரண்டிகளை அவர் தேர்ந்தெடுப்பார். ஒரு கரண்டி மீது தன் கண்களைக் குவிப்பார். கரண்டி மேல் தன் விரல்களை ஒட்டிய பின், அது வளைந்து விட்டிருப்பதைக் காட்டுவார்.

இன்னொரு தேக்கரண்டியைத் தேர்ந்தெடுத்து அதன்மேல் தன் விரலை வட்டமாக பலமுறை அசைப்பார், அது திருகிக் கொண்டுவிடும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின் மூன்றாவது ஒரு கரண்டியை எடுத்து ஒரு உதவியாளரை முன்னால் வரச்சொல்லி கரண்டியை மெதுவாக தொடச்சொல்வார். அது உடையட்டும் என மனதுக்குள் ஆணை கொடுப்பார். அது வளைந்து இரண்டாக உடைந்து விழும்!

**தேவை :** துருப்பிடிக்காத எஃகு தேக்கரண்டிகள். (வார்ப்பு கரண்டிகளாக இருக்கக்கூடாது)

**செய்முறை :** கையில் ஒரு தேக்கரண்டியைப் பிடித்தபடி, மனோசக்தி பற்றியும் அது வேலை செய்யும் விதம் பற்றியும் உரையாற்றவும். பார்வையாளர்களின் கவனம் உங்கள் பேச்சின் மீதே குவிந்து இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

ஒரு கையை ஆட்டி பேசிக்கொண்டிருக்கும் போது திடீரென உங்கள் தொடை மீதோ உடல் மீதோ கரண்டியை அழுத்தி வளைக்கவும். கரண்டி செங்குத்தாக இருக்குமாறும் கரண்டியின் குழிந்த பாகம் மட்டுமே பார்வையாளர்களுக்குத் தெரியுமாறும் கைப்பிடிப் பாகத்தை உங்கள் கைக்குள் மறைத்துப் பிடித்துக் கொள்ளவும். பின் குழிவுபாகத்தை உங்கள் விரலால் மெல்லத் தொடவும்.

அதேபோது மிக மெதுவாக கரண்டியை மேலே உயர்த்தவும். அது வளைந்திருப்பதை பார்வையாளர்கள் காண்பார்கள்.

**திருக்குதல் :** வித்தைக்கு முன்பே மேசை, நாற்காலி முதலியவற்றை கவனித்து ஒரு தேக்கரண்டியைச் செருகி முறுக்கிக் கொள்ள பொருத்தமான பிளவு / இடைவெளியைக் கண்டு பிடித்து அப்படியே திருகி உங்கள் கைக்குள் மறைத்துக் கொள்ளவும்.

குவியலில் இருந்து ஒரு கரண்டியைத் தேர்ந்தெடுப்பதுபோல் பாவனை செய்து இந்த மறைத்த கரண்டியை எடுத்துக் கொள்ளவும். அதன் குழிந்த பகுதியை மட்டுமே வெளியில் காட்டி கைப்பிடியை உங்கள் கைக்குள் மறைத்துக் கொள்ளவும்.

கரண்டியை செங்குத்தாகவும் நேராகவும் பிடித்துக் கொள்ளவும். கரண்டியின் உச்சிமேல் உங்கள் விரலை வட்டங்களாக சுற்றவும். அதேபோது கரண்டியையும் மெதுவாக வட்டமாக அசைக்கவும். கரண்டி திருகப்பட்டுள்ளது.

**தேக்கரண்டியை உடைத்தல் :** கரண்டியின் குழிவுபாகமும் கைப்பிடி பாகமும் இணையும் இடத்தை முன்னும் பின்னும் வளைத்து அதில் வெடிப்புகள் விழும்படி செய்துகொள்ள வேண்டும். அதிகபட்சமாக வெடிப்புகள் ஏற்பட வேண்டும், ஆனால் அது உடைந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்போது வெறுமனே தொட்டாலே அது உடைந்து விடும்படியாக இருக்க வேண்டும். வெடிப்புவிட்ட இடத்தைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெருவிரல் மற்றும் சுட்டுவிரலால் பிடித்து மறைத்தபடி கரண்டியைக் காட்டவும்.

ஒரு உதவியாளரை அழைத்து அவர் தன் விரலைக் குழிந்த பாகத்தின் மேலாக மெதுவாக ஓட்டி அதன்மேல் கவனத்தைக் குவித்து அது உடைய ஆணையிடும்படி கூறவும். குழிவுப்பகுதி வளைந்து கொண்டிருப்பதைப்போல் மெதுவாக அதை விடுவித்து பின் இரண்டு துண்டுகளாக கீழே விழச் செய்யவும்.

❋

## செயல் விளக்கம் - 105

**நோக்கம் :** நின்று போயிருக்கிற கைக்கடிகாரங்களையும் நிலைக் கடிகாரங்களையும் திரும்ப ஓடவைத்தல். பார்வையாளர்கள் தம் ஓடாத கடிகாரங்களைக் கொண்டு வரும்படி அறிவிக்கப்படுகிறது. இவற்றின் மேல் யூரிகெல்லர் சில நிமிடங்கள் தம் உள்ளங்கைகளைத் தேய்க்கிறார். பின் அவர் உலுக்கியதும் அவை ஓடத் தொடங்குகின்றன.

**தேவை :** வேலைசெய்யாத கைக்கடிகாரங்கள், சுவர் கடிகாரங்கள்.

**செய்முறை :** பொதுவாக குளிர்காரணமாக கடிகாரங்களில் விடப்பட்ட எண்ணெய் கெட்டியாகி அதனாலேயே பெரும்பாலான கடிகாரங்கள் ஓடாமல் நின்றுவிடும். உள்ளங்கையால் அவற்றைத் தேய்க்கையில் சூடு உண்டாகி எண்ணெய் இளகி விடுகிறது. பின் ஒரு உலுக்கு உலுக்கினால் அவை ஓடத் தொடங்குகின்றன.

இயந்திரவியல் குறைபாடுகளுடைய கடிகாரங்கள் யூரிகெல்லரின் 'மனோசக்தி' மூலம் ஒருபோதும் வேலை செய்ததில்லை.

❋

## செயல் விளக்கம் - 106

**நோக்கம் :** வெட்டப்பட்ட செய்தித்தாள் பத்தியில் உள்ள வரியிலுள்ள வார்த்தைகளைச் சரியாகக் கணித்து கூறல்.

அமெரிக்காவில் இருந்த கிறித்துவ பாதிரி ஒருவர் தனிமனிதரின் கடந்தகாலத்தையும் வருங்காலத்தையும் அறியக்கூடிய மனஆற்றல்கள் தன்னிடம் இருந்ததாகச் சொல்லிக் கொண்டார். எந்த ஒரு மனிதரின் மனத்தையும் தன்னால் கட்டுப்படுத்த முடியுமென்றும் அவர் உரிமை கோரினார்.

தனது இந்த ஆற்றலை மெய்ப்பிக்க ஒரு செய்தித்தாளில் இருந்து ஒரு பத்தியை அவர் கத்திரித்துக் கொள்வார். பின் பார்வையாளர்கள்மேல் ஒரு காகித பந்தை எறிவார். அதைப் பிடிப்பது எவராயினும் அவர் மேடைக்கு அழைக்கப்படுவார்.

www.tamilarangam.net

செய்தித்தாள் துண்டை பாதிரி தன் இடதுகையில் செங்குத்தாகப் பிடித்துக் கொள்வார், அவரது பெருவிரலும் சுட்டுவிரலும் தலைப்பு வரிகளின் மேல் இருக்கும். வலதுகையில் கத்திரிக்கோல் செய்தித்தாள் துண்டுக்கு இடையில் இருக்கும்.

இனி, உதவியாளரின் மனத்தைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டதாக அறிவிப்பார். தாளை எந்த இடத்தில் தான் வெட்ட வேண்டுமென சுட்டிக்காட்டுமாறு உதவியாளரிடம் அவர் கேட்கிறார், சுட்டிக் காட்டப்படும் இடத்திலேயே பாதிரி தாளைத் துண்டிக்கிறார். கீழேவிழும் தாளின் உச்சியில் இருக்கும் அதே வரியே, ஏற்கனவே அவர் முன்னறிந்து குறித்திருக்கும் தாளிலும் இருக்கிறது.

இந்தத் தாளை முன்பே பார்வையாளர்கள் மத்தியில் உள்ள முதன்மை விருந்தினரிடமோ மதிப்புக்குரிய மனிதரிடமோ பாதுகாப்பாக வைத்திருக்கும்படி தந்திருக்கவேண்டும்.

இம்முறையில் தனக்கு நிசமாகவே மன ஆற்றல் உள்ளது என மக்களை அவர் நம்பச் செய்த பின், மக்கள் தம் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் தெரிந்துகொள்ளவும் தம் சிக்கல்களைத் தீர்க்க உதவி பெறுவதற்கும் அவரிடம் போனார்கள். உடனே அவர் அவர்களிடம் பெருந்தொகைகளை வசூலித்து கோடீசுவரர் ஆகிவிட்டார்!

**தேவை :** ஒரே நாளின் செய்தித்தாள் 2 எண்ணம்; கத்திரி, கண்ணாடி, பசைநாடா(செல்லோடேப்), வெள்ளைத் தாள் துண்டு ஒன்று.

**செய்முறை :** பின்புறம் விளம்பரம் உள்ள, தலைப்பு வரிகளுடன் கூடிய செய்தி பத்தி ஒன்றை வெட்டிக் கொள்ளவும். தலைப்பு வரியை அடுத்த ஒரு வரியை விட்டு அந்த இடத்திலும் வெட்டிக் கொள்ளவும். வெட்டிய செய்தித்தாள் பத்தியை தலைகீழாகப் பிடித்து அதனை தலைப்புப் பகுதியுடன் சேர்த்து பின்புறம் தெளிவான கண்ணாடி பசைநாடாவை வைத்து ஒட்டி விடவும்.

தயார் செய்த செய்திபத்தியின் கடைசி வரியை ஒரு துண்டுத் தாளில் எழுதி வைத்துக் கொள்ளவும். இதுதான் முன்கணிப்பு. எங்கே வைத்து வெட்டப்படுகிறதோ அங்கேயே வெட்டுண்ட பகுதி கீழே விழுந்து கிடக்கும்படி விட்டுவிடவும். கீழே கிடக்கும் துண்டை எடுத்து முதல்வரியை வாசிக்கும்படி உதவியாளரைக் கேட்டுக் கொள்ளவும். அவரிடம் தரப்பட்ட முன்கணிப்பைச் சோதித்து இரண்டும் ஒத்துப் போகிறதா எனப் பார்க்குமாறு கேட்கவும்.

செய்தித்தாள் வெட்டப்பட்ட இடத்தில் உள்ள முதல் வரியும், முன்கணிப்பும் ஒன்றாக இருப்பது கண்டு பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைகிறார்கள். துண்டித்த செய்தித்தாளில் உள்ள பிற வரிகள் வேறுபட்டுள்ளனவா என்பதை சோதித்துக் கொள்ளுமாறு உதவியாளரிடம் கூறுங்கள். அப்படியே அவை வேறுபட்டுள்ளதைக் கண்டு அவர் அதிர்ச்சி அடைகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 107

**நோக்கம் :** முடவர், குருடர், செவிடர், ஊமையர் ஆகியோரைக் குணப்படுத்தல்.

குருடரையும் செவிடரையும் ஊமையரையும் முடவரையும் இன்னும் பல குணப்படுத்த முடியாத நோய்களையும் குணப்படுத்துவதாகக் கூறி பெந்தகோஸ்தே கிறிஸ்தவர்களும் பிற கிறித்துவக் குழுக்களும் ஒவ்வொரு ஆண்டும் கூட்டம் நடத்துகிறார்கள்.

மக்களின் துன்பங்களைப் பற்றித் தாளில் எழுதி நிரப்பி வாங்கிக் கொள்கிறார்கள். நன்கொடை என்ற பெயரில் பணமும் வசூலித்துக் கொள்கிறார்கள். கடவுளின் தலையீடு மூலம் குணம் பெறலாம் என்னும் நம்பிக்கையில் நோயாளியும் தாராளமாக வாரி வழங்குகிறார்.

செபக்கூட்டத்தில் மேடைக்கு ஒரு குருடர் அழைத்து வரப்படுகிறார். பிரார்த்தனைக்குப் பின் குணப்படுத்துபவர் தன் கைகளை அவர் கண்கள் மேல் வைக்கிறார். உடனே அவர் பார்வை பெறுகிறார்.

ஊமையான ஆளைக் கூட்டி வருகிறார்கள். செபத்துக்குப் பின் அவர் பேசத் தொடங்குகிறார்.

செவிட்டு ஆளைக் கொண்டு வருகிறார்கள், அவர் கேட்கத் தொடங்குகிறார்.

அப்படியே ஒரு முடவரைக் கொண்டு வருகிறார்கள். அவர் தன் முடத்தன்மை குணமாகி மேடையில் இருந்து நடந்து போகிறார்.

**தேவை :** ஒரு புதைமிதியில் (மூடு செருப்பு, ஷூ) மட்டும் குதிகால்பக்கம் 1" திண்டு.

**செய்முறை :** குருடர், ஊமையர், செவிடர் யாவரும் அப்படி நடிக்கிறவர்களே. முடவராக நடிக்கிறவருக்கு அவரது ஒரு மூடுசெருப்புக்குள் குதிப்பக்கம் 1" திண்டு வைத்திருக்கிறது. செருப்புகளைக் கழட்டியபின் குணமளிப்பவர் செபித்து அந்நபரின் கால்களைப் பிடித்து விட்டு உருவிவிடுகிறார். (வெளிக்குத் தெரியாமல் திண்டை அகற்றியபின்) செருப்புகளை அணிந்து கொண்டு மேடையில் இருந்து நொண்டாமல் நடந்து போகிறார் அவர்.

## செயல் விளக்கம் - 108

**நோக்கம் :** நீங்கள் தேர்ந்தெடுத்த சீட்டை, புதிர்கதிர் (எக்ஸ்ரே) ஆற்றலால் சரியாக எடுத்துக் காட்டுதல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனோசக்திக்காரர் ஒரு சீட்டுக்கட்டைக் குலுக்கும்படி உதவியாளரிடம் தருகிறார். குலுக்கியபின் திரும்ப வாங்கிக் கொள்கிறார். தன் கைகளில் அவற்றை விரித்து, ஒரு சீட்டை எடுத்து என்ன சீட்டு என்பதை மனத்தில் குறித்துக் கொண்டு பிறகு கட்டிலேயே வைத்துவிடும்படி உதவியாளரிடம் கூறுகிறார்.

பின் மறுபடியும் அதைக் குலுக்கி திருப்பித் தருமாறு கேட்கிறார். சீட்டுக்கட்டைத் தன் கைகளில் வைத்துக் கொண்டு மனோசக்திக்காரர் உதவியாளரின் கண்களுக்குள் உற்றுப்பார்த்து தன் தொலைஉணர்வு ஆற்றல் மூலமாக அவர் தேர்ந்தெடுத்த சீட்டு எதுவென அறிகிறார்.

இனி அதை வெளியில் எடுக்க அவர் சீட்டுக்கட்டைக் கலைத்துப் பார்க்க தேவையில்லை. காதருகில் கட்டைப் பிடித்துக்கொண்டு குலுக்குகிறார்; ஒரு சீட்டை வெளியில் உருவுகிறார். அதுதான் உதவியாளர் தேர்வு செய்த சீட்டு.

**தேவை :** Stripper சீட்டுக்கட்டு.

**செய்முறை :** பார்வையாளர்களில் இருந்து ஒரு உதவியாளரை அழைக்கவும்.

அவரிடம் சீட்டுக்கட்டைத் தந்து குலுக்கிவிட்டு திருப்பித் தரும்படி கூறவும். சீட்டுகளை உங்கள் கைகளில், பரப்பிய பக்கம் உதவியாளரை நோக்கி இருக்குமாறு விரித்து ஒரு சீட்டை உருவுமாறு சொல்லவும். அந்த சீட்டை குறித்துக் கொண்ட பின் மீண்டும் கட்டில் செருகிவிடுகிறார்.

அதே சமயம் சீட்டுகளை ஒன்று சேருங்கள். சீட்டுகளை உங்கள் இடதுகையில் அவற்றின் அடிப் பகுதியில் பிடிக்கவும். சீட்டுக்கட்டு நீளவசத்தில் உதவியாளரைப் பார்த்திருக்கும்படி பிடிக்கவும். 99 % மக்கள் சீட்டை தாம் எப்படி உருவுகிறார்களோ அப்படியே திரும்பவும் கட்டில் செருகுகிறார்கள்.

அப்படியே அவர்கள் திரும்பச் செருகினால், மறு விசால பக்கத்தை உதவியாளரை நோக்கித் திருப்பி அதைக் கட்டில் செருகும்படி கூறவும்.பின் மறுபடியும் கட்டைக் குலுக்கி திருப்பித்தரும்படி கேட்கவும். தேர்ந்தெடுத்த சீட்டு இப்போது எங்கே உள்ளது என்பது யாருக்கும் தெரியாது.

சீட்டுக்கட்டைத் திரும்பப் பெற்றதும், உங்களுக்கு இருக்கும் புதிர்க்கதிர் ஆற்றல் மூலமாகவும் தொலை உணர்வு மூலமாகவும், கட்டைப் பிரித்து பார்க்காமலேயே தேர்வுசெய்த சீட்டை அறிந்து கொள்ளவும் எடுத்துக் காட்டவும் முடியும் என்று பார்வையாளர்களுக்கு விளக்கவும். பேசிக் கொண்டிருக்கும்போதே, மற்ற சீட்டுகளைவிட பக்கம் சற்று அகலமாக உள்ள சீட்டு எது எனத் தேடவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீட்டுக்கட்டை உங்கள் காதருகில் பிடித்து, உங்கள் புதிர்க்கதிர் சக்திமூலமாக சீட்டு எங்குள்ளது என நீங்கள் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று விளக்கம் தரவும்.

உங்கள் வலது விரலை சீட்டுக்கட்டுமேல் ஓடவிட்டு கட்டின் முதுகுப்புறம் தட்டவும். துருத்திக் கொண்டிருக்கும் சீட்டைப் பெருவிரலாலும் சுட்டுவிரலாலும் வெளியில் எடுத்து உதவியாளரிடம் காட்டவும். அது அவர் தேர்ந்தெடுத்த அதே சீட்டாகவே இருக்கும்.

## செயல் விளக்கம் - 109

**நோக்கம் :** கண்ணைக் கட்டிய நிலையில் எந்த சீட்டெனக் கூறுதல்.

மனோசக்தியாளரின் கண்கள் கட்டப்படுகின்றன. தன்னிடம் தரப்படும் ஒரு சீட்டைத் தேர்ந்தெடுத்து அதன் முதுகுப்புறம் வெளியில் தெரியும்படி மேசை மேல் அதை வைக்குமாறு உதவியாளரிடம் கூறப்படுகிறது. கண்கட்டப்பட்ட மனோசக்தியாளர் தன் சுட்டுவிரலைச் சீட்டு மேல் தடவி அதைச் சரியாக கண்டுபிடித்து விடுகிறார்.

**தேவை :** கண்ணைக் கட்ட துணி, குறிப்பிடப்பட்ட சீட்டுகள்.

**செய்முறை :** நமது மூக்கு எடுப்பாய் இருப்பதன் காரணமாக, எவ்வளவு இறுக்கமான கண்கட்டு இருந்தாலும், கன்னங்களுக்கும் மூக்குக்கும் இடையிலுள்ள இடைவெளி வழியாக ஒருவரால் பார்க்கமுடியும்.

முடிச்சுப் போடப்படும்போது கண்களை இறுக மூடவும். முடிச்சுகள் போடப்பட்டதும் கண்களைத் திறக்கவும். சுருக்கங்கள் போனதும் மூக்கின் பக்கவாட்டின் வழியாக உங்களால் கீழ்நோக்கிப் பார்க்க முடியும்.

சீட்டுகளின் முதுகுப்பக்கம் குறிப்புகள் இடப்பட்டுள்ளன. சுட்டுவிரலைச் சீட்டுமேல் மெதுவாக நகர்த்தி உங்கள் மூன்றாம் கண் மூலம் பார்ப்பதுபோல் பாவனை செய்து, குறிப்புகளை ஒவ்வொன்றாக கண்டு சொல்லவும். முதலில் நிறம், பின் குறி, பின் எண்மதிப்பு ஆகியவற்றைக் கூறவும்.

## செயல் விளக்கம் - 110

**நோக்கம்:** ஒரு சீட்டுக்கட்டை எடுத்து மொத்த பார்வையாளர்களையும் வசியம் செய்தல்.

ஒவ்வொருவரையும் வசியம் செய்யும் ஆற்றல் தனக்கு உண்டென்று மனோசக்தியாளர் சொல்லிக் கொள்கிறார். பார்வையாளர்களில் இருந்து ஆறுபேரை அவர் அழைக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வையாளர்களைப் பார்த்தபடி இடதுபக்கம் ஐந்து பேரும் வலதுபக்கம் ஆறாவது ஆளும் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறார்.

ஐந்து உதவியாளர்களையும் வசியம் செய்து, அவர்களிடம் ஒரு சீட்டுக்கட்டைக் காட்டி, ஒவ்வொருவரும் ஒரு சீட்டை நினைவில் கொள்ளுமாறு கூறுகிறார். ஐந்து பேரிடம் இப்படியே கூறுகிறார். பின் உதவியாளர் ஒவ்வொருவராக பார்வையாளர்களிடம் தாம் நினைவில் கொண்ட சீட்டு எதுவென்பதைத் தெரிவிக்குமாறு கூறுகிறார்.

தாம் தேர்ந்தெடுத்து நினைவில் கொண்ட வெவ்வேறு சீட்டுகளைப்பற்றி அவர்கள் தெரிவிக்கிறார்கள். பின் சீட்டுக் கட்டைப் பார்த்து தான் காணும் சீட்டுகள் எவை என்பதை சொல்லும்படி ஆறாவது உதவியாளரிடம் கேட்கிறார். தான் காணும் சீட்டுகளை அவர் தெரிவிக்கிறார். எல்லா சீட்டுகளும் ஒன்றே என்று பார்வையாளர்களிடம் கூறுகிறார் அவர்.

ஐந்து உதவியாளர்களும் அதிர்ச்சி அடைகிறார்கள். அவர்களுக்குச் சீட்டுகளை காட்டும்போதும் அவையெல்லாம் ஒரே குறியீடு உள்ளனவாகவே இருப்பதைக் காண்கிறார்கள்.

**தேவை** : சுவங்கலி (Svengali) சீட்டுக்கட்டு.

**செய்முறை** : சீட்டுகளின் கீழ்ப்பகுதியை இறுகப் பிடித்தபடி சீட்டுகளை ஒவ்வொன்றாக மேல்நோக்கி விடுவிக்கையில் வெவ்வேறு சீட்டுகளாக தெரிகின்றன. கீழ்நோக்கி விடுவிக்கும்போது அதே சீட்டுகளையே காண்கிறீர்கள்.

## செயல் விளக்கம் - 111

**நோக்கம்** : சீட்டுக் கட்டைக் கொண்டு, மனத்தால் அசைக்கும் (சைக்கோ - கினட்டிக்)ஆற்றல் * இருப்பதாக மெய்ப்பித்தல்.

மனத்தால் பொருள்களை ஆட்டுவிக்கும் சக்தி தனக்கு உள்ளதென மனோசக்தியாளர் பீற்றிக் கொள்கிறார். குறிப்பிட்ட சீட்டைப் பார்வையாளர்களிடம் காட்டுகிறார். அதன் முன்பக்கம் அடியில் இருக்குமாறு கட்டுக்குள் வைக்கிறார். கட்டு கவிழ்த்திருக்க, ஒவ்வொரு சீட்டாகக் கீழே போடுகிறார்.

தான் விரும்பும்போது நிறுத்தச் சொல்லும்படி உதவியாளரிடம் கூறுகிறார். அவ்வாறே சொன்னதும் நிறுத்தி, கட்டில் உள்ள மேல்சீட்டை வெளியில் எடுத்து, அந்தக் குறிப்பிட்ட சீட்டு தன் மனத்தின் அசைப்பு சக்தியால் அங்கே பெயர்ந்து வந்துள்ளது எனக் கூறுகிறார். அதன்பின் உதவியாளர் மனோசக்தியாளரிடம் எப்போது நிறுத்தச் சொன்னாலும் மேல்சீட்டு அதுவாகவே இருக்கிறது.

* மனோசக்தி கொண்டு புறப்பொருளை இடம்பெயர்க்கும் ஆற்றல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எத்தனை தடவை முயன்றாலும் இது மாறுவதில்லை. அவரது மனத்தால் இடம் பெயர்க்கும் ஆற்றலால், ஒவ்வொரு தடவை உதவியாளர் நிறுத்தும்படி சொன்னதும் அதே சீட்டு, கட்டின் மேலுக்கு வந்து விடுகிறது.

**தேவை :** சுவங்கலி (Svengali) சீட்டுக்கட்டு.

**செய்முறை :** சீட்டுக்கட்டை முகப்பு மேலே இருக்குமாறு பிடித்து விளம்பி அவை வெவ்வேறானவை என்பதைக் காட்டவும். பிறகு கட்டைக் கவிழ்த்துப் பிடித்து, கட்டின் உச்சியில் குறிப்பிட்ட சீட்டு கவிழ்த்திய நிலையில் இருக்கும்படி வைத்துக் கொண்டு, மெதுவாக ஒவ்வொரு சீட்டாக அடியிலிருந்து விடுவிக்கவும்.

ஆனால் உதவியாளர் உங்களை இடைநிறுத்தி என்ன சீட்டு எனக் கேட்கும்போது மட்டும் மேலே உள்ள சீட்டை வெளியில் எடுக்கவும். அவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் இதைச் செய்யலாம். கட்டின் மேலே உள்ள சீட்டு எப்போதும் ஒரே சீட்டாகவே இருக்கும்!

## செயல் விளக்கம் - 112

**நோக்கம் :** குழந்தை இல்லாத தம்பதியின் குழந்தைப் பேற்றுக்கு ஆசி வழங்கல்.

அரிசி நிரப்பிய ஒரு பாத்திரத்துக்குள் ஒரு கத்தியைச் செருகி தூக்கினால் பாத்திரம் மேல் எழுகிறது.

அருஞ்செயல்கள், இயற்கையை மீறிய ஆன்மீக ஆற்றல்கள் போன்றவற்றின் போலித்தன்மை பற்றி மக்களுக்கு நான் விளக்கம் அளிக்க முயலும்போதெல்லாம் அவற்றை இயற்கையை மீறிய சக்திகளைப் பற்றிய கதைகளுடன் சேர்த்து குழப்புகின்றன செய்திபரப்பு சாதனங்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு அறிவியல் பயணத்தை நான் நடத்திக் கொண்டிருந்தபோது, ஒரு கோயிலைப் பற்றிய கதையைச் செய்தித் தாள்கள் வெளியிட்டன.

திருமணமான ஜோடி ஒன்று குழந்தையின்றி இருந்தால், அவர்கள் இந்த கோயிலுக்குப் போய் வேண்டிக்கொண்டால், அவர்களுக்குக் குழந்தை வரம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

அந்தக் கோயிலில் உள்ள சிலை ஆறடி உயர அம்மணமான காலபைரவரின் கல்சிலை. இந்த கதையின் மெய்த்தன்மை பற்றி நான் விசாரித்தபோது சுமார் 90% பெண்களுக்கு உண்மையாகவே குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது எனக்கண்டேன்.

குழந்தை இல்லாத பெண்களுக்கு இந்த கடவுள் ஆசி வழங்கும் முறையை அறிய எனக்கு ஆர்வம் உண்டாயிற்று. ஓமெனும் படைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மந்திரத்தைப் பயிற்சி செய்யும் முறையை மட்டுமே நான் அறிவேன்!

என்னுடன் ஒரு நண்பர் தம்முடைய மனைவியுடன் வந்தார், அந்தப் பெண் என் மனைவியாக நடித்தார். கடவுளின் அருளைப் பெற மிகுந்த பணத்தைக் கொட்டிக் கொடுத்தாக வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எனவே மிகவும் கந்தலான உடை உடுத்துச் சென்றோம்.

எனக்குத் திருமணமாகியும் இன்னும் நான் தந்தை ஆகவில்லை என்று பூசாரியிடம் சொன்னேன். கடவுளின் வரத்துக்காக வேண்டும்படி அவனிடம் இறைஞ்சினேன். நாங்கள் இறந்ததும் சிரார்த்த சடங்கை நிறைவேற்ற ஒருவர் வேண்டுமல்லவா. மேலும் எனக்கு வயதாகிவிட்டதால் அவரால் முடிந்த அளவுக்குப் பெருமுயற்சி எடுக்குமாறு வேண்டினேன்.

நான் ஏன் இன்னும் அப்பா ஆகவில்லை என்பதற்கான காரணத்தைத் தேடுவதுபோல் பூசாரி சிந்தனையோடு உட்கார்ந்திருந்தான். என்னைப் பார்த்தான்.

ராகு, கேது ஆகிய ஆபத்தான கிரகங்கள் என் தலைமேல் வட்டமிட்டுக் கொண்டுள்ளன, எனவே எனக்கு இது மோசமான நேரம் என்றான்.

எனவேதான் நான் அப்பா ஆகமுடியவில்லை என்றான். என்கூட வந்த பெண்ணை பார்த்து அவரிடம் அவரது முன்பிறவியில் அவர் ஒரு குழந்தையைக் கொலை செய்துவிட்டதாகவும், எனவேதான் அவர் தாயாக முடியவில்லை என்றும் கூறினான். இந்த கிரகங்களைத் திருப்தி செய்ய வேண்டும், குழந்தையின் ஆன்மாவைச் சாந்தி செய்ய வேண்டும் என்றான்.

இதற்கான பிராயச்சித்த பூசைக்கு ஐயாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கும் என்றான்.

இரண்டு மணி நேரமாக எங்கள் வறுமையை எடுத்துச் சொல்லி கெஞ்சினோம். கடைசியில் 250 ரூபாய்க்கு இறங்கி வந்தான். அதைச் செலுத்தினோம்.

பின் ஒரு பஞ்சலோக பானையில் அரிசி நிரப்பி கொண்டுவரச் சொன்னான். அந்த பாத்திரம் வாடகைக்குக் கிடைத்தது. அவன் எங்களிடம் ஒரு கத்தியைக் கொடுத்து பகவான் காலபைரவர் மேல் முழு நம்பிக்கையுடன் வேண்டிக்கொண்டு, அரிசி நிரம்பிய அந்தச் சொம்பில் கத்தியைச் செருகி பின் அதைத் தூக்குமாறு சொன்னான்.

கடவுள் சம்மதம் கிடைத்தால் அரிசி நிரம்பிய செம்பு கத்தியோடு மேலே வரும், எங்களுக்குக் குழந்தை வரம் கிடைத்துவிட்டது என்று பொருள்படும் என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொண்டபடி பிரார்த்தித்தோம். செம்புக்குள் கத்தியைச் செருகி கத்தியைத் தூக்கினோம். ஆனால் கத்தியுடன் சேர்ந்து பாத்திரம் மேலே வரவில்லை. தன் உள்ளுணர்வு மூலம் தான் கண்டது சரியாகிவிட்டது என்று சொன்னான் அவன். பிராயச்சித்த பூசையை ஆரம்பித்தான்.

சுமார் ஒரு மணிநேரம் பூசை தொடர்ந்தது. ஒவ்வொரு வார்த்தையோடும் கத்தியைப் பாத்திரத்துக்குள் செருகி அவ்வப்போது வெளியே எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். சாந்தி செய்யும் பிரார்த்தனை முடிந்தபின் கத்தியை நேராக அரிசிக்குள் செருகி கத்தியைத் தூக்குமாறு எங்களிடம் சொன்னான். இதில் எங்களுக்கு அவனும் உதவினான்.

என்ன ஆச்சரியம்! பாத்திரமும் கத்தியோடு சேர்ந்து மேலே வந்தது. பிரார்த்தனை பலித்துவிட்டது என்று விளக்கினான் பூசாரி.

அடுத்த கட்டமாக, கர்ப்பக்கிரகத்துக்குள் சிலையுடன் கூடுவதற்காக அந்த பெண் தனியாக வரவேண்டும் என்றான். அவர் ஒரு துணிச்சலான பெண்மணி. கர்ப்பக்கிரகத்தில் அவர் நுழைந்ததும் கதவுகள் சாத்தப்பட்டன. உள்ளே சன்னல்களோ காற்றுப் போக்கிகளோ இல்லாமல் முழு இருட்டாக இருந்தது.

பூசைக்காக பூசாரி உட்கார்ந்திருந்த இடத்தில் அவர் நின்றார். ஏனெனில் அவன் உட்காரப் பயன்படுத்திய இடத்தில் தரையில் ஒரு பலகை இருந்தது.

சில நிமிடங்கள் கழித்து சிலையின் பின்னால் இருந்து தன்னை நோக்கி ஆள் வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டார். கையில் பலகையுடன் அவர் தயாராக இருந்தார். அந்த ஆளை பலகையால் தாக்கினார்.

அது திடீரென நடந்ததாலும் அதற்குமுன் ஒருபோதும் இப்படி நடந்திராததாலும் அந்த ஆள் கீழே விழுந்தான். கட்டை தாக்கி, அம்மண சிலையின் குறியும் உடைந்துவிட்டது. அவர் கதவை ஓங்கித்தட்டினார். நாங்கள் திறந்து விட்டோம்.

ஒரு மனிதன் தரையில் அலங்கோலமாக கிடந்தான். சிலையின் குறி காணாமல் போயிருந்தது. சிலையைப் படம் எடுத்துக் கொண்டோம்.

அந்தக் கோயிலில் வேண்டிய பெண்கள் எப்படிக் கர்ப்பம் தரித்தார்கள் என்பதை இப்போது நாங்கள் அறிந்தோம். கருவுறச் செய்யப்பட்ட பெண்களின் கணவர்கள் மலடாக இருந்தார்கள். அவர்களுக்கு வரம் தந்தது சாமியல்ல, சாமியார்தான்; பூசாரிதான்! மலடான பெண்களுக்கு 'வரம்' கிடைக்கவில்லை!

www.tamilarangam.net

தொடக்க ஆண்டுகளில் சத்திய சாயிபாபாவும் நூற்றுக்கணக்கான பெண்களுக்குக் குழந்தை வரம் அளித்தார். அதற்கான செயல்முறை, மனைவி ஆசிரமத்தில் தங்கி காலையும் இரவும் பூசை தொடர வேண்டும். படுக்கப்போகும்போது அவளுக்கு ஒரு கோப்பை பால் தரப்படும். உடனே அவள் மயங்கி விழுவாள்.

பின் சாமியார் அவள் கர்ப்பமடையும்படி செய்வார். ஒய்.பி.சவாண், டி.ஏ. பய் போன்ற நம் அமைச்சர்கள் கூட குழந்தை அருளுமாறு அவரை அணுகினார்கள். ஆனால், அவர்கள் தம் மனைவியை விட்டுச் செல்லவில்லை. ஆதலால், சத்திய சாயிபாபாவால் அவர்களுக்குக் குழந்தை அருள முடியவில்லை.

1987 இல் மகாராட்டிரத்தில் உள்ள சதாராவில் திருமணமான பல பெண்களுக்கு ஒரு பாபா குழந்தைப் பேறு அளித்தார். ஆனால், சட்ட அமலாக்க பிரிவு அவரைக் கைது செய்ய முடியவில்லை.

ஏனெனில் சம்பந்தப்பட்ட பெண்கள் சாட்சியளிக்க முன்வரவில்லை. மகாராட்டிரத்தில் உள்ள நாத்திக (ஸ்கெப்டிக்) குழுவான 'அந்தா சிரத்தா நிர்மூலன் சமிதி', மானபங்கப் படுத்தப்பட்ட பெண்களிடம் பாபா தன் தகாவழி செயலைத் தொடர அனுமதிப்பதன் அபாயத்தைக் குறித்து பேசிய பின் கடைசியாகச் சாட்சிகூற அவர்கள் இணங்கினர்.

அவன் விசாரிக்கப்பட்டு சிறையிடப்பட்டான். இந்தியாவிலேயே முதல் முறையாக மகாராட்டிர அமுலாக்கத்துறை எல்லா காவல் நிலையங்களுக்கும் பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தது :

இத்தகைய மோசடிகளை அம்பலப்படுத்த நாத்திக குழுக்களுக்கு உதவ வேண்டும் , இத்தகைய எத்தர்களைப்பற்றி தெரிவிக்க பொதுமக்கள் மத்தியில் அவர்கள் போகும்போது அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றது.

ஆனால் பிற மாநில அரசாங்கங்களும் மத்திய அரசும் சத்திய சாயிபாபா போன்ற எத்தர்களுக்குத் துணைபோவதால் அவர்களை நாத்திகர் ஒருவர் அம்பலப்படுத்தும்போது அவருக்கு பாதுகாப்பளிப்பதற்குப் பதிலாக, சாமியார்களுக்குப் பாதுகாப்பளித்து நாத்திகர்களை அல்லல்படுத்துகிறது.

1986 இல் புட்டபர்த்தியில் உள்ள சத்ய சாயிபாபா ஆசிரமத்தின் முன் ஒரு அமைதியான தர்ணா நடத்த போலீசாரின் பாதுகாப்பை நான் கேட்டேன். அவரை விசாரிக்க எங்களுக்கு அனுமதி தருமாறு வேண்டினேன். அதற்கு ஆந்திர அரசாங்கம் குற்ற நடைமுறைச் சட்டத்தின் (சி.பி.சி) 144 ஆம் பிரிவை சாக்கிட்டு புட்டபர்த்தியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து 15 கி.மீ. தொலைவிலேயே எங்களை எல்லாம் கைது செய்தது.

ஆந்திர பிரதேசத்தின் தலைமை நீதிபதியும் தலைமை போலீஸ் கண்காணிப்பாளருமே கைதுகளுக்கு ஆணை பிறப்பித்தார்கள்.

1.1.1986 அன்று புட்டபர்த்தியில் சத்திய சாயிபாபாவின் அருஞ்செயல்களை எல்லாம் பொதுமக்களுக்குச் செய்து காட்டி அவர் அவற்றை எப்படி செய்கிறார், அவரை எப்படி அம்பலப்படுத்த முடியும் என விளக்க திட்டமிட்டிருந்தேன்.

ஒரு சாமியாரிடம் அல்லது பாபாவிடம் பிள்ளை வரம் வேண்டி செல்லும் எந்த பெண்ணும் அந்த சாமியார் அல்லது பாபாவின் பிள்ளையையே பெறுவாள்.

இப்படிப்பட்ட எத்தர்களை அணுகுவதைவிட, முறையான சிகிச்சைக்காக அவர்கள் மருத்துவமனை போக வேண்டும். மருத்துவ அறிவியல் மிகவும் முன்னேறியுள்ளது. சரியான சிகிச்சை மூலம் ஆணின் விந்தணுக்களின் எண்ணிக்கையைக் கணிசமாக அதிகரிக்க முடியும். மனைவி கருத்தரிக்க முடியும். மேலும் அவளது கருக்குழாய் புரண்டிருந்தால் செயற்கை முறை கருத்தரிப்பும் சாத்தியமே. அல்லது சோதனைக் குழாய் குழந்தையை அவள் பெற்றுக்கொள்ள முடியும்.

மருத்துவ காரணம் தடையாக இருந்தால் ஒருபெண்ணை கருவுற செய்ய எந்த சாமியாராலும் முடியாது.

அப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் தாராளமாக ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக் கொள்ள முடியும். பெற்றோர்களின் அன்பு தேவைப்படும் நிலையில் ஆயிரமாயிரம் அனாதைக் குழந்தைகள் இருக்கிறார்கள். இப்போது அரிசிக் கும்பா வித்தை வேலை செய்யும் முறையை விளக்குகிறேன்.

**தேவை :** அகல அடியும் குறுகிய கழுத்தும் கொண்ட குடம், அரிசி, போதிய நீளமுடைய நேரான மேசைக் கத்தி.

**செய்முறை :** குடத்தில் அரிசியை நிரப்பித் திணிக்கவும். கத்தியைப் பாதி தூரம் நுழைக்கவும். அடியில் அரிசி திணிந்து விட்டது தெரிந்ததும் கத்தியை அடிவரை நேராகச் செருகவும். இனி கத்தியைத் தூக்கினால் குடமும் சேர்ந்து எழும்.

இந்த சாகசத்தை ஏழாயிரம் தடவைகளுக்கு மேல் நான் செய்திருக்கிறேன். ஆனால் இதுவரை ஒரு குழந்தையைக் கூட நான் பெற்றுத் தரவில்லை!

www.tamilarangam.net

'சபரிமலை அய்யப்பன்' என்னும் விநோத கடவுளும் நமக்கு உண்டு. இவர் சிவன் - விஷ்ணு கூடலில் பிறந்தவர் என நம்புகிறார்கள். சுவாமி அய்யப்பனுக்கு பெண்கள் என்றால் ஒத்துக் கொள்ளாது (அலர்ஜி). எனவே அவரது கோயிலுக்குள் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் சமீபத்தில் அவரது மனைவிக்கும் குழந்தைகளுக்கும்கூட கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

## செயல் விளக்கம் - 113

**நோக்கம் :** மனஆற்றலால் பொருள்களை அசைத்தல்.

பல வித்தைக்காரர்கள் தம் மனோசக்தியால் பொருள்களை அசைக்க முடியும் என கூறிக் கொள்கிறார்கள். ஒரு பென்சிலை மேசையின் விளிம்பில் விழாமல் சமநிலையில் நிறுத்தி தம் மனோசக்தியால் அதை உருண்டு விழச் செய்கிறார்கள்.

**தேவை :** ஓர் உருண்டை பென்சில், ஒரு மேசை, நாற்காலி.

**செய்முறை :** நாற்காலியில் அமரவும். உங்கள் முன் மேசை இருக்கட்டும். உங்களுக்கு எதிரில் உள்ள மேசை விளிம்பில் பென்சிலைச் சமநிலையில் நிறுத்தவும். நகரும்படி பென்சிலுக்கு ஆணையிடவும். நீங்கள் பேசும்போது உங்கள் வாயில் இருந்து வெளிப்படும் காற்று பென்சிலை நகர்த்த அது விளிம்பிலிருந்து கீழே விழுகிறது. பென்சில் முன் உங்கள் கையை வைத்தபடி கைமேல் ஊதினால் பென்சில் எதிர்திசையில் நகர்ந்து வீழும்.

## செயல் விளக்கம் - 114

**நோக்கம் :** மன ஆற்றலால் பழங்களையும் பிற பொருட்களையும் அசைத்தல்.

மன ஆற்றல்காரர் மேசைமேல் ஒரு பழத்தை வைக்கிறார். அவர் ஆணையிட்டதும் பழம் மேசை மேல் உருண்டு பார்வையாளர்கள் பக்கம் தாவுகிறது.

**தேவை :** 18" எலாஸ்டிக், சிறிய அகன்ற வளையல்கள் 3, ஒரு வலிவான நூல், மேசை, மேசைத்துணி, பழம்.

**செய்முறை :** வளையலின் ஒருபக்கம் எலாஸ்டிக்கை முடிந்து மறுபுறம் நூலை முடிந்து கொள்ளவும். எலாஸ்டிக்கின் ஒரு முனை பார்வையாளர்களை நோக்கியுள்ள மேசையின் பக்கவாட்டில் பொருத்தப்பட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேசை மேல் வளையல் இருக்கும்படியாக பொருத்த வேண்டும். நூலை உங்கள் பக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதை உங்களால் இழுக்க முடியவேண்டும். முன்புறத்தில் இருந்து எதுவும் வெளியில் தெரியாதபடி மேசையை ஒரு துணியால் மூடிவிடவேண்டும்.

வளையல் மேல் பழத்தை வைக்கவும். பழம் உங்கள் பக்கம் வரவேண்டும் என்றோ, மறுபக்கம் போகவேண்டும் என்றோ நீங்கள் ஆணையிட்டால் அதற்கேற்ப நூலை இழுக்கவும் அல்லது தளர்த்திவிடவும். பழம் உங்கள் மனோசக்தியால் நகர்வது போலவே தோன்றும். இறுதியில் நூலை முற்றிலுமாக இழுக்கவும், எலாஸ்டிக் முழுமையாக நீளும். பின் திடீரென நூலைத் தளர்த்திவிடவும். பழம் பார்வையாளர்கள் மேல் எகிறும்.

## செயல் விளக்கம் - 115

**நோக்கம் :** *கார மிளகாய்களைச் சாப்பிடுதல்.*

ஒரு புனிதர் தான் புலன் உணர்ச்சிகளுக்கு அப்பால்பட்டவர் என்று மெய்ப்பிக்க கார மிளகாய்களை இனிப்பைத் தின்பது போல் தின்கிறார். பார்வையாளர்களுக்கும் சில மிளகாய்களைத் தருகிறார். அவர்கள் அதை சாப்பிட்டால் மிகவும் காரமாக இருக்கக் காண்கிறார்கள்.

**தேவை :** தூய ஆலிவ் எண்ணெய், காரமிளகாய்கள்.

**செய்முறை :** உணவானது உமிழ்நீரில் கரைந்து சுவை நரம்புகளால் உள்வாங்கப்பட்டு மூளையில் பதிவாகாதவரை, சுவையை நம்மால் உணரமுடியாது.

ஆலிவ் எண்ணெயால் வாயை நன்கு கொப்பளிக்கவும் - உங்கள் நாக்கும் வாயும் முற்றிலும் ஆலிவ் எண்ணெயால் மெழுகப்பட்டுவிடும். இனி கார மிளகாய்களைத் தின்றால் அவை நேரடியாக உங்கள் உமிழ்நீருடனும் சுவை நரம்புகளுடனும் தொடர்பு கொள்வதில்லை. எனவே வாயில் எரியும் உணர்ச்சி ஏற்படுவதில்லை.

## செயல் விளக்கம் - 116

**நோக்கம் :** பலூனைத் துளைக்காமலே வெடிக்கச் செய்தல்.

சாலக்காரர் சில பலூன்களை ஊதுகிறார். சில உதவியாளர்களை மேடைக்கு வரச்சொல்லி அவர்களிடம் பலூன்களையும் ஊசிகளையும் தருகிறார். பலூனை ஊசியால் குத்தச் சொல்கிறார். அவையெல்லாம் வெடித்து விடுகின்றன. பின் அவர் ஒரு பலூனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்து ஊசியால் குத்துகிறார். ஒன்றும் ஆவதில்லை. பலூன் அப்படியே இருக்கிறது.

**தேவை :** பலூன்கள், கூரிய நீள ஊசிகள், ஒளி ஊடுருவும் பசைநாடா, வாசலைன்.

**செய்முறை :** நீங்கள் ஊசியால் குத்தப் போகும் பலூன்கள் மேல் இருபுறமும் சிறு துண்டுக் கண்ணாடி நாடாவை (செல்லோடேப்) ஒட்டிவிடவும். நாடா மேல் ஊசியைக் குத்தவும், பலூன் காற்றுப் போகாது. அல்லது அவ்விடத்தில் வாசலைனைத் தடவவும். அதன்மேல் கண்ணாடி நாடாவை ஒட்டிவிடவும். காற்று வெளியேற விடாமல் வாசலைன் அடைத்துக் கொள்கிறது.

இன்னொரு முறை:- பலூனை உச்சி பாகத்திலோ அடிபாகத்திலோ குத்தவும். வெளிக்காற்று அழுத்தம் அதை காற்றுப் போகாமல் இருத்துகிறது.

## செயல் விளக்கம் - 117

**நோக்கம் :** மனோசக்தியால் நீரை எரித்தல்.

சாலக்காரர் ஒரு கோப்பையில் நீர் எடுத்துக் கொள்கிறார். நீர் மேல் கையை அசைக்கிறார். அது தீப்பிடித்து வெடிக்கிறது.

**தேவை :** கோப்பை, சுடுநீர், சோடியம் உலோகம், விரல்முனைப் பூண்.

**செய்முறை :** விரல்முனைச் சிமிழில் சோடியம் உலோகத்தை மறைத்துக் கொள்ளவும். நீருள்ள கோப்பையைக் காட்டவும். நீர்மேல் கையை அசைக்கவும், சோடியத்தை நீரில் விழச் செய்யவும். அது எரியத் தொடங்கும்.

## செயல் விளக்கம் - 118

**நோக்கம் :** துப்பினால் தீ பறக்கும்.

சாலக்காரர் தன் வாய் நிறைய நீரை நிரப்பிக் கொண்டு பாத்திரத்துள் அதை உமிழ திடீரெனத் தீப்பற்றி எரிகிறது.

**தேவை :** CP ஈதர், கோப்பை, பொட்டாசியம் உலோகம், கண்ணாடித் தம்ளரில் நீர்.

**செய்முறை :** ஒரு கோப்பையில் மூன்று மேசைக் கரண்டி நிறைய CP ஈதரையும் சிறுதுண்டு பொட்டாசியம் உலோகத்தையும் எடுத்துக் கொள்ளவும். வாய்க்குள் நீர் நிரப்பி கோப்பைக்குள் உமிழவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொட்டாசியம் உலோகம் தீப்பற்றி ஈதரையும் தீப்பற்றச் செய்கிறது. அது நீர்மட்டத்துக்கு மேல் எழுகிறது.

## செயல் விளக்கம் - 119

**நோக்கம் :** உடல்மேல் சாம்பல் பூசியதும் கடவுள் பெயர் தோன்றுதல்.

தான் நிசமான கடவுள் பக்தன் என்பதை மெய்ப்பிக்க ஒருவர் குளித்துவிட்டு தன்முன் தீ வளர்த்து மந்திரம் எல்லாம் சொல்லி பின் யாக குண்டத்தில் இருந்து எடுத்த சாம்பலைத் தன் உடலில் பூசுகிறார். கடவுளின் பெயர் அவர் உடல் முழுவதும் தோன்றுகிறது.

**தேவை :** ஒடித்தால் வெள்ளையாக பிசின் போன்ற பால்வடியும் செடி அல்லது சோப்பு, மெல்லிய குச்சி.

**செய்முறை :** செடியிலிருந்து ஒடித்த குச்சியிலிருந்து வடியும் பிசின் போன்ற பாலால் உடல் முழுவதும் கடவுளின் பெயரை எழுதி காய விடவும். அல்லது சோப்பை குழம்புபோல் செய்து மெல்லிய குச்சியில் தோய்த்து எழுதவும். கோந்தையும்கூடப் பயன்படுத்தலாம். காயவிடவும்.

நெருப்பில் இருந்து வரும் வெப்பம் உடலில் வியர்வையை தோற்றுவிக்கும். யாககுண்டத்தில் இருந்து எடுக்கும் சாம்பலை உடல்மேல் பூசிஉதறியதும் கடவுளின் பெயர் உடல் முழுதும் தெரிகிறது.

## செயல் விளக்கம் - 120

**நோக்கம் :** மாந்திரிகப் பச்சைகுத்தல்.

**தேவை :** ஓவிய தூரிகை, நீரில் கரைத்த பொட்டாசியம் இரும்பு சயனைடு கரைசல் ஒரு குப்பி, நீரில் கரைத்த இரும்பு குளோரைடு கரைசல் ஒரு குப்பி.

**செய்முறை :** பொட்டாசியம் இரும்பு சயனைடு கரைசலில் ஓவிய தூரிகையை முக்கி உங்கள் கையிலோ தாளிலோ கடவுளின் பெயரை எழுதிக் கொள்ளவும். அதைக் காயவிடவும்.

கொஞ்சம் பஞ்சை அல்லது துண்டுத் துணியை இரும்பு குளோரைடு கரைசலில் நனைத்து ஏற்கனவே எழுதிய இடத்தின்மேல் தடவவும். முன்பு நீங்கள் வரைந்தது நீலநிறத்தில் புலப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 121

**நோக்கம் :** ஒருவர் மனதில் நினைக்கும் எண்ணெய் அல்லது பூவின் பெயரைச் சொல்லுதல்.

தம் சிக்கல்களுக்குத் தீர்வு காண மக்கள் மாந்திரிகனிடம் வரும் போது 1 முதல் 20க்குள் ஒரு எண்ணையோ அல்லது ஒரு பூவின் பெயரையோ எழுதிவைத்துக் கொள்ளும்படி வந்தவரிடம் கூறுகிறார் மாந்திரிகர்.

பின் அவர் மேல் கவனம் குவித்து ஒரு தாளில் எதையோ எழுதி தன் பைக்குள் வைத்துக் கொள்கிறார். பின் அவரது பிரச்சனைகளைப் பற்றி கேட்டு அதன் மீது தியானிக்கிறார். தியானத்துக்குப்பின் வந்த ஆளிடம் என்ன எண் அல்லது பூ பெயரை அவர் எழுதினார் என திடீரெனக் கேட்கிறார்.

அதே நேரத்தில் தன் பைக்குள் கைவிடுகிறார். எண்ணை அல்லது பூ பெயரை அந்த ஆள் சொன்னதும் தாளைத் தன் பையிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். அந்த ஆள் சொன்ன அதே எண் அல்லது பூ பெயரே அதில் எழுதி உள்ளது.

**தேவை :** நகப்பென்சில், கெட்டித்தாள் துண்டுகள், பென்சில்.

**செய்முறை :** கரிக்கோல்முனையுடன் கூடிய நகப்பென்சிலைப் பெருவிரல் நகத்தில் செருகிக் கொள்ளவும். பெருவிரலை உள்ளங்கைக்குள் மறைத்துக் கொள்ளவும்.

உதவியாளரிடம் அவர் தீர்க்க விரும்பும் சிக்கல் என்ன என கேட்கவும். பின் அவரிடம் ஒரு எண்ணையோ ஒரு பூவின் பெயரையோ ஒரு தாள் துண்டில் யாரும் அறியாமல் எழுதி தன்பைக்குள் வைத்துக் கொள்ள சொல்லவும்.

அதே போது நீங்களும் ஒரு தாள் துண்டில் ஏதோ எழுதுவதுபோல் பாவனை செய்து அந்த தாளை உங்கள் பைக்குள் வைத்துக் கொள்ளவும்.

சில மந்திரங்களை முணுமுணுத்த பின் அவரது சிக்கல்களுக்கு ஒரு தீர்வு கூற முயலவும். இடையில் திடீரென அவர் எழுதிவைத்துள்ள எண் அல்லது பூவின் பெயர் யாது என்று கேட்கவும்.

அதே போது உங்கள் வலது கையை உங்கள் பைக்குள் விட்டு பையில் உள்ள தாளை எடுப்பதுபோல் அவ்வெண்ணை அல்லது பூ பெயரை உங்கள் பைக்குள் உள்ள தாள் துண்டில் நகப்பென்சிலால் எழுதிவிடவும்.

நகப்பென்சிலைப் பைக்குள்ளேயே கழட்டி விட்டுவிட்டு தாளை எடுக்கவும். நீங்களும் அதே எண் அல்லது பூவின் பெயரையே எழுதியிருப்பதாக சொல்லிக் காட்டவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வித்தையை இன்னும் பல வழிகளில் செய்யலாம். ஒரு தாளை நீரில் ஐந்து நிமிடம் ஊறவைத்து செய்தித்தாளின் இடையில் அதை வைக்கவும். செய்தித்தாளின் மேல் அதே இடத்தில் ஒரு தாளை வைத்து அதில் ஒரு எண்ணையோ/ பெயரையோ எழுதுமாறு உதவியாளரிடம் கூறவும்.

அவர் எழுதியபின் செய்தித்தாளை எடுத்து அவருக்கு தெரியாமல் ஈரத்தாளில் உள்ள நீர்க்குறியை பார்த்துக் கொள்ளவும். தியானிப்பது போல் நடிக்கவும். அவரிடம் அந்த எண்/ பூ பெயரை கூறவும்.

## செயல் விளக்கம் - 122

### திரியில் ஆடும் கடவுள் ஆவி

கடவுளின் ஆவி சாமியாடியை விட்டு நீங்கி, திரியில் நுழைந்து கொண்டு அதைப் பொருத்தியதும் ஆடுகிறது.

தெற்குக் கன்னடத்தில் ஒரு கிராமத்துக் கோயிலில் இப்படி நடக்கிறது. சாமியாடியைச் சாமி ஆட்கொள்கிறது. சடங்கு முடிந்தபின் அது அவர் உடலை விட்டு நீங்கவே உணர்வின்றிக் கீழே விழுகிறார் அவர். ஆவி பிறகு ஒரு திரிக்குள் நுழைகிறது. அதைப் பொருத்தியதும் அது ஆடத் தொடங்குகிறது.

**தேவை :** உயிருள்ள மண்புழு ஒன்று, பஞ்சு, எண்ணெய், தீப்பெட்டி,

**செய்முறை :** பருத்திப்பஞ்சுத் திரிக்குள் உயிருள்ள ஒரு மண்புழு மறைத்து வைக்கப்படுகிறது. நோன்பு முடிந்ததும் சாமியின் ஆவி சாமியாடி உடலைவிட்டு நீங்கியதும் திரியை எண்ணெயில் முக்கித் தீப் பொருத்தப்படுகிறது. திரி நெளியத் தொடங்குகிறது.

என்ன நடக்கிறது? திரி கொளுத்தப்பட்டதும் சூடு புழுவை வருத்த, திரிக்குள் அது போராடுகிறது. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, வெளியேற நெளிகிறது.

## செயல் விளக்கம் - 123

### தேங்காய்க்குள் ஆவி

ஆவி குடிபுகுந்த ஆளின் உடலை விட்டு மந்திரவாதி அதை அகற்றி மந்திர உச்சரிப்புகள் மூலம் ஒரு தேங்காய்க்குள் குடியேற்றுகிறான். தேங்காய் அசையத் தொடங்குகிறது.

**தேவை :** உயிருள்ள எலிக்குஞ்சு அல்லது தவளை ஒன்று, குடுமி தவிர முற்றிலும் நார் நீக்கிய தேங்காய் ஒன்று, விரைவில் உலரும் பசை (குவிக் ஃபிக்ஸ்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செய்முறை :** தேங்காயின் குடுமியை அகற்றிவிட்டு கண் பாகத்தையும் சதைப் பற்றையும் நீக்கிவிட்டு எலிக்குஞ்சு அல்லது தவளையை உள்ளேவிட்டு அகற்றிய பாகத்தை வைத்து மூடி அதை மறைக்க குடுமியை ஒட்டவைக்கவும்.

புகைபோட்டு மந்திரம் ஓதிய பின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரின் உடலில் இருந்து அதை வெளியில் எடுத்து தேங்காய்க்குள் சிறைப்படுத்தவும். தேங்காயைத் தரையில் வைக்கவும். தீயிலிருந்து எழும் புகை எலிக்குஞ்சை / தவளையைத் திண்டாடச் செய்யும். அது தப்பிக்கப் போராடும், எனவே தேங்காய் அசைந்து ஆடும்.

## செயல் விளக்கம் - 124

### கோயிலுக்கு சரியாக நண்பகல் 12 மணிக்குக் கழுகு வந்துவிடுதல்

தமிழ்நாட்டில் திருப்பரங்குன்றத்தில் கோயிலில் சாமிக்குப் படைக்கும் பிரசாதத்தை உண்ண தினமும் சரியாக பகல் 12 மணிக்கு இரண்டு கழுகுகள் வருகின்றன. கருடன் (கழுகு) விஷ்ணுவின் வாகனமாக கருதப்படுகிறது. அந்த கோயிலில் விஷ்ணுசிலையே நிறுவப்பட்டுள்ளது.

1945 இல் இந்த அதிசயத்தைக் காண நான் அந்த கோயிலுக்கு போய்ப் பார்த்தேன். இரண்டு கழுகுகளைப் பிடித்து கோயில் வளாகத்துக்குள் சரியாக பகல் 12 மணிக்கு உணவிட்டு பழக்குகிறார்கள் என்பது தெரியவந்தது. **உணவில் அபின்** கலந்து விடுகிறார்கள்.

இதனால், அவை அதற்குப் பழகிவிடுகின்றன. பின் அவை அதற்குப் பழகிவிட்டன என்பது உறுதியானதும் அவற்றை விடுவித்து விட்டு விட்டார்கள். ஒவ்வொரு நாளும் பகல் 12 மணிக்கு போதைப்பொருள் கலந்த உணவை உண்ண கோயிலுக்கு அவை வந்து விடுகின்றன.

## செயல் விளக்கம் - 125

**நோக்கம் :** கச்சா எண்ணெய் தீப்பிடிக்காமலேயே இயற்கை (எரி)வாயு எரிதல்.

இமாச்சலப் பிரதேசத்தில் சுவாலமுகி கோயிலில் கொதித்துக் கொண்டிருக்கும் கச்சா எண்ணெய்த் தீப்பிடிக்காமலே இயற்கைவாயு எரிகிறது.

சிம்லாவில் என்னை ஒரு விஞ்ஞானி வளைத்துக் கொண்டார். சுவாலமுகி கோயிலில் கோரக்நாத திப்பாவில் நடக்கும் ஒரு அதிசயத்தைப் பற்றி அவர் எனக்கு விளக்கினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயற்கை எரிவாயுவெளிப்படும் இடத்தின்மேல் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. அது ஒரு குழாய் வழியாக வந்து இடைவிடாது எரிகிறது. எனவேதான் அங்குள்ள தேவிக்குச் சுவாலமுகி என பெயரிட்டுள்ளார்கள். கோயிலுக்குள் கோரக்நாத திப்பம் உள்ளது. இங்கு ஒரு கிணற்றுக்குள் எண்ணெய் கொதித்துக் கொண்டு இருப்பதையும் அதன் வழியாக இயற்கை வாயு வெளிப்படுவதையும் காண முடியும். கோரக்நாத பந்தி இந்த வாயுவை எரியச் செய்கிறார்.

இந்த அதிசயத்தைக் காண இந்த இடத்துக்கு வரும் பக்தர்கள் கொதிக்கும் கச்சா எண்ணெய் தீப்பிடிக்காததைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். தட்டில் பக்தர்கள் காசு வைத்தால், கொதிக்கும் எண்ணெயைக் கையில் எடுத்து பக்தர்கள் தலையில் தெளிக்கிறார்கள். அது குளிர்ச்சியாகவே இருக்கிறது. தான் அந்த கோயிலுக்குப் பலதடவை போய்ப் பார்த்ததாகவும் இந்த அதிசயத்தின் மெய்தன்மைக்குத் தானே சாட்சியம் கூற முடியுமென்றும் அந்த அறிவியல்காரர் என்னிடம் கூறினார்.

சுவாலமுகியில் நான் இருந்தபோது அந்த கோயிலுக்குப் போய்ப் பார்ப்பதென்று முடிவு செய்தேன். கிணற்றில் உள்ள திரவத்தில் இருந்து குமிழ்கள் வெளிவருகின்றன. பூசாரி ஒரு தாளைக் கொளுத்தி திரவத்தின் மேலாகப் பிடிக்கிறார். உடனே வாயு தீப்பிடித்து எரிகிறது.

பின் கிணற்றில் உள்ள திரவத்தை நெருப்பின் மேல் தெளித்தால் தீ அணைந்துவிடுகிறது. பின் அவர் தன் கையைக் குமிழியிட்டுக் கொண்டிருக்கும் திரவத்தில் வைத்து, தட்டில் காசுவைத்த பக்தர்களின் தலையில் அதைத் தெளித்தார்.

அத்திரவத்தை அவர் தெளிக்கும்போது நான் யாருக்கும் தெரியாமல் என் விரலால் அத்திரவத்தைத் தொட்டேன். அது பனிக்குளிராக இருந்தது. அது கச்சா எண்ணெய் அல்ல, தண்ணீர்தான்!

இயற்கை வாயு தண்ணீரின் வழியாக அக்கிணற்றின் இடது பக்கத்தில் இருந்து வெளிவருகிறது. அது வெளியேறும் போது நீரில் ஏற்படும் குமிழிகளைப் பார்த்து மக்கள் அதைக் கொதிக்கும் எண்ணெய் என்று தவறாக நம்புகிறார்கள். தண்ணீர் மிகவும் மாசுபட்டு போயிருப்பதால் அது மிகவும் குழகுழப்பாகி கச்சா எண்ணெய் போல் காட்சியளிக்கிறது.

## செயல் விளக்கம் - 126

### சாட்டையால் விளாசியும் காயம் படுவதில்லை

காளி கோயில் சாமியாடி தேவியால் ஆட்கொள்ளப்பட்டதும் ஒரு சாட்டையால் விளாசப்படுகிறார். ஆனால் அவருக்கு காயமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவதில்லை. மற்றவர்கள் அந்த சாட்டையை எடுத்துத் தம்மை அடித்துக் கொள்ள முயன்றால் தோல் பிய்ந்துவிடுகிறது.

**தேவை :** சணல் கயிறு சாட்டை, கைப்பிடிப்பக்கம் கனமாகவும் மறுமுனை மெலிந்து கொண்டே செல்வதாகவும் இருக்க வேண்டும். சடைபோடுவது போல் கயிறுகளைப் பின்னிப் பிணைத்து இது செய்யப்படுகிறது.

**செய்முறை :** சாட்டை கடைசிவரை சரியாக பின்னி முடிக்கப்பட்டிருந்தால் அதைக்கொண்டு ஒருவரை விளாசினால் சத்தம் மட்டுமே கேட்கும், வலி ஏற்படாது. ஆனால், மறு முனையில் ஒரு முடிச்சு போட்டு அடித்தால் தோலில் முடிச்சு படும் இடத்தில் தோல் உரிந்துவிடுகிறது.

❋

## செயல் விளக்கம் - 127

**நோக்கம் :** சூனியத்தின் மூலம் திருடனைப்பிடித்தல்.

ஒரு திருட்டு நடந்ததும் மந்திரவாதியைக் கூப்பிடுகிறார்கள். அவர் மண், விறகு கொண்டு ஓம குண்டம் ஆயத்தம் செய்து தீப் பொருத்தி புகை வளர்த்து கொஞ்ச நேரம் மந்திரம் ஓதுகிறார். பூசை முடிந்ததும் தரையில் நாலடி நீள குச்சியை நிறுத்துகிறார். அங்குக் கூடியிருப்பவர்கள் ஒவ்வொருவராக அறைக்குள் சென்று குச்சியின் உச்சியைத் தொட்டு பிரார்த்திக்கும் படி கூறுகிறார்.

குச்சியைத் தொட்டபின் தான் திருடவில்லை எனத் திருடன் பொய் சொன்னால் அவன் பயங்கரமான விளைவுகளை அனுபவிப்பான் என்று மக்களை எச்சரிக்கிறார். திருடன் எளிதில் பிடிபட்டுவிடுகிறான்.

**தேவை :** ஓமகுண்டம் கட்ட செங்கல்கள், மண், மரச்சீவல், தீப்பெட்டி, நெய், பூக்கள், 4 அடி நீளக் கழி, பெருங்காயம்.

**செய்முறை :** குச்சியின் முனையில் பெருங்காயத்தை அப்பி, மண்ணில் செங்குத்தாக நிறுத்தவும். அப்பாவிகள் குச்சிமுனையைத் தொடுவார்கள். திருடன் 'பயங்கர பின் விளைவுகளுக்கு' பயந்து அதை தொடமாட்டான்!

ஒவ்வொருவரும் வெளியே வந்ததும் மந்திரவாதி அவர்கள் கையை உயர்த்தி ஏதாவது மந்திரம் கூறுகிறார். அவர்கள் விரல்களில் பெருங்காயம் மணக்கும். பெருங்காயவாசம் வீசாத விரலை உடையவனைப் பிடித்து திருட்டுப் பொருள்கள் அவனிடமிருந்து மீட்கப்படுகின்றன!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 128

### கத்தியால் உடலை வெட்டுதல்

இதை முசுலீம் மற்றும் இந்து சாமியாடிகள் செய்கிறார்கள். அவர்கள் ஒரு கத்தியால் தம் உடலை வெட்டிக் கொள்கிறார்கள். வெட்டப்பட்ட இடத்திலிருந்து ரத்தம் வடிகிறது. பின் ஒரு துண்டையும் நீரையும் கொண்டு உடலைத் துடைத்துவிட்டால் வெட்டுக்காயங்கள் ஆறிவிடுகின்றன.

**தேவை :** இரும்பு குளோரைடு, சோடியம் சல்போ சயனைடு, கத்தி.

**செய்முறை :** நீங்கள் வெட்டிக்கொள்ளும் இடத்தில் - உடம்பின் மீது அல்லது கையின் மீது இரும்பு குளோரைடு கரைசலை பூசிக்கொள்ளவும். கத்தியைச் சோடியம் சல்போசயனைடு கரைசலில் பூசிக் கொள்ளவும். சோடியம் சல்போ சயனைடு கரைசலில் முக்கிய கத்தியால் உங்களை வெட்டுவதுபோல் பாவனை செய்யவும். கத்திபட்ட இடத்தில் கருஞ்சிவப்பு கீற்றுகள் தோன்றும். பாவனை முடிந்ததும் ஈரத்துண்டால் உடலை நன்கு துடைக்கவும்.

## செயல் விளக்கம் - 129

### உடலைக் கத்தியால் வெட்டிக் கொள்ளும் இன்னொரு முறை

**தேவை :** இரும்பு அம்மோனியம் சல்பேட், சோடியம் சாலிசிலேட், கத்தி.

**செய்முறை :** உடலின் மீதோ கைமீதோ இரும்பு அம்மோனியம் சல்பேட் கரைசலைத் தடவவும். சோடியம் சாலிசிலேட் கரைசலில் கத்தியை நனைக்கவும். வெட்டுவதுபோல் நடிக்கவும். வெட்டுமிடத்தில் உடலிலும் கையிலும் சிவப்பு அடையாளங்கள் விழும். பின் ஈரத்துணியால் அப்பகுதியை துடைத்துவிட்டால் எல்லா அடையாளங்களும் போய் விடுகின்றன.

## செயல் விளக்கம் - 130

### கை மேல் சூடான இரும்பை வைத்தல்

மனோசக்தியாளர் தன் கைமேல் சூடான மின் பற்றவைப்பு இரும்பை வைக்கிறார். கை புண்ணாவதில்லை.

**தேவை :** மின் பற்றவைப்பு இரும்பு, பெட்ரோலியம் களிம்பு / ஜெல்லி (வாசலைன்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**செய்முறை :** பெட்ரோலியம் களிம்பைக் கைமேல் பூசவும். பற்றவைப்பு இரும்பை எடுத்து உங்கள் கைமேல் உள்ள களிம்பின் மீது லேசாகத் தொடவும். சுரீர் என்ற சத்தம் உண்டாகும். பின் உங்கள் கை பாதிக்கப்படாததைக் காட்டவும்.

❈

## செயல் விளக்கம் - 131

### மரத்தூள் மேல் துப்பினால் தீ வெடித்துக் கிளம்புதல்

**தேவை :** உலோக கோப்பை, நன்கு உலர்ந்த மரத்தூள், சோடியம் பெராக்சைடு (தூள்), நீர்.

**செய்முறை :** ஒரு உலோகக் கோப்பையில் சமபங்கு உலர்ந்த மரத்தூளும் சோடியம் பெராக்சைடு தூளும் எடுத்துக் கொள்ளவும். ஒரு தம்ளரில் கொஞ்சம் நீர் கொண்டு வரச்சொல்லி அதில் கொஞ்சம் குடித்துவிட்டு கொஞ்சத்தை மரத்தூள் மேல் உமிழவும். அதிலிருந்து தீ வெடித்துக் கிளம்பும்.

❈

## செயல் விளக்கம் - 132

### வாயிலிருந்து கனலையும் தீப்பொறிகளையும் எழுப்புதல்

**தேவை :** சணல் கயிறு, பொட்டாசியம் நைட்ரேட் கரைசல், பஞ்சு.

**செய்முறை :** சணல் கயிற்றை பொட்டாசியம் நைட்ரேட் கரைசலில் 4 தடவைகள் முக்கவும். ஒவ்வொரு தடவை முக்கியதும் காயவைத்துக் கொள்ளவும். அதன் ஒரு முனையைப் பற்றவைத்து, பஞ்சு கொண்டு அதை ஒரு பந்து போல் உருட்டி வாயைத் துடைத்துக் கொள்ளும் பாவனையில் உங்கள் வாய்க்குள் வைத்துக் கொள்ளவும். வாயால் சீராக வெளிமூச்சு விடவும்.

உங்கள் வாயிலிருந்து தீப்பொறி சீறிப்பாயும். வாய்க்குள் அந்த பந்து இருக்கையில் வாய்க்குள் போதிய எச்சில் ஊறி நிற்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அது சற்று சூடானதும், உங்கள் கைக்குட்டையின் மறைப்பில் அதை அகற்றிவிடவும். வாய்க்குள் பந்து இருக்கையில் உள்மூச்சு வாங்கக்கூடாது.

❈

## செயல் விளக்கம் - 133

### ஒருவர் நினைக்கும் எண்ணைச் சொல்லுதல்

ஒருவரிடம் ஒரு எண்ணை கூறச் சொல்கிறார் மந்திரவாதி. ஒரு வெற்று தாள் மீது சாம்பலைப் பூசும்போது எண்கள் தோன்றுதல்.

**தேவை :** சோப்பு, சாம்பல், வெற்றுத்தாள்.

**செய்முறை :** வெற்றுத்தாளின் மேல் சோப்பைக் கொண்டு 1 முதல் 9 வரை எழுதிக் கொள்ளவும். 1 முதல் 9 க்குள் ஏதாவது ஒரு எண்ணைச் சொல்லும்படி ஒருவரிடம் கூறவும். அந்த எண் எழுதிய இடத்தில் சாம்பலைப் பூசவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 134

### மூடி முத்திரையிட்ட உறைக்குள் உள்ள சேதியை வாசித்தல்

மனோசக்தியாளர் தன் வாடிக்கையாளரிடம் ஒரு அட்டையைத் தந்து தன் பிரச்சனையை அதில் தெளிவாக எழுதும்படி கூறுகிறார். அதை ஒரு உறைக்குள் வைத்து முத்திரையிடும்படி கூறுகிறார். பின் உறையை அவர் தன் கையில் எடுத்து அதன் மேல் மனத்தைக் குவித்து அட்டையில் எழுதி இருப்பதைத் தெரிவிக்கிறார்.

**தேவை :** உறையின் அளவுள்ள வெள்ளை அட்டை, அட்டையில் எழுதியது வெளியில் தெரியாத அளவுக்குக் கெட்டியான உறை, பஞ்சு, ஈதர்.

**செய்முறை :** மூடிய உறை மேசை மேல் வைக்கப்பட்டதும், ஈதரில் நனைத்த பஞ்சை உள்ளங்கையில் மறைத்தபடி உறைமேல் கைவைப்பதுபோல் உறை மேல் அதைப் பூசவும். சேதியை / செய்தியை மெதுவாக படித்துக் கொள்ளவும்.

ஈதர் உடனடியாக ஆவியாகிவிடும் - எந்த தடத்தையும் விட்டுச் செல்லாது. பின் (உறைக்குள் உள்ள சேதியைச் சொன்னபின்) உறையைத் திறந்து அட்டையில் எழுதியிருப்பதை வாசிக்கவும்.

## செயல் விளக்கம் - 135

### விரலைச் சுட்டுக் கொண்டு அந்த வலியை வெல்லுதல்

தியானம் மூலம் உடல் வேதனையை வெல்ல முடியும் என கூறிக்கொள்கிறார் யோகி. ஒரு சிகரெட்டை எடுத்து தன் விரல் முனையில் சுட்டுக் கொப்பளத்தைக் காட்டுகிறார். ஆனால், புன்னகையுடன் தியானத்தில் இருக்கிறார். மிக குறுகிய நேரத்தில் கொப்பளம் மறைந்து விடுகிறது.

**தேவை :** கார் சாவி, பற்றவைத்த சிகரெட்.

**செய்முறை :** வலது கையை உங்கள் பைக்குள் விட்டுச் சாவியின் வட்டத் துளையைப் பெருவிரலாலும் சுட்டுவிரலாலும் அழுத்தவும். பற்ற வைத்த சிகரெட் ஒன்றைக் கேட்டு உங்கள் இடது கையில் வாங்கிப் பையிலிருந்து வலதுகையை வெளியில் எடுத்துச் சிகரெட்டால் சுட்டுவிரல் முனையைத் தொடவும். சாவித்துளை அடையாளத்தின் மேல் கொஞ்சம் சாம்பலைப் படியச் செய்து அதைப் பார்வையாளர்களுக்குக் காட்டவும்.

அது ஒரு உண்மையான கொப்பளம் போலவே தோன்றும். சில நிமிடங்கள் - அந்த அடையாளம் மறையும் மட்டும் - தியானிக்கவும். பின் அதைக் காட்டி உங்கள் மன ஆற்றலால் கொப்பளத்தைக் குணப்படுத்தி விட்டதாகக் கூறவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 136

### உடைந்த கண்ணாடி மேல் பாய்தல்

அடயோகி வெறும் காலுடன் ஒரு மேசையில் இருந்து உடைந்த கண்ணாடி மேல் பாய்கிறார்.

**தேவை :** சோடாபுட்டிகள் அல்லது பியர் புட்டிகளின் அடிப்பாகம் 50 - 100 கிலோ, அவற்றை ஒன்றுடன் ஒன்று உருட்டிப்புரட்டி முனை மழுக்க ஒரு சாக்கு, மேசை.

**செய்முறை :** கண்ணாடியின் அளவு எவ்வளவு அதிகமோ அவ்வளவுக்குக் குதிப்பதில் பாதுகாப்பும் அதிகம். ஏனெனில் உங்கள் எடையை மெத்தைபோல் தாங்கும்படி பரப்பப்பட்டுள்ள கண்ணாடி குவியல் (நீங்கள் குதிப்பதன்) விசையை ஈர்த்துக் கொள்கிறது. முதலில் மூடு செருப்புகளுடன் பழகவும். பிறகு காலுறைகளுடன் பழகவும். கடைசியாக வெறுங்காலுடன் பழகவும்.

## செயல் விளக்கம் - 137

### முள்கள் மேல் தூங்குதல்

பரதேசிகள் தாங்கள் உடல் வேதனை உணர்வை கடந்தவர்கள் என்பதைக் காட்ட முள்கள் மேல் படுப்பதை நீங்கள் காண முடியும்.

**தேவை :** முள் செடிகள்.

**செய்முறை :** தீ மூட்டுங்கள். முட்புதர்களை நெருப்புமேல் போடுங்கள். கெட்டிச் சாக்கால் முள்கள் மேல்வரும்படி அழுத்துங்கள். முள் முனைகள் மேல் நோக்கி நீட்டியிருக்கும்படி முள் படுக்கை தயாரியுங்கள். முட் படுக்கைமேல் மெதுவாக நீங்கள் படுத்து, ஊறு நேராமல் இருக்க முடியும்.

## செயல் விளக்கம் - 138

**நோக்கம் :** மந்திரவாதி பக்தர்களுக்கு ஒரு அற்புத தாயத்தைத் தருகிறார். அது சூடாகி திருநீற்றை உண்டாக்குகிறது.

மந்திரவாதி சில வெள்ளி சத்துகளை/ தாயத்துகளைக் காட்டி அவற்றின் அருமைபெருமைகளை, அவை வெளிப்படுத்தும் அதிசய ஆற்றலை விளக்குகிறார். அணிந்து கொள்வோருக்கு இந்தத் தாயத்துகள் பல அற்புதங்களை நிகழ்த்தும் வல்லமை உடையன என்கிறார். அவை அவர்களைப் பாதுகாக்கும், எல்லா பாதக நிலைகளில் இருந்தும் காப்பாற்றும் என்கிறார்.

பின் அந்த தாயத்தைச் சரிகைத்தாளில் சுற்றி வாடிக்கையாளருக்குத் தருகிறார். அவரைச் செபிக்கச் சொல்லித் தன் பிரச்சனை மீது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனத்தைக் குவித்து தன் மூடிய கைக்குள் பிடித்திருக்க சொல்கிறார். கொஞ்ச நேரத்துக்குள் தாயத்து சூடாகிறது. சரிகைத்தாளைப் பிரித்துப் பார்த்தால் கொஞ்சம் விபூதி காணப்படுகிறது.

**தேவை :** செப்பு தாயத்து, உப்புத்தாள், பாதரச நைட்ரேட் கரைசல், அலுமினியத் தாள்.

**செய்முறை :** உப்புத்தாளால் செப்புத்தாயத்தைத் தேய்த்து சுத்தம்செய்து பாதரச நைட்ரேட் கரைசலில் முக்கவும். மெல்லிய துணியால் நன்கு துடைத்தால் அது வெள்ளி தாயத்து போல் காணப்படும். அதை அலுமினிய தாளுக்குள் இறுக்கமாகப் பொதிந்தால் வேதிவினை நிகழ்ந்து வெப்பம் வெளிப்படுகிறது. சாம்பல் நிற பொடி ஒன்று உருவாகிறது. அது விபூதிபோல் தோன்றுகிறது.

## செயல் விளக்கம் - 139

### பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலை நாவால் நக்குதல்

பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலை அல்லது இரும்புக் கம்பியைச் சாமியாடி அது குளிர்ந்து போகும்வரை நக்குகிறான்.

தில்லியிலுள்ள மாவட்ட கல்வி அதிகாரியிடம் பேசிக் கொண்டிருந்தபோது கார்வார் மாவட்டத்தில் இருந்து வந்த கல்வி அதிகாரி ஒருவர் தான் ஒரு சாமியாடியைப் பார்த்திருப்பதாக சொன்னார்.

அவன் மேல் தெய்வம் ஏறியதும் ஒரு பழுக்கக் காய்ந்த சூட்டுக்கோலை நாவால் நக்கியே குளிரச்செய்து விட்டான் என்றார். ஒருவனுக்கு இயற்கைக்கு மீறிய சக்திகள் இல்லாதபடி அவனால் எப்படி பழுக்கக் காய்ச்சிய இரும்பை நாக்கில் வைக்கமுடியும் என்று அவர் அதிசயித்தார்.

**தேவை :** Liquid storax* , பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோல்.

**செய்முறை :** உங்கள் நாக்கிலும் உதடுகளிலும் ஸ்டொராக்சைப் பூசிக்கொள்ளவும். இதனால் நாக்கு வெப்பத்தால் பாதிக்கப்படாததாக ஆகிறது. சூடு ஆறும்வரை நக்கவும். பின் அந்த திரவத்தால் பாதிப்பு ஏதும் நேராதபடி வாயை நன்றாக கழுவவும்.

## செயல் விளக்கம் - 140

### தேவி ரத்தம் குடித்தல்

வீட்டில் யாராவது நோய்வாய்ப்பட்டாலோ விபத்து முதலியன நேர்ந்தாலோ காளிதேவியின் சினம் தணிக்க மந்திரவாதி

* திரவ வடிவிலான குங்கலிய வகை மெழுகு; சிலாபுட்பம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரவழைக்கப்படுகிறான். அவன் முதலில் விறகும் நெய்யும் எரித்து ஓமம் வளர்க்கிறான். பின் ஒரு தட்டில் கொஞ்சம் இரத்தம் ஊற்றி அதன்மேல் ஒரு விளக்கைப் பொருத்தி விளக்கை ஒரு பாத்திரத்தால் மூடுகிறான். பாத்திரத்தைச் சுற்றிவந்து, காளிதேவி அந்த ரத்தத்தை குடித்து குடும்பத்தை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகிறான்.

இப்படி மூன்று சுற்றுகளை முடித்ததும் தட்டில் உள்ள ரத்தம் மறைந்துவிடுகிறது. வீட்டாருக்கு நிறைவு ஏற்படுகிறது. தன் கட்டணத்தை வசூலித்த பின் தட்டையும் பாத்திரத்தையும் தன் பைக்குள் போட்டுக்கொண்டு நடையைக் கட்டுகிறான்.

**தேவை :** ஒருதட்டு, பொட்டாசியம் பெர்மாங்கனேட்டு, நீர், திரியும் எண்ணெயும் உள்ள விளக்கு, ஒரு பாத்திரம்.

**செய்முறை :** தட்டில் சிறுதுண்டு பொட்டாசியம் பெர்மாங்கனேட்டை வைத்து அதன்மேல் நீர் ஊற்றினால் அது இரத்தம்போல் காணப்படும். தட்டின் நடுவில் ஒரு விளக்கை வைத்து பொருத்தவும். விளக்கைப் பாத்திரத்தால் மூடவும்.

இவ்வாறு தட்டில் உள்ள நீரால் பாத்திரம் உறையிடப்படுகிறது. பாத்திரத்துக்குள் உள்ள ஆக்சிஜன் தீர்ந்ததும் விளக்கு அணைந்து விடுகிறது. பாத்திரத்துக்குள் இருக்கும் கார்பன்டை ஆக்சைடு நீரில் கலந்து ஒரு வெற்றிடம் உருவாகிறது. அவ்விடத்துக்குச் சிவப்பு நீர் உறிஞ்சப்பட்டு விடுகிறது.

## செயல் விளக்கம் - 141

**நோக்கம் :** பொம்மையின் கழுத்தைத் திருகினால் ஆள் மரணமடைதல்.

சூனியக்காரன் ஒரு ஆளின் பெயருடைய பொம்மையின் கழுத்தைத் திருகினால் உடனடியாக அந்த ஆளே இறந்து விடுகிறார்.

**தேவை :** ஒரு பொம்மை, இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாத்திரைகள்.

**செய்முறை :** சாகடிக்கப்பட வேண்டிய ஆள் எப்போது உணவுண்ணுகிறார் என்பதைச் சூனியக்காரன் தெரிந்து கொள்கிறான். அவரது உணவில் மாத்திரைகளைக் கலக்க ஒரு கையாளைக் கண்டுபிடிக்கிறான். பகலுணவு நேரத்தில் பொம்மையின் கழுத்தை அவன் திருகுகிறான். அதே நேரத்தில் திடீரென இரத்த அழுத்தம் குறைவதால் பலியாள் உணர்வற்றநிலை அடைந்து மரணமடைகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 142

**நோக்கம் :** ஆன்மீக அறுவை சிகிச்சை.

பிலிப்பைன்சில் ஆன்மீக அறுவை மருத்துவர்கள் கருவி ஏதும் இல்லாமலே அறுவை நடத்தி, நோயாளிகளைக் குணமாக்குவதாகவும் சொல்லிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஆன்மீக அறுவை மருத்துவர் 1980களில் இந்தியா வந்தார். முதல் அறுவை மகாராட்டிர மாநில அமைச்சர் ஒருவருக்கு நடந்தது.

எனவே பத்திரிக்கைகளில் அந்த மருத்துவருக்கு மிகுந்த விளம்பரம் கிடைத்தது. நாத்திகர்களை (ஸ்கெப்டிக்ஸ்)எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டதும் இந்தியாவைவிட்டு அவர் புறப்பட வேண்டியதாயிற்று. பிற்பாடு அவருக்கே உடல் நலமில்லாமல் போனது. அப்போது இன்னொரு ஆன்மீக மருத்துவரிடம் போவதற்குப் பதில் ஒரு மருத்துவமனையிலேயே அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

உடல் நலத்துக்கான யோகா, ஒருங்கிணைந்த சிகிச்சை முறை ஆகியவை பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால்தான், பல ஆன்மீக அறுவைகளும் மருத்துவர்களும் இந்தியாவில் தலைகாட்டு கிறார்கள்.சத்திய சாயிபாபா கூட மருத்துவர் பகவந்த்தின் மகனுக்கும் இன்ன பலருக்கும் ஆன்மீக அறுவை நடத்தி இருக்கிறார். ஆனால், அதே நோயால்தான் அவர்கள் இறந்தார்கள்.

**தேவை :** பிளாஸ்டிக் பையிலோ பெருவிரல் முனையிலோ ரத்தம், விலங்குக் குடலின் ஒரு துண்டு, மருத்துவ தரமுள்ள பஞ்சு, மேசை.

**செய்முறை :** ஒரு உதவியாளரை அழைக்கவும். அவர் தன் சட்டை பனியனைக் கழட்டிவிட்டு மேசைமேல் படுக்குமாறு கூறவும். கண்களை மூடி தூங்குமாறு கூறவும். பெருவிரல் முனையிலோ வலதுகையில் உள்ள பிளாஸ்டிக் பையிலோ கொஞ்சம் ரத்தம் மறைத்து வைத்து இருக்க வேண்டும். வயிற்றை அமுக்கி உங்கள் விரல்களைத் தோல் / சதை மடிப்புகளுக்குள் விடவும்.

உங்கள் விரல்களின் கடைசி மூட்டுகள் புகும் வரை அவற்றை உள்நோக்கி திருப்பவும். உங்கள் விரல்கள் வயிற்றை ஊடுருவி நேராக உள்ளே போய்விட்டது என்றே பார்வையாளர்கள் நினைப்பார்கள். உங்கள் விரல்கள் உள்ளே வளைந்ததும் இரத்தத்தை வெளியிடவும்.

விலங்கின் உறுப்புத்துண்டை உள்மறைத்த கொஞ்சம் பஞ்சை இடது கையில் எடுக்கவும். வயிற்றின் மடிப்புகளுக்குள் பஞ்சை செலுத்தி அப்பகுதியைக் குணமாக்குவதுபோல் பாவனை செய்து பின் அதனை வெளியில் எடுக்கவும்.

வயிற்றில் உள்ள இரத்தத்தைப் புதுப்பஞ்சால் சுத்தம் செய்தபின் தோல் தானே ஆன்மீக முறையில் ஆறிவிட்டதென காட்டவும். நோயுற்ற பாகம் அகற்றப்பட்டதும் நோயாளி குணமாகிவிட்டார்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 143

### ஆன்ம சக்தியால் காமாலையைக் குணப்படுத்தல்

காமாலை நோயாளி சிகிச்சைக்காக ஒரு மந்திரவாதியிடமோ சாமியாரிடமோ போகிறார். மருந்தின்மேல் மந்திரம் போட்டபின் நோயாளிக்கு மருந்து தரப்படுகிறது. நோயாளி சில நிமிடங்கள் அதைக் கொப்பளித்து பின் துப்பிவிட வேண்டுமென கூறப்படுகிறது. பித்தம்போல் மஞ்சள் நிறமான ஒரு திரவத்தை அவர் துப்பியதும் அவர் குணமாகிவிட்டதாக மந்திரவாதி அறிவிக்கிறான்.

**தேவை :** கடுகு எண்ணெய்.

**செய்முறை :** உங்கள் வாயில் கொஞ்சம் கடுகு எண்ணெயை ஊற்றி சில நிமிடங்கள் கொப்பளித்து பின் துப்பினால் அது பழுப்பு கலந்த மஞ்சள் திரவம்போல் தோன்றுகிறது. எண்ணை உமிழ்நீருடன் கலந்து அப்படி குழம்புபோல் ஆகிவிடுகிறது.

✲

## செயல் விளக்கம் - 144

### சகுந்தலா தேவி - மனித கணினி

மின்னணு கணினி விடை தருவதற்கு முன்பே கணித சிக்கல்களுக்கு விடைதரல்.

சகுந்தலா தேவி ஒரு மனித கணினி எனத் தன்னைச் சொல்லிக் கொள்கிறார். தன் சாகசங்களை அவர் செய்துகாட்டிய ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் ஒரு பேராசிரியர் ஒரு எளிய சிக்கலைக் கேட்டபோது அது மிக எளியது என ஒதுக்கிவிட்ட சகுந்தலா பின் அதற்கான விடையைக் கடைசியில் கூறுவதாக ஒப்புக்கொண்டார்.

ஆனால், கடைசிவரை அவர் விடை கூறவில்லை. ஏனெனில் மெய்யாகவே கணக்கிட்டுப் பார்க்காமல் விடைதர அந்த கணக்குக்கு எந்த சூத்திரமும் இல்லை. ஒரு கணிதக்கேள்வியைக் கண்ணால் பார்த்ததுமே, கணக்கிடாமலேயே, உடனடியாக அதற்கு விடைகூற முடிவதற்கான சூத்திரங்கள் ஏராளமாக உள்ளன. மக்களோ எல்லாவிதமான கணக்குகளையும் உடனடியாக கணக்கிட்டு விடும் திறன் சகுந்தலா தேவிக்கு இருப்பதாக நம்பினார்கள்.

ஒன்பதின் வர்க்கமூலம் என்ற விதிப்படி அமைந்த இந்த சூத்திரங்களில் ஒன்றை இப்போது உங்களிடம் விளக்குகிறேன்.

**செய்முறை :** ஒரு உதவியாளரிடம் கரும்பலகை மேல் ஒரு ஐந்து இலக்க எண்ணை அல்லது எத்தனை இலக்க எண்ணையும் எழுதுமாறு சொல்லவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டாக அவர் 67542 என எழுதுகிறார் என்போம்.

அவர் எழுதிக் கொண்டிருக்கும்போதே அதற்கு கீழே உடனடியாக ஒவ்வொரு எண்ணின் அடியிலும் நீங்கள் ஒரு எண்ணை எழுதுகிறீர்கள் - மேலே உள்ளதையும் கீழே உள்ளதையும் கூட்டினால் மொத்தம் 9 வரும்படியாக.

அதாவது, 32457.

அடுத்து உதவியாளரிடம் இன்னொரு 5 இலக்க எண்ணை எழுதும்படி சொல்லவும். அவர் எழுதுகிறார் :

17564.

இந்த எண்களை அவர் எழுதும்போதே நீங்களும் முதலில் ஒரு 1 ஐ எழுதி பின் அவர் எழுதிய எண்களை அப்படியே எழுதவும் - கடைசி எண்ணைத் தவிர. கடைசி எண்ணில் இருந்து ஒன்றைக் கழித்து எழுதவும்.

அதாவது, 117563.

இந்த எண், முதலில் உள்ள மூன்று எண்களின் கூட்டுத்தொகையாகும்.

இவ்வாறு ஒன்பதின் ஒவ்வொரு இரட்டை இலக்கத்திற்கும் கடைசி எண்ணில் இருந்து ஒன்றை கழித்து அதை முன்பக்கத்தில் போட்டுவிடவும்.

எனவே, கூட்டுத்தொகை 9 வரும் இரண்டு இரட்டை இலக்கங்கள் வந்தால் :

67542
32457
17564
82435
57381

விடை 257379 என வரும். அதாவது கடைசி இலக்கிலிருந்து 2 ஐக் கழித்து மீதியை எழுதி அந்த இரண்டை தொடக்கத்தில் எழுதிக்கொள்கிறீர்கள்.

9 கூட்டுத்தொகை வரும் மூன்று இரட்டைகளின் பின், முந்திய எண்ணில் இருந்து 3 ஐக் கழித்து தொடக்கத்தில் சேர்த்துக் கொள்ளவும். இப்படியே போகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கருத்தியக்க எதிர்வினை
## (இடியோமோட்டார் ரெஸ்பான்ஸ்)

நாம் செய்யும் எச்செயலையும் மூளையே கட்டுப்படுத்துகிறது. நம் அடி மனத்தில் / உணர்வற்ற மனத்தில் நமக்கு ஏதாவது எண்ணம் / கருத்து இருந்தால் அதன் மீது நாம் கவனம் குவித்தால்பின் நம் உணர்வுப்பூர்வ முயற்சி இல்லாமலேயே அது உடல்ரீதி நடைமுறையாக வெளிப்பட்டுவிடுகிறது.

இதுவே கருத்தியக்க எதிர்வினை / கருத்தாற்றல் எதிர்வினை எனப்படுகிறது. இதில், மூளையில் ஏற்படும் நூண்ணிய மின்னேற்றங்கள் நரம்புகள் வழியாக தசைகளுக்குக் கடத்தப்படுகின்றன/ தெரிவிக்கப்படுகின்றன.

கருத்தியக்க எதிர்வினை மூலம் செயல்படுவதற்கான உள்நோக்கத்தை உருவாக்கும் எவரும், தாம் அதற்குக் காரணமாவது பற்றி எவ்வித உணர்வும் இல்லாமலே இருக்கிறார்கள். இந்த அனிச்சையான தசை இயக்கங்கள்தான், நீர் ஊற்று முன்னறியும் கோல் சுழலவும், வட்டு இயங்கவும் காரணமாகிறது.

பின்வரும் சோதனை, கருத்தியக்க எதிர்வினையின் விளைவை மெய்ப்பிக்கும்.

**செயல்விளக்கம் - 145**

**நோக்கம் :** ஒரு வட்டத்தை அல்லது நேர்கோட்டை நீங்கள் ஒருமுகமாக கவனித்தால் ஊசலாடும் வட்டமாக அல்லது நேர்கோடாக அசைதல்.

**தேவை :** நூலில் தொங்கவிட்ட ஊசல், நாற்காலி, மேசை.

**செய்முறை :** ஒரு தாளில் 6" விட்டமுள்ள ஒரு வட்டம் வரைக. வட்டத்தின் மையப்புள்ளி வழியாக ஒரு நேர்கோடு வரைக. ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு, ஊசல் கட்டித் தொங்கும் நூலின் மேல் முனையைப் பிடித்தபடி, முழங்கையை மேசைமேல் வைத்துக் கொள்ளவும். வட்டத்தின் மையப்புள்ளியில் ஊசலைப்பிடித்தபடி உங்கள் கண்களை நேர்கோட்டின் மேல் பதித்தால் படிப்படியாக ஊசல் அந்த நேர்கோட்டுப் பாதையில் ஆடும்.

நீங்கள் உங்கள் கண்களை வட்ட கோட்டின்மேல் கடிகார திசையில் ஓடவிட்டு அதில் உங்கள் மனத்தை ஒருமுகப்படுத்தினால் ஊசலும் வட்டமாக எதிர்கடிகாரதிசையில் அசையத் தொடங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செயல் விளக்கம் - 146

**நோக்கம் :** மரத்தின் γ வடிவ கவை கொண்டு நீரூற்றை கண்டறிதல்.

γ வடிவ கவை அசையத் தொடங்குவதைக் கொண்டு மனோசக்தி மூலமாக நீரோட்டத்தை அறிகிறார் நீர்வளம் காண்பவர்.

**தேவை :** γ வடிவ மரக்கவை.

**செய்முறை :** இரண்டு கைகளிலும் γ கவையின் இரு கிளைகளையும் பிடித்தபடி லேசான - உணர்வுபூர்வமற்ற ஒரு அழுத்தம் தந்ததும், கவை தானே சுழல்கிறது. பெரிய மரங்கள், புற்றுகள் இருக்கும் இடங்களைக் காண்பதன் மூலம் நிலத்தடி நீர் ஊற்று இருக்குமிடம் குறித்து நீரூற்று அறிபவர் முன்னமே தெரிந்து வைத்துக் கொள்கிறார்.

பின் மனோசக்தி என்னும் திரையில் γ குச்சியின் இரு கிளைகளிலும் சிறு அழுத்தம் தருகிறார். இதனால் அது அவர் கையில் திரும்புகிறது.

## செயல் விளக்கம் - 147

**நோக்கம் :** வட்டுப் பலகை வேலை செய்யும் முறை.

நான்கு பேர் வட்டுப்பலகையை (Planchet / ouija board) நான்கு மூலைகளில் லேசாக தொட்டுக் கொண்டிருக்கிறார்கள் . (அவர்களில் ஒருவர் ஆவி ஊடகமாக இருக்கிறார்). ஆவியின் மேல் கவனம் குவித்து அது வந்து தம் கேள்விக்கு பதில்தரவேண்டும் என்கிறார்கள். திடீரென வட்டு இயங்க ஆரம்பித்து ஒரு விடை தருகிறது.

**தேவை :** வட்டு.

**செய்முறை :** மனத்தை ஒருமுகப்படுத்தும்போது உதவியாளர்கள் கவனத்தை குவிக்க ஊடகம் உதவுகிறார். ஒரு குறிப்பிட்ட கருத்து அல்லது பொருள் மீது எண்ண நிகழ்முறை எவ்வளவு தீவிரமாக செலுத்தப்படுகிறதோ, அவ்வளவுக்கு அனிச்சை தசை இயக்கங்கள் வட்டை அசைய செய்து உங்கள் பிரச்சனைக்கு விடை தந்து விடுகின்றன.

☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 10
# தேசிய ஒருமைப்பாடும் சமத்துவமும்

இந்தியா ஒரு மதச்சார்பற்ற குடியரசு. இங்கு வெவ்வேறு மதங்களையும் சாதிகளையும் இனங்களையும் மொழிகளையும் சார்ந்த மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.

நம் கல்வி அமைப்புகளில் பயிலும் மாணவர்களை நாம் பார்த்தால் அவர்கள் இந்த பலவித மதங்களையும் சாதிகளையும் இனங்களையும் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். வேற்றுமைகள் இருப்பதால் அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்துக் கொள்வதில்லை. அவர்கள் நண்பர்களாகவும் இணக்கமாகவும் அமைதியாகவுமே வாழ்கிறார்கள்.

நம் அண்டை வீட்டுக்காரர்களும் வெவ்வேறு மதங்களையும் சாதிகளையும் இனங்களையும் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் நம்பிக்கை வேறு என்பதாலேயே அவர்களை நாம் வெறுக்கவோ அவர்களுடன் சண்டை போடவோ செய்வதில்லை.

நாம் நண்பர்களாகவே பழகுகிறோம். நம் வீட்டில் ஏதாவது விசேசம் என்றால் அவர்களை நம் வீட்டுக்கு அழைக்கிறோம். பதிலுக்கு அவர்கள் தம் வீட்டுக்கு நம்மை அழைக்கிறார்கள். ஏதாவது எதிர்பாராத பெருந்துன்பம் அவர்களுக்கு நேர்ந்தால், நாமெல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களுக்கு உதவுகிறோம்.

இந்தச் சகவாழ்வும் நட்புறவும், மதவெறி பிடித்த தலைவர்களால் நாசமாக்கப்படுகிறது. இவர்கள் கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் பொதுமக்கள் மத்தியில் வெறியுணர்வை விதைக்கிறார்கள். வகுப்புவாத வெறுப்புணர்வை நம்மில் தூண்டுகிறார்கள். கடவுளின் பெயராலும் மதத்தின் பெயராலும் மக்கள் ஒரு சாரார் பிறரை அழித்தும் கொலை செய்தும் வருகிறார்கள்.

நாம் சுதந்திரம் பெற்றபோது இந்தியாவில் முசுலீம்கள் சிறுபான்மை சமூகமாக இருந்ததால், தாம் ஒரு தனிநாடு அடைந்தால்தான் தம் சிக்கல்கள் தீர்வாகும், தாம் சமாதானமாக வாழலாம் என நினைத்தார்கள். 1947 இல் இந்தியா, இந்தியாவாகவும் பாகிஸ்தானாகவும் பிரிக்கப்பட்டது. மதத்தின் பெயரால் இந்துக்கள் மற்றும் முசுலீம்களின் ரத்தம் சிந்தப்படுவதை நாம் கண்டோம்.

அவர்கள் ஒருவர் ஒருவரைத் தம் நிலப்பகுதியில் இருந்து வலிந்து அப்புறப்படுத்த முயன்று கொண்டிருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் பலசாலியே யோக்கியன் என்ற கருத்தே ஆட்சி செய்கிறது.

ஆனால், பாகிஸ்தான் மக்களுக்கு முன்னேற்றமும் சமாதானமும் கிடைத்துள்ளதா? மதவாத நாடு தன் மக்களுக்கு முன்னேற்றத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவர முடியாது என்பதை பாகிஸ்தான் மெய்ப்பித்துள்ளது.

எந்த ஒரு மதத்தாலும் மக்களை ஒற்றுமையாக வைத்திருக்க முடியவில்லை. ஒவ்வொரு மதமும் நூற்றுக்கணக்கான பிரிவுகளை கொண்டுள்ளது. அவை ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டுள்ளன. இசுலாமின் முக்கிய பிரிவுகள் சியா, சன்னி, அகமதியர், சூபி, முசாகிது ஆகியவை.

இவை ஒன்றுடன் ஒன்று பூசலிட்டுக் கொண்டுள்ளன. சிறுபான்மை பிரிவுகள் நசுக்கப்பட்டன. பாகிஸ்தான் மறுபடியும் இரண்டாக - பாகிஸ்தானாகவும், வங்க தேசமாகவும் - வெட்டப்பட்டது.

மக்கள் நாயகம் / மக்களாட்சி கொலை செய்யப்பட்டதால் இவ்விரு நாடுகளில் நடந்த அரசியல் கொலைகள், ராணுவ சர்வாதிகார ஆட்சிகளுக்கே இட்டுச் சென்றுள்ளன.

இந்தியாவிலும் கூட, நம்நாட்டின் முன்னேற்றமும் அமைதியும் இணக்கமும் பிற மத, சாதி மக்கள்மேல் வெறுப்பைத் தூண்டிவிட முயலும் மத, அரசியல் தலைவர்களால் நாசமாக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலும் எல்லை மாநிலங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சமூக, மத மக்கள் எலலோரும் தனி நாடுகளுக்காக கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

அரசாங்கம் இந்த சமூகங்களைப் பாதுகாக்காததால்தான் இத்தகைய கிளர்ச்சிகள் எழுகின்றன. அல்லது அவர்களுக்கு நீதி கிடைத்துவிடவும் இல்லை. தம்மைப் பாதுகாத்துக் கொள்ள சட்டத்தை அவர்கள் தம் கைகளில் எடுத்துள்ளார்கள். தனிநாடு பெற்றால் பாதுகாப்பாக இருப்போம் என்ற நம்பிக்கையில் தனிநாடுகோரிப் போராடி வருகிறார்கள்.

ஒவ்வொரு மதத்தையும் சாதியையும் சேர்ந்த வெறியர்கள் தத்தம் மதத்தையும் சாதியையும் தூக்கிப் பிடிக்கவும் தத்தம் கடவுளரைக் காப்பாற்றவும் தம்மால் ஆனதை எல்லாம் செய்கிறார்கள். அவர்கள் மதத்தையும் வகுப்பையும் தம் சுயநல இலக்குகளுக்கு பயன்படுத்துகிறார்கள்.

சில சீக்கியர், காசுமீரிகள், அசாமிகள், மணிப்புரிகாரர்கள் முதலியோர் தனிநாடு கேட்டு பயங்கரவாதத்தில் ஈடுபட தொடங்கி இருக்கிறார்கள். காசுமீர் ஏற்கனவே முசுலீம் மதவெறியர்களின் கிடுக்கிப்பிடியிலேயே இருந்து வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலிஸ்தான் தரப்பட்டால் இந்தியா நான்காக சிதறும். போடோஸ்தான் வழங்கப்பட்டால் அதன்பின் மற்ற ஒவ்வொரு மதத்தினரும் - சமணர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் முதலியோர் - கிளர்ச்சி செய்ய அது வழிவகுக்கும். பிறகு இந்த மதங்களுக்குள் உள்ள ஒவ்வொரு மதப்பிரிவும் சாதியும் ஆளுக்கொரு நாடு கேட்டு சண்டையிடும்.

அரசியல் லாபத்துக்காக மசூதிகளைத் தகர்த்து கோயில்களைக் கட்டுவதற்காக இந்து மதவெறியர்கள் தொடங்கிய பயங்கரவாதச் செயல்கள், சமாதானத்தை விரும்பும் மக்களின் மனங்களில் அச்சத்தை உருவாக்கியுள்ளது. முசுலீம்கள் ஆக்கிரமிப்பாளர்கள், அவர்களையும் அவர்களின் மசூதிகளையும் இந்தியாவிலிருந்து தூக்க வேண்டும் என்று அவர்கள் கூச்சல் எழுப்புகிறார்கள்.

ஆனால், இன்று இந்தியாவில் இருக்கும் முசுலீம்கள் முன்பு இந்துக்களாக இருந்து மதமாற்றம் செய்யப்பட்டவர்களே. ஆனால், இந்தியாவை ஆக்கிரமித்த முதல் வந்தேறிகள் ஆரியர்கள் தான்.

இவர்கள்தான் வருணாசிரம தருமம் (சாதிமுறை) வாயிலாக இந்தியாவின் அசலான குடிமக்களை சூத்திரர் என பெயரிட்டு ஒடுக்கினார்கள். அவர்களின் அறிவையும் தொழிலையும் தம் முற்றுடைமை ஆக்கிக் கொண்டார்கள். செல்வமும், செல்வாக்கும் உடையவர்களைத்தவிர பிற மனிதர்களுக்கு சட்டம் - நீதியின் துணை கிடைக்கவில்லை.

எனவேதான் ஒவ்வொரு சமூகமும் மத விதிகளின் அடிப்படையில் ஒன்றுதிரண்டு தமக்குரிய உரிமைகளுக்காகவும் நியாயத்துக்காகவும் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மத அடிப்படையில் இந்தியா துண்டாடப்பட்ட பிறகு, மொழி அடிப்படையில் துண்டாடப்படுவதற்கான கிளர்ச்சி நடக்கும். இதெல்லாம் எங்கே போய் முடியும்?

இந்தியா ஒன்றுதான் என்றாலும் மொழிவாரி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்பட்டபின் ஒவ்வொரு மாநிலத்துக்கு இடையிலும் தொடங்கிய பிரச்சனைகள் - பிணக்குகள் 45 ஆண்டுகள் ஆன பின்பும் தீர்க்கப்படவில்லை.

ஆயின் இந்த 45 ஆண்டுகளில் மதவெறியர்கள் அரசாங்க உடைமைக்கும் தனியார் உடைமைக்கும் ஏற்படுத்தியுள்ள நாசத்தை கணக்கிட்டால், அந்த பணமே இந்தியாவை உலகின் முக்கியமான முதல் - உலக நாடாக உருமாற்ற தேவையான பணத்துக்கும் கூடுதலாக இருக்கும்.

கடவுள்களையும் மதங்களையும் காப்பாற்ற செலவிடப்பட்ட செல்வமும் உழைப்பாற்றலும், உயிருள்ள கடவுள்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(அதாவது இந்திய மக்களுக்கு) நன்மைதரும் விதத்தில் பயன் படுத்தப்பட்டிருந்தால் - வீடுகள் - கல்வி நிறுவனங்கள் - மருத்துவ மனைகள் கட்டுதல், வேலைவாய்ப்பு வழங்குதல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப் பட்டிருந்தால் - நம்நாடு அமோகமாக முன்னேறி இருக்கும்.

கடவுளரின் வழிபாட்டு இடங்களைக் கட்டுவதன் பெயராலும், கடவுள்களின் பெயராலும் வசூலிக்கப்பட்ட - செலவிடப்பட்ட பணத்தை நாம் கணக்கிட்டால் அதைக் கொண்டு ஒவ்வொரு இந்தியருக்கும் ஒரு குடியிருப்பு வழங்கி இருக்க முடியும்.

## செயல் விளக்கம் - 148

**நோக்கம் :** தேசிய ஒருமைப்பாடு - மூன்று வெவ்வேறு வண்ண கயிறுகளை காட்டுதல்.

ஒவ்வொரு கயிறையும் சேர்த்து முடிச்சிட்டு, இந்தியாவை பாகிஸ்தான், வங்காள தேசம், காலிஸ்தான் , போடோஸ்தான் என்றவாறும், மொழி அடிப்படையிலும் பிரிப்பது நாட்டைத் துண்டாடும்; ஒவ்வொரு முறையும் சிக்கல்கள் மென்மேலும் அதிகரிக்கவே செய்யும் என காட்டுதல்.

எனவே, நாம் ஒரே நாடாகவே இருந்தாக வேண்டும். வெவ்வேறு மதங்கள், சாதிகள், இனங்கள், மொழிகளைச் சேர்ந்த மக்கள் யாவரும் நண்பர்களாகவும் அமைதியாகவும் ஒத்திசைவாகவும் வாழ வேண்டும். ஒவ்வொரு தனிநபருக்கும் வாழ்வின் அடிப்படையான ஆறு தேவைகள் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று காட்டுதல்.

**தேவை :** பலவண்ணக் கயிறுகள்.

**செய்முறை :** பச்சை, சிவப்பு, மஞ்சள் ஆகிய மூன்று வண்ண கயிறுகளை காட்டி வெவ்வேறு மக்கள் ஒரே மதச்சார்பற்ற நாடாக சமாதானமாகவும் இணக்கமாகவும் வாழ்ந்து வருகிறார்கள் என கூறவும்.

இந்தியா, இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் துண்டாடப்படுகிறது. (பச்சைக் கயிற்றைப் பச்சை முனையுடன் முடியவும்). ஆனால், அது முசுலீம்களுக்குச் சமாதானத்தைக் கொண்டுவர முடியவில்லை. பாகிஸ்தான் - வங்காள தேசம் எனப் பிரிக்கப்பட்டது. (இப்போது பச்சை வட்டத்தை இரண்டு வட்டங்கள் ஆக்கவும்).

அடுத்து சில சீக்கியர்கள் தனிநாடு கேட்கிறார்கள். அது வழங்கப்பட்டால் இந்தியா நாலாக உடையும். (சிவப்பு கயிறை சிவப்பு முனையுடன் முடியவும்).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறித்தவர்களும் தனிநாடு கேட்டால் (மஞ்சள் கயிறை மஞ்சள் முனையுடன் முடிச்சிடவும்) பின் ஒவ்வொரு மதமும் ஒரு தனிநாட்டை கேட்கும். அதன்பின் வேறுபாடு மொழிவழி கிளம்பும். (ஒவ்வொரு ஸ்தானையும் மொழிவழி பெயரிடும்போது வட்டங்களை மேலும் சிறிய வட்டங்களாக்கிச் செல்லவும்)

ஆனால், மக்களுக்கு அமைதியும் சமாதானமும் கிடைக்குமா? கிடைக்காது. எல்லைச் சிக்கல்கள் இருக்கும். நதிநீரையும் விளைச்சல் முதலியவற்றையும் பங்கிக் கொள்வதில் தகராறுகள் நீடிக்கும். தீர்க்க முடியாத புதுப்புது சிக்கல்கள் எழும்.

இதனால் ஒவ்வொரு நாட்டுக்கிடையிலும் போர் மூளும். நாட்டின் செல்வம் போரிலும் அழிப்பதிலும் பாழாக்கப்படும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் என்ன நடந்துள்ளது என்பதைப் பார்த்தாலே போதும். அழிப்பு நடவடிக்கைகள் / நாசவேலை இன்றுவரை முடிவு பெறவில்லை. ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டை வன்முறை மூலம் - தன் கூடுதல் பலத்தின் மூலம் - வென்றடக்கவே முயன்று கொண்டிருக்கிறது.

அமைதி, நல்லிணக்கம், முன்னேற்றம் என்பனவற்றை நாம் விரும்பினால், மதவெறியர்களும் அரசியல்வாதிகளும் நம்மத்தியில் வன்முறையைத் தூண்டிவிட ஒருபோதும் நாம் இடம்தரக் கூடாது. இந்தியா ஒரே நாடாகவே இருக்க வேண்டும்.

அப்படி இல்லாவிட்டால் நம்மிடையே அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் நிலவாது. (இப்போது கயிறுகளை திறக்கவும், அது ஒரே பெரிய வட்டமாக மாறும்). வெவ்வேறு மதங்களையும் சாதிகளையும் மொழிகளையும் இனங்களையும் சேர்ந்த மக்கள் நண்பர்களாக கைகோர்த்து ஒரே மக்களாக வாழ வேண்டும்.

வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அடிப்படை உரிமைகள் ஒவ்வொரு மனிதருக்கும் கிடைத்தாகும்படி அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## செயல் விளக்கம் - 149

**நோக்கம் :** சமத்துவத்தை (சோசலிசம்) விளக்கப்படுத்தி காட்டுதல்.

நமது அரசியல் சட்டத்தின்படி இந்தியா ஒரு இறையாண்மை உள்ள சமத்துவமான மதச்சார்பற்ற சனநாயக (மக்களாட்சி) குடியரசு ஆகும். அரசியல் சட்டத்தில் இதை சொல்லி விடுவதால் மட்டுமே இந்தியா ஒரு சமத்துவ நாடாகிவிட முடியாது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசாங்கம் அடிப்படையான ஆறு அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றித் தந்தாக வேண்டும். அவையாவன :



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. ஒவ்வொரு குழந்தைக்கும் அது விரும்பும் வரை கல்வி.
2. கல்வி முடிந்தபின் நேர்மையாக வாழ, ஒவ்வொரு இளைஞருக்கும் வேலை.
3. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வீடு.
4. ஒவ்வொரு மனிதருக்கும் மருத்துவ வசதி.
5. முதியோர், பலவீனர், ஊனர் ஆகியோருக்கு பராமரிப்பு.
6. சட்டத்திலும் நீதியிலும் சமஉரிமை.

தற்போது இந்த அத்தியாவசிய தேவைகள் எல்லாம் செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்குள்ளவர்களின் ஏகபோகமாகவே உள்ளன. இவற்றை மக்களுக்கு அரசாங்கம் வழங்காவிட்டால் மக்கள் சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொள்வார்கள். இதுதான் இன்று இந்தியாவில் நடந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் நாம் சமத்துவத்தை எப்படி கொண்டுவர முடியும்?

**தேவை :** சமநீளமற்ற கயிறுகள், சம நீளமுள்ள கயிறுகள்.

**செய்முறை :** (சமநீள்முள்ள 3 கயிறுகளை காட்டவும் ) மிகவும் குறுகியது, இந்தியாவிலுள்ள ஏழைகள். இரண்டாவது, நடுத்தர வர்க்க மக்கள். மிக நீண்ட மூன்றாவது, பணக்காரர்கள். ஒவ்வொரு இந்தியருக்கும் கல்விகற்க உரிமை உள்ளது.

நடுத்தர வகுப்புமற்றும் பணக்கார வகுப்பின் அறிவு மட்டத்துக்கு ஏழைகளுக்கும் கல்வி தந்து உயர்த்தியாக வேண்டும். (இப்படிச் சொல்லியபடி மூன்று கயிறுகளின் மேல் முனைகளையும் ஒரே மட்டமாக வைத்து எல்லோரும் இப்போது கல்விகற்றவராகிவிட்டனர் என்று கூறவும்.)

ஏழைகள் உயிர் வாழ அவர்களுக்கு வேலை தரப்பட்டாக வேண்டும். (இப்போது குட்டை நூலின் கீழ் முனையை உங்கள் இடதுகையால் எடுத்து இடப்புறமாக மற்ற இரு நூல்களையும் வளைத்துக்கொண்டு சென்று அதன் முனையை மற்ற மூன்று கயிறுகளின் மேல் முனைகளின் வலதுபுறத்தில் இருத்தவும்).

நடுத்தர வகுப்பு மக்களுக்கு ஏற்கனவே வேலை உள்ளது. (நடு கயிறின் கீழ் முனையை எடுத்து கயிறுகளின் இடப்புற உச்சியில் வைக்கவும்). பணக்காரர்களும் தம் நேரத்தை வீணாக்க முடியாது. நம்நாட்டை முன்னேற்ற அவர்களையும் வேலைசெய்ய வைத்தாக வேண்டும். (நீளக் கயிறின் கீழ் முனையை கயிறுகளின் இடது உச்சி பக்கத்தில் வைக்கவும்).

மூன்றாவது, உணவு. ஏழைகளுக்கு மிகக் குறைந்த அளவு உணவே கிடைக்கிறது. (சிறிய கயிறின் சிறு வட்டத்தை காட்டவும்). நடுகயிற்றின் வட்டத்தை சுட்டிக்காட்டி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடுத்தர மக்களுக்கு போதிய உணவு உள்ளது என கூறவும். பின் நீளக் கயிற்றின் பெரிய வட்டத்தை காட்டி பணக்காரர்களிடம் தேவையைவிட அதிகமான உணவு உள்ளது என்று கூறவும். இந்தியா உண்மையாகவே ஒரு சமதர்ம நாடாக ஆக வேண்டுமானால் இது சமப்படுத்தப்பட வேண்டும். (இப்போது இடதுபக்கமுள்ள கயிறுகளின் மூன்று முனைகளையும் இடதுகையால் கீழே இழுக்கவும். அதேபோது வலது கையால் கயிறுகளின் நடுப்பகுதியை மறைத்து மேல் முனைகளைப் பிடிக்கவும். கயிறுகள் சமமாகி விடுகின்றன).

கடவுள்தான் இந்த உலகத்தைப் படைத்தது என நாம் நம்பினால் பின் நாம் எல்லோரும் கடவுளின் குழந்தைகளே. கடவுளின் செல்வத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் சம உரிமை இருக்கிறது. ஒரு சிலரின் கைகளிலும் வழிபாட்டு இடங்களின் அறங்காவலர்களின் கைகளிலும் அது குவிந்து கிடக்க அனுமதிக்க முடியாது. (இதைச் சொல்லியபடியே வலது கையை அகற்றி கயிறுகள் சமமாகி உள்ளதை காட்டவும்).

கணித இயலின் உதவியால்தான் இந்த வித்தை செய்து காட்டப்படுகிறது. ஏழைக்ளை குறிக்கும் கயிறுகள் 6 அங்குலமாகவும் நடுத்தர வகுப்பைக் குறிப்பவை 12 அங்குலமாகவும் செல்வந்தர்களைக் குறிப்பவை 18 அங்குலமாகவும் இருக்க வேண்டும். இந்த 18 அங்குல செல்வம் கடவுளால் படைக்கப்பட்டது. அதை கடவுளின் குழந்தைகளிடையே சமமாக பகிரவேண்டும். (18" கயிறை பாதியாக மடிக்கவும். இப்போது அது 9"). இந்தச் செல்வத்தை அரசாங்கம் தன் கையில் எடுத்துதான் 90% மக்களுக்குக் கல்வியும், வீடும் வேலை வாய்ப்பும் மருத்துவ வசதியும் சம நீதியும் வழங்க அதைப் பயன்படுத்த வேண்டி உள்ளது. 6" கயிறே ஏழைகள். இந்த 6" என்பதுவே ஏழைகளின் பிழைப்புச் சிக்கல்.

ஏழைகள் பணக்காரர்களிடமிருந்து 9" செல்வத்தை பெறும்போது 6" சிக்கல் 3" ஆகிறது. (இப்போது 6" கயிற்றை பாதியாக மடிக்கவும்), 3" சிக்கல் செல்வர்களை சேர்கிறது. இவ்வாறு இரு சாராரும் 12" ஆகின்றனர். நடுத்தர மக்களோ ஏற்கனவோ 12" ஆகவே இருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் பிரார்த்தனை / செபம் / பூசை செய்து வருகிறோம். ஆனால், செல்வர்கள் மேலும் செல்வர்களாக, ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகியே வருகிறார்கள்.

இது ஏன் என்றால் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பது நாம் தான் என்பதையும் அவர்கள் நம் பணியாளர்கள் மட்டுமே என்பதையும் நாம் மறந்துவிட்டதால்தான். நாம் நமது பயத்தில் இருந்தும் சோம்பலில் இருந்தும் விழித்தெழுந்து ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் எந்த அரசாங்கத்தாலும் நம்மை ஒடுக்க முடியாத நிலை நிலவும். □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11

# கடவுள் மனிதரை தன் சாயலாகவே படைத்தார்

எந்த ஒரு மத நூலை நாம் எடுத்துப்பார்த்தாலும் கடவுள் ஒருபோதும் நம்மிடம் நேரடியாகப் பேசியதில்லை என்பதை கண்டு வியப்படைவீர்கள். கடவுள் பேசியதாக நம்பப்படும் செய்தியை நமக்கு திரும்பச் சொல்வது சுக மகரிசி (கிளி)தான். தீர்க்கதரிசிகளின் வாயிலாகவே கடவுளின் வார்த்தை என்னும் பைபிள் நமக்கு கிடைத்தது. கபிரியல் தூதன் முகமது தீர்க்கதரிசிக்கு சொன்னவையே குரான். அப்போது சாத்தான் முகமது தீர்க்கதரிசியை ஏமாற்றுகிறது. கபிரியேலாக வேடமிட்டு கடவுளிடமிருந்து வந்ததுபோல் ஒரு சுரத்தை ஓதிவிடுகிறது.

பின் தீர்க்கதரிசி அதை அறிய வந்தபோது அதை அவர் திருத்தினார். ஆக தீர்க்கதரிசியாகிய முகமதுவே சாத்தானின் சொற்களை கடவுளின் சொற்கள் என நம்பிவிட முடிந்தது என்றால், கடவுளே நம்மிடம் நேரடியாக வந்து உறுதிசெய்யாதவரை சாத்திரங்கள் எல்லாமே அவருடைய வாய்மொழிகள்தான் என்பதை எவ்வாறு நாம் நம்ப முடியும்?

அடுத்து, கடவுள் செம்மையானவர் - பூரணர் என நம்பப்படுகிறது. அவர் செம்மையானவர் என்றால், உலகம் அவரது படைப்பு என்றால், பிற உயிர்களை தின்றுதான் உயிர்பிழைக்க முடிகிறவிதமான உயிர்களை அவர் உருவாக்கி இருக்கமாட்டடார். இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நாம் மனித மாமிசம் தின்பவர்களாக இருந்தோம்.

குழந்தைகள் தம் பெற்றோரின் குணங்களையே தாமும் அடைந்து கொள்கின்றன. எனவே நாம் கடவுளின் குழந்தைகள் என்றால் அந்த கடவுள் எப்படி செம்மையானவராக இருக்க முடியும்? அவர் படைத்த எதுவும் அவரது குணங்களுக்கு - செம்மை, பேராற்றல், பேரறிவு, பேரிருப்பு ஆகிய குணங்களுக்கு - ஒத்தவையாக இல்லை.

கடவுள் அமரர், அழியாதவர். ஆனால் அவரது படைப்பு மட்டும் பிறப்புக்கும் இறப்புக்கும் உள்ளாகிறது! அவை பயந்துகொண்டும், பயங்கரமாகவும் (ஆபத்தானவை யாகவும்), வெறுப்பு - பொறாமை - கோபம் நிரம்பியவையாகவும், அழுக்கு- வேதனை - நோய் ஆகிய சூழலிலேயே பிழைத்திருப்பவை யாகவுமே உள்ளன.

அவை பயத்திலேயே பிறக்கின்றன. வாழ்வை எதிர்கொள்ள திறனின்றி உள்ளன. அறியாமையிலேயே அவை உழல்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தும் கடவுள் தன் சொந்த சாயலாகவே மனிதரைப் படைத்தார் என பெருமை பேசப்படுகிறது. வழிபாட்டிடங்களைக் கூர்ந்து பாருங்கள். அவற்றின் காரியங்கள் நடத்தப்படும் விதத்தைக் கவனியுங்கள். இந்தக் கடவுளர் அவர்களின் பக்தர்கள் வாழும் அதே வகையிலேயே வாழ்வதாகக் கூறுகிறார்கள்.

கள் இறக்குபவரின் கடவுள் கள் குடிக்கிறது. மீனவர்களின் கடவுள்கள் மீன்சாப்பிடுகின்றன. கசாப்பர்களின்கடவுளர் ஆட்டுக்கறி சோற்றையும் கோழிக்கறி சோற்றையும் கேட்கிறார்கள். சில கோயில்களில் பிரசாதத்துடன் அபின் கலக்கப்படுகிறது, அல்லது பாலில் கஞ்சா கலக்கப்படுகிறது.

நரமாமிசம் தின்னுவோரின் கடவுள்கள் மனித இறைச்சி தின்கிறார்கள். பார்ப்பனக் கடவுளுக்கு இனிப்பும் காரமும் தேவைப்படுகிறது. இந்தக் கடவுள்கள் அவற்றின் பக்தர்களைப் போலவே திருமணம் செய்கிறார்கள், குடும்ப சுகம் அனுபவிக்கிறார்கள், வைப்பாட்டிகளை வைத்துக் கொள்கிறார்கள். அவர்களும் கோபம் கொள்கிறார்கள், ஒருவருடன் ஒருவர் சண்டை போடுகிறார்கள், மனிதர்கள் அனுபவிக்கும் எல்லா உணர்ச்சிகளுக்கும் ஆட்படுபவர்களாக இருக்கிறார்கள்.

வழிபாட்டிடங்களில் இருக்கும் அற்புத சக்திகளைப் பெற்றுள்ளவையாகக் கருதப்படும் சிலைகளைப் பாருங்கள். இவை மனித ஆண் / பெண் உருவில் கல்/ உலோகம்/ மரத்தைக் கொண்டு கலைஞர்களால் செய்யப்படுகின்றன / செதுக்கப்படுகின்றன. கோயில்களில் அவை எழுந்தருளச் செய்யப்படும்வரை அவை உயிரற்ற பொருள்கள்தான்.

மந்திரங்கள் மூலம் அவற்றைத் திருநிலைப்படுத்தும்போது, புரோகிதர்தான் இந்த சிலைகளுக்கு உயிரும் ஆற்றலும் ஊட்டுகிறார். இந்த கடவுள்கள் பூசாரிகளின் கைகளில் கருவிகளாக பயன்படுகின்றன.

பக்தர்களின் பணப்பையின் கனத்தைப் பொறுத்து அவர்கள் மேல் ஆசி பொழியுமாறு இந்த சிலைகளுக்கு அவர்கள் ஆணையிடு கின்றனர். அவர்கள் இடைத்தரகர்களாக இருக்கிறார்கள். அவர்களின் தலையீடின்றி கடவுள்கள் செயல்படுவதில்லை.

கோயில்களில் கடவுளரின் தரிசனம் பெறுவதற்குக்கூட செல்வந்தர்களுக்கும் செல்வாக்குள்ளவர்களுக்கும் முன்னுரிமை - சிறப்புச் சலுகை வழங்கப் படுகிறது. அவர்கள் எவ்வளவு பணம் கொடுக்கிறார்கள், அவர்கள் எவ்வளவு அதிகாரம் உள்ளவர்கள் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கு எளிதில் தரிசனம் கிடைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் கடவுள் செயல்பட பூசாரிகள் மூலம் லஞ்சம் தரவேண்டியுள்ளது. நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால், கடவுள் உங்கள் வாதநோயைக் குணப்படுத்தினால், அவருக்கு ஒரு தங்கக்கால் அன்பளிப்பு செய்வதாக நேர்ந்து கொள்கிறீர்கள். திருடர்கள் தாம் பிடிபட்டு விடக்கூடாது என்பதற்காக தாம் கொள்ளையடித்ததில் ஒரு பகுதியை கோயில் உண்டியலில் போட்டுவிடுகிறார்கள்.

எல்லா பாவத்திலிருந்தும் காப்பாற்றப்படுவதற்காக மக்கள் கடவுளுக்கு பணமும் பொருளும் கையூட்டாகத் தருகிறார்கள். கடவுள் எப்படி அந்த பணத்தை ஏற்றுக் கொள்கிறார்? இந்தியப் பணத்துக்கு பக்கத்து நாட்டில்கூட மதிப்பில்லை. அப்படியிருக்க சொர்க்கத்தில் அதை கடவுள் எப்படி பயன்படுத்துகிறார்?

இந்தப் பணம் கடவுளின் பெயரால் வசூலிக்கப்படுகிறது; அறங்காவலர்கள், பூசாரிகள், அமைச்சர்கள், அதிகாரவர்க்கம் ஆகியோரின் பைகளுக்குப் போகிறது. உண்டியலுக்கு எவ்வளவு பணம் வந்தது என்பதை அறிந்து கொள்ள வழியில்லை.

பணமாகவும் , தங்கமாகவும் செலுத்துவோருக்கு இரசீதுகள் தரப்படுவதில்லை. ஆக **மனிதனே தன் சாயலாகக் கடவுளைப் படைத்தான்** என்பதைக் கண்டுகொள்ளமுடியும். இந்த சாமி, சாமியார்களின் கைப்பாவையாகச் செயல்படுகிறது.

மறைந்த சர்.சி.வி. ராமசாமி அய்யர் நடத்திய ஒரு விசாரணையில் தெரிய வந்த ஒரு உண்மை : உண்டியலில் போடப்படும் பணம் மற்றும் தங்கத்தின் 60%க்கு மேல் அறங்காவலர் முதலான தனிப்பட்டவர்களின் பைகளுக்குப் போகிறது என்பதாகும். கடவுளின் செல்வங்களையே கொள்ளையடிப்பதில் அவர்களுக்கு வெட்கமில்லை.

இது ஏனெனில் கடவுள்கள் என்பது தாம் உருவாக்கியதுதான் என்பதையும் அவை தம் கைப்பாவைகள்தாம் என்பதையும் அவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு கடவுளை நம்பி ஏமாறும் அப்பாவி மக்களை அவர்கள் கொள்ளையடிக்கி றார்கள்.

## செயல் விளக்கம்- 150

**நோக்கம் :** புரோகிதர்களின் கைப்பாவையே கடவுள்.

**தேவை :** கஞ்சிபோட்ட கைக்குட்டை ஒன்று.

**செய்முறை :** கைக்குட்டையை மத்தியில் பிடித்து ஒரு கூம்பு வடிவில் செய்து அதன் 1 / 4 பாகம் உங்கள் வலதுபெருவிரலில் அமிழ்ந்திருக்க அவ்விரல் உங்களை நோக்கியும் பிறவிரல்கள் அதற்கிணையாக மறுபுறம் பார்வையாளர்களை நோக்கியும் இருக்கும்படி பிடித்துக் கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது ஒரு கடவுளின் சிலை என பார்வையாளர்களிடம் சொல்லவும். உயிர் வாழ்வு என்பது மூளையில் உள்ளது என விளக்கி, உங்கள் இடதுபெருவிரல் மற்றும் சுட்டுவிரலால் அவ்வுயிரை உங்கள் தலையிலிருந்து திருகிப் பறித்து விடுவதுபோல் பாவனை செய்யவும். பறிப்பது போன்ற சத்தம் எழுப்பவும். அதைப் பார்வையாளர்களுக்குக் காட்டி உங்கள் இடதுகையில் உயிரைக் கண்ணால் பார்க்க முடியாது - கடவுளைப் போலவே, என்று அவர்களிடம் விளக்கவும்.

தம் புலன்களைக் கொண்டு எவரும் அதைப் பார்க்கவோ அனுபவிக்கவோ முடியாது எனவும் கைக்குட்டைமீது உங்கள் இடதுகையை அசைத்து அதற்கு உயிர்தருவது போல் நடிக்கவும். பின் கண்ணுக்குத் தெரியாத ஒரு நூலால் இழுப்பதுபோல் பாவித்துக் கொண்டே உங்களை நோக்கி வரும்படி கைக்குட்டையிடம் ஆணையிடவும்.

அதே நேரத்தில் வலதுபெருவிரலை தாழ்த்தவும் - கைக்குட்டையின் உச்சி இப்போது உங்கள் பக்கம் வரும். பின் இடதுகையை முன்னோக்கி அசைத்தவாறே போ என ஆணையிடவும். வலதுபெருவிரலை மேலே உயர்த்தவும் - கைக்குட்டை பார்வையாளர்கள் பக்கம் நகரும்.

இதை இரண்டு மூன்று தடவை செய்யவும். பின் இடதுகையைப் பின்னுக்கு இழுத்து உங்களுக்கு ஒரு முத்தம் கொடுக்கச் சொல்லி ஆணையிட்டபடி வலதுபெருவிரலைக் கீழிறக்கவும்.

கைக்குட்டையின் உச்சி உங்கள் உதட்டின் அருகில் வரும். அதற்கு ஒரு முத்தம் தரவும். இப்படியே விளையாடவும். பின் கண்ணுக்குத் தெரியாத கத்திரியால் கண்ணுக்குத் தெரியாத உயிர் இணைப்பை வெட்டுவதுபோல் நடிக்கவும்.

மீண்டும் கைக்குட்டைக்கு உயிரில்லை என்பது போல் காட்டவும். அதன் உடைமையாளர்களிடம் அதைத் திருப்பித் தரவும். இப்படித்தான் கடவுள் சிலைகளுடன் பூசாரிகள் விளையாடுகிறார்கள். பின் அவற்றை கோயில் எனவும் சிறைக்குள் பூட்டுப்போட்டு பூட்டிவிடுகிறார்கள். ஏனெனில் இரவில் அவை தப்பித்து விடக்கூடாதல்லவா! என்று விளக்கவும்.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

12

## முடிவுரை

அறிவியலா அருஞ்செயலா என்னும் தலைப்பின்கீழ் தொடர்ச்சியாக வெளியிட உள்ள நூல்வரிசையில் முதல் பாகத்தின் முடிவை நோக்கி இப்போது நாம் போய்க் கொண்டிருக்கிறோம்.

இதில் விளக்கியுள்ள சோதனைகள் யாவற்றையும் மாயாசால நூல்களிலும் அறிவியல் இலக்கியங்களிலும் நாம் காணமுடியும். இந்த முறைகளைப் பயன்படுத்தித்தான் பழிபாவங்களுக்கு அஞ்சாத-கொள்கையற்ற அவதாரங்கள் / மந்திரவாதிகள், எளிதில் நம்பி ஏமாறும் மக்களைச் சுரண்டி வருகிறார்கள்.

முனைவர் பகவந்தம், பி.கே. பானர்ஜி, வேணு முகுந்தன், சுதர்சன் முதலிய அறிவியலார் கூட அவர்களின் ஏய்ப்புக்கு இரையாகி இருக்கிறார்கள்.

அரசாங்கம் தன் கல்விக் கொள்கையை மாற்றாதவரை இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. இப்போது கல்வித்துறை, அயோக்கியர்களின் கைகளில் உள்ளது.

இவர்கள் அருஞ்செயல்கள், மூட நம்பிக்கைகள், குருட்டு எண்ணங்கள் ஆகியவற்றையே பரப்புகிறார்கள். இயற்கை மற்றும் பிரபஞ்சம் பற்றிய அறிவே அறிவியல். அறிவியல் மனப்பான்மையுடன் நம் மக்கள் பயிற்றுவிக்கப்படாதவரை நாம் முன்னேற எந்த வாய்ப்பும் இல்லை.

அப்பாவி மக்கள் தம் உலகியல் சிக்கல்களுக்கு எளிய தீர்வு காண இந்த அருஞ்செயல் மனிதர்களைத் தேடிப் போகிறார்கள்.

சாமியார்களை நாம் எவ்வளவுதான் அம்பலப்படுத்தினாலும், இன்னும் அம்பலமாகாத அடுத்த சாமியாரிடம் அப்பாவி மக்கள் போய் விடுகிறார்கள்.

ஏற்கனவே அம்பலப்படுத்தப்பட்ட சாமியார்கள் கூட மக்கள் அதனை மறந்தபின், புதிய தலைமுறை எழுந்தபின் மீண்டும் தோன்றி விடுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக மைசூரிலுள்ள கணபதி சச்சிதானந்த சுவாமி, கேரளாவிலுள்ள அம்ருதானந்த மயி, சதாராவைச் சேர்ந்த சுவீட் (இனிப்பு) பாபா முதலியோர் மறுபடியும் தலைதூக்கி ஆற்றல் வாய்ந்தவர்களாகி வருகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணபதி சச்சிதானந்த சுவாமியை 1970களில் நரசிம்மையா குழு அம்பலப்படுத்தியது. தனக்கு எவ்வித அதிசய சக்திகளும் கிடையாது என்பதை அவரே ஒப்புக் கொண்டார்.

கடவுளரும் தேவியரும் ஆட்கொண்டவர்கள் எனக் கூறப்பட்ட சுமார் 26 பெண்களை 1983 இல் போலீஸ் சந்தித்தபோது அமிர்தானந்தமயி தலைமறைவானார். 1981 இல் நான் மகாராட்டிராவில் விஞ்ஞான் ஜாத்தாவை நடத்திக் கொண்டிருந்த போது சதாராவின் இனிப்பு பாபா அம்பலப்படுத்தப்பட்டார்.

புனே பல்கலையில் புலன் கடந்த உளவியல் துறையை தொடங்க விரும்பிய சில அறிவியலாரால் அவர் உருவாக்கி விடப்பட்டார். இதற்குக்காரணமானவர் விஞ்ஞானி முனைவர் ரைனின் உடனூழியர் ஆவார். ரைன், அமெரிக்காவில் உள்ள டியூக் பல்கலையில் புலன்கடந்த உளவியல் துறையைச் சேர்ந்தவர். சமீபத்தில் இனிப்புபாபா செய்தியில் அடிபட்டார். இனிப்புபாபாவைத் தான் ஆராய்ந்து பார்த்ததாக யுஎன்ஐ நிருபர் உறுதியாக கூறுகிறார். அவர் கைகளைகழுவச் செய்தாராம், பிறகும் அவர் ஒன்றைத் தொட்டபோது அது இனிப்பாக இருந்ததாம்.

மந்திரவாதிகளின் செய்முறையை நிருபர் அறியமாட்டார். தன் உடையில் சிறிது சாக்கரின் தடவிக்கொண்டு, தன் கைகளைக் கழுவியபின் மறைவாக துணியைத் தொட்டு நூற்றுக்கணக்கான மக்களுக்குத் தான்தொட்ட இடத்தையெல்லாம் இனிப்பாகத் தெரியவைக்க அவரால் முடியும்.

இந்த மோசடிப் பேர்வழிகளால் ஏமாற்றப்படுவதில் இருந்து மக்களைப் பாதுகாக்க மிகச் சிறந்த சட்டங்கள் உள்ளன. சி.பி.சி.யின் 420 ஆவது பிரிவு மோசடிக்கு எதிரானது.

மருத்துவ தேர்வில் வென்றபின் மருத்துவ குழுவில் தன்னைப் பதிவு செய்துகொள்ளாத எவரும் மருத்துவம் செய்ய முடியாது என மருத்துவ் குழு சட்டம் (மெடிக்கல் கவுன்சில் ஆக்ட்) கூறுகிறது.

போலி மருத்துவர்கள் மருத்துவம் பார்ப்பதைத் தடுக்கும் மருத்துவம் செய்வோர் சட்டமும் (மெடிக்கல் பிராக்டிசனர்ஸ் ஆக்ட்) இங்கு உள்ளது.

மாந்திரிக நிவாரணங்கள் பற்றிய விளம்பரங்களைத் தடுக்கும் மாந்திரிக நிவாரணங்களைப் பற்றிய ஆட்சேபத்துக்குரிய விளம்பர சட்டம்(மேஜிகல் ரெமடீஸ் அப்ஜெக்சனபிள் அட்வர்ட்டைஸ் மென்ட் ஆக்ட்) உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும், ஏகபோக தொழில்முறை பயிற்சி தடைச்சட்டமும் (மோனாபோலி ரெஸ்ட்ரிக்சன் ஆப் ட்ரேடு ப்ராக்டிஸ் ஆக்ட்) உள்ளது.

ஆனால் இத்தகைய திருடர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலம் அச்சட்டங்களைச் சட்ட அமலாக்கத் துறை நடைமுறைப் படுத்தாவிட்டால் இந்தச் சட்டங்களால் பயன் என்ன?

அரசியல் சட்டத்தையும் அதன்கீழ் இயற்றப்பட்டுள்ள பிற சட்ட விதிகளையும் பாதுகாப்பதாக நம் அரசியல் சட்டத்தின்மேல் சத்தியம் செய்து நம் அமைச்சர்களும் குடியரசுத்தலைவரும் வாக்குறுதி எடுத்திருந்தாலும் அவர்கள் இத்தகைய திருடர்களைப் போய் சந்தித்து அவர்களை ஆதரிப்பதையே நாம் காண்கிறோம்.

சீனப் பிரதமர் இந்தியாவுக்கு வருகை தந்தபோது திபெத்தியர்கள் கைது செய்யப்பட்டனர். அப்போது 'அமைதிவழியில் எதிர்ப்பு தெரிவிப்பதும் கிளர்ச்சி செய்வதும் ஒவ்வொரு குடிமகனின் உரிமையாகும்' என்று உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியது.

அதே நேரத்தில் சத்திய சாயிபாபாவுக்கு அமைதி வழியில் எதிர்ப்பு தெரிவிக்கவும் புட்டபர்த்தி மக்களுக்குச் சத்தியசாயிபாபாவின் அருஞ்செயல்களின் பின்னுள்ள தந்திரங்களை விளக்கவும் புட்டபர்த்திக்கு நாங்கள் ஊர்வலம் சென்றபோது 1.1.1986 அன்று ஆந்திரபிரதேச போலீசால் கைது செய்யப்பட்டோம்.

எனக்குப் பாதுகாப்பு தருமாறு மாநில அதிகாரிகளிடம் நான் கேட்டபோது, தன்னைத் தானே கடவுள் என்று கூறிக் கொள்பவரையே அவர்கள் பாதுகாத்தார்கள். எங்கள் அனைவரையும் அலைக்கழித்தார்கள்.

பத்திரிகைக்குழுச் சட்டம் (பிரஸ் கவுன்சில் ஆக்ட்) நம்மிடையே உள்ளது. அதன்படி உண்மை ஏதும் இல்லாத கட்டுரைகளை ஒரு செய்தி ஏடு வெளியிட்டால் அக்குழுவை நாம் அணுகமுடியும்.

ஆனால் அத்தகைய மனுக்களின்மீது பத்திரிகைக்குழு எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஏனெனில் அக்குழுவின் தலைவரும் 'அவதாரத்தின்' ஆதரவு உள்வட்டத்தின் உறுப்பினராகவே உள்ளார்.

எங்கள் அமைதியான எதிர்ப்பானது சட்ட ஒழுங்கு சிக்கலை உருவாக்கி விடும் என்னும் வாதத்தின் பேரிலேயே நாங்கள் கைது செய்யப்பட்டோம்.

www.tamilarangam.net

ஏனெனில் சத்திய சாயிபாபா மிகவும் செல்வாக்குள்ளவர், அவரது சீடர்கள் கோபித்துக் கொண்டு விடுவார்கள் என்று சொல்லப்பட்டது! இதன்பொருள், குற்றவாளிகள் பின்பலம் உள்ளவர்களாயிருந்தால் குற்றவாளிகளைப் போலீசார் பாதுகாப்பார்கள், தனிமனிதருக்குகோ - அவர் குற்றமற்றவர் என்றாலும் - பாதுகாப்பு தரமாட்டார்கள் என்பது தானே.

காங்கோவில் இருந்து தங்கத்தைக் கடத்திவந்து அதற்குப் பதிலாக இந்திய ஆயுதங்களை உகாண்டாவுக்கு சத்திய சாயிபாபா கடத்திய செய்தி இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை, நிதித்துறை, உள்துறை ஆகியவற்றுக்குத் தெரிவிக்கப்பட்டபோது அவர்கலெல்லாம் பேசாமல் இருந்தனர்.

பிரச்சனை இன்னும் புலன்விசாரணையில் இருக்கிறது என்கிறார்கள். பன்னிரண்டு ஆண்டுகளாகியும்கூட புலன்விசாரணை முடியவில்லை. இதன் பொருள், அரசாங்கமும் இந்த கடத்தலுக்கு ஒரு உடந்தை என்பதாக இருக்கலாம்.

புதையல் செல்வச் சட்டத்தின் கீழ் (ட்ரெசர் ட்ரோவ் ஆக்ட்) பூமிக்கடியில் கண்டெடுக்கப்படும் பொருள் அனைத்தும் அரசாங்கத்துக்கு சொந்தம்.

பூமியில் இருந்து கிடைத்ததென நிச்சயமாகத் தெரிந்த 18 " தங்க கிருஷ்ணன் சிலை ராஜ்காட்டின் முன்னாள் மகாராணிக்குப் பரிசாக அளிக்கப்பட்ட போதும் அவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

தங்க கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அனுமதி இல்லாமல் தங்கத்தை உருவாக்குவதையோ உடைமை கொண்டிருப்பதையோ பரிசளிப்பதையோ தங்கக் கட்டுப்பாட்டு சட்டம் தடுக்கிறது.

ஆனால் தன் இயற்கைக்கு மீறிய சக்தியால் என சொல்லிக்கொண்டு சத்திய சாயிபாபா - தங்கம், தங்க நகைகள், வைரங்கள், விலைமதிப்பு மிக்க கற்கள் ஆகியவற்றை உண்டாக்கியதாகக் கூறினார், அவற்றைச் செல்வாக்கு மிக்கவர்களுக்கும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்குமே கூட அவர் பரிசளித்தார். சத்திய சாயிபாபா ஒருகண நேரத்துக்குள் தங்கத்தை "சூனியத்திலிருந்து" உருவாக்குகிறார், எனவே அது தங்க கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வராது என உயர்நீதிமன்ற நீதிபதியும் நடுவர் ஆயத்தினரும் "கண்டுபிடித்தனர்".

(சூனியத்திலிருந்து) எதையும் படைக்கவோ அழிக்கவோ முடியாது என்று (ஆற்றலின்) அழியாமை விதி கூறுகிறபோது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்தை மீறியதற்காக சத்திய சாயிபாபா மீது நான் கொண்டு வந்த வழக்கு மனுவை எவ்வித ஆதாரமோ பதிலோ இன்றி, உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

மக்கள் ஒன்றுபட்டு, குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதுவரை ஏமாற்றுவது தொடரும். அல்லது சட்டத்தை மக்கள் தம் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டி வரும்.

இது நம் நாட்டைக் குழப்பத்துக்கே இட்டுச் செல்லும். இதுதான் இன்று இந்தியாவில் நிகழ்ந்து கொண்டு உள்ளது.

தீவிரவாதிகளின் செயல்பாடுகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. அவற்றில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். சட்டம் - நீதியில் சமத்துவத்தை நடைமுறைப்படுத்தாதவரை, சட்டவிரோத நடவடிக்கைகளையும் மோசடிகளையும் அரசே ஊக்குவிக்கும் வரை, மக்களை அரசாங்கத்தால் அடக்கிவைக்க முடியாது.

வஞ்சகர்கள் குடிமக்களைச் சுரண்டாமல் குடிமக்களைப் பாதுகாக்கும் கடமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்தி எளியமக்களைப் பாதுகாக்க இந்திய அரசாங்கம் முன்வரும் என நம்புவோம்.

□



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின்னுரை

என் பன்னிரண்டாவது வயதில் இருந்து நான் அருஞ்செயல்களை ஆராய்ந்து வந்துள்ளேன். இதுவரை ஆயிரத்தைநூறுக்கு மேற்பட்ட அருஞ்செயல்களையும் அறிவியலுக்கு அப்பால்பட்டவையாக கூறப்படும் நிகழ்வுகளையும் எதிர்கொண்டுள்ளேன்.

ஆனால், அவற்றை நுணுகி ஆராய்ந்த போது அவையாவும் வெறும் தந்திரங்களே, வித்தைகளே எனக் கண்டேன்.

நான் சாவதற்குள் உண்மையான ஓர் அற்புதத்தைச் சந்திப்பேனா என்பது உறுதியாய்த் தெரியவில்லை.

நண்பர்களே, உண்மையாகவே ஓர் தெய்வீக அற்புதத்தை, இயற்கை கடந்த - மாயாசால - ஆன்மீக - ஆவி தொடர்பான எவ்வித அருஞ்செயலையும் நீங்கள் பார்த்ததாக உங்களில் யாரேனும் நம்பினால், அது என்ன, எங்கு அது நடக்கிறது என்பதை முகவரியுடன் அருள்கூர்ந்து எனக்குத் தெரிவியுங்கள்.

நாம் ஆராய்ந்து அதன் உண்மையைக் கண்டுபிடிக்க அது உதவும். நான் சாவதற்குள் ஒரு தெய்வீக அருஞ்செயலைக் காண முடிந்தால் எனக்கும் மகிழ்ச்சியே.

இப்போது உங்கள் நுண்ணறிவுக்கும் கூர்ந்து கவனிக்கும் திறனுக்கும் ஒரு போட்டி : குசராத்தில் ஒரு சாமியார் எங்கள் சவாலை ஏற்று ஒரு அருஞ்செயலை செய்துகாட்ட முன்வந்தார்.

நாங்கள் தரும் ஒரு பணத்தாளை அவர் எரித்துவிட்டு மீண்டும் அதே பணத்தாளை உண்டாக்கித்தர அவரால் முடியுமா என்பதே எங்கள் சவால். (ஆனால் அவர் செய்தது, தன் பையில் இருந்து ஒரு ரூபாய்த் தாளை எடுத்தார். அது நல்ல ரூபாயா கள்ள ரூபாயா எனப் பார்த்துக் கொள்ளுமாறு எங்களிடம் சொன்னார். அந்த தாளின் வரிசை எண்ணை நாங்கள் குறித்துக்கொண்டு அதை எரித்துச் சாம்பலை அவரிடம் தரவேண்டும் என்றார்).

ரூபாயை எரித்து சாம்பலை அவரிடம் தந்ததும், அதை நீரில் கலந்து குடித்துவிட்டார். உடனே அவருக்குப் பிரசவ வலி கண்டது. வாய்வழியாக அதே வரிசை எண் உள்ள அதே ரூபாய் தாளை அவர் வெளிப்படுத்தினார். நர்ங்கள் அதைக் கழுவிச் சோதித்தபோது அது நல்ல ரூபாயாகவே இருக்கக் கண்டோம்.

நான் சந்தித்தவற்றிலேயே மிகவும் சாதாரண வித்தைதான் இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமார் ஏழாயிரம் சொற்பொழிவுகளில் நான் பேசக் கேட்டிருக்கிற ஆயிரக்கணக்கான மக்களிடம் இந்த செயல்விளக்கத்தை நடத்தியிருக்கிறேன்.

பலர் பலவித விடைகளுடன் என்னைத் தொடர்பு கொண்டார்கள். இந்த வித்தையை நூற்றுக்கணக்கான வழிகளில் செய்ய முடியும் . நீங்களும் சிந்தித்து இதை எப்படி செய்ய முடியும் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்.

**எனது முகவரி :** பி. பிரேமானந்த், பொறுப்பாளர்

**Indian Committee for Scientific Investigation**

**of claims of the paranormal**

11/ 7 செட்டிபாளையம் சாலை,

போத்தனூர் 641 023 (தமிழ்நாடு) இந்தியா.

இந்தத் தொகுப்பில் விவரிக்கப்பட்டுள்ள அருஞ்செயல்களின் ஒளிப்பதிவு நாடா வரிசை (வீடியோ லைப்ரரி) ஒன்றையும் நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த வரிசையில் பத்துக்கு மேற்பட்ட பாகங்களில் சுமார் 1500 அருஞ்செயல்கள் "இயற்கைக்கு மீறிய, மந்திரதந்திர நிகழ்வுகள்" விளக்கப்படும்.

இரண்டாவது தொகுதி ஒன்றும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது சத்திய சாயிபாபா செய்ததாக அவரது வாழ்க்கைக் கதையான சத்தியம் சிவம் சுந்தரம் என்னும் நூலில் (நான்கு பாகங்களில்) கூறப்பட்டிருக்கும் அருஞ்செயல்களின் மோசடியை விளக்கும்.

கடவுள் நம்பிக்கை என்பது வாழ்க்கையைப் பற்றிய ஒரு தத்துவமாகும். கடவுள் எல்லாம் வல்லவர் என நீங்கள் நம்பினால், அவரது பக்தர்கள் அவரைக் காப்பாற்ற எந்த உதவியும் செய்ய தேவை இல்லை.

கடவுள் ஒரு பிச்சைக்காரர் அல்ல. அவருக்குப் பணத்தைக் கொடுத்து உதவிசெய்ய எந்த இடைத்தரகனும் தேவை இல்லை.

அவரிடம் நீங்கள் நேரடியாகப் பிரார்த்திக்கலாம். அது உங்களுக்கு மன அமைதியும் துணிவும் அளித்தால் நல்லதே.

ஆனால் கடவுள் பெயரைச் சொல்லி மற்றவர்கள் உங்களை ஏமாற்றி சுரண்ட அனுமதிக்காதீர்.

அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம், ஆராய்ச்சி மனப்பான்மை முதலியவற்றை வளர்த்தெடுக்கத் தீவிரமாகப் பாடுபடுங்கள். அறிவியல் மனப்பான்மையையும் ஆராய்ச்சி மனப் பான்மையையும் உங்களைச் சுற்றிலும் உள்ளவர்களுக்குப் புகட்டி அவர்களுக்குக் கல்வி அளியுங்கள். நம் நாடு முன்னேற இது உதவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சவால்!

இயற்கைக்கு மீறிய / அற்புத ஆற்றல்களை, மோசடிக்கு இடமற்ற சூழ்நிலைகளில் வைத்து நிகழ்த்திக்காட்ட முடிகிற எவருக்கும், ஒரு லட்சம் ரூபாய் பரிசு எனப் பேராசிரியர் ஏ.ட்டி.கோவூர் 1963 முதல் அறிவித்திருந்தார். அவரது சவால் இது :

அபிரகாம் ட்டி. கோவூர், "திருவல்லா" பாமன்கடா லேன், கொழும்பு - 6) ஆகிய நான் இதன்மூலம் தெரிவிப்பதாவது : ஏமாற்றுவதற்கும் மோசடி செய்வதற்கும் இடமற்ற சூழ்நிலைகளின் கீழ் இயற்கையை மீறிய / அற்புத ஆற்றல்களை நிகழ்த்திக் காட்ட முடிகிற உலகின் எப்பகுதியைச் சேர்ந்தவருக்கும் ஒரு லட்சம் இலங்கை ரூபாய்களைப் பரிசாக வழங்க நான் தயாராயிருக்கிறேன். இந்த கொடை என் இறப்புவரை, அல்லது முதல் வெற்றியாளரை நான் சந்திக்கும் வரை கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

ஆன்மீகப் பயிற்சிகள் மூலமும் தெய்வீக வரங்கள் மூலமும் அருஞ்செயல் ஆற்றல்களை அடைந்திருப்பதாக கூறிக்கொள்கிற அவதாரங்கள், புனிதர்கள், யோகிகள், சித்தர்கள் எவரும் - பின்வரும் அற்புதங்கள் எதையேனும் நிகழ்த்திக்காட்ட முன்வந்தால் இந்த பரிசை வெல்ல முடியும்.

1. மூடி முத்திரையிட்ட நாணயத்தாளின் வரிசை எண்ணைக் கூற முடிதல்.
2. பணத்தாளின் நகல் ஒன்றை உண்டாக்குதல்.
3. பாதங்கள் கொப்புளிக்காமல் அரை நிமிடத்துக்கு, கனலும் தீக்கங்குகள்மேல் அசையாமல் நிற்றல்.
4. நான் கேட்கும் ஒரு பொருளைச் சூனியத்திலிருந்து தோற்றுவித்தல்.
5. மனத்தால் அசைக்கும் சக்தியைப் பயன்படுத்தி ஒரு திடப்பொருளை அசைத்தல் அல்லது வளைத்தல்.
6. தொலை உணர்வுத் திறன்களைப் பயன்படுத்தி இன்னொருவரின் எண்ணத்தை அறிந்து தெரிவித்தல்.
7. பிரார்த்தனை, ஆன்மீக ஆற்றல், நம்பிக்கையின் குணப்படுத்தும் ஆற்றல், தீர்த்தம், திருநீறு, ஆசி வழங்கல் முதலிய எதன்மூலமாகவாவது துண்டிக்கப்பட்ட ஓர் உறுப்பு அங்குலமேனும் வளரச் செய்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8. யோக சக்தியால் அந்தரத்தில் மிதத்தல்.

9. யோக சக்தியால் ஐந்து நிமிடங்கள் இதயத்துடிப்பை நிறுத்துதல்.

10. யோக சக்தியால் முப்பது நிமிடங்கள் சுவாசத்தை நிறுத்துதல்.

11. நீர்மேல் நடத்தல்.

12. உடலை ஓரிடத்தில் விட்டுவிட்டு இன்னொரு இடத்தில் தோன்றுதல்.

13. வருங்கால நிகழ்ச்சி ஒன்றை முன்னறிவித்தல்.

14. ஆழ்நிலை / யோக தியானம் மூலம் படைப்புத் தன்மையுள்ள நுண்ணறிவையோ ஞான நிலைபேற்றையோ அடைதல்.

15. மறுபிறவியின் விளைவாகவோ, தூய / தீய ஆவியால் பீடிக்கப்பட்டதன் விளைவாகவோ / முன்பு அறிந்திராத ஒரு மொழியைப் பேசுதல் / புரிந்து கொள்ளுதல்.

16. புகைப்படம் எடுக்க ஆவியையோ / பூதத்தையோ முன்னிறுத்துதல்.

17. புகைப்படம் எடுத்தால் மூலப்படியில் (நெகட்டிவ்) இருந்து உருவம் மறைந்து விடுதல்.

18. பூட்டப்பட்ட அறையிலிருந்து ஆன்மீக ஆற்றலால் வெளிவரல்.

19. தெய்வீக சக்தியால் ஒரு பொருளின் எடை அளவை அதிகரித்தல்.

20. மறைக்கப்பட்ட ஒரு பொருளைக் கண்டுபிடித்தல்.

21. நீரைப் பெட்ரோலாகவோ திராட்சைச் சாறாகவோ மாற்றுதல்.

22. திராட்சைச் சாற்றை (ஒயினை) ரத்தமாக மாற்றுதல்.

23. சோதிடமும் கைரேகையும் முற்றிலும் அறிவியல்வழியானவை எனக்கூறி அப்பாவி மக்களை வஞ்சிக்கும் சோதிடர்களும் கைரேகைக்காரர்களுக்கும், பத்து கைரேகைகள் அல்லது சாதகங்களில் இருந்து, ஆண்களுடையவை இவை-பெண்களுடையவை இவை, உயிருள்ளவற்றினுடையவை இவை, இறந்தவற்றினுடையவை இவை எனக் கூறவேண்டும். ஐந்து சதவீத பிழைவரம்புக்குள், சரியாகப் பாகுபடுத்த முடிந்தால், நிமிடத் துல்லியமாக சரியான பிறந்த நேரம், அட்சரேகை தீர்க்கரேகையோடு பிறந்த இடம் பற்றிய குறிப்புகளைத் தர முன்வந்தால் எனது இந்தப் பரிசை வெல்ல முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அருஞ்செயல்களை நிகழ்த்தும் சத்திய சாயிபாபா, பன்றிமலை சுவாமிகள், நீலகண்ட தாத்தாஜி, நிர்மலா தேவி சிரீவத்சவா, பூச்ய தாதாஜி, தத்தா பால், திரிப்பிரயார் யோகினி, குருதேவ் ஆனந்தமூர்த்தி, காமுபாய், சின்மயானந்தா, ஆச்சாரியா ரஜனீசு, முக்தானந்தா, சுவாமி ராமா, சுவாமி அரிதாசு, சிவபாலயோகி, பகவன் ஞானானந்தா, குரு மகராஜ்ஜி, மகரிசி மகேசு யோகி, அஸரத் அலி, டாக்டர் வதலைமுடி, சி.சு. தீர்த்தங்கர், ஆர்.பி. திவாரி, யூரிகெல்லர், நெளிய மிகைலோவா, சீன் டிக்சன், சிபில் லீக் போன்றோரையும், இந்தியாவில் உள்ள எண்ணற்ற சோதிட, கைரேகை "பேராசிரியர்"களையும், மேலை நாடுகளிலும்கூட புத்தம்புதிய மேய்ச்சல் வெளிகளையும் கூடுதல் செல்வம் கொழிக்கும் ஏமாந்த சோணகிரிகளையும் கண்டு பிடித்திருக்கிற எண்ணற்ற பிற குருமார்கள், சுவாமிஜிகள், மகாத்மாக்கள், ஆச்சார்யர்கள், ஆனந்தர்கள், பாபாக்கள், பகவன்களை- எனது இந்தச்சவாலை ஏற்கும்படியும், தாங்கள் பித்தலாட்டக்காரர்கள் அல்ல என்பதை என்னைப்போன்ற அய்யுறவாளருக்கு (Skeptics) மெய்ப்பித்துக் காட்டும்படியும் அழைக்கிறேன்.

### நிபந்தனைகள்

*(1).* என் சவாலை ஏற்க முன்வரும் எவரும் நான் நியமித்துள்ள ஒருவரிடம் *1000* ரூபாய் வைப்புத்தொகை வழங்க முன்வரவேண்டும்.

நான் நடத்தும் சோதனையில் அவர் வெற்றிபெற்று விட்டால் அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

என் நேரத்தையும், பணத்தையும், செயல்பாட்டையும் வீணடிக்க மட்டுமே செய்து, தமது மலிவான விளம்பரத்துக்காக இதில் ஈடுபட முன்வருபவர்களைத் தவிர்ப்பதற்கே இந்த வைப்புத்தொகையை நான் வலியுறுத்துகிறேன்.

*(2).* இந்த முன்வைப்புத்தொகையைச் செலுத்தாதவர்களுடன் எந்தக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்வதற்கில்லை.

*(3).* உரிய தொகையைச் செலுத்தியபின் அவரும் என் நியமனரும் சேர்ந்து ஒத்துக்கொள்ளும் தேதியில் அவரது கோரிக்கையை முதலில் என்நியமனர் பொதுமக்கள் முன்னிலையில் பரிசோதிப்பார்.

*(4).* குறிப்பிட்ட தேதியில் அவர் வராமல் போனாலோ முன்னோட்ட சோதனையில் தோற்றுப்போனாலோ அவரது வைப்புத்தொகையை இழந்துவிட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(5). சோதனைக்கு உட்படுபவரின் கோரிக்கை சரியே என என் நியமனர் ஒப்புக் கொண்டால், நானே நேரடியாக பொதுமக்கள் முன்னிலையில் இறுதிச் சோதனை நடத்துவேன்.

(6)இறுதித் தேர்விலும் அவர் வென்றால் அவரது வைப்புத்தொகையான 1000 ரூபாய் உடனடியாகத் திருப்பித் தரப்படும். அத்துடன் நான் இலங்கை திரும்பி 15 நாள்களுக்குள் என் பரிசான 1,00,000 ரூபாயும் வழங்கப்படும்.

(7). எல்லா சோதனைகளும், மோசடிக்கு இடம்தராத சூழ்நிலைகளில், என் மற்றும் என் நியமனரின் முழுமையான நிறைவு மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப நடத்தப்படும்.

கொழும்பு - 6 அபிரகாம் ட்டி. கோவூர்.

**1976 இல் முனைவர் கோவூர் புற்றுநோய்க்கு ஆளானார். எனவே அவரது மரணத்துக்குப் பின் அவரது சவாலை நான் தொடர்ந்து முன்வைத்து வருகிறேன்.**

**இயற்கை (விதிகளை) மீறிய, பகுத்தறிவு முறையில் விளக்க முடியாத ஆன்மீக/ மாயமந்திர ஆற்றல் கொண்டோர் எனத் தம்மை கூறிக்கொள்வோருக்கு நான் வழங்க முன்வரும் பரிசுக்குரிய நிபந்தனைகள் இவை:**

தன்மையிலும் அளவிலும் கோரிக்கைகள் பலவிதமாக இருப்பதால் ஒவ்வொரு கோரிக்கையாளருக்கும் குறிப்பான நிபந்தனைகள் வகுக்கப்படும்.

முறையான ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படுவதற்கு முன், எல்லா கோரிக்கையரும் இங்கே முன்வைக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஒப்புக் கொள்ள வேண்டும்.

இந்த விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் கோரிக்கையாளர், ஒரு வழக்கறிஞர் அல்லது உறுதிமொழிக்குப் பொறுப்பாளர், அல்லது சான்று அலுவலர் முன்னிலையில் கையெழுத்திடுவதன் மூலம் ஒப்பந்தத்தை அறிவித்து மனுவை என்னிடம் திருப்பித் தர வேண்டும்.

சோதனை செயல்முறை எதுவும் தொடங்கப் பெறும் முன்பே, நடக்கப்போகும் சோதனையின் செயல்முறை குறித்து இருதரப்பினருக்கும் ஒத்தகருத்து ஏற்பட வேண்டும்.

நான் ஒரு நீதிபதி நிலையில் இருக்க மாட்டேன். அல்லது கோருநரை விடுத்து நானாக ஒப்பந்தத்தை வடிவமைக்கவும் போவதில்லை. எவ்விதமான விவாதங்களும் நடைபெறும் முன்பே, கோருநர் யாவரும் முறைப்படி தம்மைப் பற்றி அறிவித்துக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச்செய்திபற்றிப் பரிமாறப்படும் பெருமளவான கடிதத் தொடர்பின் காரணமாக, எல்லா கடிதத் தொடர்பிலும் சுயமுகவரியுடனும் போதிய அஞ்சல்தலையுடனும் கூடிய உறை ஒன்று இணைக்கப்பட வேண்டும்.

பி.பிரேமானந்த் ஆகிய நான், நிறைவான கண்காணிப்புச் சூழ்நிலைகளுக்கு உட்பட்டு, எவ்விதமான மாயமந்திர, இயற்கை மீறிய, இயல்கடந்த திறனையும் செய்துகாட்டும் எந்த நபருக்கும் நபர்களுக்கும் இந்திய பணத்தில் ரூ. 1,00,000 (ஒரு லட்சம் ரூபாய்கள் மட்டும்) வழங்குவேன்.

அத்தகைய செயல் விளக்கக்காட்சி, பின்வரும் விதிமுறைகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டே நடைபெற்றாக வேண்டும்.

(1). என்னவிதமான ஆற்றல்கள் / திறமைகள் செய்து காண்பிக்கப்படும், குறிப்பிட்ட அந்த செய்முறைக் காட்சியின் (கால, இட, பிற) வரம்புகள் யாவை, அதன் உடன்பாடான விளைவும் எதிர்மறை விளைவும் எத்தகையனவ்ாய் இருக்கும் என்பதைப் பற்றி முன்னதாகவே கோருநர் தெளிவாகக் குறிப்பிட்டுவிட வேண்டும். அவற்றைக் கோருநரும் பிரேமானந்தும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

(2). ஒப்புக் கொள்ளப்பட்ட வரம்புகளுக்குள், கூறப்பட்ட தன்மையும் அளவும் கொண்ட, உண்மையாகவே நிகழ்த்திக் காட்டப்படும் காட்சி மட்டுமே ஏற்கப்படும்.

(3). சோதனையின் விளைவாக சேகரிக்கப்படும் (புகைப்பட, ஒலி / ஒளிபதிவான, எழுத்துமூல, இன்னபிற என) எவ்விதமான தகவல்கள் அனைத்தையும் நான் விரும்பும் எந்த முறையிலும் சுதந்திரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைக் கோருநர் ஏற்க வேண்டும்.

(4). தீர்ப்பிடும் நடைமுறை எதுவும் தேவைப்படாத முறையில் சோதனைகள் வடிவமைக்கப்படும். விளைவுகள் எந்த ஒரு பார்வையாளருக்கும் தானே விளங்கும். அதற்குரிய விதிமுறைகளை, எவ்விதமான முறைப்படியான சோதனை நடைமுறை எதுவும் நிகழ்வதற்கு முன்பே, எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(5). தான் வாக்களித்தபடி கோருநர் செய்யக்கூடியவரா என்பதைத் தீர்மானிக்கும் நோக்கத்தில், தூரமும் காலமும் அதைத் தேவைப்படுத்தினால், ஒரு நியமன பிரதிநிதிமுன் தனிப்பட்ட முறையில் தன் சாகசத்தை நிகழ்த்திக் காட்டும்படி கோருநரை நான் கேட்டுக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(6).* கோருநருக்கு ஏற்படும் போக்குவரத்து, தங்குமிடம் முதலிய செலவுகளுக்கு நான் பணம் செலுத்தல் இயலாது.

*(7).* நடப்பில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே எனக்கெதிராக எடுக்கப் படக்கூடிய எந்தவிதமான /எல்லாவிதமான நடவடிக்கைகளுக்கான உரிமைகளையும் - இந்த சவால் ஒப்பந்தத்துக்குள் நுழையுமுன் - கோருநர் ஒப்படைத்து விட வேண்டும். இது உடல் / மனவழியாக காயம், விபத்து அல்லது வேறு ஏதாவது சேதம் ஏற்படுத்துதல் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

*(8).* முறையான சோதனை நடைமுறை தொடங்கும் முன்பே, கோருநர் தேர்ந்தெடுக்கும் ஒரு பொதுவான நபரிடம் முழு பரிசுத்தொகைக்கான வரைவோலையை வைத்திருக்கும்படி நான் தந்துவிடுவேன்.

ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு கோருநர் வெற்றிபெற்று விட்டால் ஒரு லட்சம் ரூபாய்க்கான அந்தக் காசோலையை, அதை வைத்திருப்பவர், முழுவதுமாக கோருநரிடம் உடனடியாக ஒப்படைத்து விடுவார்.

*(9).* இந்த ஆவணத்தின் படிகள், போதிய அஞ்சல்தலையுடன் கூடிய தன் முகவரியிட்ட உறையை எனக்கு அனுப்பும் எவருக்கும் இலவசமாக அனுப்பப்படும்.

*(10).* இந்த கொடையைத் தர நானே முன்வந்துள்ளேன். எனக்குப் பதிலாக வேறு ஏதாவது ஆளோ, முகமையோ, அமைப்போ இதற்குப் பொறுப்பில்லை. ஆனாலும் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதில் மற்றவர்களும் ஈடுபட்டுக் கொள்ளலாம். சில நேர்வுகளில் அவர்கள் தம் பரிசுத்தொகையையும் இத்தொகையுடன் சேர்க்கலாம்.

*(11).* உலகின் எந்த பகுதியிலும் இருக்கும் எந்த மனிதருக்கும் - இந்தக் கொடை பொருந்தும். அவர்களின் பால், இனம், கல்விப் பின்னணி, பிற காரணிகள் பொருட்டல்ல.பரிசு வழங்கப்படும்வரை அல்லது என் இறப்பு வரை இது நடப்பில் இருக்கும்.

என் இறப்புக்குப்பின் Indian Committee for Scientific Investigation of Claims of the Paranormal, *11/ 7,* செட்டிபாளையம் சாலை, போத்தனூர் - *641 023* (தமிழ்நாடு) இந்தியா என்ற முகவரியாரின் பொறுப்பில் இந்த பரிசுத்தொகை ஒப்படைக்கப்படும்.

அதற்கான எழுத்துமூலச் சட்ட ஒப்பந்தம் செய்யப்படும் என என் சட்டபூர்வ உயில் கூறும். என் சாவுக்குப் பின் இந்த பரிசு வழங்கப்படும் வாய்ப்பை பத்து ஆண்டுகளுக்குத் தொடரவும் அதன்பின் தன் குறிக்கோள்களுக்கு உகந்த முறையில் இத்தொகையைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவ்வமைப்புக்கு அப்போது அதிகாரம் வழங்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(12)*. தன்னிடம் இருப்பதாகத் தான் உரிமை கோரும் திறனோ ஆற்றலோ தனக்கு இல்லை என்ற முடிவு ஏற்பட்டால், கோருநர் அதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இந்த விதியை எவ்விதத் தயக்கமும் தடைகளும் இன்றி கோருநர் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

*(13)*. நான் தீர்மானிக்கும் இடம், நாள், நேரத்தில்தான் கோருநர் தன் சக்திகளைச் செய்முறையில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தில் கையெழுத்திட்டு சான்று பதிந்து என்னிடம் திருப்பித் தருவதன் மூலம், மேற்கண்ட விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளிப்பதாக கோருநர் தெரியப்படுத்திக் கொள்கிறார்.

*கோருநரின் கையொப்பம்*

பி. பிரேமானந்த்
**பொறுப்பாளர், இந்திய CSICOP**
**11 / 7 , செட்டிபாளையம் சாலை**
**போத்தனூர் - 641 023, தமிழ்நாடு, இந்தியா.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net



நூலாசிரியர் பி.பிரேமானந்து

கோழிக்கோட்டில் 1930-இல் பிறந்தவர்.

7ஆம் வகுப்புடனேயே பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டவர்.

அனைத்து மத நூல்களிலும் தேர்ச்சி மிகுந்தவர்.

Indian Skeptic ஆங்கில மாத இதழைப்
பதினோராண்டுகளாக நடத்தி வருபவர்.

இலங்கைப் பகுத்தறிவாளர் டாக்டர் கோவூரின் பணிக்கு
உறுதுணையாக விளங்கியவர்;
கோவூரின் பணியை அவர் பாணியிலேயே செய்து வருபவர்.

டாக்டர் கோவூரின் அனைத்துப் படைப்புகளையும்
ஆங்கிலத்தில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்.

'அறிவியல் முறைமை' (Method of Science) பற்றிய
நிரந்தரக் கண்காட்சியொன்றை நிறுவும் பணியில்
முழு முயற்சியுடன் இயங்கி வருபவர்.

---

சூலூர் வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்